
# ஆர்மேனியச் சிறுகதைகள்



### உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

### Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# ஆர்மேனியச் சிறுகதைகள்

# ஆர்மேனியச் சிறுகதைகள்

தொகுப்பாசிரியர் :

**ஸோஃபி அவாகியான்**

ஆங்கில மொழிபெயர்ப்பு :

**ஃபெய்னா கிளாகோலீவா**
**ஏ. மக்ஹோவ்லியன்**

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் :

**வல்லிக்கண்ணன்**

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

© 1981

யு.எஸ்.எஸ்.ஆர். காப்பிரைட் ஏஜென்ஸியின் அனுமதியுடன் இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பு வெளியிடப்படுகிறது. அவர்களின் அனுமதியின்றி இந் நூலில் வந்துள்ள எந்தக் கதை அல்லது கதையின் பகுதியையும் வேறு யாரும் எடுத்தாள்வது காப்பிரைட் சட்டப்படி குற்றமாகும்.

தமிழாக்கம் முதல் பதிப்பு, 1991 (1912)

**விலை ரூ. 20-00**

வெளியிட்டோர் : இயக்குநர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, A-5, கிரீன் பார்க், புது டில்லி-110 016.
அச்சிட்டோர் : பகத் பிரிண்டர்ஸ், 55, ரயில்வே ஸ்டேஷன் ரோடு, ஆலந்தூர், சென்னை-600 016.

# பொருளடக்கம்


பக்கம்

முன்னுரை — அசோகமித்திரன் ... vii

அறிமுகம் — டேவிட் காஸ்பாரியன் ... xv

கதைகள்

1. என் நண்பன் நெஸோ
—ஹோவன்னஸ் டுமேனியன் ... 1

2. சாஅதியின் கடைசி வசந்தம்
—அவெதிக் இஸாகியன் ... 7

3. வயிறு —தெரெனிக் தெமிர்ச்யன் ... 13

4. சர்க்கரைக் கிண்ணம் —ஸ்டீபன் ஸோரியன் ... 23

5. ஒரு ஆர்மேனியன் குழந்தைப் பருவத்திலிருந்து சில காட்சிகள் —வாகன் டோடோவென்ட்ஸ் ... 30

6. ஆல்ப் மலை வயலட் பூ —அக்செல் பாகுன்ட்ஸ் ... 37

7. துரோகி —வாக்தாங் அனன்யன் ... 50

8. வெள்ளை ஆட்டுக்குட்டி
—ஸெரோ கான்ஸாடியன் ... 64

9. ஆறுவது கட்டளை
—காஷாக் ஜியுல்நஸாரியன் ... 72

10. தென்பிராந்திய ஜுரம் —அபிக் அவாகியன் ... 80

11. ஒரு சிறுவனும் பெரிய லாரி டிரைவரும்
—ராபேல் ஆராம்யன் ... 89

12. பெண்களே, நீங்கள் எப்படி மாறிவிட்டீர்கள் !
—எம்கிர்திச் சார்கிஸ்யன் ... 96

13. ரகசியப் பேச்சு —அகாசி ஐவாசியன் ... 110

14. அம்மாவின் வீடு
—வார்த்ஜெஸ் பெத்ரோசியன் ... 119

பக்கம்

15. அழைப்பு —மூஷேக் கால்ஷோயன் ... 133

16. ஆகஸ்ட் ஹ்ரான்ட் மாடவோசியன் ... 156

17. கிளைபடர்ந்த வில்லோ மரமும் அசைந்தாடும் நாணலும் —காரென் சிமோனியன் ... 179

18. ஒவ்வொரு பத்திலும் ஒருவர் —பெர்ச் செய்துன்சியன் ... 189

ஆசிரியர்கள்பற்றிய குறிப்புகள் ... 197

# முன்னுரை

''அவர்கள் என் ஜனங்களைக் கொல்கிறார்கள். அவர்கள் என் சகோதரர்களைக் கொன்றுதள்ளுகிறார்கள்''. இலவசமாக முடிவெட்டிக்கொள்வதற்காக சலூனுக்குப் போயிருந்த ஏழை அமெரிக்கச் சிறுவனிடம் முடிவெட்டும் தொழிலாளி ஒருவன் இவ்வாறு புலம்புகிறான். ஆர்மேனியாவில் பிறந்த அமெரிக்க எழுத்தாளர் வில்லியம் சரோயன் எழுதிய 'எழுபதாயிரம் அஸிரியர்கள்' என்ற கதையில் இது வருகிறது. அது சோகமான, வேடிக்கையான, உள்ளத்தை உறுத்தக்கூடிய ஒரு கதை ஆகும். விஷயம் என்னவென்றால், அந்த முடிவெட்டும் தொழிலாளி, தனது இனத்தாரின் எண்ணிக்கை குறைந்துகொண்டிருப்பதை நினைத்து வருத்தப்படுகிற ஒரு ஆர்மேனியனாக இருக்கக்கூடும். ஏனெனில், பல நூற்றாண்டுகளாகவே ஆர்மேனியர்கள் அவ்வப்போது சித்திரவதைக்கும் அழிவுவேலைகளுக்கும் ஆளாகிவந்திருக்கிறார்கள். 1915-ல் துருக்கிய அதிகாரிகள் 'பிற்பட்டவர்களை வெளியேற்றுவது' என்ற பெயரில் ஆர்மேனியர்களைப் பெருவாரியாக நாடு கடத்தினார்கள். சுட்டெரிக்கும் சிரியா பாலைவனத்திலும், டைகிரிஸ் யூப்ரட்டிஸ் ஆறுகளின் வெள்ளப் பெருக்கிலும் சாகும்படி அவர்களைக் கொடுமைப்படுத்தினார்கள். அப்போது மட்டும் ஒன்றரை லட்சம் பேர் மடிந்துபோனதாகக் கூறப்படுகிறது. வரலாற்றில் இடம் பெற்றுள்ள முதலாவது பெரும் மக்கள்கொலை இதுதான். பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு முதலாவதாக வந்த ஆர்மேனியர்கள் உல்லாசப் பயணிகளோ லாபநோக்கு கொண்ட வணிகர்களோ அல்லர்; துருக்கிய மற்றும் ஈரானியப் படையெடுப்பாளர்களால் துன்புறுத்தப்பட்டு வெளியேறிய அகதிகளேயாவர்.

பொதுவாக, ஆர்மேனியா திறந்தவெளி மியூசியம் எனக் கருதப்படுகிறது. அதன் தலைநகரமான ஏரெவான், பாபிலோன் நகரைப் போலவே தொன்மையான கலாசாரத்துக்குப் பெயர் போனது. அந்த நாடு முழுவதும் இடிபாடுகள் நிறைந்து கிடக்கின்றன. அவை கடந்த பல நூற்றாண்டுகளின் வெற்றிகளை எடுத்துக்காட்டுவதோடு, படையெடுத்துவந்தவர்கள், கொள்ளைக்காரர்கள், மதவெறியர்கள் ஆகியோர் ஏற்படுத்திய காயங்களையும் வடுக்களையும் புலப்படுத்துகின்றன. இன்று ஆர்மேனியா

சோவியத் யூனியனில் ஒரு குடியரசாக இருக்கிறது. அது மலைப்பாங்கான பிரதேசம். ஏறக்குறைய அதி உஷ்ண நிலைமை கொண்டது. 11,000 சதுரமைல் விஸ்தீர்ணமும், 2·8 மில்லியன் ஜனத்தொகையும் கொண்ட நாடு. யூரேஷியாவின் தேசப் படத்தில், காகஸசுக்குக் கீழே, கருங்கடலுக்கும் காஸ்பியன் கடலுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பில் அதைக் காணலாம். பலதரப்பட்ட பயிர் வகைகள் விளையும் நிலம் என்று அது வர்ணிக்கப்படுகிறது. செம்பு, இரும்பு, சலவைக்கல் ஆகியவை அந் நாட்டில் கிடைக்கிற முக்கிய உலோகப் பொருள்கள் ஆகும்.

அநேகமாக உலகத்திலேயே மிகமிகச் செங்குத்தானது என்று கருதப்படவேண்டிய, பயங்கரமும் அழகும் கலந்த ஆழ்ந்த பள்ளப்பகுதியின்—அமெரிக்காவின் 'கிராண்ட் கேன்யான்' பள்ளத்தாக்கின்—ஒரு முகட்டின் மேலே இருக்கிற ஆராய்ச்சி சாலை ஒன்றின் உள்ளே ஒரு கல் துண்டு இருக்கிறது. அதனோடு ஒரு இரும்புத் துண்டும் கட்டப்பட்டுள்ளது. அந்த இரும்புத் துண்டை அக் கல்லுடன் உரசும்படி பார்வையாளர்கள் உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். அந்த ஆராய்ச்சிசாலை தோன்றிய பிறகு, சென்ற ஐம்பது வருஷ காலத்தில் கிராண்ட் கேன்யானைப் பார்ப்பதற்காக வந்த லட்சக்கணக்கான மக்கள் அப்படி இரும்புத் துண்டைக் கொண்டு கல்லை உரசியதன் விளைவாக, அந்தக் கல்லில் ஒரு சென்டிமீட்டர் ஆழத்துக்கு ஒரு பள்ளம் பதிந்திருக்கிறது. அதே ரீதியில் கொலராடோ நதியின் நீரோட்டம் கிராண்ட் கேன்யானில் மைல் கணக்கில் ஆழமான பள்ளங்களை உண்டாக்கியிருக்கிறது என்பது இப்போது தெளிவாகியுள்ளது. அதற்கு நெடுங்காலம் ஆகியிருக்கிறது. இருபது லட்சம் வருஷங்கள். அவ் வட்டாரத்தின் ஆதிவாசிகளான ஹோப்பிஸ் இனத்தவர் கிராண்ட் கேன்யானுடன்தான் சிருஷ்டியே ஆரம்பமாயிற்று என்று நம்புகிறார்கள். அதை ஏற்றுக்கொள்ளலாம் போல்தான் நமக்கும் தோன்றுகிறது.

ஹோப்பிஸ் இனத்தார் சிருஷ்டி காலத்துக்கே போகக்கூடும் எனில், ஆர்மேனியர்கள் நாகரிகத்தின் ஆரம்பத்துக்குப் போக இயலும். ஏனெனில், ஆர்மேனிய மலைச்சிகரமான மவுன்ட் ஆராரட் மீதுதான் பிரளயத்துக்குப் பின்னர் நோவாவின் படகு வந்து தங்கியதாகச் சொல்லப்படுகிறது.

கி.பி. 303ஆம் வருஷத்தில், ரோமாபுரி கிறிஸ்துவ ராஜ்யமாக ஆவதற்கு முன்னரே, ஆர்மேனியா முதலாவது கிறிஸ்துவ ராஜ்யமாக இருந்தது. ஒருவேளை, பைபிளின் மொழி பெயர்ப்பே அதன் முதலாவது இலக்கியமாக இருக்கலாம்.

கி பி. 424ஆம் வருஷத்திலேயே செயின்ட் மெஸ்ராப் பைபிளை மொழிபெயர்த்திருந்தார். 36 எழுத்துகளைக் கொண்ட ஆர்மேனிய அகர வரிசையைக் கண்டுபிடித்தவரும் அவரே.

ஆர்மேனியர்கள் வியாபாரம், பெரும் வர்த்தகம் ஆகியவற்றின் ஒரு புதிய அத்தியாயத்தையும், பரஸ்பர நலனுக்கு உதவும் நட்பையும் சிரத்தையையும் அடிப்படையாகக்கொண்ட ஒரு உறவையும் இந்தியாவுக்குக் கொண்டுவந்தார்கள். ஆர்மேனியர்கள் நல்ல வர்த்தகர்களாகவும், நல்ல குடி மக்களாகவும் இருந்திருக்கவேண்டும். ஏனெனில், கல்கத்தாவிலும் சென்னையிலும் 'ஆர்மேனியன் தெரு' என்ற பெயரைக் கொண்ட நீளமான தெருக்கள் இருக்கின்றன. இவ்விரு ஆர்மேனியன் தெருக்களிலும் இருநூறு வருஷங்களுக்கும் மேற்பட்ட ஆர்மேனியன் சர்ச்சுகள் நிலைபெற்றிருக்கின்றன. கல்கத்தாவில் நாசரத்தில் இருக்கிற ஆர்மேனியன் புனித தேவாலயம்தான் இந்தியாவில் உள்ள மிகப் புராதனமான ஆர்மேனியன் சர்ச் ஆகும். 1707-ல் அமைக்கப்பட்டு, அவ்வப் போது புதுப்பித்தும் விரிவுபடுத்தியும் கட்டப்பெற்றுள்ள இத் தேவாலயத்தில் ஒரு சமாதிக் கல் இருக்கிறது. ''காலம் சென்ற தர்மசீலர் சூக்கியாசின் மனைவி ரெஸா பீபி''யின் கல்லறைச் சின்னமாக விளங்கும் அது, ஜூலை 21, 1630 என்ற தேதியைக் கொண்டிருக்கிறது. பதினேழாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் கல்கத்தாவுக்கு வந்து குழுமத் தொடங்கிய ஆர்மேனிய வர்த்தகர்கள் அந் நகரத்தில் நன்கு செழிப்புற்றனர். பழைய ஹௌரா பாலத்துக்குத் தெற்கே, ஹூக்ளி ஆற்றங்கரை மீது அவர்கள் தங்களுக்கெனத் தனி இடுகாடும் அமைத்துக் கொண்டார்கள். கல்கத்தாவில் ஆர்மேனியர்கள் நிறுவிய பிரதான அமைப்புகள் பல இன்றும் நிலைத்திருக்கின்றன. இன்றைய 500 அறைகள் கொண்ட 'கிராண்ட் ஹோட்டல்' ஆராதூன் ஸ்டீபன் என்ற ஆர்மேனிய நகை வியாபாரியின் முயற்சியால் தோன்றியதுதான். ஸி. எல். பிலிப்ஸ் எனும் மற்றொரு ஆர்மேனியர்—இந்திய நிலக்கரிச் சுரங்கங்களில் அவர் கொண்டிருந்த மிகுந்த தொடர்புகள் காரணமாக அவர் 'நிலக்கரி மன்னன்' என்று அழைக்கப்பட்டார்—மாளிகை போன்ற ஒரு பெரிய வீட்டைக் கட்டினார். அதற்கு 'பிலிப்சின் அறிவீனம்' (Phillip's Holly) என்று அவர் பெயர் வைத்தார்—நல்ல நகைச் சுவை உணர்வு உள்ளவராக இருக்கவேண்டும்! அப்புறம், கல்கத்தாவின் ஆர்மேனியன் காலேஜ் இருக்கிறது. இப்போதும் அது கல்விப் பயிற்சியின் சுறுசுறுப்பான கேந்திரமாகத் திகழ்கிறது. ஆங்கில இலக்கிய அபிமானிகளுக்கு இந்த

ஆர்மேனியன் கல்லூரி மற்ருெரு முக்கிய விசேஷத் தன்மை பெற்றதாகும். இக் கல்லூரியின் அறைகளுள் ஒன்றில்தான் 1811 ஜூலையில் வில்லியம் மாக்பீஸ் தாக்கரே பிறந்தார்.

சென்னையில் இருக்கும் ஆர்மேனியன் தெரு இன்றும் நகரத்தின் பரபரப்பான வீதிகளில் ஒன்ருக விளங்குகிறது. தீவிரத் தொழில் இயக்கங்களின் மையமாகவும் அது அமைந்துள்ளது. ஆர்மேனிய இனத்தவரின மிச்சசொச்சங்களாக, ஒரே ஒரு தம்பதியர் மட்டும் இத் தெருவின் ஆரம்பத்தில் உள்ள விந்தையான புராதனக் கட்டடம் ஒன்றில் வசிக்கிருர்கள். அது தான் சென்னையின் செயின்ட் மேரீஸ் ஆர்மேனியன் சர்ச் ஆகும்.

இருவழிப் படிக்கட்டு ஒன்று ஆலயத்தின் வாயிலுக்கு இட்டுச் செல்கிறது. வாயிலின் முகப்பில் 1772 என்று வருஷம் குறிக்கப் பட்டிருக்கிறது. கட்டடத்தின் தோற்றமும் அதை நிரூபிக்கிறது. பூர்விக ஆர்மீனியன் தேவாலயம் 1712-ல் செயின்ட் ஜார்ஜ் கோட்டை அருகில் கட்டப்பட்டிருந்தது. ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்குமிடையே நிகழ்ந்த துப்பாக்கிச் சண்டையில் அது தாக்குண்டு அழிந்தது. எனவே அதைக் கைவிட நேரிட்டது. அதுவரை இடுகாடு ஆக இருந்த இடம் புதிய ஆர்மேனியன் சர்ச் ஆக மாற்றப்பட்டது. இந்த ஆலயத்தில் மின்விளக்குகள், ஒரு டெலிபோன், மற்றும் தற்காலத்துக்கு உரிய சின்னங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனலும்கூட, கட்டடத்தினுள் புகுந்ததும் நாம் இருநூறு வருஷங்களுக்கு முற்பட்ட காலத்துக்கு இட்டுச் செல்லப் படுகிருேம். செங்கற்களாலும் சுண்ணும்பாலும் ஆன கட்டடம் அது. அதன் சுவர்கள் ஒன்றரை அடி கனம் உள்ளவை. ஒவ்வொரு கதவுக் கீலும் (இணைப்பும்) நான்கு அல்லது ஐந்து ராத்தல் கனம் இருக்கும் என்று தோன்றுகிறது. தரையின் பெரும்பகுதியில் கருங்கல் பலகைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு கல்லும் ஒரு கட்டில் அளவு பெரியதாக இருக்கிறது. ஒரு விதத்தில் அவை கட்டில்கள்தான். ஏனெனில், இந்த இரண்டரை நூற்ருண்டுக் காலத்தில் சென்னையில் மரணம் அடைய நேர்ந்த ஆர்மேனியர்கள் அக் கற்களின் அடியில்தான் மீளாத்துயிலில் ஆழ்ந்திருக்கிருர்கள். இச் சமாதிக் கற்கள் அவர்களது வரலாற்றை விசித்திரமான எழுத்துகளில் புலப்படுத்துகின்றன. ஆர்மேனிய மொழியை அறிந்திராதவர் களுக்குத்தான் அவை விசித்திரமானவை. அக் கற்கள் வெகு கெட்டியாய், கனமாய், அழிக்க முடியாதனவாய்த் தோன்று கின்றன.

ஆர்மேனியாவில் ஒரு கையெழுத்துப் பிரதி—காலத்தால், கயவர்களால், யுத்தத்தால்—அழிபட மறுத்தது. ''மூஷின் உபதேசங்கள்'' என்ற மாபெரும் நூல்தான் அது. சுமார் 600 பக்கங்கள் கொண்டது. 60 ராத்தல் எடை உள்ளது. 800 வருஷங்களுக்கு முற்பட்டது. இப்போது அது ஆர்மேனியாவில் மாட்டனடாரன் நகரத்தில் அனைவரும் கண்டுகளிக்கும்படியாக இருக்கிறது என்று நான் நம்புகிறேன். அது வீசி எறியப்பட்டது; துண்டுதுண்டுகளாகச் சிதறடிக்கப்பட்டது; பல்வேறு தனிநபர்கள் கைகளில் சிக்கியது. ஆனாலும், தேவதைக் கதை ரீதியில் அந்த எழுத்துப் பிரதி புனர்ஜென்மம் பெற்றுவிட்டது.

ஒரு மொழியின் நிலைத்து வாழும் தன்மை, அது தனது சொந்த நாட்டில் வளம் பெற்று விளங்குவதில் இல்லை. ஆனால், அயல்மண்ணில் பல இன்னல்களுக்கிடையே அது வளர்வதில் தான் இருக்கிறது. சென்னையிலிருந்து ஒரு ஆர்மேனியப் பத்திரிகை பிரசுரமாவதை எண்ணிப்பாருங்கள்! ஷிராஸ் நகரைச் சேர்ந்த ஒரு ஆர்மேனியப் பாதிரியார் ஒரே வாரத்தில் தன் இரு மகன்களையும் இழந்துவிடுகிறார். அவர் தனது துயரத்துடன் போராடுவதற்காக அநேக மொழிகளைப் பயில்வதில் ஈடுபடுகிறார். அவர் ஆர்மேனியர்களின் மதகுரு ஆகவும் தேவாலயப் பாதிரியாகவும் சென்னைக்கு வருகிறார். 1794-ல், உலகத்திலேயே முதலாவது ஆர்மேனியப் பத்திரிகையான 'அஸ்தரார்'ஐத் தொடங்குகிறார். இருபத்துஎட்டே பேர் சந்தாதாரர்களாகத் தந்த ஆதரவோடு, அவரே அச்சுக்கோப்பவராகவும் அச்சிடுகிறவராகவும் செயல்புரிகிறார். தனக்கு வேண்டிய அச்சு எழுத்துகளையும் அவரே உருவாக்கினார். பத்திரிகைக்குத் தேவையான காகிதத்தைக்கூட அவர்தான் பருத்திக் கூழிலிருந்து தயாரித்தார். எனவே, பூஜ்யர் ஆராதூன் ஷ்மாவேனியனைத் தற்கால ஆர்மேனிய எழுத்தின் தந்தை என்று குறிப்பிடுவது நியாயம் ஆகும். அவர் 1824-ல் மரணம் அடைந்தார். சென்னை ஆர்மேனியன் சர்ச் பாதிரியாராக அவர் நாற்பது வருஷங்கள் பணிபுரிந்திருக்கிறார்.

சென்னையின் வளர்ச்சியிலும் வளத்திலும் ஆர்மேனியர்கள் கணிசமான அளவு பங்குகொண்டிருப்பதைக் கூறும் சிறப்பான வரலாறுகள் இருக்கின்றன சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன்பு! நவாபுகள், சுல்தான்கள், மற்றும் கிழக்கு இந்தியக் கம்பெனியாரின் காலம் அது. ஆற்காடு நவாபுக்கு நெருக்கடியான காலம். கடன்காரர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, தங்களுக்கு உரிய பணத்தைத் தரும்படி நெருக்குகிறார்கள். துயரமான, அவமானகரமான நேரம். ஆர்மேனிய வணிக

இளவரசர் ஒருவரையும் அந்தக் கூட்டத்தில் கண்டு அவர் மிகவும் பாதிக்கப்படுகிறார். ''நீ கூடவா, ஆகா ஷாமீர்'' என்று அவர் பெருமூச்செறிகிறார். ''நான் மட்டும்தான்; உங்களுக்குத் தேவையுள்ள நேரத்தில் வந்திருக்கிறேன்'' என ஆகா ஷாமீர் பதிலளிக்கிறார். அது மட்டுமா? நவாபு அவருக்குத் தந்திருந்த் பிராமிசரி நோட்டை அவர் கிழித்தெறிகிறார். அவருடைய செயல் நவாபை மிக மோசமான ஒரு கட்டத்திலிருந்து காப்பாற்றிவிடுகிறது. தனது எல்லைக்குட்பட்ட ஆர்மேனிய நிலங்களுக்கும் கட்டடங்களுக்கும் நவாப் வரிவிலக்கு அளிக்கிறார். இன்றுகூட ஆர்மேனியன் தேவாலயம் வரிவசூலிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

இதனினும் அதிகமான வளப்புள்ளது ஆர்மேனிய வியாபாரி கோஜா பெட்ரோஸ் வாஸ்கன் சென்னை அருகில் உள்ள செயின்ட் தாமஸ் மவுன்ட் (பரங்கிமலை)மீது இருக்கிற ஆலயத்துக்கு நிர்மாணித்த 160 கல் படிக்கட்டு. அவரே சென்னையில் மர்மலாங் பாலத்தை 1726-ல் 30,000 பகோடாக்கள் செலவில் கட்டினார். மேலும், அந்தப் பாலத்தைப் பாதுகாப்பதற்காகவும் அவ்வப்போது பழுது பார்ப்பதற்காகவும் நிரந்தரமான நிதி ஏற்பாட்டையும் அவர் செய்தார்.

கோஜா பெட்ரோஸ் வாஸ்கன் கவியுள்ளம் படைத்தவ ராகவும் இருந்திருக்கவேண்டும். அவர் சென்னையில் இறந்தார். அவருடைய உடல் ஆர்மேனியன் ஆலயத்தில் அடக்கம் செய்யப் பட்டது. ஆனால், அவரது இதயம், ஈரானில் ஜல்பா இஸ்பஹானில் அவருடைய பெற்றோர்களின் சமாதியில் புதைக்கப் படுவதற்காக, ஒரு தங்கப் பேழையில் எடுத்துச் செல்லப்பட்டது.

இப்போது இந்தியாவில் அதிகமான ஆர்மேனியர்கள் வசிக்க வில்லை என்றே தோன்றுகிறது. சென்னையில் இரண்டு குடும்பங்கள், பம்பாயில் மூன்று, கல்கத்தாவில் சில நூறு குடும்பத்தினர். எண்ணிக்கையில் அதிகம் இல்லை என்றாலும், இந்தியாவில் வசிக்கும் ஆர்மேனிய இனத்தவர்பற்றிய விவரங்கள், மெஸ்ரோப் ஜே. சேத் எழுதிய 'இந்தியாவில் ஆர்மேனியர்கள்', ஆன்பாசில் எழுதிய 'இந்தியாவில் ஆர்மேனியக் குடியேற்றங்கள்' என்ற இரண்டு புத்தகங்களிலும் நன்கு தொகுக்கப்பட்டிருக் கின்றன.

இந்தியாமீது ஆர்மேனியர் பதித்துள்ள தாக்கம் உண்மை யானது. அதைவிட ஆழமும் நுண்மையும் கொண்டது. ஒரு ஆர்மேனியர் இந்திய அறிவாளிகளிடையே ஏற்படுத்தியிருக்கிற பாதிப்பு. அவர்தான் வில்லியம் ஸரோயன். அவர் ஆங்கில

மொழியில் தான் எழுதினார். ஆயினும், 'ஆர்மேனிய ஆன்மாவின் இசையையும் தேடல்களையும்' அவர் உண்மையாகப் பதிவு செய்தார். முப்பது வருஷங்களுக்கு முன்பிருந்தே அவருடைய படைப்புகள் இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வந்திருக்கின்றன. சென்னையில் மிக அதிகமாகப் பேச்சு வழக்கில் இருக்கிற மொழியான தமிழிலும் அவை மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன.

''நாம் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் ஒரு ஆர்மேனியனை இனம் காணமுடியும்'' என்று ஸரோயன் ஒரு சமயம் சொன்னார்.

''எப்படி?'' என்று யாரோ கேட்டார்கள்.

''கண்களைப் பார்த்து... ஆர்மேனியக் கண்கள் வருத்தமாய், துயரம் நிறைந்து இருக்கும்.''

ஸரோயன் 1976-ல் ஆர்மேனியா சென்றார். அப்போது அவர் சொன்னார் :

''இப்போது இதுதான் எனக்கு முக்கியமாகப்படுகிறது. ஆர்மேனியர் கண்களில் வருத்தமும் துயரமும் குறைந்திருக்கின்றன. நான் எங்கே போனாலும், ஆரோக்கியமான, வலிமையும் சந்தோஷமும் கொண்ட ஜனங்களையே பார்க்கிறேன். இது அற்புதமானது...''

சென்னை
31 ஆகஸ்ட் 1979

**அசோகமித்திரன்**

# இந்த நூல்: ஒரு அறிமுகம்

பாப்பிரஸ் தாள் ஒன்றில் எழுதப்பட்டுள்ள மிகப் புராதனமான ஒரு இந்திய எழுத்துப் பிரதி, ஏரெவான் நகரில் உள்ள, எழுத்துப் பிரதிகளைப் பாதுகாக்கும் இடமான மாட்டனடாரனில் கண்ணாடிக்குள் பத்திரமாகப் பாதுகாக்கப்படுகிறது. பல்லாயிரக் கணக்கான மக்கள் அதைப் பார்வையிடுகிறார்கள். 1977-ல் இலையுதிர்காலத்தின்போது ஆர்மேனிய எழுத்தாளர் சங்கக் கட்டடத்தில் சோவியத்-இந்திய எழுத்தாளர் கருத்தரங்கு ஒன்று நிகழ்ந்தது. சமகால இலக்கியம், மற்றும் இரு நாட்டினருக்கும் ஆர்வம் அளிக்கும் இதர விஷயங்கள் பற்றிய முக்கியப் பிரச்சினைகளில் அது கவனம் செலுத்தியது. இந்தியா, ஆர்மேனியா, மற்றும் சோவியத் ரஷ்யாவைச் சேர்ந்த அநேக எழுத்தாளர்களும் அறிஞர்களும் அக் கருத்தரங்கில் கலந்துகொண்டார்கள். ஒருபுறம், பன்னெடுங்காலமாக இருந்துவருகிற ஒரு இந்தியக் கையெழுத்துப் பிரதி ஆர்மேனிய மக்களின் மிகப் புராதனமான இலக்கியச் செல்வங்களோடு சேர்த்து மாட்டனடாரனில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது இன்னொரு பக்கத்தில், ஆர்மேனிய-இந்தியச் சமகால எழுத்தாளர்களின் இலக்கியப் பேச்சு நிகழ்கிறது. இவ் இரண்டும் இந்த இரு நாடுகளுக்கிடையிலும் பல நூற்றாண்டுகளாக நீடித்து இன்றும் நிலைபெற்றிருக்கிற நட்புறவின் குறியீடாகவே தோன்றுகின்றன.

இந்தியாவின் வளமான இலக்கியமும், மிகுந்த வளம் பொருந்திய நாட்டுப்புறக் கதைகளும் பாடல்களும் காலப்போக்கில் ஆர்மேனிய எழுத்தாளர்களின் கவனத்தை ஈர்த்து வந்திருக்கின்றன. புராதன ஆர்மேனிய இலக்கியத்தின் பிரதிநிதிகளான ஹோவன்னஸ் டூமேனியன், அவெதிக் இஸாகியன், வெர்டானெஸ் பாபாஸியன், வாஹன் டெரியன், வாஹன் டாட்வென்ட்ஸ் போன்றோர் இந்திய இலக்கியம் மற்றும் நாட்டுப்புற இலக்கியங்களிலிருந்தும் மொழிபெயர்ப்புகள் செய்திருக்கிறார்கள். 1925-ல் அவெதிக் இஸாகியன், வெனிஸ் நகரத்தில் கவி ரவீந்திரநாத தாகூரை நேரில் கண்டு பேசினார். உரையாடல்களையும், ''ஆனந்தரும் மரணமும்'', ''ஒரு பறவை உருவத்தில் புத்தர்'', ''உஷினாரா'',

''புத்தர்'' போன்ற இந்திய நாடோடிக் கதைகளையும் அவர் ஆர்மேனிய பாஷையில் மொழிபெயர்த்தார்.

ஆர்மேனிய மக்கள் எப்போதும் இந்திய மக்களின் வாழ்விலும் கலாசாரத்திலும் அக்கறை காட்டி வந்திருக்கிறார்கள். ரவீந்திரநாத தாகூரின் படைப்புகள் பலவற்றை (''தோட்டக்காரன்'' 1922, ''தோட்டக்காரன், கீதாஞ்சலி'' 1961 முதலியன) ஆர்மேனியனில் மொழிபெயர்த்துப் பிரசுரித்திருப்பதே இதற்கு மறுக்கமுடியாத ஒரு ஆதாரம் ஆகும். 1961-ல் ''இந்தியக் கதைகள்'' என்ற பெயரில் ஒரு கதைத்தொகுப்பு வெளியிடப்பட்டது. ரவீந்திரநாத தாகூர், பிரேம் சந்த், ஜெய்ஷங்கர் பிரசாத், யஷ்பால், கிருஷன் சந்தர், முல்க்ராஜ் ஆனந்த், கோபால் கால்தார், அகமத் அப்பாஸ், பிரமேந்திர மித்திரா, கமல் ஜோஷி, சரத்சந்திர சாட்டர்ஜி, சய்னேந்திரகுமார், குமுத் சாக்ஸேனு, பி. ராம்நாத் ஆகியோரின் கதைகள் அதில் இருந்தன. மேலும், காம்ஸார் அவெதிசியனின் ''கீழ்திசை ரத்தினம்'' (1964), மேரி மக்ஸபதியனின் ''ஆர்மேனிய இலக்கிய உள்ளம்பற்றி ரவீந்திரநாத தாகூரின் மதிப்பீடு'' (1975), கவோர்க் கரீப் ஜானியனின் ''நமது நண்பன் இந்தியா'' (1976) ஆகிய குறிப்பிடத்தகுந்த புத்தகங்களும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

பொதுவாக, சோவியத் ஒன்றியமும் அனைத்து சோவியத் மக்களும் இந்திய மக்களிடம் ஒரு நட்பு உணர்வை வளர்த்து வருகின்றனர். 1917ஆம் வருஷத்திலிருந்து இதுவரை இந்திய எழுத்தாளர்களின் புத்தகங்கள் சோவியத் ரஷ்யாவில் 732 தடவைகள், 34 மொழிகளில், 29 லட்சம் பிரதிகள் அச்சிடப்பட்டிருப்பது ஏதோ தற்செயல் நிகழ்ச்சி அல்ல.

சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்குமிடையே உள்ள நட்பானது, கலாசார, இலக்கிய பிணைப்புகளின் பன்முக வளர்ச்சிக்கும் ஊக்கம் மிகுதிக்கும் உரிய ஆதார அஸ்திவாரங்களை உறுதியாக அமைக்கிறது. இந்தப் புத்தகம் அதற்கு ஒரு சான்று ஆகிறது. முந்தைய இலக்கியச் சாதனை சில தனிநபர்களின் பரஸ்பரத் தொடர்பினுல் உருவாயிற்று. இப்போது அது அரசு அடிப்படையில் அமைந்து, அரசின் ஆதரவு பெற்று விளங்குகிறது.

அதே சமயம், இந்தியாவிலும் சோவியத் ஒன்றியத்தின் பல தேசீய இலக்கியங்கள்மீதும், ஆர்மேனிய இலக்கியத்தையும் சேர்த்துத்தான், பரவலான ஆர்வம் காட்டப்படுகிறது. சமீப வருஷங்களில், ராஃபி, ஹோவன்னஸ் டூமேனியன், அவெதிக்

இஸாகியன் ஆகியோரின் படைப்புகள் சில பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. பெண் மொழிபெயர்ப்பாளர்களில் ஒருவரான ரனதா காம்புலின் ஆர்மேனிய மொழியைக் கற்றிருக்கிறூர். அவர் ஆர்மேனிய மூலத்திலிருந்து வங்காளியில் மொழிபெயர்க்கிறூர். ஷிரா நவின் குமாரி தெலுங்கில் மொழிபெயர்த்திருக்கிறூர். 1961-ல் எஸ். கே. சாட்டர்ஜி ''ஆர்மேனிய வீர காவியங்களும், சாசூனின் டேவிட் இதிகாசமும்'' என்ற கவனத்தை ஈர்க்கும் ஒரு வெளியீட்டைத் தயாரித்தார். 1925-ல், ரவீந்திரநாத தாகூர் இத்தாலிக்குச் சென்றிருந்தபோது செயின்ட் லாஸர் எனும் தீவில் இருக்கிற ஆர்மேனிய மெக்கிதாரியன் சங்கத்தைப் பார்வையிட்டார். ''செயின்ட் லாஸரைப் பார்ப்பதற்காகவே இத்தாலிக்கு வரலாம். அது பயனுள்ளதாகும்'' என்று அவர் குறிப்பிட்டார். அவருடைய வாழ்த்துச் செய்தி மெக்கிதாரியன் மாசிகையான ''பாஸ்மாவெப்''பில் (1925, எண் 2) இவ்விதம் பிரசுரமாகியிருக்கிறது: ''ஆரிய இனம் என்ற மகாவிருட்சத்தின் வெவ்வேறு கிளைகளாவோம் நாம். உங்கள் நாளங்களில் ஓடுகிற இரத்தம் எங்கள் இரத்தம் ஆகும். உங்களில் இருக்கிற சகோதரத்துவத்தை இன்று நான் உணர்ந்தேன்.''

ஆர்மேனிய மக்களுக்கும் இந்திய மக்களுக்குமிடையே நிலவுகிற சகோதரத்துவமும் நட்புறவும் நூற்றூண்டுகளின் ஆழத்தில் ஊடுருவிச் செல்லும் ஒரு வரலாற்றைக்கொண்டிருக்கிறது. பதினேழாம் நூற்றூண்டின் பிற்பகுதியில், தங்கள் சொந்த நாட்டில் துன்புறுத்தப்பட்டு வெளியேற்றப்பட்ட ஆர்மேனியர்கள், ஒரு பெருங் குழுவினராக, சென்னை மாநகரில் குடியேறிஞர்கள். சிறிது சிறிதாக இயக்க உணர்வுபெற்றும், இந்திய மக்களின் அன்பான உபசரணை தந்த பலத்திஞலும், பதினெட்டாம் நூற்றூண்டில், ஆர்மேனியர் பரவலான கலாசார, தேசீய விடுதலை நடவடிக்கைகளைப் பிரசாரம் செய்யத் தொடங்கினர். 1772-ல் ஹகோப் ஷாஹாமிரியன் ஆர்மேனிய அச்சகம் ஒன்றை நிறுவிஞர். தேசீய லட்சியத்தின் புதிய மறுமலர்ச்சியின் பிரதிநிதிகள் தயாரித்த மதிப்பு மிகுந்த நூல்களை அது வெளியிட்டது. மோவ்ஸஸ் பாக்ரமியானின் ''எச்சரிக்கை என்ற புதிய பதிவேடு'', ஷாஹாமிர் ஷாஹாமிரியனின் ''கீர்த்திப் பிரதாபங்கள் எனும் ஒரு நூல்'', அல்லது வெறுமனே ''கீர்த்திப் பிரதாபங்களின் வலை'' போன்றவை குறிப்பிடத்தக்கன. இந்தியாவில் குடியேறிய ஆர்மேனியர்களின் குறிப்பிடத்தகுந்த பிரதிநிதிகளில் மற்ருெருவரான ஹாவ்ஸெப் எமின் எழுதிய நூல்களும் அந்த மனேபாவத்தையும் உணர்ச்சியையும் பிரதிபலிக்கின்றன. 1794 அக்டோபர் 16ஆம் நாள் ஹாருத்யுன்

ஷ்மாவேனியன் முதலாவது ஆர்மேனிய சஞ்சிகையான ''அஸ்தரார்'' ஐச் சென்னையில் பிரசுரித்தார்.

1707-ல் செயின்ட் நாசரத் சர்ச் கல்கத்தாவில் நிறுவப் பட்டது. 1881-ல் ஆர்மேனியன் மனிதாபிமான ஜிம்னேஸியம் (தேகப் பயிற்சிசாலை) அமைக்கப்பட்டது. இவை இரண்டும் இன்றும் இயங்குகின்றன. 1797-ல் கல்கத்தாவிலும் ஒரு ஆர்மேனிய அச்சகம் செயல்படத் தொடங்கியது. மெஸ்ரோப் தாகியடியனின் ''புராதன இந்தியாவின் வரலாறு'' (1841), ''ஸாசும் ஸாந்திபியும்'' என்ற கவிதை (1847) ஆகியவற்றை அது பிரசுரித்தது. வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு ஆர்மேனியப் பத்திரிகைகள் இந்தியாவில் பிரசுரிக்கப்பட்டன.

இந்தியாவில் வசித்த ஆர்மேனியர்கள் தங்கள் சொந்த விவகாரங்களில் மட்டுமே அக்கறை கொண்டிருக்கவில்லை. அந்நிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராடிய இந்திய மக்களின் தேசீய விடுதலை இயக்கங்களிலும் அவர்கள் கலந்து கொண்டார்கள். இவ்வகையில், கார்ஜின் கான் (கிரிகோர் ஹார்யுத்யுனியன்) புகழ் பெற்றவர் ஆவார். இன்றும் இந்தியாவில் ஆர்மேனியர்கள் இருக்கிறார்கள். கல்கத்தாவிலும் சென்னையிலும் ஆர்மேனியர்கள் வசிக்கிறார்கள்; ஆர்மேனிய தேவாலயங்கள், பள்ளிக்கூடங்கள், தெருக்கள், புராதனக் கட்டடங்கள் ஆகியனவும் இருக்கின்றன.

இரண்டு மிகப் புராதனமான நாட்டினரிடையே தோன்றிய நட்புறவும் சகோதரத்துவமும் இன்றும் தொடர்ந்து வளர்ந்து வருகின்றன. இந்தியாவில் ஆர்மேனிய உரைநடை இலக் கியத்தின் இந்தத் தொகுதி பிரசுரமாவது இந்த உண்மைக்கு மிகச் சிறந்த சான்று ஆகிறது. இத் தொகுப்பில் மிகச் சமீப காலத்திய ஆர்மேனிய உரைநடையின் சிறந்த படைப்பாளிகள் (ஹோவன்னஸ் டூமேனியன், அவெதிக் இஸாகியன், தொரனிக் தெமிர்ச்யன், ஸ்டீபன் ஸோரியன், அக்செல் பாகுன்ட்ஸ், வாகன் டோடோவென்ட்ஸ்), சமகால முதிய தலைமுறையினர் (வாக்தாங் அனன்யன், ஸெரோ கான்ஸாடியன், காஷாக் ஜியுல்நஸாரியன்), மற்றும் மத்திய தலைமுறையைச் சேர்ந்தவர் களின் (அபிக் அவாகியன், எம்கிர்திச் சார்கிஸ்யன், ராபேல் ஆராம்யன், மூஷேக் கால்ஷோயன், பெர்ச் செய்துன்சியன், காரென் சிமோனியன்) கதைகளும் சிறுகதைகளும் அடங்கியிருக் கின்றன.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆர்மேனிய உரைநடை இலக்கியம், ''சின்ன மனித''னின் உருவம், அவனது உளஇயல்,

அறநெறிப் பண்பு ஆகியவற்றைச் சித்திரிப்பதன் வாயிலாகத் தற்காலத்தின் மனப்பண்பையும், பிரச்சினைகளையும், கவலைகள் குழப்பங்களையும் பிரதிபலித்தது. இந்நோக்கில், விசேஷமாக எச். டுமேனியன், ஜி. ஷோரப், எஸ். ஸோரியன், டி. தெமிர்ச்யன் ஆகியோரது படைப்புத் தேடல்கள் குறிப்பிடத் தகுந்த அளவைகளை உண்டாக்கின. எச். டுமேனியனின் ''ஜிக்கோர்'', ''என் நண்பன் நெஸோ'', ''பந்தயம்'', ''நெஸோவின் கல்குளிப்பு'' என்ற கதைகளிலும், எஸ். ஸோரியனின் ''சோகமான ஜனங்கள்'' (1918), ''வேலி'' (1923), ''போர்'' (1925) ஆகிய கதைத் தொகுதிகளிலும், டி. தெமிர்ச்யனின் ''தேவைக்கு மேற்பட்டது'', ''பாதிரி'', ''வயிறு'', ''புன்னகை'', மற்றும் சில கதைகளிலும் ''சின்ன மனித''னின் வாழ்வையும் நிலைபேறுகளையும் பிரதிபலிக்கும் விசேஷமான சித்திரிப்புகள் காணப்படுகின்றன.

எச். டுமேனியன் மிகச் சமீப கால ஆர்மேனிய இலக்கியத்தின் பென்னம் பெரிய எழுத்தாளர் ஆவார். இந்திய இலக்கியத்தில் ரவீந்திரநாத தாகூர் பெற்றிருக்கும் ஸ்தானத்தை அங்கு இவர் அடைந்திருக்கிறார். இவர் தமது கவிதைகளிலும் உரைநடைப் படைப்புகளிலும் ஆர்மேனிய மக்கள் வாழ்க்கையின் யதார்த்த சித்திரத்தை ஒரு உயர்ந்த தளத்தில் உருவாக்கியிருக்கிறார். மக்களின் வாழ்வும் நடைமுறைகளும், அவர்களது உண்மையான உறவுகள், மற்றும் உளஇயல்—ஆகியவை டுமேனியனது படைப்புகளின் ஆதாரமும் சாராம்சமும் ஆயின. மக்கள் மத்தியில் காணப்படும் தனிநபர்களின் காதல்களும் எதிர்பார்ப்புகளும், கனவுகளும் நம்பிக்கைகளும், துயரங்களும் தொல்லைகளும் இந்த எழுத்தாளரின் உள்ளத்தில் ஆழமாகப் படிந்து அவரது படைப்புகளில் வெளிப்பட்டன. அவருடைய எழுத்துகள் அவரது காலத்தின் ஜீவனை உள்ளடக்கிய உயர்ந்த படைப்புகளாகத் திகழ்கின்றன. ''அனுஷ்'' என்ற கவிதை அவரது மிகச் சிறந்த படைப்பு ஆகும். அவருடைய சிறப்பான கதைகளில் ஒன்று இத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கிறது.

எஸ். ஸோரியனின் இலக்கியச் சூழ்நிலை அமைப்பு, குணசித்திரத் தேர்வு ஆகியவற்றின் கொள்கை அவருடைய முதலாவது புத்தகத்தின் பெயரிலேயே நன்கு வெளிப்பட்டது. அவரது குணச்சித்திரங்கள், உண்மையில் துயரம் நிறைந்த மக்களேயாவர்; அவர்களுடைய அன்றாடக் கவலைகளும் பிரச்சினைகளும் எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல. அவர்கள் வாழ்க்கையின் அர்த்தத்தையே இழந்துவிட்டவர்கள்போல் தோன்றுகிறார்கள்;

சிறிய, மதிப்பே இல்லாத தொடர்புகளிலேயே அவர்கள் வசிக்கிறார்கள். வாழ்க்கையின் ஜீவாதார ஓட்டத்துக்குப் புறம்பாகத்தான் அவர்களது பேச்சுகள் இயங்குகின்றன. இத்தகையதுதான் ''நண்பர்கள்'' என்ற கதை. அதில் கதாநாயகனை கிழட்டு பிரமச்சாரி போகோஸினின் ஒரே சிநேகிதனும் பேச்சுத் துணையாகவும் இருப்பது வீட்டில் வளரும் பூனைதான். இப்படிப்பட்டதுதான் ''ஒரு குளிர்கால இரவு'' என்ற கதையும். ஒரு துக்ககரமான, அலுப்பூட்டும் அர்த்தமற்ற வாழ்க்கை, உள்ளது உள்ளவாறு அதில் சித்திரிக்கப்படுகிறது. வாழ்க்கையில் செய்வதற்கு எதுவுமே இல்லாத ஒரு புருஷனுக்கும் அவன் மனைவிக்கும், அவர்களுக்கிடையே எப்போதாவது நிகழ்கிற சம்பந்தமற்ற பேச்சுத் தொடர்தான் ஒரே ஆறுதலாக அமைகிறது. இவ்விதம் அவரது பல புத்தகங்களிலும் அநேக கதைகள் இருக்கின்றன. அவற்றில் துயரம் நிறைந்த சிறிய மனிதர்களின், ஒன்றையொன்று சார்ந்த, தொடர்கின்ற, உருவகங்களும் பிம்பங்களும், துன்பியல் சித்திரங்களாகவும் வேடிக்கைக் கதைகளாகவும் படைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தவிதமான உருவங்கள் டி. தெமிர்ச்யனின் படைப்பு களிலும் விசித்திரமாக வெளிப்படுகின்றன. அக் கதைகளில் காணப்படுகிற பல்வேறு ரகங்களும் வளமான பாரம்பரியமும் சேர்ந்து, 1910களில் படைக்கப்பட்ட கதைகளிடையே அவற்றுக்கு ஒரு தனி ஸ்தானத்தைப் பெற்றுத் தந்திருக்கின்றன. உளஇயல், தத்துவம் இவற்றின் உள்ளார்ந்த மாறுபாடுகளை, கதைகளின் அமைப்பினுள்ளும் ஆழத்திலும் சம்பவங்களிலும் வெளிப்படுத்த தெமிர்ச்யன் முயன்றிருக்கிறார். ''தேவைக்கு அதிகமானது'' என்பது இந்தவிதமான திகைப்பூட்டும் கதை தான். குற்றம் செய்யப்படுகிற நிகழ்வும், குற்றத்தை அறிந்து கொள்கிற போக்கும், உளஇயல் ஆய்வும் தத்துவ சிந்தனையும் கலந்த ஒரு சூழ்நிலையில் இயங்குகின்றன. பல வருஷங்களுக்குப் பிறகு எழுதப்பட்ட அவரது ''மலர்களின் புத்தகம்'' தத்துவ ரீதியில் செழுமையான உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கிறது. ஆர்மேனிய மக்களின் நிலைபேற்றையும், உறுதியாய்த் தாங்கி நிற்கும் ஆற்றலையும் பற்றிய அசாதாரணக் கேள்விகளை அது எழுப்புகிறது. ''பாதிரியார்'', ''வயிறு'' எனும் கதைகளில் சிந்திக்கவைக்கும் உளஇயல் சாயைகள் அடங்கியிருக்கின்றன.

ஏ. இஸாகியன், டூமேனியன் போலவே, இலக்கியத்தின் ஜனரஞ்சகமான அடிப்படைகளின் துணையோடு, மக்களுக்குரிய வாழ்வின் பிம்பங்களை இலக்கியத்தில் கொண்டுவரும் விஷயத்தில் பெரும் சாதனை புரிந்திருக்கிறார். அதே வேளையில், வாழ்க்கையும்

மரணமும், உயிர்வாழ்தலின் தன்மையும் அர்த்தமும் பற்றிய பல மானிடப் பிரச்சினைகளிலும் அவர் ஆர்வம்கொண்டிருக்கிறார். அக் கேள்விகள் எல்லாம் அவருடைய ''அப்துல்லா மேரி'' என்ற கவிதையிலும், இதர எண்ணற்ற செய்யுள்களிலும், உரைநடைப் படைப்புகளிலும், பேச்சுகளிலும் பூரணமாக உருப்பெற்றிருக் கின்றன. அவை ''லிலித், கீழ்திசை தரிசனங்கள்'' என்ற பெயரில் 1927-ல் புத்தக வடிவம் பெற்றன. இசைக் காவியக் கற்பனையான ''சாஅதியின் கடைசி வசந்தம்'' அத் தொகுப்பி லிருந்து எடுக்கப்பட்டதுதான். இஸாகியன் வாழ்க்கையின் தத்துவதரிசி ஆவார். வாழ்வின் நிலையாமை, வாழ்க்கைமீது காதல், வசந்தம் மரணம் ஆகியவற்றின் விழிப்பு சம்பந்தமான நிரந்தர விஷயங்களை, சாஅதியின் வாழ்வை முன் மாதிரியாகக் கொண்டு அவர் எழுப்பியிருக்கிறார். ''நாம் நமது விருப்பத்தின்படி பிறக்கவில்லை. ஆச்சர்யத்துடன் உயிர்வாழ்கிறோம். ஏக்கத்தோடு சாகிறோம்'' என்று ''குலிஸ்தான்'' காவியத்தில் சாஅதி எழுதி யிருக்கிற வரிகளை அவர் விசேஷமாகப் பின்பற்றினார். பொதுவாக, கிழக்கத்திய உலகம், அதன் சித்திர விசித்திரங்கள், இதமான வர்ண விஸ்தாரங்கள், அதன் தத்துவம், பேச்சுகள் ஆகியவை அவரை வலுவாக ஈர்த்தன. இவ்வித நோக்கங்கள் கொண்ட அவரது படைப்புகள் பலவற்றிலும், வாழ்வின் அர்த்தம் பற்றிய கேள்விகளை விவரித்து, இறுதியில் உயிர் வாழ்தல், மரணமடைதல் ஆகியவற்றின் மர்மத்தை இஸாகியன் அடைகிறார்.

வி. டோடோவென்ட்ஸும், ஏ. பாகுன்ட்ஸும் ஆர்மேனிய உரைநடையின் தனித்தன்மை பெற்ற இரு பிரதிநிதிகள் ஆவர். அவர்களுடைய இலக்கிய முயற்சிகள் 1910கள், 1920களின் தீவிரமான இலக்கியத் தேடல்கள் மிகுந்த காலகட்டத்தோடு ஒத்துப்போகின்றன.

வி. டோடோவென்ட்ஸின் படைப்பிலிருந்து தரப்பட்டுள்ள பகுதி அவரது ''ஒரு புராதன ரோமாபுரி ரஸ்தாவிலிருந்து'' (1930) என்ற நாவலிலிருந்து எடுக்கப்பெற்றதாகும். சுயசரிதை ரீதியான இந்த நாவல் பலப்பல சிறு கதைகளையும் நெடுங் கதைகளையும் கொண்ட ஒரு வடிவத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அவற்றில் அநேக சிறு கதைகளும் நெடுங்கதைகளும் பூரண உருவம் பெற்ற தனித்தனி படைப்புகள் போன்றே அமைந்திருக் கின்றன. பொதுவாக, இந்தச் சுயசரிதை நாவல் 1920கள், 1930களில் ஆர்மேனிய இலக்கியம் பெரும் அளவில் முன்னேற்றம் அடைவதற்கு உதவியது. ஜி. மஹாரி ''குழந்தைப் பருவம்'' (1929), ''முதிரா இளமை'' (1930), பின்னர் ''இளமையின்

வாயிலில்'' (1955) எனும் மூன்று பகுதிகள் கொண்ட நாவலை எழுதினார். எஸ். ஸோரியன் ''ஒரு வாழ்வின் கதை'' என்ற நாவலை (1935—1939) உருவாக்கினார். இஸட். எஸாயன் ''ஸிலிஹ்தரின் தோட்டங்கள்'' என்ற குறுநாவலைப் (1935) படைத்தார். இப்படைப்புகளிடையே வி. டோடோவென்ட்ஸின் குறுநாவல் தனிச் சிறப்புடன் விளங்குகிறது. ஆழ்ந்த உணர்வு, இதிகாசத் தன்மை, மென்மையான சோகம், கடக்க இயலாத ஒரு ஏக்கம் ஆகியவற்றுடன் அது எழுதப்பட்டிருக்கிறது. அவரது பிறந்த இடத்தின் சித்திரங்களும், அவருடைய சொந்தக்காரர்களின் முக்கிய அம்சங்களும் சிறுபருவ நிகழ்ச்சிகளும் நினைவுகளும் அவர் உள்ளத்தில் அவ் உணர்ச்சிகள் பொங்கி எழக் காரணங்கள் ஆயின.

ஏ. பாகுன்ட்ஸ் 1920கள் 1930கள் காலகட்டத்தின் ஆர்மேனிய உரைநடை இலக்கியத்தின் முக்கியக் கர்த்தாக்களில் ஒருவராவார். தொழிலால் அவர் ஒரு விவசாயஇயல் நிபுணர். ஆர்மேனிய கிராமங்களில் அவர் தொழில்புரிந்ததால், அக் காலத்திய ஆர்மேனிய கிராமங்களில் நிலவிய வாழ்க்கையின் குண இயல்புகளைப் பிரதிபலிக்கும் ஜீவசித்திரங்களை இந்த எழுத்தாளர் இலக்கியத்தில் ஆக்கினார். பாகுன்ட்ஸ் மூன்று சிறு கதைத் தொகுப்புகளை வெளியிடுவதில் வெற்றிகண்டார். அவரது பிறந்த ஊரான கோரிஸின் வாழ்வையும் தன்மைகளையும் வர்ணிக்கும் ஒரு குறுநாவலை (''க்யோரெஸ்'' 1935) அவர் எழுதியிருக்கிறார். முற்றுப்பெறாத இரண்டு நாவல்களை (''கார்மெராகார்'', ''காச்சாதுர் அபோவியன்'') அவர் விட்டுச் சென்றார். அவற்றில் அவருடைய தேடல்கள் ஒரு இதிகாசப் போக்கில் அமைந்திருக்கின்றன. ''ஆல்ப் மலை வயலட் பூ'' (1926) என்ற கதை அவரது மிகச் சிறந்த படைப்புகளில் ஒன்று ஆகும். வாழ்க்கையைக் கவிதை நோக்கில் புரிந்துகொள்ளல் (ஓவியன் பாத்திரம்); கவிதை உணர்வே இல்லாது வரலாற்றுப் பழம்சின்னங்களைத் தேடல் (ஆராய்ச்சியாளன் பாத்திரம்); வாழ்வின் கவலைகள் குழப்பங்களுக்கிடையே கவிதைத் தன்மை மாண்டு மறைந்துவிடுதல் (குடியானவன் மனைவி உருவம்); கடுமையான யதார்த்தம் (குடியானவன் உருவம்) ஆகிய பண்புகள் இந்தக் கதையில் நுண்மையாகக் கலந்து காணப்படுகின்றன. பொதுவாக, பாகுன்ட்ஸின் படைப்புகளில் காணப்படுகிற விசேஷமான தன்மைகளில் நுண்மை உணர்வும் ஒன்று ஆகும். வசனகவிதை வடிவத்திலும் இசைக்காவியத் தன்மையோடும் அது வெளிப்படுகிறது. மலைப்புறக் கிராமங்களில் வசிக்கிற விவசாயிகளது ஆத்மாக்களின் அழகுகளையும்

துயரங்களையும் வெளியிடுவதற்கு நுண்மையான, கவிதை நடை பயன்பட்டிருக்கிறது. பாகுன்ட்ஸின் கதைகள் மலையின் நீரூற்றுகள் போல் தெளிவாகவும், உள்விஷயங்களை நன்கு புலப்படுத்துவனவாகவும் இருக்கின்றன; மலையக மக்களின் சுபாவம் போல் எளிமையாகவும் சாதாரணமாகவும் தோன்று கின்றன ஆனால், உளஇயல் நோக்கில் அவை ஆழமானவை; நாடகப் பாங்கானவை. இந்த எழுத்தாளர் அவற்றை அனுபவ பூர்வமாகக் கண்டு அறிந்திருப்பதே அதற்குக் காரணம் ஆகும்.

மனிதனை இயற்கையின் உறவினனாகச் சித்திரிக்கும் எண்ணற்ற கதைகளை வி. அனன்யனும் எழுதியிருக்கிறார். வேட்டை விஷயங்களைப் பொருளாகக்கொண்ட பலப்பல கதைகளை அவர் வெளியிட்டிருக்கிறார். ஆர்மேனியாவைச் சேர்ந்த தாவரவர்க்கம், மிருக இனங்கள் பற்றிய ஜனரஞ்சகமான விஞ்ஞான நூல்களையும் அவர் எழுதியிருக்கிறார். அவருடைய ''ஹோவஸாட்ஸோரின் அடிமைகள்'', ''ஸெவானி—ஆபின்'' (ஸெவான் ஏரிக்கரைமீது) என்ற நாவல்களும், மற்றும் அநேக படைப்புகளும் உலகத்தின் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. அவரது எளிய நடை அவருடைய எழுத்துகளுக்கு ஒரு கவர்ச்சி அளிக்கிறது. மனிதனை இயற்கையின் உறவினனாக நோக்குவதும், இயற்கை யோடு அனுபவங்கள் பெறுவதன் வாயிலாக மனிதன் வளர்ச்சி அடைவதைக் காட்டுவதும் அவர் எழுத்துகளில் காணப்படுகிற மிக முக்கியமான அம்சம் ஆகும்.

யுத்தத்திற்குப் பிந்திய வருஷங்களில், உரைநடை எழுத்தாளர்களின் ஒரு புதிய தலைமுறை இலக்கிய உலகில் பிரவேசித்தது. அவர்களில் சிலரது படைப்புகள்—ஸெரோ கான்ஸாடியன், விஜென்கெச்சூமியன், மெகர்டிச் ஸார்கிஸ்யன், ராபேல் ஆராம்யன், அபிக் அவாகியன்—படைப்புகள் இத் தொகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

தற்கால ஆர்மேனிய உரைநடை இலக்கியத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களில் எஸ். கான்ஸாடியனும் ஒருவர். ஆர்மேனிய வாழ்வைச் சித்திரிக்கும் அவரது வரலாற்று நவீனங்களும், யுத்தகால மற்றும் யுத்தத்திற்குப் பிந்திய கால நாவல்களும் வாசகர்களால் ஆர்வத்தோடு வரவேற்கப்பட்டுள்ளன. பெரிய பெரிய படைப்புகளோடு, இன்றைய வாழ்க்கையைக் கலை உணர்வோடு சித்திரிக்கும் குறிப்பிடத் தகுந்த சிறு கதைகளையும் அவர் நிறையவே எழுதியிருக்கிறார். ''வெள்ளை ஆட்டுக்குட்டி'' என்ற கதையில் ஒரு ஆழ்ந்த சோகம் கலந்திருக்கிறது தூரத்து மலைக்கிராமம் ஒன்றில் தன்னந்தனியனாக வசிக்கும் நவஸார்த், பத்து வருஷ காலமாகத் தன் சகோதரன் மகன் வருகையை

எதிர்பார்த்துக் காத்திருக்கிறான். ஆர்ஷக்கை அவன்தான் பேணி வளர்த்துப் பெரியவன் ஆக்கினான். ஆர்ஷக் கிராமத்துக்கு வந்திருக்கும் செய்தியை அறிந்த முதியவன் அவனை அன்போடு வரவேற்க ஏற்பாடுகள் செய்கிறான். ஆனால் ஆர்ஷக் நவஸார்த்தின் வீட்டுக்கு (அது அவனுடைய வீடும்தான்) வராமல், அவனைப் பார்க்காமலே கிராமத்தை விட்டு வெளியேறுகிறான். வேதனை தரும் இந்தச் செயல் முதியவனைத் தீவிரமாக பாதிக்கிறது.

வி. கெச்சூமியன் யுத்தத்திற்குப் பிந்திய கால உரைநடையில் வர்ணனைப் போக்கையும் உள்நாட்டு விஷய விவரிப்பையும் இணைத்தார். மத்திய ஆர்மேனியாவின் மொழி அம்சங்களும், மத்திய கால ஆர்மேனிய மக்களின் வாழ்க்கை விசித்திரங்களும் அவருடைய இந்தப் போக்கிற்கு ஆதாரமாக அமைந்தன. கெச்சூமியனின் படைப்புகளில் வாழ்ந்து செயல்புரியும் கதை மாந்தர்கள் மத்திய கால ஆர்மேனிய வாழ்வில் விசேஷமான வர்கள். எழுத்தாளர்கள், சிற்பிகள், ஓவியர்கள், குயவர்கள், பொதுவாகப் பல்வேறு தொழில்வினைஞர்களும் அவருடைய கதா பாத்திரங்கள். ''குழாய் செய்கிறவன்'' என்ற கதையின் நாயகன் நாணல் தட்டைகளினாலும் களிமண்ணாலும் குழாய் செய்கிற ஒரு தொழிலாளி. அவன் தனது தொழில் உலகத்திலும் அன்பிலும் ஆழ்ந்திருக்கிறான். கெச்சூமியனின் உரைநடை அதன் மொழி நயத்தால்—வார்த்தை அமைப்பு, வாக்கியக் கட்டுக் கோப்பு, வர்ணனைகள் ஆகியவற்றால்—தனித்தன்மையோடு வசீகரிக்கிறது. இத் தொகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கும் கதை களில் விசேஷத் தன்மைகள் நன்கு புலனாகின்றன.

மெக்கர்டிக் சார்கிஸ்யன் இரண்டாவது உலக யுத்தகால வாழ்வையும், மனிதரின் உளஇயலையும் அழுத்தமாகச் சித்திரிக்கும் நாவல்கள், குறுநாவல்கள், சிறுகதைகளை எழுதியிருக் கிறார். மொத்தத்தில், யுத்த நிலைமைகளோடு தொடர்பு கொண்ட மனிதர்களின் வாழ்வுபற்றிய வரலாற்றை அவை உருவாக்குகின்றன. அதிலிருந்து ஒரு பக்கம் இங்குக் கதையாகத் தரப்பட்டிருக்கிறது. யுத்தத்தின் விளைவாக வாழ்க்கையின் இயல்பான போக்கும் சமநிலையும் சீர்குலைந்துவிடுகின்றன. எம். சார்கிஸ்யன் அந்த நிலைமையில் பயங்கரமான துன்பியலையும், சாவையும் அழிவையும் மாத்திரம் பார்க்கவில்லை; சாவின் கண்களை உற்று நோக்குகிற மனித ஜீவன்களிடம் தோன்றுகிற காதலையும் நகைச்சுவையையும் தமாஷ்களையும் அவர் திறந்த மனத்தோடு தேர்ந்தெடுக்கிறார். சுருக்கமாகச் சொன்னால், யுத்தத்தின் கொடிய துயரத்தைத் தாங்கிக்கொள்வதற்கு

வாழ்க்கையின் அடிப்படையாக அமைகின்ற வலிமை மிக்க ஆதாரசக்திகளின் அலேவீச்சை அவர் சுட்டிக்காட்டுகிருர்.

யுத்தத்திற்கு பிற்பட்ட ஆர்மேனிய உரைநடையின் தேசீய வளத்துக்குத் தனது பங்கை ஏ. அவாகியனும் செலுத்தியிருக்கிருர். அவர் சிறுபிராயத்தையும் இளமைக்காலத்தையும் ஈரானில் கழித்தார். ஆர்மேனியர் பலர் குடியேறி வசித்த நாடு அது. எனவே, தெற்கத்திய சித்திரங்களேயும் வாழ்க்கை முறைகளேயும் அவர் கிரகித்துக்கொள்வது சாத்தியமாயிற்று. 1946-ல் சோவியத் ஆர்மேனியாவுக்கு வந்து சேர்ந்ததும், அவர் தீவிரமான இலக்கியப் பணியில் ஈடுபட்டார். வெம்மையான தெற்கத்திச் சூரியனின் வர்ண விஸ்தாரங்கள் நிறைந்த, மனித உளஇயலின் புதிய, சுவாரஸ்யமான தன்மைகளேச் சித்திரித்த அவருடைய கதைகள் ஒன்றன் பின் ஒன்ருகப் பிரசுரம் பெற்றன. அவருடைய சமீப காலப் புத்தகங்களில் ஒன்று அவர் தன்மையை எடுத்துக்காட்டும் விதத்தில் ''தென்பிராந்திய ஜுரம்'' (1971) என்ற தலேப்பைப் பெற்றிருக்கிறது. ''ஏக்கம்'' எனும் கதை அதில் இடம் பெற்றுள்ளது. பொதுப்படையான ஒரு சக்தி அந்தக் கதையில் கலந்திருக்கிறது. 1915-ல் ஆர்மேனியர்கள்மீது சுமத்தப்பட்ட மாபெரும் துயரத்துக்குப் பின்னர் உலகெங்கணும் சிதறுண்ட ஆர்மேனிய மக்களின் சந்ததிகளது ஏக்கத்தை இந்தக் கதை விவரிக்கிறது. ஈரானில் புழுதி நிறைந்த, முக்கியமில்லாத நகரமாக தேஸ்புல்லில் வசிக்கும் ஒரே ஒரு ஆர்மேனியன் கிரிகோர் மானுகியன் என்ற குணசித்திரத்தைப் படைத்து ஏ. அவாகியன் அந்த விஷயத்துக்கு ஒரு உருவம் தந்திருக்கிருர்.

உரைநடை எழுத்தாளர்களின் ஒரு புதிய தலேமுறையினர் 1960களில் இலக்கிய உலகத்தில் பிரவேசித்தனர். அவர்களுடைய பிரதிநிதிகள் தற்காலக் கலாரீதியான வாழ்வை ஏற்றுக் கொள்ளும் வகையில் இன்று முக்கியமான பணியைச் செய்து கொண்டிருக்கிருர்கள். அந்தத் தலேமுறையின் பிரதிநிதிகளான வார்த்ஜெஸ் பெட்ரோசியன், ஹ்ரான்ட் மாடவோசியன், ஸோரெய்ர் காலாயன், மூஷெக் கால்ஷோயன், பெர்ச் செய்துன்சியன், அகாசி ஐவாஸியன், கரென் சிமோனியன், ஹோவன்னஸ் மெல்கோனியன், ரூபன் ஹோவ்ஸிபியன் ஆகியோர்—இவர்களில் சிலரது கதைகள் இந்தத் தொகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கின்றன—ஆர்மேனிய உரைநடையின் புதிய கட்ட வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிருர்கள். தற்காலத் தன்மைக்கு முக்கியமான விஷயங்களே நோக்குதல், இன்றைய மனிதனின் அறநெறி மற்றும் உளஇயல் பண்பை சிருஷ்டித்தல்

ஆகிய தன்மைகள், வெவ்வேறு விதமான விஷயங்களையும் எழுத்து நடைகளையும் எடுத்தாள்கிற இப் படைப்பாளிகளை ஒருங்கிணைக்கின்றன.

வாழ்வின் புத்தம் புதிய நிலைமைகளில் செயல்புரிகிற பாத்திரங்களையும், அந்த நிலைகளில் அவர்களுடைய சாராம் சத்தை வெளிப்படுத்தலையும் வி. பெத்ரோசியன் இலக்கியத்தில் அறிமுகப்படுத்தினர். ''வாழ்ந்த வருஷங்களும் வாழாத வருஷங்களும்'' என்ற, கூரிய மனஇயல் ஆய்வு முறையில் எழுதப்பட்டிருக்கும் அவருடைய நாவலும், ''ஆர்மேனியச் சித்திரங்கள்'' எனும் கட்டுரையும் இந் நோக்கில் தனித்து நிற்கின்றன. இன்றைய ஆர்மேனியாவும், ஆர்மேனிய மனிதனும் உயிர் வாழ்வதற்கான அடிப்படைகளை, வாழ்வுபற்றிய வகை வகையான சர்ச்சைகளின் வாயிலாக இவ் ஆசிரியர் இச் சித்திரங் களில் ஆராய்கிருர்.

குழந்தைப்பருவ நினைவுகள், சிறிது சிறிதாக மங்கி மறையும் உறவினர்கள் தெரிந்தவர்களின் சாயல்கள், மண்ணகத்திற்கு அளிக்கப்பட்டுள்ள போற்றத்தகுந்த ஞாபகச் சின்னங்கள், கடந்துபோன நாட்களின் நிலைபேற்றை உறுதிப்படுத்தும் நிகழ்ச்சிகளும் வரலாறும் ஆகியவற்றைக் கொண்ட இறந்தகால வாழ்க்கை, தற்காலத்தவருக்கு, இழந்துவிட்ட ஒரு உலகமே ஆகும். இழந்துவிட்ட அந்த உலகத்தின் அழைப்பு மனிதனுக்கு உயர்வானது. ''சிறுபருவத்தின் நிலையங்களிலிருந்து'' என்ற பெயரில் வி. பெத்ரோசியன் எழுதிய கதைகளின் வரிசையில் அந்த அழைப்பு எதிரொலிக்கிறது. அவற்றில் ஒன்ருன அவன் ''அம்மாவின் வீடு'' இத் தொகுதியில் இடம் பெற்றிருக்கிறது. இக் கதை வரிசைகளின் நாயகன்—அதை அப்படிக் குறிப்பிடுவது சாத்தியம் ஆகுமெனில்—அந்த ஆசிரியரின் குழந்தைப்பருவமே ஆகும். முதிர்ச்சியுற்ற வாழ்க்கையின் உளஇயலினூடே அர்த்தம் உள்ளதாக ஆகிவிடுகிற குழந்தைப்பிராயம்; கடந்த காலத்தின் சித்திரங்களை அதே நிலையங்களிலிருந்து எழுப்புகிற பர்வம். சென்றுபோன காலத்தின் விஷயங்கள், நிகழ்ச்சிகள், மனிதர்கள், காதல்கள், கனவுகள், சுகந்தங்கள், பாடல்கள் எல்லாம் வருத்தத்துடன் நினைவுகூரப்படுகின்றன. நுண் உணர்வும் இசைக் காவியப் பண்பும், ஏக்கமும் எண்ணிப்பார்த்தலும், இரக்கமும் மென்மையும், துக்கமும் வாழ்வின் நிலையாமையும், கண்ணீரும் இறந்தகால நினைவுகளைக் கொண்ட மவுனமும்கூட அந்த மனநிலைமையின் முக்கிய அம்சங்கள் ஆகும், அவன் ''அம்மாவின் வீடு'' என்ற கதை மேலே கண்ட கூற்றுக்கு ஏற்ற சிறந்த சான்று ஆகும். வாழ்க்கை நிலைமைகள் காரணமாகச்

சொந்தக்காரர்களிடமிருந்தும் பிறந்த வீட்டிலிருந்தும் ஒருவன் சிறிது சிறிதாக வேறுபட்டுப்போவதையும், வீட்டின்மீதும் உறவினர்மேலும் உள்ள அன்பை, நினைவு மற்றும் ஏக்கத்தின் வடிவில் தனது உள்ளத்தில் சுமந்தாகவேண்டிய பிரச்சினையையும் இந்தக் கதை எடுத்துச் சொல்கிறது.

யுத்தத்துக்குப் பிற்பட்ட காலம் முதல் இன்றைய வாழ்வு வரை உள்ள கால அளவில், ஆர்மேனிய கிராமத்தின் சித்திரங்களை யதார்த்தமாய் அழுத்தமான வர்ணங்களில் எச். மாடவோசியன் உருவாக்கியிருக்கிறார். கிராமம், அதன் சமூக மற்றும் அறநெறி நிலையோடும், பெரிய வெளி உலகத்துடன் அது கொண்டிருக்கிற பல பிணைப்புகளோடும், இன்றைய வாழ்வின் முக்கியப் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற மூலாதார முன்னிலைமையாக அவருக்கு அமைந்திருக்கிறது.

எச். மாடவோசியனின் படைப்புகள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணைந்தனவாகவே அமைந்துள்ளன. பலப்பல கிளைகளைக் கொண்ட ஒரு நாவலின் வெவ்வேறு அதிகாரங்களாகவே அவை தோன்றுகின்றன. எழுத்தாளரின் படைப்பு அடிப்படையும், வர்ணிக்கப்படுகிற சுற்றுப்புறங்களும், ஆதார நிலைமைகளும் கதாபாத்திரங்களும் நிலையானவையாய், மாறுதனவாய் இருக்கின்றன. எச். மாடவோசியனின் படைப்புகள் மூன்று ஆதாரபூர்வமான அடிநிலைகளைக் கொண்டிருக்கின்றன. ''எருமை'' என்ற கதையிலும், ''நாங்களும் எங்கள் மலைகளும்'' எனும் குறுநாவலிலும், இயற்கையின் இயல்பான ஓசைகளுக்கு மிக அருகிலே அவரது எழுத்துநடை நம்மை அழைத்துச் செல்கிறது. வாழ்க்கையின் துயரம், வாழ்ந்த வாழ்வு என்று கூறப்படுகிற, கடுமையான, ஆத்மாவை அரிக்கின்ற பயணம் ஆகியவை எச். மாடவோசியனின் இரண்டாவது ஆதார அடிநிலை ஆகும். அவரது படைப்புகளின் இந்த அம்சம், ''சுமை தாங்கும் குதிரைகள்'' என்ற கதை வரிசைகளிலும், ''ஒரு தாய் தன் மகனுக்குக் கல்யாணம் பண்ண முற்படுகிறாள்'' என்ற குறுநாவலிலும், ''ஆரம்பம்'', ''மரங்கள்'' ஆகிய கதைகளிலும் பூரணமாகப் பிரதிபலிக்கிறது. மாடவோசியனின் மூன்றாவது அடுக்கு, ''மிச்ச சொச்சம்'' என்ற குறுநாவல் சம்பந்தப்பட்டது. அதில் அவர் ஒரு புதுவிதமான கதாநாயகனை உருவாக்கியிருக்கிறார். அவன் பிறப்பினால் ஒரு கிராமவாசி. இப்போது அவன் ஒரு பெரிய நகரத்தில் வாழ்க்கையின் புதிய நிலைமைகளில் வசிக்கிறான். அவனது பூர்வீக ஆரம்பங்களும் நிகழ்கால நாட்களும் இணைந்து அவனுடைய நுண்உணர்வு

களையும் கருத்துக் குவியல்களையும் உருவாக்குகின்றன. இக் குறுநாவல், தன்னுணர்வு இயல்பையும் திட்டமிடும் அமைப்பையும் கொண்டிருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டு ஆர்மேனிய வாழ்வுக்கே உரிய விசேஷப் பண்புகளைக்கொண்ட பாத்திரங்களை எம். கால்ஷோயன் படைத்திருக்கிறார். சர்வநாசத்தையும் சீரழிவையும், பிறந்த இடத்தின் சிதைவையும், நாட்டைவிட்டு வெளியேறலையும் கண்டவர்களை, புதிய குடியேற்றங்களில் புதியதோர் வாழ்வுக்கான அஸ்திவாரங்களை அமைத்த மக்களை, அவை பிரதிபலிக்கின்றன. ஆர்மேனியாவின் வரலாற்று ரீதியான நியதி, அழிவும் நாட்டை விட்டு வெளியேறலும், அவரது கதைப்பொருளாக அமைந்திருக்கிறது. தாய்நாட்டைவிட்டுத் தொலைதூரப் பிரதேசங்களில் வசிக்கிற, அதே வேளையில் பிறந்த இடத்திற்கான ஏக்கத்தை உள்ளத்தில் கொண்டிருக்கிற மனிதர்களே அவருடைய கதாநாயகர்கள். ஆர்மேனியாவின் வரலாறு, அதன் சமீப இறந்த கால மற்றும் நிகழ்கால அம்சங்களோடு, அக் கதைமாந்தரின் விதியில் பிரதிபலிப்பதைக் காணலாம். மேற்கண்ட விஷயங்கள் எல்லாம், "டிஸோரியோ மிரோ" (பள்ளத்தாக்கில் மிர்), "நடைபாதைப் பயணிகள்" எனும் குறுநாவல்களிலும், "அழைப்பு", "டாரஸ்மாமா" எனும் கதைகளிலும் வெற்றிகரமாக உருவகிக்கப்பட்டிருக்கின்றன.

ஏ. ஐவாசியன், இன்றைய ஆர்மேனிய உரைநடையில் விசேஷமான கதாநாயக பிம்பங்களை உருவாக்கியிருக்கிறார். அவருடைய "குடும்பத்தின் தந்தை", "தலையாய எண்", "ஸிஞேர் மார்டிரோனின் சாகசச் செயல்கள்" ஆகிய புத்தகங்களில் உள்ள கதைகள், குறிப்பிட்ட சில ரசனுபூர்வமான கொள்கைகளோடு வாழ்க்கையை எழுத்தில் சித்திரிக்கும் ஒரு ஆசிரியரை அறிமுகப்படுத்துகின்றன. "திபிலிஸ்" என்ற கதை அவருடைய "தலையாய எண்" எனும் புத்தகத்தில் இருப்பதாகும். திபிலிஸ் நகரின் தன்மைகளும் அழகுத் தோற்றங்களும் "திபிலிஸ் நகரின் பெயர்ப் பலகைகள்", "புனித உண்மை", "வாஞோவும் போலீஸ்காரனும்" ஆகிய கதைகளிலும் தங்கள் சாயைகளைப் பதித்திருக்கின்றன.

பி. செய்துன்சியனும் கே. சிமோனியனும் சுயத்தன்மை கொண்ட கலைப்பண்பை விசித்திர இயல்புடன் பெற்றிருக்கிறார்கள். அதனால், படைப்பாற்றலுக்குத் தளைகள் பூட்டுகிற, 'அதீத கற்பனை' விஷயங்களை எடுத்தாள்வதில் ஆர்வம் காட்டுகிறார்கள். இந்த விஷயங்களோடு, காலத்தின் வெவ்வேறு கட்டங்களுக்குரிய தனிப் பண்பாகத் திகழ்கிற படிமச் சின்னங்

களையும் இணைத்த படைப்புகளாக பி. செய்துன்சியனின் ''கிளாட் ராபர்ட் இஸ்ரேலி'', ''மிகவும் வருத்தமான மனிதன்'' ஆகிய குறுநாவல்கள் தனித்து நிற்கின்றன. நம் காலத்தின் இரண்டு மிகப் பெரிய துன்ப நிகழ்ச்சிகளின் கலாரீதியான சித்திரங்களை உண்மையின் அடிப்படையில் சிருஷ்டிப்பதன் வாயிலாக, இருபதாம் நூற்றுண்டின் மிகுந்த வகை மாதிரியான நிகழ்ச்சிகள் இரண்டை அவர் வர்ணிக்கிறுர். ஒரு நிகழ்ச்சியில், இந்த நூற்றுண்டின் மிகப் பெரிய குற்றமான ஹிரோஷிமா மீது அணுகுண்டு வீசப்பட்ட செயல், 2,00,000 பேர்கள் மரணம் அடைந்தது, கதிரியக்கத்தால் உண்டான நோய்கள், அந்தக் குற்றத்தை அங்கீகரித்தது, அதை வெளிப்படுத்த எடுத்துக் கொண்ட பயங்கர முயற்சி எல்லாம் கையாளப்பட்டிருக்கின்றன. மற்ெருரு நிகழ்வில், ராபர்ட் ஸ்ட்ராடின் துயர அனுபவம், அவர் அரை நூற்றுண்டுக் காலம் சிறைப்பட்டிருந்தது, இழந்து விட்ட ஒரு வாழ்வு, அந்த இழப்பை மீண்டும் பெறல் ஆகியவை படைப்பாளி மனசின் விடாமுயற்சியினுல் ஒன்றிணைக்கப் படுகின்றன.

கே. சிமோனியன் விஷயங்களையும் பொருளையும் அதீதக் கற்பனையுடன் சித்திரிப்பதில் ஆர்வம் காட்டுகிறுர் என்று கூறலாம். ஆயினும், மனித வாழ்வை உருவாக்குகிற, மற்றும் சமூக நிலைபேற்றின் பண்பை விவரிக்கிற, தார்மீக, மனோதத்துவ அளவைகளிலிருந்து அவர் விலகி நிற்கவில்லை. இத் தன்மையில் அவரது ''மருத்துவர் நார்ஸஸ் மஷான்'' என்ற நாவலும், மற்றும் அநேக குறுநாவல்களும் கதைகளும் குறிப்பிடத் தக்கவை.

மிக அண்மைக்காலத்து ஆர்மேனிய உரைநடை, உண்மையில் இருபதாம் நூற்றுண்டு முழுவதையும் சார்ந்தது; வெகு பரவலான உள்ளடக்கத்தைக்கொண்ட ஒரு வளமான சித்திரம் அது. இந்திய வாசகர்களுக்காகத் தொகுக்கப்பட்டிருக்கும் இந்தப் புத்தகம் இருபதாம் நூற்றுண்டு ஆர்மேனிய உரைநடையின் ஆதாரசக்திகள், போக்குகள், சார்புகள் பற்றிய ஒரு நல்ல அறிமுகமாக விளங்குகிறது. இந்த முதல் தொடர்பு, இனி ஏற்படக்கூடிய நெருக்கமான சம உறவுகளுக்கும் பரஸ்பரம் அறிந்துகொள்ளுதலுக்கும் ஒரு பாலமாக அமையக்கூடும். அதற்கான உறுதிப்பாடும் இருக்கிறது: முதலாவதாக, இரண்டு நாட்டினருக்கிடையிலும் நிலைபெற்றிருக்கிற வளமான புராதன மரபுகள்; இரண்டாவதாக, இந்தத் தொகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிற, மற்றும் சேர்க்கப்படாமல் விடுபட்டுமிருக்கிற, உரைநடை எழுத்தாளர்களால் படைக்கப்பெற்றுள்ள, செழுமையான,

சுவாரஸ்யமான இலக்கியம். ஆர்மேனிய மக்களுக்கும் இந்திய மக்களுக்குமிடையே இடையறாது நீடிக்கிற மிகப் புராதனமான நட்புறவு பரஸ்பர அங்கீகரிப்புக்கு வேண்டிய அடிப்படையான முதல் தேவையை உண்டாக்குகிறது.

**டேவிட் காஸ்பாரியன்**

ஹோவன்னஸ் டூமேனியன்
(1869—1923)

# என் நண்பன் நெஸோ

நாங்கள் ஊர்ப்பிள்ளைகள் எல்லோரும் எப்போதும் சந்தோஷமாக இருந்தோம்.

எங்களுக்கென்று பள்ளிக்கூடம் எதுவும் கிடையாது; படிப்பதற்குப் பாடங்களும் இல்லை. நாங்கள் பறவைகள் மாதிரித் துள்ளித் திரிந்தோம். நாள் முழுவதும் விளையாடினோம். ஆ, நாங்கள் எப்படி ஆடிக் களித்தோம்! எவ்வளவு நல்ல நண்பர்கள் நாங்கள்! நாங்கள் ஒருவரை ஒருவர் எப்படி நேசித்தோம்! எங்களுக்குப் பசி வந்தபோது நாங்கள் வீட்டுக்கு ஓடி ஒரு துண்டு ரொட்டியும், மண்பானையிலிருந்து கொஞ்சம் வெண்ணெயும் எடுத்துத் தின்போம். திரும்பவும் விளையாட ஓடுவோம். அவ்வப்போது மாலை நேரங்களில் நாங்கள் வம்பு பேசவும் கதைகள் சொல்லவும் கூடுவோம்.

பையன்களில் ஒருவன் பெயர் நெஸோ. அவனுக்கு ஏகப்பட்ட கதைகளும் மோகினிக் கதைகளும் தெரியும். அவற்றுக்கு ஒரு முடிவே கிடையாது.

கோடையில் நிலா நிறைந்த இரவுகளில், எங்கள் முற்றத்தில் குவிந்து கிடந்த கட்டைகள்மீது வட்டமாக அமர்ந்து, நாங்கள் நெஸோவின் முகத்தையே கிறக்கத்தோடு கவனித்துக்கொண்டிருப்போம். அவன் கூரி-பாரிபற்றியும், சொர்க்கத்தின் இனிய பறவைபற்றியும், ஒளியும் இருளும் நிறைந்த அரசுகள்பற்றியும் கதைகள் பல சொல்வான்.

''சொல்லு, நெஸோ. இன்னும் ஒரு கதை சொல்லு. குருட்டு ராஜாபற்றிய கதை, கிளிக் கதை, வழுக்கைத் தலையனையும் தாடியில்லாத ஆசாமியையும்பற்றிய கதை சொல்லு.''

2

ஒருநாள் எங்கள் ஊரில் ஒரு பள்ளிக்கூடம் திறந்தார்கள். என் பெற்றோரும், சுமார் இருபது முப்பது பெற்றோர்கள்

செய்ததுபோலவே, என்னைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார்கள். படிப்புச் செலவு வருஷத்துக்கு மூன்று ரூபிள்கள். அதனால்தான் சம்பளம் கட்ட முடியாத பெற்றோர்களின் பிள்ளைகள் பள்ளிக் கூடத்தில் சேர்க்கப்படவில்லை. என் நண்பர்களில் ரொம்பப் பேர்—அவர்களில் நெஸோவும் ஒருவன்—பள்ளிக்கூடம் போக முடியவில்லை.

நாங்கள் எங்கள் வாழ்விலேயே முதல் முறையாகப் பிரித்து வைக்கப்பட்டோம். பள்ளிக்கூடமும் வாத்தியாரும்தான் எங்களை அப்படிப் பிரித்துவைத்த சக்திகள். இப்போதுதான் எங்களில் சிலர் அதிக வசதி படைத்தவர்கள் என்றும், மற்றவர்கள் ஏழைகள் என்றும் நாங்கள் முதல் தடவையாக உணர்ந்து கொள்ள முடிந்தது. நெஸோ புழுதியில் புரண்டவாறே ''நானும் பள்ளிக்கூடம் போக விரும்புகிறேன்'' என்று அழுது புலம்பியது இப்பவும் என் செவிகளில் ஒலிக்கிறது.

அதட்டிக் கூப்பாடு போட்ட அவனுடைய தந்தையின் குரலையும் நான் இன்னும் கேட்க முடிகிறது. ''அட கடவுளே! ஏன்டா இது உனக்கு விளங்கவில்லை? என்னிடம் பணம் இல்லையே. என்னிடம் மூன்று ரூபிள்கள் இருந்தால், அதைக் கொண்டு நான் தானியம் வாங்கி, நீ பட்டினி கிடக்காதபடி காப்பாற்றுவேனே. என்னிடம் பணமே இல்லை'' என்று அவர் சொன்னார்.

பள்ளிக்கூடத்தில் சேராத நெஸோவும் என் இதர நண்பர் களும் கும்பலாக வந்து, வாசல் முன் கூடி நின்று, உள்ளே இருக்கும் எங்களை எட்டி எட்டிப் பார்ப்பார்கள். ஆனால் வாத்தியார் அவர்களை உள்ளே விடமாட்டார். அப்பால் விரட்டுவார். இடைவேளையின்போது சேர்ந்து விளையாடு வதற்குக்கூட அவர் எங்களை அனுமதிக்க மாட்டார். பள்ளிப் பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடுவதற்கு வெளிப் பிள்ளை களுக்குத் தகுதி கிடையாது என்று அவர் சொன்னார். என் நண்பர்கள் வெளியே போய் உட்கார்ந்திருப்பார்கள்; பள்ளி முடிந்து நாங்கள் வெளியேறும்வரை காத்திருப்பார்கள். பிறகு நாங்கள் அனைவரும் ஒன்றாக வீடு திரும்புவோம்.

மெதுமெதுவாக, முதல் வருடம் பள்ளிக்கூடத்தில் எனக்குப் புதிய நண்பர்கள் கிடைத்தார்கள். வருஷ முடிவில், பள்ளிக் கூடத்தில் சேர்ந்திராத நெஸோவும் என் இதர நண்பர்களும் வெளியில் எனக்காகக் காத்திருப்பதை விட்டுவிட்டார்கள்.

## 3

எங்கள் ஊர்ப் பள்ளியில் நான் இரண்டு வருஷங்கள் படித்தேன். அதன் பிறகு என் தந்தை என்னைப் பக்கத்து நகருக்கு இட்டுச் சென்றார். அங்கே இருந்த பெரிய பள்ளியில் என்னைச் சேர்த்துவிட்டார். இது எனக்கு ஒரு புதிய உலகமாக இருந்தது. எல்லா வீடுகளும் சிவப்புக் கூரைகள் பெற்றிருந்தன. நகர மக்கள் அனைவரும் நேர்த்தியான, தூய ஆடைகள் அணிந்திருந்தார்கள். பள்ளிக்கூடமும் பெரிதாகவும் அழகாகவும் இருந்தது. ஊர்ப் பள்ளியில் ஒரே ஒரு வாத்தியார்தான் இருந்தார். இங்கோ அநேக ஆசிரியர்கள். அவர்களில் ஒருவர் பெண். இது எனக்கு இனிமையான ஆச்சர்யமாக இருந்தது.

எனது புதிய சூழ்நிலைகளுக்கும் பள்ளிக்கூடத்துக்கும் தகுந்தாற்போல, என் ஆடைகளும் ஒரு மாறுதலுக்கு உள்ளாயின. இப்போது நான் அழகிய, சுத்தமான, நகரப் பள்ளியின் சீருடை அணிந்தேன். இந்தவித மாறுதலுடன் நான் விடுமுறைக்காக எனது ஊருக்குத் திரும்பினேன். நெஸோவும் என் இதர பழைய நண்பர்களும், நான் வீட்டுக்கு வந்திருப்பதைக் கேள்விப்பட்டதும், காலையில் முதல் வேலையாக அங்கே வந்து, சுற்றி அலைந்து, உள்ளே எட்டிப் பார்க்க முயன்றார்கள். அவர்களை வரவேற்க நான் வெளியே போனேன். நாங்கள் பரஸ்பரம் என்ன பேசினோம் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் எங்களுடைய பழைய தோழமை போய்விட்டது என்பது எனக்கு நினைவிருக்கிறது. அவர்கள் முதல் காரியமாக எனது சீருடையைத்தான் கவனித்தார்கள். என் அத்தியாவசியமான கட்டைச் சட்டையை ஒரு தினுசாகப் பார்த்தபடி நெஸோ சொன்னான்: ''உன் வாலிலிருந்து இறகுகளை அவர்கள் பிடுங்கி விட்ட மாதிரித் தோன்றுகிறது'' என்று.

எல்லோரும் சிரித்தார்கள். எனக்கு வருத்தம் ஏற்பட்டது. ஆனாலும் நான் ஒன்றும் பேசவில்லை. பிறகு நெஸோ என் சட்டைத் துணியைத் தொட்டுப் பார்த்தான். மற்றவர்களும் அப்படியே செய்தார்கள். துணியின் மென்மைபற்றி அவர்கள் அனைவரும் வியந்தார்கள். அப்போதுதான் நான் முதல் முறையாக அவர்களுடைய ஆடைகளை நன்கு கவனித்தேன். அவை அழுக்கு நிறைந்தும் கிழிந்துபோயும் இருப்பதைப் பார்த்தேன். உண்மையில், அந்த ஊர் முழுவதுமே வறுமை மிகுந்து அழுக்குமுட்டிப்போய் இருப்பதாக என் பார்வையில் பட்டது.

## 4

அப்புறம் இரண்டு வருஷங்களுக்குப் பின்னர், என் தந்தை என்னை வேறொரு பெரிய நகரத்துக்கு அழைத்துப்போனார். மேலும் பெரிதான இன்னொரு பள்ளியில் என்னைச் சேர்த்தார். நான் அங்கிருந்து ஊர் திரும்பியபோது, எனது முன்னாள் விளையாட்டுத்தோழர்கள் என்னைக் காண வந்தார்கள். இப்போது அவர்கள் பெரியவர்களாகி இருந்தார்கள். அவர்களும், இதர குடியானவர்களைப்போல் எனக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, அவர்களைப் போலவே மரியாதைகாட்டி ஒரு புறமாக ஒதுங்கி நின்றார்கள். எங்கள் சம்பாஷணையில் ஒரே ஒரு தடவை, ஊர்ப் பள்ளிக்கூடத்தில் நாங்கள் படித்த நாட்கள் எனக்கு நினைவிருக் கிறதா என்று யாரோ கேட்டபோதுதான், நெஸோ பேசினான்.

''இரவு நேரங்களில் உன் வீட்டு முற்றத்தில் மரக்கட்டை களைச் சுற்றி நாம் எல்லோரும் உட்கார்ந்து கதை பேசியது உனக்கு நினைவு இருக்கிறதா?'' என்று அவன் கேட்டான்.

''அதை நான் எப்படி மறக்கமுடியும்! என் நினைவில் நிற்கிற மிக அருமையான விஷயங்களில் அது ஒன்று ஆயிற்றே!''

இதைக் கேட்டதும் நெஸோவுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டதாக நான் நினைத்தேன். எனினும், அவன் ஒரு அந்நியனாக, தொலைவிலேயே நின்றான்.

நான் மாநகருக்குத் திரும்பவேண்டிய காலம் வந்ததும், என் தந்தை எனக்காக நெஸோவின் அப்பாவிடமிருந்து ஒரு குதிரையை வாடகைக்கு அமர்த்தினார். நான் சவாரி செய்யும் குதிரையினோடு நெஸோவும் செல்லவேண்டும் என்று ஏற்பாடு. நாங்கள் புறப்பட்டோம். நான் குதிரைமீது அமர்ந்தும், கிழிந்த துணிகளும் தேய்ந்து பழசாகிவிட்ட செருப்புகளும் அணிந்த நெஸோ நடந்தும் பயணம் செய்கையில் எனக்கு மன வருத்தம் உண்டாயிற்று. சிறிது தூரம்தான் போயிருப்போம். நான் நடக்க விரும்புவதாகச் சொல்லிக் கீழே இறங்கினேன். நாங்கள் இருவரும் சேர்ந்து நடந்தும், மாறி மாறி முறை வைத்துக் குதிரை சவாரி செய்தும் முன்னேறினோம். நெஸோ சந்தோஷப்பட்டான். ஆனால், எனது நேர்மை உணர்வையும் தோழமை உணர்ச்சியையும் அவன் புரிந்துகொள்ளவில்லை. மாறாக, நான் நடந்து சென்றதற்காக என்னை மடையனாகவே அவன் கருதினான் என்பதை நான் உணர்ந்துகொண்டேன். இதனால் என் மனம் புண்பட்டது. ஆயினும், இதைவிட மோசமானது இனிமேல்தான் நடக்கவிருந்தது.

வழியில் உணவு உண்பதற்காக நாங்கள் நின்ருேம். முலாம் பழத்தை நறுக்கவேண்டிய தேவை ஏற்பட்டதும், நான் எனது சின்னக் கத்தியை நெஸோவிடம் கொடுத்தேன். பிறகு, நாங்கள் மறுபடியும் புறப்படத் தயாரானதும், கத்தி மறைந்துபோனதை நான் கவனித்தேன். அதை அவன் திருப்பித் தந்துவிட்ட தாகவும், நான் கத்தியைப் பைக்குள் போட்டுக்கொண்டதாகவும் நெஸோ சத்தியம் செய்தான். உண்மையில் அதை அவன் திருப்பித் தரவில்லை என்று நான் நிச்சயமாக அறிவேன் ஆயினும், என் சட்டைப் பைகளை முழுக்கச் சோதித்தேன். இறுதியில், நாங்கள் கிளம்பினேம். அவன் அந்தக் கத்தியைத் தனக்காக வைத்துக்கொண்டான் என்பது திட்டமாகப் புரிந்தது. பின்னர், மற்றவர்கள் அதை அவனிடம் கண்டதும் உண்டு. எங்கள் வழியை நாங்கள் தொடர்ந்தபோது, என் இதயம் வலித்தது. நிச்சயமாக அது எனது மறைந்துபோன கத்திக்காக அல்ல; ஆனல் நான் அனுபவித்த அதைவிடப் பெரிய இழப்புக்காக; எதை என் நண்பன் அறிந்துகொள்ளவில்லையோ அதற்காகத்தான் அந்த வேதனை.

நாங்கள் போய்ச் சேரவேண்டிய இடத்தை அடைந்ததும், நெஸோ திரும்பவேண்டிய நேரத்தில், குதிரைக்கு உரிய வாடகைப் பணம் போக, அவனுக்காக ஒரு சட்டைக்குத் தேவையான துணி ஒன்றும் வாங்கி அளித்தேன். அதைப் பெற்றுக்கொண்டதும், ''என்ன, நீ எனக்கு இனும் காசு எதுவும் தரமாட்டாயா?'' என்று அவன் கேட்டான்.

நான் மிகுந்த குழப்பம் அடைந்தேன். அவனுக்குப் பணம் கொடுத்தேன். ஆனலும், அதுமுதல், எனது குழந்தைப் பருவத்தையும், நாங்கள் மரக்கட்டைகள்மீது உட்கார்ந்திருக்க நெஸோ கதைகள் சொல்லி மகிழ்வித்த நிலா இரவுகளையும் நான் நினைத்துக்கொள்கிற ஒவ்வொரு தடவையும், என் இதயம் வேதனையாலும் இரக்கத்தாலும் கனத்துவிடும்.

''நெஸோ ஏழை... நெஸோ கல்வி அறிவில்லாதவன்... கிராம வாழ்வின் பயங்கர வறுமையினல் நசுக்கப்பட்டவன் நெஸோ... அவன் கல்வி கற்றிருந்தால், அவன் நல்ல முறையில் வளர்க்கப்பட்டு, போதுமான வசதிகள் அளிக்கப்பட்டிருந்தால், என்னைவிட மிகச் சிறந்த மனிதனுக அவன் விளங்கியிருக்க முடியும்.''

இப்போது நெஸோபற்றி நான் நினைக்கிறபோது அவனை மன்னித்து, என் நோக்கில் அவனை உயர்ந்தவனுகக் காணவும், என் சிறு பிராயத்தில் முன்பு நான் அவனை நேசித்ததுபோல்

இப்பவும் அவனிடம் அன்பு செலுத்தவும் முயல்கையில், எனக்கு நானே சொல்லிக்கொள்வது இதுதான். அமைதியான, நட்சத்திரங்கள் ஒளிர்ந்த, நிலாக்காலத்து இரவுகளில் அவன் எப்படி இருந்தானோ, அதேபோல நெஸோ எப்பவும் எனக்குத் தோற்றம் அளிக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால், அது சாத்தியமற்றது என நான் அறிகிறேன். அப்படி அவனை நான் காண முடியாது. உடனடியாகவே மற்றொரு சித்திரம், வெட்கமானதும் துயரம் தருவதுமான ஒன்று, என் மனசில் எழுகிறது.

எனது படிப்பை முடித்து, இவ் உலகில் எனக்கு ஒரு ஸ்தானத்தை அமைத்துக்கொண்ட பிறகு, நான் மீண்டும் எனது சொந்த ஊருக்கு வந்தேன். அன்றைய தினம் ஊர் மைதானம் கும்பலும் சந்தடியும் மிகுந்து காணப்பட்டது. திடலின் நடுவே ஒரு கம்பத்தில் கட்டுண்டு நின்றான் நெஸோ. அவன் தலை அவமானத்தால் தாழ்ந்திருந்தது.

திருடியதற்காக அவன் தண்டிக்கப்படுகிறான் என்று என்னிடம் சொன்னார்கள். அவனுக்காக நான் பரிந்து பேசினேன். அவன் விடுதலையானான். ஆனாலும், சுட்டெரிக்கும் வெயிலில், கம்பத்தில் கட்டுண்டு, குமுறும் கும்பலிடையே அவன் தலைகவிழ வெட்கி நிற்பதை நான் என் மனக்கண்ணில் இன்றும் காண்கிறேன்.

திருடுவதும், அதற்காகக் கசையடி படுவதும் எங்கள் ஊரில் சர்வசாதாரண விஷயங்கள்தான். ஆனால், நிலாக்கால இரவுகளில் கட்டைகள்மீது அமர்ந்து எங்களுக்குக் கதைகள் சொன்ன சின்ன நெஸோவை நான் மறக்க முடியாதது போலவே, இந்த நிகழ்ச்சியையும் என்னால் மறக்க முடியாது. எவ்வளவு புனிதமான, இனிய நெஸோ—எனது சிறுபருவத் தோழன் நெஸோ.

அவெதிக் இஸாகியன்
(1875—1957)

# சாஅதியின் கடைசி வசந்தம்

வசந்தம் வந்துவிட்டது.

மண்ணுலகை அற்புதமாக மாற்றுகிற மாய வசந்தங்களில் அதுவும் ஒன்று. சந்தோஷத்தின், மற்றும் சோகத்தின் கவிஞன சாஅதி அதைப்போல் நூறு வசந்தங்கள் கண்டிருக்கிறன்.

அன்று அதிகாலையிலேயே சாஅதி விழித்தெழுந்தான். கானப்பறவை மீண்டும் கீதமிசைப்பதைக் கேட்கவும், வசந்த கால அற்புதங்களை மறுபடியும் பார்ப்பதற்காகவும், ரோஞபாத் நதிக்கரையின்மீதிருந்த பூந்தோட்டத்துக்கு அவன் போஞன்.

இயற்கையின் வெகுமதியான ரோஜா மலர்களைச் சூடி, காலைத் துயிலில் ஆழ்ந்திருந்த ஷிராஜின் வயலை அவன் நோக்கிஞன். நறுமணம் கலந்த வெண்பனியினுல் திரையிடப் பட்டிருந்தது அது.

பூத்துக் குலுங்கிய மல்லிகைச் செடி ஒன்றின் கீழே, அழகான விரிப்பின்மீது சாஅதி உட்கார்ந்தான். அவன் நடுங்கும் கை களில் பசுமையும் செம்மையும் கலந்த ரோஜா மொக்கு ஒன்றைப் பற்றியிருந்தான். ''தன்னை அணைக்கும் காதலனைப் பார்த்துப் புன்முறுவல் பூக்கும் ஒரு இளம் பெண்ணைப்போல, காலை மென் காற்றுக்காகத் தன் இதழ்களை விரிக்கிறது இந்த ரோஜா'' என்று மெதுவாக முணுமுணுத்தான்.

சாஅதி இப்போது மிகுந்த வயோதிகஞகிவிட்டபோதிலும், அவனுடைய ஆத்மா அரைவாசி மூடிய இமைகளினூடாகவும் காதுகளின் வழியாகவும் இந்த உலகத்தின் அற்புதமான நிகழ்ச்சி களையும் உருவங்களையும், அறிமுகமாகாத நெடுந்தொலைவுகளின் இசைகளையும் நிசப்தங்களையும் இன்னும் கண்டும் கேட்டும் மகிழ்ந்தது. கவிதை எனும் மந்திரசக்தி—விண்மீன்களின் ராஜ் யத்தில் உள்ள காஃப் மலையின் உச்சியில் தனது கூட்டை அமைத் துள்ள அந்த ஜாருக்த் பறவை—அவனேடு இன்னும் பேசிவந்தது தான் காரணமாகும்.

ஒளி நிறைந்த கண்களும் சாம்பல்நிறச் சிறகுகளும் பெற்ற கானப்பறவைகள், காதல் கனலும் வசீகரமான இன்னிசைப்

பாடல்களைக் கூவின. அவற்றின் பாடல்கள் சாஅதியின் இதயத்தில் எதிரொலித்தன.

நெடுந்தூரத்தில் காதலோடு மலர்ந்து திகழும் ரோஜாக் களின் நறுமண வாழ்த்துகளை வருடுகிற மென்காற்றின் கன்னி மூச்சு கொண்டு தந்தது. இக் காதல் அறிவிப்புகளை சாஅதியின் ஆத்மா புரிந்துகொண்டது.

''இயற்கையின் மொழிகளை ஒரு அன்பு உள்ளம் எப்போதும் புரிந்துகொள்ளும். இசைப் பொருத்தத்தினால் நிறைந்திருக் கிறது இவ் உலகம். அதன் காதல்போதை அமரத்துவமானது.'' இப்படி வெகுநாட்களுக்கு முன்பு அவன் கூறியிருந்த வார்த்தை களை சாஅதி நினைவுகூர்ந்தான்.

கானப்பறவையின் இன்னிசையாலும் சிவப்பு ரோஜாக் களின் அழகினாலும் பரவசமுற்ற சாஅதி, அவற்றின் மோக மூட்டும் நறுமணத்தை ஆழ்ந்து சுவாசித்தான்; அதனால் கிறக்க முற்றுக் கண்களை மூடினான். கனவில் நிகழ்வதுபோல் இந்த உலகம் தன் உள்ளத்தில் சலனிப்பதை அவன் கண்டான்.

புனிதமான தாமரை மலர்கள் அணிசெய்ய அசைவற்று விளங்கும் இந்திய ஆறுகளை அவன் கண்டான்.

அறிவுள்ள யானைகள், அடர்ந்த காடுகளின் நடுவில் வாட்ட முற்று நிற்பதை அவன் பார்த்தான். டில்லியின் தங்க மாளிகை களில், தங்கள் கருநீலக் கூந்தலில் செக்கச் சிவந்த மலர்கள் சூடிக் காட்சி தரும் இனிய மகளிரையும் அவன் பார்த்தான்.

தூரானின் சூறைப் பிரதேசங்களைக் கண்டான். சுடர்வீசும் வாள்கள் ஏந்திய கொடிய கயவர்கள் சூறைக்காற்றின் சிறகு களால் சுமந்துசெல்லப்படுவதையும் அவன் பார்த்தான்.

சூரியனால் பொசுக்கப்படுகிற பாலை நிலத்தையும் அவன் பார்த்தான். மேலே பறக்கும் கழுகுகளின் கூரிய கண்களிலிருந்து தப்ப வேகம் வேகமாக ஓடும் மான்களை, குதிரைகள்மீதமர்ந்து துரத்திச் செல்கிற பெதூயின் வேட்டைக்காரர்களையும் பார்த்தான்.

புனித யாத்திரை செல்லும் பக்தர்களின் வரிசைகளைப் பார்த்தான். அவர்கள் மெக்காவின் வாயில்கள் முன்னே முழந் தாளிட்டுப் பணிந்து பாடித் துதிப்பதையும் அவன் கண்டான்.

புராதன எகிப்தின் புகழ்வாய்ந்த அற்புதங்களை, பரந்து விரிந்த கடல்களின் நீல மினுமினுப்புகளை, டமாஸ்கஸ் நாட்டின் பட்டுபோல் மிருதுவான சருமம் பெற்ற பெண்களின் ஒளிவீசும்

உடல்களை அவன் பார்த்தான். வளைந்து கொஞ்சுகிற அவர்களின் கைகள் இளம் சாஅதியின் கழுத்தை அழகிய மாலைபோல் சுற்றித் தழுவியது உண்டு.

சாஅதி நெடுமூச்சுயிர்த்து, கண்களைத் திறந்தான்.

''ஐயோ, எனது நூறு ஆண்டுகள் இனிய கனவைப்போல் பறந்து போய்விட்டன; ஒரு இரவின் கனவுக் காட்சிபோல் மறைந்தன. அத்தனை வருஷங்களும் ஒரு நொடிப்பொழுதுபோல் ஓடிவிட்டன. இன்பக் கதைகளே, கானப்பறவைகளே, ரோஜா மலர்களே, ரோஜாக்களின் சகோதரிகளான இன்பம் நிறைந்த இளம்பெண்களே, நீங்கள் எல்லோரும் எப்போதும் எனக்குத் துணையாக இருந்ததுதான் காரணம்!''

வெள்ளி மலர்கள் ஒளிர்ந்த சொர்க்கத் தோட்டத்திலிருந்து கதிரவன் வெளிப்பட்டான். புல்லும் பசிய இலைகளும், கற்களும் குன்றுகளும் மினுமினுத்தன. ஏனெனில் இரவு அவை அனைத்தின் மீதும் வைரப் பொடியை வாரித் தெளித்திருந்தது.

நீல வானத்தையும், சூரிய உதயத்தின் பொன்னொளியில் பறந்து செல்லும் பறவைகளையும் சாஅதி ஆழ்ந்து நோக்கினான்.

வியப்போடும் பயத்தோடும் அவன் அவற்றைப் பார்த்தான்.

''உண்மை. உலகம் ஒரு அதிசயம்தான். ஒரு மோகினிக் கதைதான். அதன் அற்புதமும் அழகும் நிரந்தரமானவை.

''நாள்தோறும் நான் இந்த உலகத்தைப் பார்க்கிறேன். ஒவ்வொரு நாளும் அதை அன்றுதான் முதல் முதலாகப் பார்ப்பது போல் நான் புதுவியப்புப் பெறுகிறேன். உலகம் பழகிப்போனது தான். இருந்தாலும், அது அற்புதமாக இருக்கிறது. பழசானது என்றாலும் நித்தியப் புதுமை உடையது. தனக்குத் தானே நிகரான—நிரந்தரமான, விளக்கிச் சொல்ல முடியாத—ஒரு தனி அழகினால் அது புதிதாக விளங்குகிறது.''

சாஅதி மீண்டும் உலகை நோக்கினான். இயற்கையின் பன்முக, அதிசய விளையாடல்களைப் பார்த்தான். பச்சைப் புல் வெளியில் பவளச் செந்நிறக் கால்களால் நடக்கும் இரண்டு புறாக்கள் கொஞ்சிக்கொண்டிருந்ததை அவன் கவனித்தான். திரும்பவும் உரக்கப் பேசினான்.

''உலகம் ஒரு வசியத்தில் கட்டுண்டிருக்கிறது. மறைந்திருக்கும் எவளோ ஒரு மாயக்காரியின் கைக்கோலின் மந்திர சக்தியில் அது சிக்கியுள்ளது. அதனால் எல்லாமே இனிய மோகினிக் கதையாக மாறிவிட்டது.

''உலகம் தலைதெறிக்க ஓடுகிறது. சிதறிப் பிரிகிறது. எப்போதும் மாறிக்கொண்டே இருக்கிறது. ஆனாலும், இந்த மகத்தான உலகத்தைப் புதுப்பித்து, மறுபடியும் சீரமைத்து, இப்படி அற்புதமான அழகுக் கதையாய் நம் முன்னே பரப்பி வைப்பதுதான் எதுவோ?

''காதல் துடிப்பினால் கனத்துச் சோர்ந்த இதயத்தோடு, மானை, பாறைகளில் இடித்துத் தன் கொம்புகளை முறித்துக் கொண்டே கூரிய குன்றின்மீது ஏறும்படி செய்கிற சக்தி எது?

''அதன் பச்சைப் போர்வையைக் கிழித்து வெளிப்பட்டு, மிக இனிய நறுமணத்தைப் பரப்பும்படி ரோஜாவை எது தூண்டு கிறது?

''மனிதப் பிறவியை எங்கிருந்தோ தோன்றவைத்து, சிந்திக்கவும், துன்பப்படவும், சுட்டெரிக்கும் ஆசைகளின் தீக் கொழுந்துகளை அனுபவிக்கவும், சாக விரும்பாமல் எப்போதும் இருக்கவும் தவிக்கும்படியாக, ரத்தமும் சதையும் பெற்றுத் திரியச் செய்வது எது?

''ஆ, காதலே, வெற்றிகொள்ள முடியாத சக்தியே, இனிய கொடுங்கோலனே! நெடுங்காலமாக நான் உன்னை அறிவேன். ஆயினும், உனது ஆழத்தையும் உன் சாரத்தையும் ஒருபோதும் நான் பூரணமாக உணர முடிந்ததில்லை.''

இதுதான் அவனது கடைசி வசந்தம் என்று சாஅதியின் உள்ளுணர்வு அவனுக்கு உணர்த்தியது.

அவனுடைய இறுதி வசந்தம்!

தோட்டக் கதவு திறந்தது.

ஷிராஜின் நஸியத், மென்காற்றின் வருடுதலுக்குத் தனது பனிவெண் உடலைக் காட்டியவாறு உள்ளே வந்தாள். அடிக்கடி வருகிறவள்தான். சாஅதியின் காதலி அவள்.

திராட்சை மதுபோல் கிறங்கவைக்கும் அவளுடைய உதடு களும், துணி போர்த்தாத அவளது கரங்களின் வெண்மையும் கதகதப்பும், நூறு வயதுக் கவிஞனின் தூக்கமற்ற இரவுகளை அவ்வப்போது ஆனந்தமயமாக்கி யிருக்கின்றன.

சாஅதி, தன் இளமை நிரம்பிய, வாட்டமுறுத இதயத் தினால் பூரணமாக அவளைக் காதலித்தான்.. அவனது அமரகாவிய மான குலிஸ்தானில் பொன் எழுத்துகளால் அவளைச் சித்திரித் திருக்கிறான்.

கைநிறைய ரோஜா மலர்கள் ஏந்தி நஸியத் அருகே வந்தாள். அவளே ஒரு ரோஜாப்பூ மாதிரி சுகந்தம் பரப்பினுள். அவனை வாழ்த்தினுள்.

கவிஞன் துக்கத்தோடு இருந்தான். அவனது வெளிர் உதடுகளில் விசனம் படிந்திருந்தது.

''மனிதரில் மிகவும் சந்தோஷமானவரே, உங்களை எது துயரப்படுத்துகிறது?''

சாஅதி மவுனமாக இருந்தான்.

''உங்கள் நினைவோட்டத்தை நான் நேசிக்கிறேன். ஓ, சாஅதி! உங்கள் துக்கம் அறிவுபூர்வமானது. வேதனையில்தான் முத்துகள் பிறக்கின்றன என்றும், வாசனை திரவியம் எரிகிறபோதுதான் நறுமணம் தருகிறது என்றும் உங்கள் இனிய உதடுகள்தானே அறிவித்திருக்கின்றன.''

சாஅதி ஒளியற்ற மென்னகையோடு அவளைப் பார்த்தான்.

''பாருங்கள், உங்களுக்காக நான் ரோஜாப் பூக்கள் கொண்டு வந்திருக்கிறேன். என் தோட்டத்தில் பூத்த மென்மையான ரோஜாக்கள்.''

அவள் சாஅதிமேல் ரோஜா மலர்களைத் தூவினுள். கவியின் வருத்தம் படிந்த முகத்தை, பளிச்செனத் திகழ்ந்த தன் விரல் நுனிகளால் தொட்டாள்.

''சொர்க்கசுந்தரி, நீ எனக்குத் தந்த ரோஜாக்கள் உலகத்திலேயே மிகச் சிறந்த மலர்களாகவே எப்போதும் விளங்கின. அவை வாடியதே இல்லை.''

''ஆமாம் சாஅதி. 'ஒருவர் ரோஜாவின் மணத்தை நுகரும்போது, அது சீக்கிரமே வாடிவிடும் என்று ஏன் நினைக்கவேண்டும்? அதன் வாசனையை எண்ணிப்பார். மலர் எப்பவோ வாடிவிட்டது என்ற நினைவை நீ சீக்கிரம் மறந்துவிடுவாய்.' '' கவி என்றோ சொன்ன வார்த்தைகளை நஸியத் தன் வெள்ளிமணிக் குரலில் திரும்பச் சொன்னுள்.

அவள் அவன் அருகில் உட்கார்ந்தபோது, ஏகப்பட்ட கனவுகளை வரவழைத்த அவளது கூந்தல் சாஅதியின் முகத்தில் விழுந்தது. உடனே இனிய மென்காற்று ஒன்று, தனது வானவில் வர்ணச் சிறகுகளை அடித்தவாறு, தோட்டத்தின் வழியே விரைந்தது. சாஅதி தடுமாறும் தன் கையினுல் நஸியத்தின் கனவுமயக் கூந்தலைத் தடவுகையில், காற்றில்

படபடத்துச் சென்ற ஜூம்ருக்த் பறவையின் அற்புதச் சிறகுகள் தான் அது.

பின்னர், தன்னைச் சுற்றிலும் தகதகத்த மோகினிக் கதை உலகத்தின்மீது, தன் ஆத்மாவின் அடித்தளத்திலிருந்து எழுந்த பார்வை ஒன்றைப் படரவிட்டான். இனிய காதலியின் பிரகாசமான புன்னகையை அவன் பார்த்தான். சூடான கண்ணீர் அவனது கிழ இதயத்தைப் புண்ணாக்கியது. அவளுடைய சின்னக் கையைத் தன் கையில் எடுத்தான். அதை முத்தமிட்டான். பிறகு அதை அவன் பதைபதைக்கும் தன் நெஞ்சோடு அழுத்தினான்.

''எனது கடைசி வார்த்தைகளை என் குலிஸ்தான் காவியத்தின் கடைசிப் பக்கத்தில் உனது சின்னக் கையினால் எழுதிவை:

'நமது சுய விருப்பத்தின்படி நாம் பிறப்பதில்லை. நாம் ஆச்சர்யத்தில் வாழ்ந்து, கவலையோடு சாகிறோம்.' ''

டி. தெமிர்ச்யன்
(1877—1956)

## வயிறு

*வீட்டிலிருந்து சதுக்கத்துக்கு; சதுக்கத்திலிருந்து வீட்டுக்கு.*

காலே முதல் மாலே வரை அவன் கண்காணிக்கிற எல்லே அது தான். முன்னர், அவன் தச்சுவேலேக்காரனுக இருந்தபோது கூட, நகரத்தில் அவன் போவதற்கு விசேஷமான இடங்கள் எதுவும் இருந்ததில்லே. ஆயினும், சனிக்கிழமை மாலே வேளே களில் வீட்டுக்கு வந்ததும், அவன் நேரே மதுச்சாவடியை நோக்கி நடைபோடுவான். ஆனுல் இப்போது யுத்தமும், பஞ்சமும், இன்னும் இதர பல விஷயங்களும் சேர்ந்து அவனேயும் அடியோடு அமுக்கிவிட்ட காலத்தில், அவனுக்குப் போக்கிடமே இல்லே என்ருகிவிட்டது. அவன் வேலே செய்யவில்லே. ஏற்கெனவே கிழடாகிவிட்டான். முற்றிலும் ஓய்ந்துபோனுன். தரித்திரம் பிடித்த கிராமம் ஒன்றில் தீனிக்கு வழியின்றிக் கிடக்கும் ஒரு நாய்க்கு — எவரையும் பயப்படுத்தாமலும், தான் இருப்பதை எவருக்கும் உணர்த்த முடியாமலும் வெறுமனே கம்மிய குரலில் குரைத்துக்கொண்டிருக்கிற அப்பாவி ஐந்துவுக்கு — இருக்கிற முக்கியத்துவம்தான் அவனுக்கும் இருந்தது.

வேலேயிலிருந்து நீக்கப்பட்ட ஒரு தச்சன் அவன். அவ்வளவு தான்.

கடைசியாக அவனே வேலேக்கு வைத்திருந்த ஆசாமி அவனேச் சக்கையாக முற்றிலும் பிழிந்தெடுத்த பிறகு வீட்டுக்கு அனுப் பினுன். அவனது சவப்பெட்டிக்கும் புதைகுழிக்கும் அவனே அனுப்பிவிட்டான் என்றே சொல்லவேண்டும்.

நாற்பது வருஷங்கள் உழைத்தும் அவன் எதுவும் மீத்திருக்க வில்லே. உடல் பலமோ, பணமோ, நண்பர்கள் என்று எவருமோ அவனுக்கில்லே. அனல் பறக்கப் பாய்ந்து ஓடும் குதிரைகள் பூட்டிய வண்டி மாதிரி அனேத்தும் அவனே விட்டுப் பறந்தோடின. தணிக்க முடியாத பசி ஒன்றுதான், நன்றியுள்ள நாய் மாதிரி, கடந்த காலத்தின் எச்சமாக அவனேடு ஒட்டிக் கொண்டிருந்தது. முன்னுள் கைவினேஞனின் ஆரோக்கியமான வயிறு பிடிவாதமாக இயங்கியது.

தின்பது, முடிவேயில்லாமல் தின்பது—அதுதான் அவனது அடங்காத அவா.

காலை முதல் இரவு வரை, அவனுடைய பேச்சு, செயல், திட்டம் எல்லாம் தின்பதைப்பற்றியே இருந்தன. அவன் தனது இருக்கையிலிருந்து எழுந்து, உணவுப் பதார்த்தங்கள் இருக்கிற அலமாரி அருகே போய், அதைத் திறந்து, அதன் இண்டு இடுக்குகள் பூராவும் ஆசையோடு தேடுவான். சட்டி பானைகளின் மூடியைத் திறந்து பார்ப்பான். எப்போதும் ருசிகரமான எதையாவது கண்டுகொள்ளலாம் என்ற நம்பிக்கையோடு, அல்லது தீவிர விருப்பத்தோடு, சிறு துணிகளின் மடிப்புகளைக் கலைத்து ஆராய்வான். தன் வாயில் போட்டுக்கொள்ள ஒரு துணுக்கைக்கூடக் காணுதபோதும், அவன் திறந்த அலமாரியின் முன்னே நெடுநேரம் யோசனையில் மூழ்கியவாறு நின்றுவிடுவான். தினம் ஒவ்வொரு மணி நேரமும் இப்படிச் செய்துகொண்டே இருப்பான்.

வீட்டில் எந்த இடத்திலாவது ஏதேனும் ரொட்டி இருந்தால் அதை நொடிப்பொழுதில் அந்தத் தச்சன் தின்று தீர்த்து விடுவான். கண்ணுக்குப் புலனுகாத இடுக்குகளில் அவன் மனைவி சர்க்கரைக் கட்டியில் முக்கால்வாசியை மறைத்து வைப்பாள். ஆயினும், தச்சன் சிறிதளவு ரொட்டிக்காக, அல்லது மொச்சைக்காக, நெடுகத் தேடிக்கொண்டேயிருப்பான்...

வீட்டில் ஒன்றுமே இராது; உயிரைக் கொடுத்தால்கூட எதுவும் கிடைக்காது. அவனுடைய பசி அதிகரித்தது; உக்கிரமாக வளர்ந்தது. தச்சன் பெருமூச்செறிவான். அவன் வாய் கோணி, எச்சில் வழியும். அவன் உதடுகளைச் சப்பியபடி தனது இருப்பிடம் திரும்புவான். சுவரின்மீது முதுகையும் தலையையும் சாய்த்துக்கொண்டு, எதிர் சுவரில் உள்ள ஒரு புள்ளி மீது தனது அரைக்கண் பார்வையைப் பதிப்பான். மணிக் கணக்கில் அதே நிலையில் இருப்பான்.

அவன் தூங்குவான். எனினும், அது தூக்கம் அல்ல. கனவுக் காட்சிகள் தோன்றியவாறிருக்கும்.

வான்கோழியின் தொடைக்கறி, பருப்புகள் கலந்து பக்குவப் படுத்தப்பட்ட ஆற்று மீன், மீன்கறி சேர்ந்த கொழுக்கட்டை, ஆட்டு இறைச்சியாலான கறிவகைகள், இப்படிப் பலவும் தினவெடுத்த அவன் கற்பனையில் தோன்றும். எல்லையிலாப் பெரும் விருந்து, பசியைக் கிளறிவிடும் வகைவகையான பானங் களோடு, அவன் முன்னே பரப்பப்பட்டிருக்கும். சுவை தரும் மணங்கள் காற்றில் கலந்திருக்கும்.

ஒளிரும் வெண்ணிற மென்மையான ரொட்டியில் பொதிந்த சாறு நிறைந்த மசாலா இறைச்சி ஏதோ ஒன்று அவனது உதடுகளின் வழியே உள்ளே புகும். பக்குவமாக உப்பிட்ட இறைச்சியின் ரசம் ரொட்டித் துண்டுகளை ஊறவைத்து அவன் நாக்கிற்கும் தொண்டைக்குமிடையே இளகி ஓடும்.

சட்டென்று அவனது எச்சில் தொண்டையை நனைத்தபடி அவனுள் இறங்கும். அவன் இருமியவாறு விழித்துக்கொள்வான். விழிப்படைவான். பசித்த ஓநாயின் கண்களை ஒத்த அவனுடைய கண்கள் சுற்றுப்புறம் நெடுகிலும் சஞ்சரிக்கும். பயங்கரமான, கொடிய யதார்த்த நிலைமை அவனைத் தன் நினைவுக்குக் கொண்டு வரும்...

அவனுடைய பசி பெரும் கோபமாய் மாறும். அவன் துள்ளி எழுவான். முதலில், கிறக்கத்தினுல் தள்ளாடுவான். தயங்கியபடி நிற்பான். பிறகு சுவரைப் பிடித்தபடி வெளியே முகப்புக்குப் போவான்.

அவன் துணைவி அவனுடைய வாழ்க்கையைச் சட்டை செய்வதில்லை; அவன் போக்குகள்பற்றிக் கவலைப்படுவதேயில்லை. அவன் குதிக்கலாம்; இஷ்டம்போல் எத்தனை தடவை வேண்டுமாஞலும் வெளியே போய்விட்டு உள்ளே வரலாம். அவனது செயல்கள் எதுவுமே அவன் மனைவிக்குப் புதுமையானது இல்லை. தச்சன் ஜீவிப்பதை விட்டுவிட்டான். அவனுடைய அசைவுகள், சொற்கள், செயல்கள் எல்லாமே ஏற்கெனவே தீர்மானிக்கப் பட்டவை; ஒரு சடங்கு மாதிரி, ஆயிரம் வருஷங்களாக இயங்கி வரும் ஒரு கிரியைபோல, திரும்பத் திரும்ப இயந்திர கதியில் நடைபெறுவனதான்.

அது அலுப்புத் தந்தது. இலையுதிர்காலத்தின் மழை மாதிரி சலிப்பூட்டியது.

பசித்த அந்த மிருகம் தன் மனைவியின் கவனத்தைக் கவர்வதற்கு என்ன செய்ய வேண்டும்? அழிக்கமுடியாத ஒரு விதியின் தீர்ப்புக்கிணங்க அவள் கணவன் செய்ததையே செய்துகொண்டிருப்பான். அவன் வெளியே மாடி முகப்புக்குப் போவான்; வெயிலில் காய்வதற்காக ஒரு மூலையில் பரப்பியிருக்கும் கறுத்த உருளைக்கிழங்குகளின் பக்கம் வருவான்; அவற்றை ஒவ்வொன்ருய் எடுத்து, நடுங்கும் கைகளில் வைத்துப் பரிசீலனை செய்வான்; நாக்கால் தொட்டுப் பார்ப்பான்; கீழே போடுவான். பிறகு, தனது பிரம்பை எடுத்துக்கொண்டு படியிறங்கிக் கீழே போய்த் தெருப்பக்கம் செல்வான். எந்த

இடத்துக்குப் போவான்? அதுவும் விதியினல் முன்பே திட்டமிடப் பட்டதுதான். சதுக்கத்துக்கே போவான் அவன்.

அவன் அனைத்து முடுக்குமூலைகளிலும் அலைவான். நகரத் தராசு மேடை, முலாம்பழங்கள், தர்பூசணி, வெள்ளரிக் குவியல்கள், பால் சாலை எல்லாம் சுற்றுவான். அவை அனைத்தின் விலைகளையும் விசாரிப்பான். பிறகு, கசாப்புக்கடை பக்கம் போவான். சன்னல்கள் முன்னே நிற்பான். இறைச்சி வகைகளைக் கண்ணேட்டமிட்டபின், உள்ளே நுழைவான். மென்மையும் சதைப் பிடிப்பும் உடைய கறிவகைகளைத் தடவிப் பார்ப்பான். பிறகு, வீடுநோக்கி நடப்பான். சதுக்கத்தின் ஓரத்தை அடைந்ததும், அங்கே உள்ளே உயர்ந்த நடைமேடையின்மீது உட்காருவான். பிரம்பின்மேல் கைகளை ஓய்வாக வைத்தபடி அவன் சதுக்கத்தையும் அதில் குவிந்துகிடக்கிற அனைத்துவித உணவுப் பொருள்களையும் பார்வையிடுவான்.

உலகத்தில் வளம் கொழித்தது; ஒவ்வொன்றும் மிக நிறையவே இருந்தது. ஆனல், பரிதாபத்துக்குரிய விஷயம், ஒவ்வொன்றும் மிக்க விலை உயர்ந்ததாக இருந்தது.

பச்சை திராட்சைகள், தெய்வீக முலாம்பழங்கள், நேர்த்தியான பாலாடைக் கட்டிகள் ஆகிய அந்த வற்ருப் பெரும் செல்வத்திலிருந்து ஒரு துணுக்கு, அல்லது ஒரு மணி, அல்லது ஒரு துளிகூட அவனுக்குக் கிட்டாது!

இந்த உலகம் ஒரு கனவு; பிரமிக்கவைக்கிற, வேதனை நிறைந்த, கொடுமையான கனவு! எவ்வளவு பெரும் பசி, எவ்வளவு உணவுகளின் பெருக்கம்; அவற்றை அடைய முடியாத நிலைமையும்கூட.

இதெல்லாம் எங்கே முற்றுப்பெறும்? ஒரே ஒரு தடவை தன் வயிறு நிரம்ப உண்டு களிப்பதற்கு அந்தத் தச்சன் ஆண்டுக் கணக்கில் ஏங்கவேண்டுமா?

இந்த உலகத்தைப் பொறுத்தமட்டில், உயிர் பிரியாத நிலையிலேயே அவன் ஏற்கெனவே செத்துப்போனவன். ஏனெனில், செத்தவர்கள்தான் சாப்பிடுவதில்லை. ஆயினும், அவன் உயிரோடு இருந்தான். அவன் தன் கண்களால் அனைத்தையும் பார்த்தான். தர்பூசணியின் குளுமையான வட்டத்தை இப்போதுதானே அவன் தொட்டுப் பார்த்தான்; ஆட்டுக் குட்டியின் மிருதுவான கறியை அவன் தடவினனே... ஆகவே, அவன் உயிரோடு இருக்கிறன்; இன்னும் சாகவில்லை. உலகத்துக்கு என்ன வந்துவிட்டது? வயிருரத் தின்னமல் அவன் நிஜமாகவே செத்துவிடுவான?...

அவன் கசப்புற்றுன், கோபம் கொண்டான், வெறி அடைந்தான்.

தனக்குத் தானே பேசியபடி அவன் வீட்டுக்குத் திரும்பிப் போவான்.

அவன் முற்றத்தில் அடிவைத்ததுமே, அவனுடைய மயக்கப் பிதற்றல்களை அவன் மனைவி கேட்டுவிடுவாள். அவன் உள்ளே நுழைவதைப் பார்ப்பதற்காக அவள் தன் கண்களை அசைக்கவும் மாட்டாள். அவன் மயக்கநிலையில் ஆயிரம் தடவைகள் அவ் வீட்டுக்குள் புகுந்திருக்கிறுன்; மாடிப்படிகளைத் தன் பிரம்பிஞல் ஆயிரம் முறை தட்டியிருக்கிறுன். அமங்கல நினைப்புகளோடு உறுத்து நோக்குகிற, எதையும் பார்க்காத, அவனது மங்கலான கண்களை அவள் எப்போதும், நிரந்தரமாகக் கண்டிருக்கிறுள்.

உண்மைதான். தச்சன் எந்த ஆளையும் எந்தப் பொருளையும் பார்க்கவில்லை. ஒவ்வொன்றிலும் தனக்கு விருப்பமானதை—உணவையே—அவன் தேடிஞன்.

தச்சன் தனது இடத்துக்கு வந்து உட்காருவான். சுற்று முற்றும் பார்ப்பான். புதுமையானது ஒன்றுகூட இல்லை. உலகம் உறைந்துபோனதுபோல், அதன் சக்கரம் அசையாது நிற்பது போல் தோன்றும்.

அவன் மனைவி வாசல்படியில் அமர்ந்து காலுறை பின்னிக் கொண்டிருப்பாள். இப்போது வாய்திறந்து பேசவேண்டும், தன் இதயச் சுமையைக் கரைப்பதற்காக ஏதேனும் குரல் எழுப்ப வேண்டும் என்ற அவசியத்தை தச்சன் உணர்வான்.

''நான் சதுக்கத்துக்குப் போனேன். அங்கே நல்ல தக்காளிகள் இருந்தன. கொஞ்சம் வாங்கலாம் என்று நினைத்தேன். புளிக் காடியோடு சேர்த்து நாம் சாப்பிடலாமே. நாசமாய்போக, விலை ரொம்ப அதிகம். என்னிடம் பணம் இல்லை!''

வருத்தத்தோடும் நம்பிக்கை வறட்சியோடும் அவன் எச்சிலைக் கூட்டி விழுங்குவான். பாலைவனத்தில் வழி தவறிப்போன ஒரு பிராணிபோல் அவன் காணப்பட்டான்; புகலிடம் எதையும் காணுது நடந்து நடந்து அலுப்புற்றுன். இன்றும் நேற்றுப் போலவேதான்.

அங்கு மவுனமே நீடித்தது. அவன் மனைவி பேசமாட்டாள். அவள் என்ன பேசுவது? அவளுக்கே ஏகப்பட்ட கவலைகள். அவள் பாடுபட்டுத்தான் வாழ்க்கை நடத்தவேண்டியிருந்தது. துணி துவைப்பது, துணிகளை வெளுக்கச்செய்வது போன்ற வீட்டு வேலைகளைச் செய்து சொற்பமான ரூபிள்களை அவள்

சம்பாதிப்பதே சிரமமாக இருந்தது. அவள் சம்பாத்தியம் முழுவதும் ரொட்டி வாங்குவதிலேயே காலியாயிற்று. அப்படி வாங்கிய ரொட்டியில் பெரும்பகுதி அவள் புருஷனின் வயிறு என்கிற படுகுழிக்குள்தான் போய்ச் சேர்ந்தது. அந்த அபலைப் பெண் நாள் முழுவதும் கடுமையாக உழைத்துக் கொண்டுவந்த பணம் இரண்டு பவுண்டு ரொட்டி வாங்குவதற்குத்தான் போதுமானதாக இருந்தது. அதுவே திருப்திகரமானது என்று எண்ணி, அவள் ஒரு வார்த்தைகூடப் பேசுவதில்லை.

கடைசியாக அன்றைய தினத்தின் புனிதமான, ஆனந்த மயமான நேரம் வந்துவிட்டது. அவன் மனைவி உணவு எடுத்து வரப் போவாள். நிலவறையிலிருந்து மொச்சையோ தேயிலையோ கொண்டு வருவதற்காக அவள் போயிருக்கும் வேளையில், தச்சன் ஒரு கடுவாய்போல் எழுந்து, ரொட்டி இருந்த இடத்துக்குப் போவான்; அதைக் கிள்ளுவான்; கையில் எடுத்து அப்படியும் இப்படியுமாகப் புரட்டுவான்; தனது அழுக்குக் கைகளால் தடவுவான்; மோந்து பார்ப்பான். மேலும் தன்னைக் கட்டுப் படுத்த இயலாதவனாய், வெறித்தனமாக அதைத் தின்னத் தொடங்குவான்; கடித்துக் கடித்து, மெல்லாமல், சுவைக்காமல், விழுங்குவான். விக்கிக்கொண்டு தொண்டையைச் சொறிவான்...

அவன் மனைவி உள்ளே வருவாள். அனைத்தையும் பார்ப்பாள். சத்தம் செய்யமாட்டாள். அவ்வாறு செயல்புரிவதை இயல்பாகக் கொண்ட ஒரு மிருகத்தின் காப்பாளராக அவள் தன்னைக் கருதினாள். இடையிடையே அவள் தனக்குத் தானே குறைகூறிக் கொள்வாள்; சிலசமயம் மன்னிப்பாள். பிறகு மீண்டும் பழிப்பாள். ஆனால், பெரும்பாலும் அவள் சும்மா இருந்து விடுவாள். தனது துரதிர்ஷ்டத்தைச் சகித்துக்கொள்வாள்.

சாப்பாடு விசனத்தோடும் வேகமாகவும் முடிந்துவிடும்.

ரொட்டியை விழுங்கி முடித்ததும், தச்சன் சக்தி பெற்றவனாய்ப் பேசத் தொடங்குவான்.

''போன வருஷம் இந்தச் சமயம் நம்மிடம் ஒரு மூட்டை வெங்காயம் இருந்தது'' என்றோ, ''அவித்த மொச்சையில் சாயங்காலத்துக்குக் கொஞ்சம் வைத்திருக்கிறாயா?'' என்றோ கூறுவான்.

''சாயங்காலத்துக்கு என்று ஒதுக்கி வைக்கும்படி அதில் எவ்வளவு இருந்துவிட்டது?'' என்று அவன் மனைவி வெடுக்கெனக் கூறி, தட்டுகளை அகற்றுவாள்.

ஆனால் அவை எல்லாம் ஒரு சடங்குபோல் மறுபடியும் நிகழும்; அசையாத துயரநிலையிலிருந்து எதையும் அது மாற்றாது.

பனிக்காலம் அதன் கவலைகளோடும் எதிர்பார்ப்புகளோடும் வந்தது.

தச்சன் மாடி முகப்பின் கம்பி அளி அருகில், அதன் விளிம்பில் மோவாயை வைத்தபடி, எதிர்வீட்டு முற்றத்தில் நடைபெறும் காட்சியைக் கவனித்துக்கொண்டிருந்தான். அண்டை வீட்டில் வசிக்கும் கடைக்காரன் ஒரு வண்டி மரக்கட்டைகள் வாங்கியிருந்தான். அவை வண்டியிலிருந்து இறக்கப்படுவதை அவன் பார்த்தவாறு நின்றான். சிவந்த கன்னங்களை உடைய கிழவன் ஒருவன் ஊக்கத்தோடு மரம் அறுத்துக்கொண்டிருந்தான். அவன் சீர் தவறாது சிணுங்கிக்கொண்டுமிருந்தான். ஒரு ஜோடி காளைகள், ஒன்று நின்றவாறும் இன்னொன்று தரைமீது படுத்தபடியும், பாரம்பரியமான மந்தகதியில் அசைபோட்டுக்கொண்டிருந்தன. புல் மணமும் மர வாசனையும் கலந்த ஏதோ ஒரு வாடை தெருவில் மிதந்துகொண்டிருந்தது.

அன்றைய தினம் பிரகாசமாக இருந்தது. சூரிய ஒளி சிவப்பு ஆம்லெட் நிறத்தில் மிளிர்ந்தது. தச்சன் அதை எல்லாம் பார்த்தான். தன் பசியினால் தவித்தான். மாரிக்காலத்துக்காக அவனும் சேமித்து வைத்த ஆனந்தமயமான பழைய நாட்களை நினைவுகூர்ந்தான். இனிமையான, ஆனால் திரும்பவும் கிடைக்காத, தனது குழந்தைப் பிராயத்தை அவன் நினைத்தான்.

முதிய அறுப்புக்காரன் வேர்வையால் நனைந்துபோனான். அவன் மேலும் தீவிரமாக உழைத்தான். ஒரு மணி நேரம் மரம் அறுத்தானதும், அவன் வேலையை நிறுத்தினான். தன் பையிலிருந்து, சிவப்பான நாட்டுப்புறத்து ரொட்டித் துண்டு ஒன்றை வெளியே எடுத்தான். தனது மெலிந்த கைகளால் அதைத் துண்டு துண்டாகப் பிய்த்தான்; ஒவ்வொரு துண்டாக வாய்க்குள் திணித்து, வேகமாகத் தின்றான். தச்சன் அவனையே பார்த்தான்; அவனும் அறுப்புக்காரனோடு சேர்ந்து மனசினால் ரொட்டி தின்பதில் முனைந்தான். பிறகு, நம்பிக்கை இழந்து மாடுகளைப் பார்த்தான். அவையும் அசைபோட்டுக்கொண்டிருந்தன. நாளின் சகல நேரமும் தச்சனின் நினைப்புகள் அசைபோடுவதைச் சுற்றியே இயங்கின. எனவே, அந்தக் காட்சி அவனது கற்பனையை ஆத்திரமாக முடுக்கின. அவனைச் சுற்றியுள்ள உலகம் முழுவதும் அசைபோட்டுக்கொண்டிருந்தது. அந்த நேரத்தில் ஒவ்வொரு ஓசையும், ஒவ்வொரு அசைவும், ஒவ்வொரு விஷயமும் அசைபோடுவது தவிர வேறு எதுவுமில்லை. தச்சனின் கண்கள் படுத்துக்கிடந்த காளைமீது பதிந்தன. அதன் பின்பக்கத்துத் தொடை கொஞ்சம் துருத்திநின்றது. அவன்

தன் மனசினுல் அந்தத் தொடையைத் தோலுரித்து, அதன் சதையைத் துண்டங்களிட்டு, அவற்றைப் பானைகளில் போட்டு, சமைத்துச் சாப்பிட்டான். முடிவில்லாமல் தின்றுன்.

அவன் வாயில் நுரை சாடியது. அவன் பயங்கரமாக மாறினுன். அவன் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. அவ்வேளையில் அவன் உண்மையில் ஒரு மிருகம் போலவே தோன்றினுன். பசி எடுத்த வயிறு தவிர வேறு எதுவுமாக இல்லை அவன்.

இறுதிவரை அவன் அவ்வாறே உட்கார்ந்திருந்தான். அப்புறம், வண்டி நகர்ந்தது. அறுப்புக்காரன் அதன் பின்னுல் போனுன். வெட்டப்பெற்ற கட்டைகள் உள்ளே எடுத்துச் செல்லப்பட்டன. அப்போது தச்சனுக்கு உடல் நடுக்கம் ஏற்பட்டது. சூரியக் கதிர்களின் அடியில் மறைந்திருந்த ஒரு குளிர் ஊர்ந்து வந்து அவனைப் பற்றிக்கொண்டது. அவன் வீட்டுக்குள் போய், தனது பழைய பெரிய மேல்சட்டையை எடுத்துத் தன் உடம்பைப் போர்த்தினுன்.

சில தினங்களுக்குப் பிறகு அவனுக்குக் கடுமையான நோய் கண்டது. அப்படி ஒரு துயரநிலையையும் எதிர்பார்த்திருந்த அவன் மனைவி, அந்தச் சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தபடி தன்னை அனுசரித்துக்கொண்டு, தனது இறுதிக் கடமைகளை நிறை வேற்றினுள். ஒருவன் தன் உயிருக்காகக் கெஞ்சி மன்றுடுவது போல், தச்சன் சிறிதளவு சூப்புக்காக ஏங்கினுன். ஆனுலும், அந்தச் சொர்க்க உணவை அளித்து அவனைத் திருப்திப்படுத்து வதற்கு வகை எதுவும் இல்லை. மாறுக, உலர்ந்த செர்ரிப் பழங்கள் ஐந்தை ஊறவைத்த குளிர்ந்த நீரை, அவன் தாகத்தைத் தணிப்பதற்காக, அவன் மனைவி அவனுக்கு அளித்தாள்.

ஆனுல், நோயாளி ஒரு பிளேட் சூப்பு வேண்டுமென்று அதிகாரமாகக் கேட்டான். காலை முழுவதும் அதைப்பற்றியே பேசினுன். ஆவலோடு காத்திருந்தான்—எல்லாம் வீணுகத்தான்.

மதிய உணவுக்குக் கரடுமுரடான ரொட்டித் துண்டுதான் இருந்தது. சீக்காளி அதைத் தின்ன முயன்றுன். ஆனுல் அவனுல் அதை விழுங்க இயலவில்லை.

சாயங்கால நேரத்தில், பக்கத்துவீட்டுப் பெண் ஒருத்தி, தச்சன் மனைவி குழப்பத்தோடு காணப்பட்டதைக் கவனித்தாள். அவள் அருகில் வந்து விசாரித்து, என்ன விஷயம் என்று புரிந்து கொண்டாள். அவள் இரக்கப்பட்டு, தன் மகளைப் பால்சாலைக்குத் தயிர் வாங்கி வரும்படி அனுப்பினுள். அங்குத் தயிர் இல்லை.

அதனால், சூப்புத் தயாரிப்பது மறுநாள் காலைக்கு ஒத்தி வைக்கப் பட்டது.

ஆனால் இரவில் தச்சனின் நிலைமை மோசமாயிற்று. ஜுரம் அதிகரித்து, அவன் புலம்பலானான். உணவைப்பற்றிய பேச்சை எடுக்காத அவனுடைய முதலாவது புலம்பல் அதுதான். முற்றி விட்ட ஜுரத்தில், சில எடுபிடிகள் எங்கே எடுத்துச் செல்லப் பட்டன என்று அவன் தன் மனைவியைக் கேட்டான். எந்த எடு பிடிகள், எங்கே எடுத்துச் செல்வது என்பது எதுவும் அவளுக்குப் புரியவில்லை. ஆகவே அவள் அவனுக்குப் பதில் சொல்லவில்லை. நோயாளி கண்களைத் திறந்து, மனைவியை நோக்கினான். அவளையே பார்த்தபடி, ''அப்படியானால் நீ என்ன சாப்பிடுவாய்?'' என்று கேட்டான். அவன் இன்னும் சூப்புக்காகக் காத்திருக்கிறான் என்று அவள் எண்ணினாள்.

''அது சீக்கிரம் வந்துவிடும். கொஞ்சம் பொறுத்திரு'' என்று அவள் தச்சனுக்கு ஆறுதல் வார்த்தை கூறினாள்.

'நான் போன பிறகு நீ என்ன சாப்பிடுவாய்?'' என்று தச்சன், தனது மரணத்தைக் குறிப்பிட்டபடி, திரும்பவும் கேட்டான்.

''கடவுளே, அது எனக்கு எப்படித் தெரியும்?'' என்று அவள் துயரக்குரலில் முணுமுணுத்தாள்.

அவ்வேளையில் அண்டை வீட்டுக்காரி ஒரு தட்டு நிறைய சூப்பு எடுத்து வந்தாள். அதை மேஜைமேல் வைத்துவிட்டு, ஆராயும் கண்களால் சீக்குக்காரனை உற்றுநோக்கினாள்.

''அவள் சூப்புக் கொண்டு வந்திருக்கிறாள். உனக்கு வேண்டுமா?'' என்று சீக்காளியின் மனைவி கேட்டாள்.

''அது உனக்குத் தெம்பளிக்கும்!''

''ஊம்?'' என்று ஜுர வேகத்தில் அவன் கேட்டு, கண்களைத் திறந்து பார்த்தான்.

சூப்பு அருகில் கொண்டுவரப்பட்டது. ஒரு கரண்டியில் அதை எடுத்து அவன் உதடுகளில் வைக்கப்பட்டது. அவர்கள் தனக்கு உணவு ஊட்டுகிறார்கள் என்பது உள்ளுணர்வினால் நோயாளிக்குப் புலப்பட்டது. அவன் தன் உதடுகளைச் சுவைத் தான். ஆனால் உணவை உட்கொள்ளவில்லை. அவனுக்குப் பசி இல்லை.

அவனது வாழ்விலேயே முதல் முறையாக அவனுக்குப் பசி இல்லை. உலகம் மாறிவிட்டது. ஒரு காலத்தில் அக் கைவினைஞனது உடலமைப்பின் ஆனந்தமாகவும், பிற்காலத்தில் அவனுக்குத் தண்டனையாகவும் இருந்த பசியை அவன் இழந்துவிட்டான்.

அவன் சாப்பிடவில்லை. சோகமாகத் தன் மனைவியையும் அடுத்த வீட்டுக்காரியையும் பார்த்தான். பெருமூச்சுவிட்டான்.

''பரவாயில்லை. நீ அப்புறம் சாப்பிடலாம்'' என்று கூறி அண்டை வீட்டுக்காரி தட்டைத் தச்சன் மனைவியிடம் தந்தாள்.

பின்னவள் உளம் நெகிழ்ந்தாள். அவள் துக்கத்தோடு சூப்பை நோக்கினாள். பிறகு, செத்துக்கொண்டிருக்கும் தன் கணவனைப் பார்த்தாள். தட்டை அலமாரியில் வைப்பதற்காகப் போனாள்.

அவள் அலமாரியைத் திறந்தபோது, அவளுக்கு எழுந்த இரக்க உணர்வினால் அவள் இதயம் வலித்தது. அந்த அலமாரி எத்தனை எத்தனை முறைகள் திறந்து மூடப்பட்டிருக்கிறது; எத்தனை வகையான இனிய பொருள்கள் அதில் வைக்கப்பட்டிருந்தன; அதிலிருந்து தின்பதற்கு இனிய பொருள்களை நிறைய நிறைய எடுத்தபோது எத்தனை நண்பர்களின் கண்கள் சந்தோஷத்தால் ஒளிர்ந்தன. அப்படி ஒரு காலத்தில் வளம் நிறைந்து குலுங்கிய தங்கள் வாழ்க்கை அலமாரியைத் தச்சன்தான் எத்தனை தடவைகள் திறந்து திறந்து மூடியிருக்கிறான்!

அவள் இன்னும் அந்தத் தட்டை அலமாரிக்குள் வைக்கவில்லை. அதற்குள், பக்கத்து வீட்டுக்காரி மெல்லிய குரலில் என்னவோ கூறி அவளை அழைத்தாள்.

சீக்காளி செத்துக்கொண்டிருந்தான்.

அவன் நெடுமூச்செறிந்தான். ஏதோ சொல்ல ஆசைப்பட்டான்.

அவனது சுருங்கிய தொண்டைக்குள்ளிருந்து தெளிவில்லாத ஒரு சத்தம் வெளிப்பட்டது.

சுருங்குகிற தொண்டைக்கும் கனத்த மூச்சு உயிர்த்தலுக்குமிடையே அவன் கூறியது கேட்டது. ''சாவது இப்படித்தான் என்றால், நான் சித்தமாக இருக்கிறேன்'' என்று நோயாளி சொன்னான்.

அவன் அமைதியாக, வேகமாகவும்கூட, இறந்துபோனான்.

அறையில் மரண அமைதி நிலவியது.

அப்புறம் என்ன? எல்லாம் அவ்வளவுதானா?

அவன் மனைவி ஏதோ ஒரு மாறுதலுக்காகக் காத்திருந்தாள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. அவள் தன் முன்னே பார்த்தாள். ஒரு பக்கம் பசித்த தச்சனின் திறந்த, உறைந்துவிட்ட கண்களைக் கண்டாள். மறுபுறம் அலமாரியைப் பார்த்தாள். அதுவும் திறந்து, இயக்கமற்று இருந்தது; அவளை வதைத்துவந்தவன் பார்த்தது போலவே அதுவும் அவளைப் பார்த்தது.

ஸ்டீபன் ஸோரியன்
(1889—1967)

# சர்க்கரைக் கிண்ணம்

திபிலிஸில் இளைஞன் ஒருவன், கையில் ஒரு சிறு மூட்டையுடன், ஸால்தாத்ஸ்கி பஜார் வழியாக நடந்தான். அங்கே ஜனங்கள் ஊறவைத்த வெள்ளரி, மட்டரக வெண்ணெய், திருட்டுத் துணிமணிகள், மற்றும் பழைய தட்டுமுட்டுச் சாமான்களை விற்றுவந்தார்கள்.

அவன், ஒரு விலாசத்தைத் தேடி அலையும் அந்நியன்போல, நிலையாக அங்குமிங்கும் பார்த்தபடி, அழுத்தமாகவும் ஒழுங்கற்றும் அடி எடுத்துவைத்து நடந்தான். அத்துடன், அவன் முகம், விமர்சகர்களால் அவமானப்படுத்தப்பட்ட கவிஞர்களுக்கு மட்டுமே இருக்கக்கூடியது போன்று, பாதி இடருற்றும் பாதி அவமதிப்புக்கு உள்ளாகியும் காணப்பட்டது.

அவன் தனது பழைய இங்கிலீஷ் குல்லாய்க்குப் பதிலாக அகல விளிம்பு கொண்ட பிரஞ்சுத் தொப்பி அணிந்திருந்தால், ஒரு தொப்பி வாங்குவதற்காக அல்லது நாடகம் பார்ப்பதற்காக நகரத்துக்கு வந்திருக்கும் நாட்டுப்புற உபாத்தியாயர் என்றே எவரும் அவனை மதிப்பிடுவர். அல்லது, அவனுடைய நீண்ட, ரொம்பவும் சுருங்கிப்போன, கசங்கி வர்ணம் மங்கிய நீள மேலங்கிக்குப் பதிலாக, ரசாயன சாதனங்களால் சலவை செய்யப்பட்ட இறுகலான சட்டை ஒன்றை அவன் அணிந்திருந்தால், நாகரிகமற்ற ஒரு நகரத்திலிருந்து வந்திருக்கும் சிறிய கடைக்காரன் என்றே பிறர் அவனைப்பற்றி நினைப்பார்கள்.

ஆனால், உண்மையில் அவன் அப்படி யாரும் இல்லை. நிஜத்தைச் சொல்லவேண்டுமானால், அவன் அப்போதுதான் விடுதலையாகி வந்த ஒரு கைதியாவான்.

ஓ, சிறையின் இரும்புக் கதவுகள் அவனுக்கு முன்னே திறக்கப்பட்டு, விண்ணிலிருந்து லேசான மழை தூறிக் கொண்டிருந்த தெருவுக்கு அவன் வந்தபோது, அவன் இதயம் எத்தகைய உவகையினால் துடித்தது. அந்த நேரத்தில், நிச்சயமாக அவன், ஜெயிலிலிருந்து வெளியே வருகிற ஒவ்வொரு நபரும் உணர்வது போலவே, எல்லாவற்றைப்பற்றியும் மிக

அதிகமான உணர்வுக்கிளர்ச்சி கொண்டான். ஜனங்களும், திறந்த ஜன்னல்களை உடைய வீடுகளும், நகர்ந்து சென்ற வண்டிகளும், வானிலிருந்து பெய்த மழைத்துளிகளும், இனியன வாகத் தோன்றின. இவை தவிர அவன் வேறொன்றையும் உணர்ந்தான். எங்கோ ஒரு நிலவறையிலிருந்து, அல்லது ஏதோ ஒரு வீடு அல்லது உணவு விடுதியிலிருந்து உணவுப் பொருள்களின் சுவையான மணம் மிதந்து வந்தது; சூடாக ஏதேனும் உணவு உண்ணவேண்டும் என்ற ஆசையை அது தூண்டியது. ஆகவே, எதிர்ப்பட்ட முதல் உணவு விடுதிக்குள் அவன் நுழைந்தான். வயிறுற உண்ட பிறகு, திருப்தி அடைந்தவர்கள் இயல்பாகச் செய்வதுபோல், அவன் தனது நிலைமைகுறித்து எண்ணலானான். அன்றைய இரவுப்பொழுதைக் கழிப்பதற்கு எங்கே போவது என்று அவன் நினைத்தான். அந்நகரில் அவனுக்கு உறவினர் எவரும் இல்லை. தேடிப் போவதற்கு உரிய நண்பர்களும் இல்லை. அவன் கையில் ஒரே ஒரு ரூபிள்தான் இருந்தது. அதில் முப்பது கோப்பெக் காசுகளைச் சாப்பாட்டுக்குக் கொடுத்துவிட்டான். லோரி வட்டாரத்திலிருந்து வந்து அந்த நகரத்தில் ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபட்டிருந்த தனது ஊர்க்காரர்களை, ஒரு சிறிது அறிமுகமானவர்களை அவன் எண்ணிப் பார்த்தான். கான்னஸ் என்ற தையல்காரன் வீட்டுக்குப் போய், தனக்கு ஒரு வேலை கிடைக்கும் வரை சில நாட்களுக்கு உதவிபுரியும்படி அவனைக் கேட்கலாம் என்று நினைத்தான். ஆனால், ஒரு வருஷத்துக்கு முன்பு அந்தத் தையல்காரன் தன்னிடம் கோரிய உதவியை இவன் இது வரை செய்யவேயில்லை—அவன் கேட்ட மொச்சைப்பயறை ஊரிலிருந்து கொண்டு தரவேயில்லை என்பது நினைவுவந்தது. அப்புறம், செருப்பு தைக்கும் நிக்கொலாஸிடம் போக நினைத் தான். அதுவும் சாத்தியமில்லை என்று பட்டது. ஒரு தடவை ஒரு தகராறு எழுந்தபோது, இவன் அந்தச் செம்மானை பூர்ஷ்வா என்று பழித்தான்; அதனால் அவன் மிகவும் மனம் நொந்து போனான். பின்னர், மற்றுமுள்ள ஊர்க்காரர்களை எண்ணினான்—சார்கிஸ் என்ற வியாபாரி, ஒரு கடைச் சிப்பந்தியான பாக்ரத், மற்றும் கருமான் சைமன். ஆனால் அவர்கள் சம்பந்தப்பட்ட கசப்பான நிகழ்ச்சிகளும் அவனுக்கு நினைவுவந்தன. முடிவில், ஏபெல் என்ற கடைக்காரனிடம் நேரடியாகச் சென்று முயற்சி செய்யலாம் என்று அவன் தீர்மானித்தான். இறந்துபோன இவன் தந்தையை அவனுக்கு நன்றாகத் தெரியும். இவனுடைய தந்தைதான் அவனை ஊரிலிருந்து நகருக்கு இட்டுவந்து ஒரு ஆள் ஆக்கிவிட்டார். ஏபெல்தான் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவனாகத் தோன்றினான்.

இப்போது அவன் ஸால்தாத்ஸ்கி பஜாரின் சந்தடியுள் புகுந்து கடைக்காரன் ஏபெலை நோக்கி உதவி கேட்பதற்காகப் போய்க்கொண்டிருந்தான். நடக்கும்போது, ஏபெல்பற்றி, மூன்று வருஷங்களுக்கு முந்தி இவன் போயிருந்த அவனது கடையைப்பற்றி, ஒரு தட்டு நிறைய ஆப்பிள்கள், ஒரு பீயர் பழம், ஒரு கட்டி வெல்லம் ஆகியவை தீட்டப்பட்டிருந்த அவனுடைய பெயர்ப்பலகைபற்றி எல்லாம் எண்ணினான். இப்படி எண்ணம் வளர்ந்ததனால், ஏபெல் தனக்கு உதவிபுரிய மறுக்கலாம் என்ற சந்தேகம் அவனுக்கு எழவேயில்லை.

''நிச்சயமாய் அவன் மறுக்கமாட்டான். ஏனென்றால் என் அப்பா அவனை ஆளாக்கிவிட்டிருக்கிறார். என் அப்பா உதவி செய்திராவிட்டால், அவன் இப்போது பழம் செருப்பு அணிந்து ஆடுகள் மேய்த்துக்கொண்டிருப்பான்... அவன் எனக்கு உதவி செய்ய விரும்பாவிட்டால், எனக்குச் செலவுக்குக் கொஞ்சம் பணம் கடனாகத் தரும்படி நான் அவனைக் கேட்பேன். அப்புறம் அதை அவனுக்குத் திருப்பிக் கொடுத்துவிடுவேன்...'' இப்படி அவன் தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

மண்டைக்குள் இவ்வித நினைப்புகள் குடைய, அவன் ஏபெலின் கடையை அடைந்தான். ஜன்னலின் முன்னால் நின்று உள்ளே கவனித்தான். கடையில் வேலைக்காரப் பையன் ஒருவன் மட்டுமே இருந்தான். அவன் எதையோ வாயில் போட்டு அவசரமாகச் சுவைத்துக்கொண்டிருந்தான். இளைஞன் உள்ளே நுழையலாமா வேண்டாமா என்று முதலில் தயங்கினான். ஆனால், பின்னர் தனது நிலையைத் தெளிவாகப் புரிந்துகொண்டு—இரவைக் கழிப்பதற்கு இடம் எதுவும் இல்லை; சாப்பாட்டுக்குச் செலவு செய்யப் பணமும் இல்லை என்பதை உணர்ந்து—அவன் துணிவுகொண்டான். உள்ளே போனான்.

அவனைக் கண்டதும் சிறுவன், வாயில் கிடந்த 'சூயிங் கம்'மை அவசரமாக வெளியே எடுத்து, அதைத் தன் சட்டைப் பைக்குள் திணித்தான்.

''என்ன வேண்டும்?'' என்று அவன் அதட்டலாய்க் கேட்டான்.

இளைஞன் ஒரு கணம் தயங்கினான்.

''மிஸ்டர் ஏபெலை, உன் முதலாளியை, நான் பார்க்க வேண்டும். அவர் இங்கே, உள்ளே, இருக்கிறாரா?'' என்று முணுமுணுத்தான்.

''அவர் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்... நான் அவரைக் கூப்பிடவேண்டுமா?''

இளைஞன் மீண்டும் தயங்கினுன். வேளைகெட்ட வேளையில் அவன் அங்கே வந்திருந்தான். சிறிது காலம்தாழ்த்தி வந்திருந்தால் ரொம்ப நன்ருக இருந்திருக்கும்... ஆனுலும் பரவாயில்லை. அவரது சாப்பாட்டுக்கு இடைஞ்சல் இல்லை என்ருல், பையன் முதலாளியைக் கூப்பிடலாம்தான்.

சிறுவன் மெதுவாகக் கடையின் உட்புறம் நகர்ந்தான். இளைஞன் கடைப்பலகையை நெருங்கி, ஏபெல் வருகிற வரையில், அங்கிருந்த ஒரே மாதிரியான சர்க்கரைக் கிண்ணங்களைப் பார்வையிடலானுன். மூடிபோட்ட கிண்ணங்கள். வழக்கமாக நாட்டுப்புறப் பாதிரிமார்களும், நகரத்து மாதாகோயில் அதிகாரிகளும் மட்டுமே உபயோகிக்கக்கூடியவை அவை. அவன் ஒவ்வொன்ருய் மூடியைத் திறந்து சிரத்தையில்லாமலே நோக்கினுன். ஏபெல் தன்னை அடையாளம் காண்பது சிரமம்தான் என்று எண்ணினுன். அவர்கள் முன்பு சந்தித்ததுக்குப் பிறகு மூன்று வருஷங்கள் ஓடியிருந்தன... ஆனுல், தன்னைக் கண்டுகொண்டால் அவன் சந்தோஷப்படுவான். ஏனெனில் இவனது தந்தையின் உதவியால் தான் ஏபெல் இப்படி ஒரு கடைக்குச் சொந்தக்காரனுக முடிந்திருக்கிறது. சந்தேகம் வேண்டியதில்லை. அவன் மறுக்க மாட்டான். தனக்கு உதவி செய்வான்.

''ஆனுல், நான் திருடிவிட்டு ஜெயிலில் இருந்தேன் என்று அறிந்தால், அவன் உதவாமல் போகலாம்'' என்று அவன் தனக்குள் கூறிக்கொண்டான். ''நான் குற்றம்புரியாதவன், குற்றமற்றவன் என்ற முறையில் விடுவிக்கப்பட்டவன் என்பதை அவன் ஒருபோதும் நம்பமாட்டான். ஜெயிலிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களின் குற்றமற்ற தன்மையை ஜனங்கள் நம்புவதில்லை...'' அவன் கடையைவிட்டு வெளியே போய்விட விரும்பினுன்; தனது ஊர்க்காரன் தன்னைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டாமே என்று நினைத்தான். ஆயினும், அப்புறம் அவன் இல்லாதபோது அவனைப்பற்றி அவர்கள் மிக மோசமான விஷயங்களைக் கூறக்கூடும் என எண்ணி அவன் அங்கேயே நின்ருன்.

அந்த நேரத்தில்தான், தடுப்புச் சுவரின் பின்புறமிருந்து வேகமான காலடிகளின் சத்தம் கேட்டது. அவர்கள் தன்னைச் சந்தேகிக்கக் கூடாது என்பதற்காக, இளைஞன் சர்க்கரைக் கிண்ணத்தின்மேலே வைத்திருந்த கையோடு அசையாது நின்ருன்.

நடுத்தர வளர்த்தி உடைய ஒரு மனிதன், கைகளை அகட்டி வைத்தபடி (அவற்றில் உணவு படிந்திருக்கும் என்று தோன்றியது) வந்தான். சரியான லோரி வட்டாரத்து ஆசாமி.

அன்புள்ள, கீழ்மையான முகம் உடையவன். குட்டையான, நரைத்த முடி அடர்ந்த அவன் தலையும் முகமும் முள்ளம்பன்றியின் தோற்றத்தை நினைவுபடுத்தின. இளைஞனைப் பார்த்து, ''உனக்கு என்ன வேண்டும்?'' என்று அவன் கேட்டான்.

இளைஞன் கிண்ணத்தின் மூடியை அப்படியும் இப்படியும் திருப்பிக்கொண்டே, ''நான்... நான் வந்து...'' என்று இழுத்தான்.

பாதிச் சாப்பாட்டில் எழுந்து வந்து, பொறுமையற்ற கண்களால் தன்னைக் கவனித்த மனிதனின் முன்னே அவன் குழம்பித் தவித்தான்.

சர்க்கரைக் கிண்ணத்தைச் சுழற்றியவாறே அவன் தொடர்ந்தான்: ''நான் வந்து...''

கடைக்காரன் அமைதியில்லாமல் அசைந்தான். இளைஞன் சர்க்கரைக் கிண்ணத்தையே தொடர்ந்து பார்த்துக்கொண்டிருப்பதைக் கவனித்து, ''நல்லது. நீ ஒரு சர்க்கரைக் கிண்ணம் வாங்க விரும்புகிறாய். இல்லையா? அது ஒரு ரூபிள் விலை ஆகும்'' என்றான்.

''இவன் தன்னைக் கண்டுகொள்ளவில்லை'' என்று இளைஞன் நினைத்தான். தான் யார் என்று அறிவிக்க விரும்பினான்.

''பாருங்கள். நான் கேச்சன் மாமா மகன்'' என்றான். வெட்கி முகம் சிவந்தான். மடத்தனமாக உளறிவிட்டோமே என்று நினைத்தான். இதைச் சொல்லத் தேவையேயில்லை.

''கேச்சன் மாமா மகனா! நம்ம கேச்சன் மாமாவின் மகனா?'' என்று கடைக்காரன் வியப்போடு கத்தினான்.

''ஆமாம்''. இளைஞன் மகிழ்ச்சி அடைந்தான். அவன் நல்ல படியாகத்தான் பேச்சைத் துவக்கியிருக்கிறான் என்று தோன்றியது. இப்போது ஏபெல் அவனைக் கேள்விகள் கேட்கலாம்...

''நல்லது. நீ வந்து நம்ம கேச்சன் மாமா மகனானால், விலையைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ளலாம்'' என்று கடைக்காரன் தொடர்ந்தான். ''தொண்ணூறு கோப்பெக் கொடு. அதை எடுத்துக்கொள். அது அருமையானது. அதை வாங்கியதுக்காக நீ வருத்தப்பட நேராது.''

இளைஞன் மவுனமாக நின்றான். தான் தொடங்கியதை மேற்கொண்டு தொடர்வது எப்படி என்று சிந்தித்தான். ஏபெல் தன்னைக் கேள்விகள் கேட்கவேண்டும் என்றே அவன் ஆசைப்பட்டான். ஆனால் ஏபெல் பேசவேயில்லை. கைகளை அகட்டி

வைத்து நின்றபடி பொறுமையற்று இவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"நல்லது. உனக்குச் சம்மதம் இல்லையா?"

"நான்... நீங்கள் பாருங்கள்..." என்று இளைஞன் ஆரம்பித் தான். இப்போதுதான் அவன் சிறையிலிருந்து வெளிவந்திருப் பதையும், அவனுக்கு உதவி தேவை என்பதையும் சொல்ல விரும்பினான். ஆனாலும், மீண்டும் பேசாமலே நின்றான்.

அவனிடம் அதைச் சொல்லி என்ன பயன்; அதனால் என்ன நன்மை?

"என்னை நம்பு. அதைவிட குறைக்கமுடியாது" என்று கடைக்காரன் அழுத்தமாகச் சொன்னான். "நான் உனக்காகத் தான் விலையைக் குறைக்கிறேன். எப்பவும் நாங்கள் ஒரு ரூபிள் இருபது கோப்பெக் விலைக்கே விற்கிறோம். இப்போது நான் அதை உனக்குத் தொண்ணூறு கோப்பெக்குகளுக்குத் தருகிறேன். சாமானைப்பற்றி ஒன்றும் சொல்லத் தேவையில்லை. அது ஒடெஸ்ஸா தயாரிப்பு. உறுதியான நயம் சரக்கு. நீ அதை உடைக்காமல் இருந்தால், அது இருபது வருஷங்கள் நிலைத் திருக்கும்."

இளைஞன் தயங்கியவாறு அசைந்தான்.

"பாருங்கள். நான் இப்போதுதான் சிறையிலிருந்து விடுதலை யானேன். அதனால்..." அவன் தொடர்ந்து பேச முயன்றான். ஆனால் கடைக்காரனை மீண்டும் பார்த்ததும், பிறகு சிறுவனை நோக்கியதும், அவன் நிறுத்திவிட்டான். மவுனமாக நின்றான்.

ஏபெல் மறுபடியும் அமைதியின்றி அசைந்தான். பாதிச் சாப்பாட்டில் எழுந்து வந்த ஒரு நபர், அல்லது அவசரமாக எங்கோ போகிறவர்தான் அவ்விதம் செய்ய முடியும்.

"அடக்க விலையே அதுதான். அதை வாங்கிய விலை அது..." என்று அவன் அவசரமாகச் சொன்னான்.

தன் ஊர்க்காரனுக்கு, தான் அதிருப்தி விளைவித்துக்கொண் டிருப்பதை அவன் குரலிலிருந்து இளைஞன் அறிந்தான். அந்தச் சிறுவனுக்கும் இவன் அதிருப்தி தந்துகொண்டிருக்கலாம் என்று தோன்றியது. சிறுவன் துடுக்காகவும் அகந்தையோடும் இவனை நோக்கினான். ஆகவே இவன் வெளியே போக நகர்ந்தான்.

"உனக்குப் பிடிக்கவில்லையா?" என்று கடைக்காரன் கேட்டான்.

இளைஞன் துணிவு கொண்டான்.

''இல்லை. விலை ரொம்ப அதிகம்.''

''நீ எவ்வளவு தருவாய்?''

அவன் வேண்டுமென்றே விலையைக் குறைத்தான்.

''எழுபது கோப்பெக்.''

''அப்படியானல் நஷ்டம்தான் ஏற்படும்!''

''என்னுல் அதிக விலை தர இயலாது'' என்று விருப்பமின்றிக் கூறிவிட்டு இளைஞன் வாசல் பக்கமாக விரைந்தான்.

''எண்பது கொடு.''

''என்னுல் முடியாது'' என்று இளைஞன் உறுதியான குரலில் தெரிவித்தான். கதவைத் திறந்து வாசல்படியில் கால் வைத்தான்.

''சரி சரி, வா. வந்து அதை எடுத்துக்கொள்'' என்று கடைக்காரன் அவனை அழைத்தான். ''வா... நீ நம்ம கேச்சன் மாமா மகனுக இருப்பதால், நாம் இதில் அதிகமாக எதுவும் பண்ணுவதற்கில்லை...''

இளைஞன் எதுவும் பேசாமல் திரும்பி வந்தான். எழுபது கோப்பெக்குகளை—அவனிடமிருந்த பணம் முழுவதையும்—கொடுத்து, சர்க்கரைக் கிண்ணத்தை எடுத்துக்கொண்டு வெளியேறிஞன்.

சில நொடிகளுக்குப் பிறகு அவன் திரும்பவும் ஸால்தாத்ஸ்கி பஜார் வழியாக நடந்துகொண்டிருந்தான். அவன் கையில் பழைய மூட்டையுடன் புதிய சர்க்கரைக் கிண்ணமும் இருந்தது இப்போது.

வாகன் டோடோவென்ட்ஸ்
*(1834—1938)*

# ஒரு ஆர்மேனியன் குழந்தைப் பருவத்திலிருந்து சில காட்சிகள்

*(நாவலிலிருந்து ஒரு பகுதி)*

*மெசபடோமியாவிலிருந்து வருகிற ஒட்டகப் பயணிகளின் கூட்டங்கள் எங்கள் வீட்டு வாசலின் முன்பாகத்தான் போகும். ஆசியா மைனரில் உள்ள பல்வேறு முக்கிய வர்த்தகக் கேந்திரங் களுக்கு, தூர தொலைவில் உள்ள செபஸ்டியாவுக்கும், அவர்கள் போவது வழக்கம். பனிக்காலத்தில் எங்கள் பழத்தோட்டங்கள் காய்த்து ஓய்கிற கட்டத்தை அடையும் சமயம், ஒட்டகக் கூட்டங்கள் எல்லையிலாப் பாலைப் பெருவெளியை நோக்கித் திரும்பும். செல்வம் கொழிக்கும் பாபிலோனிய மற்றும் அராபிய நகரங்களுக்கு, நட்சத்திரங்களைப்போல் பிரகாசிக்கும் வைரங்களும் இதர மணிக்கற்களும் மிகுதியாகக் கிடைக்கும் இடங்களை நோக்கி, அவை போகும்.*

*தென் பிராந்தியத்தின் இனிமையான பேரீச்சம்பழங்களை ஒட்டகக் கூட்டங்கள் எங்களுக்குக் கொண்டு தரும். ஒட்டகக் கூட்டங்கள் வந்ததும் எங்கள் சந்தை மைதானம் உயிர்பெற்று விளங்கும். அவற்றின் சின்னஞ்சிறு மணிகளின் கிண்கிணி ஓசையினுலும்—அறிவார்ந்த, அமைதி படிந்த ஒட்டகங்களின் கண்ணேட்டங்களாலும்—துயருற்றுப் புலம்பும் அவற்றின் நெடிய களைத்துப்போன குரல்களினுலும் நகரம் நிறைந்திருக்கும்.*

*பாலைவன வானத்தைப்போலவே அமைதியானது ஒரு ஒட்டகத்தின் பார்வை. ஒட்டகக் கூட்டங்கள் பிரிந்துபோன பின்னரும் அந்தப் பார்வையின் நினைவு எங்கள் உள்ளத்தில் வெகு நாட்கள் நிலைத்து நிற்கும்.*

*மாரிக்காலத்தில் அவர்கள், காலுறைகள் தயாரிப்பதற்காக ஒட்டக ரோமங்களைச் சேகரிக்கும்பொருட்டுத் தங்களைத் தொடர்ந்து வரும் பிள்ளைகள் கூட்டத்தைச் சட்டைபண்ணுது, நடந்து போகையில், ஒட்டகங்கள் எங்கள் தெருக்களின் ஓரத்தில் வரிசையாகத் தென்படும் சுவர்கள்மீது தங்கள் கண்களைப் பதித்*

திருக்கும். தெற்கத்திய எல்லையற்ற அகண்ட பரப்புகளைக் கண்டு பழகியிருந்த அக் கண்கள் அடிவானத்தின் அமைதியையும் முடிவிலா விரிவையும் தேடுவதுபோல் தோன்றும்.

இதோ ஒன்று கடந்து போகிறது. கீழ்திசை நாட்டின் மணப் பெண்போல் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது அது. துண்டுதுண்டுக் கண்ணுடிகள், வசந்தகால இன்னேசை என ஒலிக்கும் சின்னஞ்சிறு மணிகள், பட்டுத் துணிகள், மற்றும் பலவித வர்ணங்கள் கொண்ட உல்லன் ஆடைகள் அதை அணி செய்தன.

ஒட்டகக் கூட்டத்தின் முதலாளியின் சொந்த ஒட்டகம் அது.

முதலாளி, வடக்கே உள்ளே புதிய புதிய நாடுகளைக் காட்டுவதற்காகத் தன் குடும்பத்தையும் தன்னேடு அழைத்து வருவான்.

நெட்டையான ஒட்டகத்தின் முதுகின் மேலே, உயரமாக, அழகுபடுத்தப்பெற்ற டோலி ஒன்று இருக்கிறது. வர்ண விசித்திரங்கள் கொண்ட பட்டுத் துணித் திரைகளால் மூடுண்ட அது, ஒட்டகத்தின் சீரான அசைவுகளுக்குத் தகுந்தபடி ஆடி அசைகிறது. பெண்களின் முகங்கள், கீழிருந்து மூக்குகள் வரையிலும், மேலிருந்து புருவங்கள் மட்டிலும் மூடப்பட்டிருக்கின்றன; தென்பிராந்தியச் சூரியன்போல் பிரகாசிக்கிற கண்கள் மட்டுமே வெளியே தெரிகின்றன. அவர்கள் ஓயாது எதையாவது தின்றுகொண்டிருக்கிறுர்கள். மேலும் கீழுமாக ஏறி இறங்கும் அவர்களது தாடைகளின் அசைவுகள் ஒட்டகத்தின் ஆட்டத்துக்கு இணங்க இயங்குகின்றன. பளிச்சிடும் வர்ணங்களில் அமைந்த சிறிய மெத்தைகள்மீது சாய்ந்துகொண்டு அவர்கள் தின்றவாறு இருக்கின்றுர்கள். எங்கள் நகரின் சன்னல்களை, வீட்டுக் கூரைகளை, பெண்களை, ஆண்களை எல்லாம் வேடிக்கையாகப் பார்க்கிறுர்கள். கனவு துளும்பும் கண்களை உடைய இந்தப் பாலைவனப் பெண்கள் முடிவேயில்லாமல் ஒட்டகத்தினுல் தொட்டிலாட்டப்படுகிறுர்கள்; இரவு பகலாக பாபிலோனியப் பிரதேசங்களிலிருந்து ஆசியா மைனரின் நகரங்கள் மற்றும் கிராமங்கள் வரை தாலாட்டப்படுகிறுர்கள்.

* * *

ஒட்டகக் கூட்டத்தில் பரபரப்புக் காணப்படுகிறது. அது எங்கள் நகரிலிருந்து கிளம்பப்போகிறது. ஒட்டகம் எழுந்து நிற்கிறது. குறுகிப்போன வானவளையத்தை ஏறிட்டுப் பார்க்கிறது. முதலாளியின் நம்பகமான வேலைக்காரன் குட்டை ஏணியை எடுத்து வர விரைகிறுன். ஒட்டகத்தின் வயிற்றேடு ஏணி சாய்த்துவைக்கப்படுகிறது. முதலாளி மேலே ஏறுகிறுன்; தன் மனைவியின் அருகில் படுத்துக்கொள்கிறுன்.

சீக்கிரமே, முன்னேறிச் செல்கிற ஒட்டகத்தின் சீரான ஆட்டத்தைத் தொடர்ந்து மணிகளின் கிண்கிணி நாதம் ஒலிக்கிறது. ஒட்டகக் கூட்டம் மேலே செல்கிறது.

இரவு பகலாக அது தன் வழியே செல்கிறது. சாமான்களை இறக்க, பண்டமாற்றுச் செய்ய, சரக்குகளை விற்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறபோதுதான் அது ஓய்ந்து நிற்கிறது. பிறகு மறுபடியும், அது தன் பயணத்தைத் தொடர்கிறது.

இரவின் ஆழ்ந்த அமைதியினூடு ஒட்டகக் கூட்டம் நகர் வந்து சேர்கிற சமயங்களில், மேகமின்றி நட்சத்திரங்கள் ஒளிரும் வானத்தின் கீழே வெகுதூரத்திலிருந்து அலைமோதி வருகிற சின்னஞ்சிறு மணிகளின் கிண்கிணி நாதத்தை நாங்கள் கேட்போம். மந்தகதியில் ஊர்ந்து அது நெருங்கி நெருங்கி வரும். ஒட்டகத்தின் சொந்தக்காரர்கள் அரைத் தூக்கத்தோடு ஒட்டகங்களின் சீரான அசைவுக்குத் தக்கவாறு ஆடி அசைவார்கள். எங்கள் நகரின் சதுக்கம் ஒன்றில் வந்து ஒட்டகக் கூட்டம் நிற்கிறவரை அது நிகழும். எங்கும் நிற்காமலே போய்க்கொண்டிருந்தால், அதுவும் தொடர்ந்து நிகழும். மணியோசை படிப்படியாகத் தேய்ந்து, எங்கள் நட்சத்திர மயமான ஆகாயத்தின் ஆழத்தில் புதைந்துபோகும்.

* * *

எங்கள் தெருவுக்கு அப்பால் உள்ள சதுக்கத்தில் மூன்று நாட்களாக ஒட்டகக் கூட்டம் ஒன்று தங்கியிருக்கிறது. ஒட்டகக் காவலனின் ரோம உடைகள், பிசைந்த மாவு, ஒட்டக ரோமம் ஆகியவற்றுக்கே உரிய இயல்பான மணம் காற்றில் நிலவி நிற்கிறது. ஒட்டகங்களின் களைப்புற்ற குரல்களும் அமைதியான பார்வைகளும் அங்கே நிரம்பியிருக்கின்றன. ரோமங்களால் வேயப்பட்ட காவலர் கூடாரங்கள் நன்கு நிறுவப்பட்டிருக்கின்றன. மாலை வேளைகளில் நெருப்புகள் மூட்டப்படுகின்றன. காவலர்கள் தங்கள் ஒட்டகங்களுக்கு உணவு அளித்து, அவற்றிடம் அன்பு காட்டுகிறார்கள். அவர்கள் உரக்கச் சிரிப்பதில்லை; புன்னகை மட்டுமே புரிகிறார்கள். லேசான சோபையற்ற புன்முறுவல் அவர்களது முகங்களில் தோன்றிய உடனேயே மறைந்தும் போகின்றன. ஆனால், ஒரு பாலைவன மனிதனின் பார்வை நெருப்புமயமாக இருக்கிறது; அவனுடைய கண்கள் கதிரொளியோடு சுட்டுப் பொசுக்குகின்றன; எப்போதும் உயிர்ப்போடும் 'பேசும்பான்மை'யிலும் உள்ளன. பாலை மணலின் சூட்டையும் அமைதியையும் அவை நமக்குக் கொண்டு தருகின்றன.

விரைவிலேயே ஒட்டகக் கூட்டம் மீண்டும் தன் வழியே போகிறது. ஒட்டகங்களின் கம்மலான, துயரம் தேங்கிய, தேடித் தவிக்கிற நெடுங்குரல்களால் நகரம் முழுவதும் நிறைந்து விடுகிறது.

*　　*　　*

ஆனால் ஒட்டகங்களில் ஒன்று அசைய மறுக்கிறது. அது எழுந்து நிற்கவில்லை. தரையில் கிடந்தபடி வெறுமனே பார்க்கிறது.

காவலர்கள் அதைச் சுற்றிக் கூடுகிறார்கள். அதன் கண்களின் ஆழத்தினுள் ஊடுருவிப் பார்த்து அதனுடைய அந்தரங்க உணர்வை முழுமையாகப் புரிந்துகொள்கிறார்கள்—ஒரு முரண்டு அதைப் பற்றிக்கொண்டுவிட்டது. அதற்கு உணவளித்து அதைக் கவனித்துவரும் காவலன் ஒட்டகக் கூட்ட முதலாளியின் கோபத்தை எண்ணிப் பயந்தவனாய் வெளிறிப்போகிறான்.

அந்த ஆள் செய்த ஏதோ ஒரு காரியத்தினால் அவ் ஒட்டகம் மனவேதனை கொண்டிருக்கிறது. முதலாளி திரும்பி வருகிறான்.

''இதன் முரண்டு தணிகிற வரை நீ இதன்கூடவே இங்கே தங்கவேண்டும். பிறகு எங்களோடு வந்து சேர்ந்துகொள்'' என்று அவன் கட்டளையிடுகிறான்.

காவலன் அதற்குக் கட்டுப்படுகிறான். ஒட்டகக் கூட்டத்து மணிகளின் ஓசை மீண்டும் ஒலிக்கிறது. முரண்டு பிடித்த ஒட்டகம் தனது தலையைத் திருப்பி, விலகிச் செல்லும் தன் தோழர்களை வெகுநேரம் கவனிக்கிறது. பிறகு நீண்ட துயரக் குரல் ஒன்றை எழுப்புகிறது. முதலாளி ஒட்டகக் கூட்டம் முழுவதையும் நிறுத்தினான். ஒருவேளை அந்த ஒட்டகம் தனியே விடப்படுவதை விரும்பவில்லைபோலும். ஆனால் அப்படியில்லை. அது உட்கார்ந்தே இருக்கிறது. எழுந்து நிற்க மறுக்கிறது. மறுபடியும் ஒட்டகக் கூட்டம் நகர்கிறது. மெசபடோமியா போகிற வழியே, பாபிலோனியா மற்றும் அராபியப் பாலை வனங்களை நோக்கி, அது செல்கிறது.

முரண்டு பிடித்த ஒட்டகத்தின் காவலன் தனது ரோம உடையைக் கழற்றி அதன் அருகில் வைக்கிறான். தன் போர்வையின் அடியில் சுருண்டு மடங்கித் தூங்கிவிடுகிறான். அவன் விழித்தெழுகிற நேரத்திற்குள், அந்த ஒட்டகம் தன் மனக்குறையை மறந்துவிடும்; சாயங்காலத்திற்குள் அவர்களும் ஒட்டகக் கூட்டத்துடன் போய்ச் சேர்ந்துகொள்ளலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு.

நாட்கள் ஓடுகின்றன. அந்த ஒட்டகம் தனது மிருக முரண்டை விட்டுவிடவில்லை. காவலனுக்கு அதைத் தட்டித் தடவிக் கொடுப்பது அலுத்துவிட்டது. எங்கள் நாட்டின் கற்பாறைகளைப்போல், அதன் இதயம் கடினமாகியிருந்தது.

பனிக்காலத்தின் குளிர் தெற்கிலிருந்து வந்துள்ள மனிதனை பயப்படுத்த ஆரம்பித்தது. அவனிடம் உணவு எதுவும் எஞ்சியிருக்கவில்லை. அவனுக்கு யாரையும் தெரியாது. எவரிடமும் அவன் உதவி கேட்க முடியாது. ஒட்டகத்துக்காகத் தயாரிக்கும் மிருதுவான, பிசைந்த மாவையே அவனும் சாப்பிடுகிறான். ஒட்டகத்தின் முதுகிலிருந்து ரோமம் திருடும் பிள்ளைகளிடம், அவர்கள் அவனுக்கு ரொட்டி கொண்டு தந்தால், பதிலுக்கு அவனே அவர்களுக்காக ரோமத்தைப் பிடுங்கித் தருவதாக அவன் விவரிக்கிறான்.

ஒருசில நாட்களில், ஒட்டகத்தின் உடம்பில் ஒரு ரோமம் கூட இல்லாதுபோயிற்று. அதன் ரோமம் அனைத்தையும் அதன் காவலன் ரொட்டிக்காக விற்றுவிட்டான். அந்த மிருகம், பாலைவனத்தின் வீரநாயகன்கூட இப்போது குளிரை உணரலாயிற்று. ரொட்டிக்கு மாற்றாகக் கொடுப்பதற்கு ஒட்டக ரோமம் இல்லை; இனிமேல் பிச்சை எடுக்கவேண்டியதுதான் என்று எண்ணவைக்கும் நாளும் வந்தது.

அந்த வட்டாரத்தின் குழந்தைகள் தொடர்ந்து அவனுக்கு உணவு எடுத்து வருகிறார்கள். தங்கள் சாப்பாட்டின் மிச்ச சொச்சங்களைக் கொண்டு தருகிறார்கள். காவலன் அவர்களை அணைத்து, நன்றி உணர்வோடு முத்தமிடுகிறான்.

வலிமை நிறைந்த இளைஞர்கள் சிலர் பாலைவன மனிதனுக்கு உதவிபுரியத் தீர்மானிக்கிறார்கள்.

''அது எழுந்து நின்றுவிட்டால் போதும். நேரே பாலைவனத்தைப் பார்த்து நடக்கத் தொடங்கிவிடும்'' என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

அவர்கள் இரண்டு மரக் கம்புகளை எடுத்து வருகிறார்கள். ஒட்டகத்தின் மடங்கிய கால்களுக்கடியில் சிரமத்தோடு அவற்றை வைக்கிறார்கள். இருபது ஆட்களின் துணையோடு, அவர்கள் அம் மிருகத்தை உயரத் தூக்குகிறார்கள்.

இரைஞ்சுகிற, நீண்டு ஒலிக்கிற, நெடுந்துயர ஓலமிட்டுக் கொண்டு, ஒட்டகம் நிற்கிறது. ஒவ்வொருவருக்கும் ரொம்ப சந்தோஷம். தனது மகிழ்ச்சியை எப்படி வெளியிடுவது என்றே பாலைவன மனிதனுக்குத் தெரியவில்லை. அவன் மென்மையாகப்

புன்னகைக்கிறுன். இவனையும் அவனையும் கட்டித் தழுவுகிறுன். ஆனுல், ஒன்றிரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு அந்த ஒட்டகம் முன்னுக்கும் பின்னுக்கும் ஆடி அசைகிறது; முட்டு மண்டியிடுகிறது; பிறகு உட்கார்ந்துவிடுகிறது. காவலன் சோகத்தில் ஆழ்ந்துபோகிறுன்.

''என்ன பிடிவாதம் பிடித்த மிருகம்!'' என்று அவர்கள் எல்லோரும் கூறுகிறுர்கள்.

பனியின் முதல் விழுகை தரைமீது லேசாகத்தான் படிகிறது. ஆனுலும் அது எங்கள் கருநிற ஆடைகள்மீது படிகிறபோது, வெண்மைச் சிதறல்கள், மனிதக் கரங்கள் ஊசிகொண்டு செய்கிற பின்னல் வேலைகளைவிட முற்றிலும் நுண்மையான வேலைப் பாடுகளை உருவாக்குகின்றன.

நாங்கள் பனியைக் கவனிக்கிறேம். பேருவகை அடைகிறேம். ஆனுல் பாலைவன மனிதன் அச்சத்தால் அவதியுறுகிறுன்.

இவ் விசித்திரமான வெண்ணிறச் சிதறல்களை ஒட்டகம் பார்க்கிறது. ஒரு பெரிய பனித்தூவல் அதன் கண்ணிமைகள் மீது படியவும், அது தன் கண்களை மூடி, உணர்வுத் தடுமாற்றத்துடன் தலையை ஆட்டுகிறது.

காவலன், தனது போர்வையால் மூடுண்டு, ஒட்டகத்தின் முன்னே மண்டியிட்டு, முதல்முறையாக அழ ஆரம்பிக்கிறுன். அருகே நிற்கும் நாங்கள் அவனுக்காகச் சிறிது ரொட்டி கொண்டு வந்திருக்கிறேம். அந்தப் பசித்த மனிதனே இப்போது உணவில் கவனம் செலுத்தவில்லை.

பனிப்படலங்கள் இருந்தபோதிலும், கண்ணீர் அவன் இமைகளைச் சுட்டது. நீர்த்துளிகள் கண்களிலிருந்து ஆறுகப் பெருகி மூக்கின் இருபுறமாகவும் வழிந்து, அடர்ந்த மீசை தாடியினுள் மறைகின்றன. ஒட்டகம் ஆர்வத்தோடு தனது காவலனை உற்றுநோக்குகிறது; அவனுடைய கண்களின் ஆழத்துள் நோக்குகிறது; அவன் கண்ணீரைக் கவனிக்கிறது. அதே சமயம் காவலனின் ஈரம் படிந்த பார்வை அம் மிருகத்தின் கண்களைச் சந்தித்து, அவற்றின் ஆழத்துள் ஊடுருவிச் செல்கிறது. கண்ணீர் மேலும் மேலும் வழிந்து அவனது இமைகளைச் சுடுகிறது.

படபடக்கும் பனியினுல் எங்களுக்கு ஏற்பட்ட சந்தோஷத்தோடு பாலை மனிதனின் துயரமும் இணைந்து கலக்கிறது.

திடீரென்று ஒட்டகம் தன் கழுத்தை முன்னே நீட்டுகிறது! இருவரின் மூச்சுகளும் இணைகின்றன. மன்றுடும் குரலில் அது சில

ஒலிகளை எழுப்புகிறது. பெருமூச்சு விடுகிறது. எழத் தொடங்குகிறது.

நாங்கள் மகிழ்ச்சியோடு கத்துகிறோம்.

''ஒட்டகம் எழுந்துவிட்டது! ஒட்டகம் எழுந்துவிட்டது!''

காவலன் தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, நாங்கள் அவனுக்காக எடுத்து வந்திருந்த ரொட்டியைச் சேகரிக்கிறான். ஒட்டகத்தின் சேணத்தைப் பற்றிக்கொண்டு, மேலே ஏறுகிறான். புன்னகை பூத்து, சந்தோஷத்தோடு, பாலை நிலத்தை நோக்கிப் பயணப்படுகிறான்.

தெருவின் இருபுறமும் மக்கள் நின்று, முரண்டுபிடித்த ஒட்டகத்தைக் கவனிக்கிறார்கள். அது நடந்தவாறே புலம்பிக் கொண்டு, வெகுவெகு தொலைவில் தன் கண்களைப் பதித்தபடி நடக்கிறபோது ஆடி அசைகிறது.

காவலன் தெரு ஓரங்களில் நின்ற மக்களுக்கு வணக்கம் தெரிவிக்கிறான். அவர்கள் அவனுக்காக வீசிய காசுகளைச் சேகரிக்கிறான். ஒரு பையை ரொட்டியால் நிரப்புகிறான். நகரத்தை விட்டு நீங்கி, மணல் பரப்பை நோக்கி, சூரியனை நோக்கி, நகர்ந்து போகிறான்.

சிவப்பும் மஞ்சளுமான இலைகளைக்கொண்ட இலையுதிர் காலத்துக்குப் பிறகு, கடுமையான மாரிக்காலம் தொடங்கியிருக்கிற ஒரு நாட்டை விடுத்துச் செல்கிறான் அவன்.

அக்செல் பாகுன்ட்
*(1899—1937)*

# ஆல்ப் மலை வயலட் பூ

காகவபெர்தா மலைச் சிகரம் வருஷம் முழுவதும் மேகங்களால் மூடுண்டிருக்கிறது. கோட்டையின் கரடுமுரடான சுவர்களை வெண்மேகங்கள் மறைக்கின்றன. அதன் உயரமான கரிய கோபுரங்கள் அங்குமிங்கும் தலைதூக்கி நிற்கின்றன. தூரத்திலிருந்து பார்க்கையில், மதில்புறங்களைக் காவல்காரர்கள் காத்து நிற்பது போலவும், கோட்டையின் பெரிய இரும்புக் கதவுகள் பூட்டப்பட்டிருப்பதாகவும், மலைமீது ஏறிவரும் ஒரு அந்நியனை எந்த நேரத்திலும் ஒரு காவலன் தடுத்து அறைகூவக்கூடும் என்றும் தோன்றுகிறது.

ஆனால், காற்று மேகங்களைச் சிதறடித்ததும், வெண்சிதறல்கள் கரைந்துவிட்டதும், முதலாவதாகக் கோபுரத்தின் சரிந்த உச்சி தென்படுகிறது. பின்னர், சுவர்கள் மண்ணில் அரைவாசி புதைந்து காணப்படுகின்றன. அங்கே இரும்புக் கதவுகளும் இல்லை, காவலாட்களும் இல்லை.

காகவபெர்தாவின் இடிபாடுகளில் நிசப்தம் ஆட்சிபுரிகிறது. கொந்தளிக்கும் பாஸட் ஆறு கீழே உள்ள பள்ளத்தாக்கினூடே, குறுகலான பாறைகளின் நீலப் படிகங்களைப் பளபளப்பாக்கியவாறு பாய்ந்து ஓடும் ஓசைதான் அங்குக் கேட்கிற ஒரே சப்தம். சுழலும் தண்ணீருக்கடியில் ஆயிரம் ஓநாய்கள் தங்களைப் பிணைத்திருக்கும் இரும்புச் சங்கிலிகளைக் கடித்தவாறு ஊளையிடுவது போல் தோன்றுகிறது.

ஒரு ராஜாளியும் ஒரு கழுகும் சுவர்களில் கூடுகள் கட்டியிருந்தன. காலடியின் சரசரப்புக் கேட்டதுமே அவை கடூரமாகக் கூச்சலிட்டபடி மேலே பறந்து, இடிபாடுகளுக்கு உயரே வட்டமிடத் தொடங்குகின்றன. மலைப்பருந்து ஒன்றும் அவற்றோடு சேர்கிறது. அதன் மூக்கு வளைந்த குறுவாளாகவும், அதன் கால் விரல்கள் கூரிய ஈட்டிகளாகவும், அதன் சிறகுகள் இரும்புக் கவசமாகவும் தோன்றுகின்றன.

காகவபெர்தாவின் அத்தனை உயரத்தில் பூக்கிற ஒரே பூ வயலட்தான். அது ரத்தச் சிவப்பு நிறத்தில், மலைப்புறுவின்

பாதங்களைப்போல் செக்கச் சிவந்த தண்டுடன் விளங்குகிறது. அம் மலர் இடிபாடுகளுக்கிடையே பூக்கிறது. இருண்ட கோட்டைச் சுவர்கள்மீது மேகங்கள் தாழ்ந்து படிந்திருக்கும் போது, புஷ்பம் தன் தலையை வெயிலால் உலர்ந்த பாறை ஒன்றின்மீது வைத்துக்கொள்வதற்கு வசதியாக அதன் தண்டு வளைந்து தணிகிறது. மகரந்தத்தில் குளிக்கிற பிரகாசமான வண்டு ஒன்று அந்தப் பூவை ஒரு ஊஞ்சலாகவும், உலகத்தை ஒரு செந்நிறப் புஷ்பமாகவும் காண்கிறது.

ரொம்பவும் கீழே, பள்ளத்தாக்கில் பாசட் நதியின் எதிர்க் கரையில், அநேக குடிசைகள் இருக்கின்றன. காலை வேளையில், கூரைகளில் உள்ள வட்டத் திறப்புகளின் வழியே புகைத் தூண்கள் மேலெழுகின்றன. அவை நீல நாடாக்களாக உருமாறி மேகங்க ளிடையே மறைகின்றன. நண்பகலின் உஷ்ணத்தில், கிராமத்தில் ஒரு சேவல் கூவக்கூடும். ஒரு கிழக் குடியானவன் தன் வீட்டின் நிழலில் கொட்டாவி விட்டபடி, தனது பழைய நினைவுகளில் ஆழ்ந்து, மணலில் ஒரு குச்சியால் உருவங்களைத் தீட்டுகிறான்.

கீழே கிராமத்திலும் மேலே கோட்டையிலும் காலம் மெதுவாக நகர்கிறது. ஒரு மரத்தின் மாறுகின்ற இலைகளைப் போல் வருஷங்கள் அமைகின்றன. நினைவுகள் குழம்புகின்றன. இப்போது, எப்போதும் போலவே ஆறு வேகமாக ஓடுகிறது. மேலே அதே பாறைகளும் அதே மலைப்பருந்தும் இருக்கின்றன.

பாஸட் ஆற்றங்கரையில் எத்தனை தலைமுறைகள் தங்கள் வாழ்க்கையைக் கழித்திருக்கின்றன! எத்தனை ஜனங்கள் கிழிந்து கந்தலான தங்கள் ரோமப் படுக்கைகளை இங்கே விரித்திருக் கிறார்கள்! தங்கள் கூரைகளை நாணற்புல்லினால் மூடியிருக் கிறார்கள்! வசந்த காலத்தில், காகவபெர்தாவின் சரிவுகளில் வயலட் மலர்கள் பூத்துக் குலுங்கும்போது, எத்தனை பேர் தங்கள் வெள்ளாடுகளையும் செம்மறிகளையும் மலைவெளிப் புல்நிலங்களுக்கு ஓட்டிப்போயிருக்கிறார்கள்; பின்னர், தங்கள் சேணப் பைகளில் பாலாடைக்கட்டிகளை நிரப்பியிருக்கிறார்கள்; பிறகு, மாரிக்காலத்தில் தினைமாவினால் செய்த ரொட்டியோடு சேர்த்து அதைத் தின்றிருக்கிறார்கள்!

* * *

உஷ்ணம் மிகுந்த ஒரு மத்தியான நேரத்தில், மூன்று பேர் குதிரைமீதமர்ந்து காகவபெர்தாவின் கரடுமுரடான சரிவுகள் மேலே போனார்கள். அவர்களுடைய உடைகள், மற்றும் அவர் களில் இருவர் சேணத்தில் அமர்ந்திருந்த விதம் இவற்றிலிருந்து, அவர்கள் நகரவாசிகள் என்றும், கோட்டையையோ மலைப்

பாறைகளையோ இதற்கு முன்பு கண்டறியாதவர்கள் என்றும் கூறிவிடலாம்.

மூன்றாவது ஆள் அவர்களுடைய வழிகாட்டி. முதல் இரண்டு பேரும் தங்கள் குதிரைகளின் பிடரி மயிரைப் பற்றிக்கொண்டு, பாதுகாப்பாக இருப்பதற்காக ஒரேயடியாகக் குனிந்தபடி சவாரி செய்தார்கள். மூன்றாவது நபரோ சேணத்தில் ஆடி அசைந்த வேளையில் பாட்டு ஒன்றைப் பாடிக்கொண்டிருந்தான். அந்தப் பாடல் தூரத்துக் கிராமம்போல் துயரம் தேங்கியதாகத்தான் இருந்தது.

கோட்டையை மூடியிருந்த மேகங்கள் சில நேரங்களில் திரை விலகுவதுபோல் விலகின; சில சமயம் சுவர்களை வெளிக் காட்டின. கோட்டையின் சிகரங்களை அவை ஒருபோதும் மூடி மறைத்ததில்லை. முதல் நபர் சுவர்களிலிருந்து தனது கண்களை அகற்ற முடியாதவனாய்க் காணப்பட்டான். அவன் தன் மனக்கண்களில் கோட்டைபற்றிய கதைகளை—இளவரசர்கள் இங்கே ஆட்சிபுரிந்தபோது, போர் வீரர்கள் அமர்ந்த குதிரைகள் இரும்புக் கதவுக்கு வெளியே உள்ள பாதையில் நடந்து சென்ற போது, வீரர்கள் ஈட்டிகளை சுழற்றிக்கொண்டு முற்றுகைகளிலிருந்து திரும்பிய காலத்தில் தோல் காகிதங்களில் எழுதிவைத்த வரலாறுகள் பாதுகாத்த கதைகளை—காட்சிகளாகக் கண்டான். கண்ணாடிகள் வழியாகக் கூர்ந்து நோக்கிய கண்கள் ஒரு பண்டிதனின் கண்கள் ஆகும். போர்வீரர்களை, அவர்களது பிரதாபங்களைப் புகழ்ந்து பாடிய வரலாற்றுக்காரர்களை, அவர்களுடைய கூர்மையான எழுதுகோல் தோல் காகிதத்தின்மீது வார்த்தைகள் கிறுக்குவதை அவன் நிஜமாகவே காணமுடிந்தது. அந்தப் புராதனமான குதிரைகளின் கால்குளம்பு ஓசையை அவன் கேட்க முடிந்தது. முன்னாளில் கோட்டையில் வசித்தவர்கள் மலைவெள்ளாடுகள் மாதிரி வெகு சுலபமாக ஏறிச் சென்ற பாறைகள்மேலே சவாரி போவது அவனுக்கு எவ்வளவு சிரமமாக இருந்தது!

முடிவாக அவர்கள் கிராமத்தை அடைந்தார்கள். முதல் நபர் தன் வழியில் தொடர்ந்து சென்றான். அவன் பழைய பாதையைத் தேடிக்கொண்டிருந்தான். அவிந்த நெருப்பு மூட்டங்களின் சாம்பல் குவியலில் விளையாடிய குழந்தைகளையோ, வியப்புற்ற விழிகளால் அவனைத் தொடர்ந்து பார்த்த வெள்ளாடுகளையோ அவன் கவனிக்கவில்லை.

இரண்டாவது குதிரைக்காரன், ரோமத் தொப்பி அணிந்தவன், காகவபெர்தாவின் உச்சியில் கடந்த காலத்தைத் தேடிக்

கொண்டிருக்கவில்லை. ஒரு கூர்மையான பென்சிலும், தடித்த சித்திரக் கையேடு ஒன்றும் அவனிடம் இருந்தன. ஒரு முகம், அல்லது பாசி படர்ந்த பாறையோடு வசீகரமாகத் தோன்றிய ஒரு மூலை அவன் பார்வையில் பட்ட உடனேயே அவன் வரையத் தொடங்குவான்.

ஒருவன் புதைபொருள் ஆய்வாளன். மற்றவன் கலைஞன். அவர்கள் முதல் குடிசையை அணுகியதும், அநேக நாய்கள் அவர்கள்மீது பாய்ந்தன. குரைக்கும் சத்தத்தைக் கேட்டதும், சில ஆட்கள் தோன்றி வாசற்படிகளில் நின்று அவர்களை உற்று நோக்கினார்கள்.

சாம்பல் நடுவில் விளையாடிக்கொண்டிருந்த பிள்ளைகள், குதிரைகளைத் துரத்தியபடி குரைத்தவாறே போகும் நாய்களைக் கவனித்தார்கள். வழிகாட்டி தன் சாட்டையினால் அவற்றை அடித்து விரட்ட வீண்முயற்சி செய்தான். நாய்கள் கோட்டைச் சுவர்கள் வரை அவர்கள் பின்னே சென்றன. அதன் பிறகுதான் அவை திரும்பிக் கீழ்நோக்கி ஓடலாயின.

கோட்டையின் கற்கள் உயிர் பெற்றதுபோல் தோன்றின. புதைபொருள் ஆய்வாளனோடு அவை பேசின. அவன் ஒவ்வொரு கல்லையும் அணுகினான்; எதையோ தேடிக் கீழே குனிந்தான்; பிறகு அதை அளந்தான்; தனது குறிப்பேட்டில் குறித்துக் கொண்டான். தன் கால்நுனியால் புழுதியைக் கிளறி வேறொரு வித வடிவம் பெற்ற கல்லைக் கண்டான். முடிவில், அவன் சுவர் மீது ஏறினான்; கோபுரத்தில் இருந்த ஒரு நுழைவாயில் வழியே தலையை வெளியே நீட்டினான். சுவரில் பொறிக்கப்பட்டிருந்த எழுத்தைப் பார்த்ததும் உரக்கக் கூவினான்.

வழிகாட்டி, குதிரையிலிருந்து இறங்கிச் சுவர் ஓரத்தில் புகை பிடித்துக்கொண்டிருந்தவன், சத்தத்தைக் கேட்டதும் குதித் தெழுந்தான். கண்ணாடிக்காரனைப் பாம்பு கடித்துவிட்டது என்றே அவன் நினைத்தான்.

கலைஞன் சுவரின் இடிந்த பகுதிகளையும் ஊசிக் கோபுரத்தை யும் படமாக வரைந்துகொண்டிருந்தான். கோட்டையின் நுழைவாயிலை அவன் வரையும்போது, அவனது பென்சில் நடுவில் நின்றது. ஏனெனில், அவன் காலடி ஓசையால் கலவரமடைந்த கழுகு அதன் கூட்டைவிட்டு வெளியே பறந்தது. இப்போது அது கோபுரத்தின் மேலே வட்டமிட்டது. இதர பறவைகளும் பெரிதாகச் சிறகுகளை அடித்துக்கொண்டு பறக்கலாயின.

பயந்துவிட்ட குதிரைகள் ஒன்றோடு ஒன்று நெருங்கி நின்றன. பாகுர் இளவரசன் புதைக்கப்பட்டிருந்த சிற்றறையைத் தான்

கண்டுபிடித்துவிட்டதாக ஆய்வாளன் கீழே பார்த்துக் கத்திய போது, அவன் என்ன சொல்கிறுன் என்று கலேஞனுக்குப் புரிய வில்லே. கழுகுகள் பறப்பதை, அவை தங்கள் இறக்கைகளே வேகமாக அடித்துக்கொள்வதையே அவன் கவனித்துக்கொண் டிருந்தான். அவற்றின் வளேவான, ரத்தச் செந்நிற அலகுகளால் அவன் வசீகரிக்கப்பட்டான். அவை வட்டமிடுவதில் ஒருவகை காம்பீர்யம் இருந்தது.

தன் தலேயிலிருந்த தொப்பி நழுவி, ஒரு பாறைமீது விழுந்ததை அவன் கவனிக்கவில்லே.

ஒரு குடியானவன் ஒரு தடிக்கம்பை ஊன்றிக்கொண்டே பாறைச் சரிவுகளில் ஏறிவந்தான். அவன் இடுப்பு வாரில் ஒரு அரிவாள் சொருகப்பட்டிருந்தது. தலேயைச்சுற்றி ஒரு அழுக்குக் கைக்குட்டையைக் கட்டியிருந்தான். அவன் வழிகாட்டியின் அருகில் சென்றுன்.

கண்ணுடி அணிந்தவன் ஒரு பாறையை அகற்றுவதை அவன் பார்த்திருந்தான். அந்த அந்நியர்கள் யார் என்றும், இடிபாடு களுக்கிடையே அவர்கள் என்ன தேடுகிறுர்கள் என்றும் அவன் வழிகாட்டியைக் கேட்டான். வழிகாட்டிக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லே. பிறகு, ஒரு ஜாடி நிறையத் தங்கக் காசுகள் காகவபெர்தா சிகரத்தின் ஒரு இடத்தில் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாக ஒரு புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது என்று அவன் கூறிஞன்.

குடியானவன் சிந்தனேயில் ஆழ்ந்தான். அப்புறம் அவன் தன் தோள்களேக் குலுக்கிக்கொண்டு, பள்ளத்தாக்கை நோக்கிக் கீழே இறங்கிஞன். அவனது வயலில் விளேந்த திணேக்கதிர்களே அவன் அறுத்தாகவேண்டும். நடந்தபோது அவன் தனக்குத் தானே பேசிக்கொண்டான். மறைந்திருந்த புதையலே அவன் கண்டுபிடித்திருந்தால் அது எத்தகைய அதிர்ஷ்டம் ஆகும். அந்தக் கண்ணுடிக்காரன் நகர்த்திய அதே பாறைமீது அவன் எத்தனே தடவை உட்கார்ந்திருந்தான். புதையல் விஷயம் முன்பே அவனுக்குத் தெரிந்திருந்தால், அவனுடைய பைகளில் தங்கக் காசுகள் குலுங்குமே. ஆ, எத்தனே பசுக்களே அவன் வாங்க முடிந்திருக்கும்... இவ்வாறு எண்ணியபடி அவன் தன் வயலே அடைந்தான். தனது நீண்ட சட்டையைக் கழற்றிவிட்டு, பயனற்ற நினேப்புகளேயும் ஒதுக்கிவிட்டு, அவன் கை நிறைய திணேக்கதிர்களேப் பற்றிக்கொண்டு அறுக்க ஆரம்பித்தான்.

இடிபாடுகளுக்கிடையே வயலட் பூ ஒன்று பூத்திருந்தது. ஆனுல் புதைபொருள் ஆய்வாளன் அந்தக் கரும்சிவப்பு நிறப்

பூவையோ புல்லையோ கவனிக்கவில்லை. அவை எல்லாம் அவன் காலணிகளின் கீழே மிதிபட்டு நசுங்கின.

அவனுக்கு உலகம் முழுவதும் ஒரு மியூசியம் (பொருட்காட்சி சாலை) ஆகவே தோன்றியது. அதில் உயிருள்ள பொருள் ஒன்று கூடக் கிடையாது. பாறைகளை மூடிக்கிடந்த ஐவிக் கொடிகளை அவன் பிய்த்தெறிந்தான். வெடிப்பினூடே பூத்திருந்த வயலட் செடியைத் தன் கைக்கம்பின் நுனியினால் பிடுங்கி வீசினான். கற்கள் மீது ஆசையோடு கையால் தடவினான். அவற்றில் பொறிக்கப் பட்டிருந்த எழுத்துகளில் அடைந்துகிடந்த புழுதியைச் சுரண்டி அகற்றினான். ஆய்வாளன் அக்கறை காட்டிய அனைத்தையும் வரைந்து முடிந்ததும், கலைஞன், இடிபாடுகளை, கரடுமுரடான பாறைகளுக்கிடையே இருந்த கழுகுக்கூட்டை, சுவரடியில் பூத்திருந்த வயலட்டை எல்லாம் வரையலானான்.

* * *

பிற்பகலில் அவர்கள் கோட்டையைவிட்டுப் புறப் பட்டார்கள். கீழ்நோக்கி இறங்குவதற்கு முன்பு ஆராய்ச்சியாளன் இடிபாடுகளை மீண்டும் ஒரு தடவை சுற்றிவந்து, தனது கையேட்டில் குறிப்புகள் எழுதிக்கொண்டான். பிறகு மற்றவர் களோடு சேர்ந்துகொள்வதற்காக அவன் வேகமாக நடந்தான்.

இம்முறை வழிகாட்டி முன்னே சென்றான். ஆய்வாளன் பாகுர் இளவரசனையும் வரலாறுகள் நிறைந்த தோல் காகிதச் சுருள்களையும் பற்றி எண்ணிக்கொண்டிருந்தான். கலைஞன் பாஸட் ஆற்றின் கொந்தளிக்கும் நீரின் ஓசையைக் கேட்டவாறே வயலட் பூவை நினைவுகூர்ந்தான். வழிகாட்டியோ, வெள்ளாட் டின் பாலாடைக்கட்டியும் தயிரும் தோய்ந்த சூடான தோசையை எண்ணிக் கனவுகண்டான்.

முதல் குடிசையில் அவன் குதிரைகளை நிறுத்தினான். அவற்றை மேயும்படி விட்டுவிட்டு, அவன் குறுகிய வாசலினூடே புகுந்தான். பசியோடிருந்த குதிரைகள் புதிய புற்களை ஆசையோடு தின்னத் தொடங்கின.

குடிசைக்குள், வாயிலின் பக்கத்திலிருந்த அடுப்பருகே ஒரு சிறுவன் உட்கார்ந்திருந்தான். சூடான தீக் கங்குகளில் அவன் காளான்களை வறுத்துக்கொண்டிருந்தான். அந்நியன் வருகை யால் அவன் திடுக்கிட்டான். காளான்களைக் கருகப்போட்டுவிட்டு ஓடுவதா? இல்லை, அவற்றை அனலிலிருந்து வெளியே எடுப்பதா? என்று அவனுக்குப் புரியவில்லை. அவன் அப்பா வரும் காலடி ஓசை கேட்டதும் அவன் துணிவுகொண்டான். வறுத்த காளான்

ஒன்றை வெளியே தள்ளினுன். அதை அடுப்புக் கல் ஒன்றின்மீது ஆறவைத்தான்.

அவன் தாய் உள்ளே வந்தாள். தலைக்குட்டையைக் கண்களுக்கும் கீழே தொங்கும்படி இழுத்துவிட்டாள். மூலைக்குப் போனுள். அங்கிருந்த படுக்கைகளின் குவியலிலிருந்து இரண்டு திண்டுகளை வெளியே எடுத்து, விருந்தாளிகள் அமருவதற்காகப் போட்டாள்.

ஆய்வாளனின் பெரிய பைக்குள்ளிருந்து உணவுப் பொருள் டப்பா ஒன்றை வழிகாட்டி எடுத்தான்.

''என் சகோதரியே, நாங்கள் பசியோடு இருக்கிறோம். உன்னிடம் தயிர் இருந்தால் எங்களுக்குக் கொஞ்சம் கொடுக்க மாட்டாயா? தேநீரும் தயாரித்துத் தரமாட்டாயா? எங்களிடம் சர்க்கரை இருக்கிறது'' என்று அவன் சொன்னுன்.

அம் மங்கை அடுப்பருகே சென்றுள். உள்ளே கிடந்த காளான்களை அகற்றிவிட்டு, அனல்மீது குனிந்து, கங்குகளை ஊதினுள். அவள் தலையிலிருந்து குட்டை நழுவி விழுந்தது. அவளுடைய வெள்ளை நெற்றியும், கன்னங்கருத்த கூந்தலும், கரிய கண்களும் கலைஞன் பார்வையில் பட்டன. புகையும் அடுப்பையும், கங்குகள்மீது குனிந்திருந்த பெண்ணையும் விட்டுத் தன் கண்களை அவனுல் அகற்ற இயலவில்லை. இந்த முகத்தை முன்பு அவன் எங்கே கண்டிருக்கிறுன்? இதே பளிங்கு நெற்றி, இதே கரும் வயலட் கண்கள். அந்தப் பெண் ஒரு முக்காலியை எடுத்து நெருப்பின்மேல் வைப்பதற்காக எழுந்தபோது, அவள் கண்களும், அவளுடைய புருவங்களில் படிந்திருந்த வெண்சாம்பல் தூசியும், தலைமுடியும் அவனிடமிருந்து மிகச் சிறிதே விலகியிருந்தன.

எத்தனையோ வருஷங்கள் ஓடியிருந்தன! ஏதேனும் இரண்டு முகங்கள் ஒரே மாதிரி இருக்க முடியுமா? அவற்றின் வாய் அமைப்புகூட ஒரே மாதிரி இருந்தது.

இந்தப் பெண்ணின் முகம் வெயிலால் கறுத்திருந்தது. ஆனுலும் இவள் கண்கள் அந்த இன்னொரு பெண்ணின் கண்களை ஒத்திருந்தன. இரண்டுபேருக்கும் ஒரே மாதிரி மெலிந்த இடையும் கொடி உடலும்தான். விரைவாகவும் அமைதியாகவும் நகர்ந்தபடி அவள் அவர்களுக்குத் தேநீர் தயாரித்தாள். அவள் குனிந்து எழுந்த ஒவ்வொரு முறையும், அல்லது வைக்கோல் பாய்கள்மீது அவள் நடந்து போகையில், அவளுடைய கைகளில் கிடந்த வெள்ளிக் காப்புகள் சிறு மணிகள்போல் மெல்லொலி எழுப்பின; அவளது நீண்ட ஆடை மெதுவாகச் சரசரத்தது.

இன்னெரு பெண்ணும் சரசரக்கும் ஆடைகளேயே அணிந்திருந்தாள். ஆனால், அவள் சாம்பல் நிற மேல்சட்டையும், கரிய வெல்வட் தொப்பியும் அணிந்திருந்தாள். தொப்பியில் ஆரஞ்சு நிற ஊசியும் காணப்பட்டது.

அந்தப் பெண் இப்போது வெகு தொலேவில் இருந்தாள். ஒருவேளே பாஸட் நதி, வேறெரு ஆற்றுடன் கலந்து ஓடி, முன்னெரு சமயம் அந்தப் பெண்ணின் பக்கத்தில் கடற்கரை மணலில் அமர்ந்திருந்தானே, அதே கரையை ஒட்டிய கடலில் சேர்ந்துவிடுவது சாத்தியமாகலாம்.

வழிகாட்டி இரண்டாவது உணவு டப்பாவைத் திறந்தான். ஆய்வாளன் அங்கிருந்த துணியையும், அதன்மேல் வைக்கப் பட்டிருந்த பித்தளேப் பாத்திரங்களேயும் பார்த்துக்கொண்டே யிருந்தான். பையன் தனது காளான்களேத் தின்ருன். பிறகு, பளபளப்பான டப்பாவை ஆச்சரியமாகப் பார்த்தான். அந்நியர்கள் அதைக் காலி பண்ணட்டும் என்று காத்திருந்தான். அவன் பார்வையைக் கவனித்த வழிகாட்டி அதை அவனிடம் கொடுத்துவிட்டான். சிறுவன் அதைக் குலுக்கி ஆட்டலானுன். வெளியே படுத்துக்கிடந்த ஒரு நாய், எஞ்சியிருந்து கீழே விழுந்த இறைச்சியை விழுங்கியது; துண்டுச் சிதறல்களே நக்கியது. உடனே அந்தப் பையன் பளபளக்கும் வெண்ணிற டப்பாவைத் தன் நண்பர்களிடம் காட்டுவதற்காக ஓடிப் போனுன். அந்தப் பகுதிகளில் இதுபோன்ற ஒன்றை எவரும் கண்டதில்லே.

அந்தப் பெண் அடுப்பருகில் உட்கார்ந்து, கெட்டில் மூடியை அடிக்கடி எடுத்து, தண்ணீர் கொதித்துவிட்டதா என்று பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் சுள்ளிகளே ஏறத்தள்ளித் தீயைத் தூண்டினுள். மேகம் மாதிரி எழுந்து, நாணல் தட்டைச் சுவர்களின் வெடிப்புகள் வழியாக வெளியேறிய புகையிலிருந்து பாதுகாக்கத் தன் கண்களே மூடிக்கொண்டாள்.

நீண்ட ஆடையின் அடியில் அவளது முழங்கால்கள் நன்கு படிந்து தெரியும் விதத்தில் அடுப்பருகே அமர்ந்திருந்த பெண், பொங்கிச் சுருண்டெழும் புகையில் எதிர்கால நிகழ்வுகளேக் கண்டறியக்கூடிய ஆற்றல் பெற்ற ஒரு மந்திரக்காரிபோல் கலேஞனுக்குத் தோற்றம் தந்தாள்.

இன்னெரு பெண் வெறும் காலுடன் நடந்ததேயில்லே; புகையும் அடுப்பருகே அவள் அமர்ந்ததும் இல்லே.

கடல் காலேநேரங்களில் வெண்கலக் குழம்புபோல் சீறி எழுந்து, கரைநெடுக நின்ற கற்பாறைகளே நக்கிக்கொண்டிருந்தது. அந்தப் பெண் கறுப்பு வெல்வட் தொப்பி அணிந்து

கடற்கரையில் இருந்தாள். அவள் தனது சிறுகுடையின் நுனியிஞல் மணலில் கோடுகள் வரைவதும், பிறகு அவற்றை அழிப்பதுமாக இருந்தாள். அவன் தன் கையிலிருந்த காய்ந்த சுள்ளியைத் துண்டுதுண்டாக ஒடித்துக்கொண்டிருந்தான். அவர்களது பாதங்களில் நுரையை வீசியடித்த அலைகள் குச்சியின் துணுக்குகளைக் கடலுக்குள் இழுத்துச் சென்றன. கடற்கரையில் அவர்கள் அமர்ந்திருந்தபோது, அந்தப் பெண் அவனை மணந்து கொள்வதாக வாக்களித்தாள். அப்போது திடீரென்று உலகம் எல்லையற்ற ஒரு பெருங்கடலாக மாறிவிட்டது. அவன் இதயம் அதில் ஒரு பகுதியாயிற்று.

அப்புறம் வேறு நாட்கள் வந்தன. வாழ்க்கை அவர்களைத் திடுமெனப் பிரித்துவிட்டது. அவளது வயலட் கண்கள், சாம்பல் நிற மேல்சட்டை, தனது உறுதிமொழியை மணலில் எழுதிப் பின் அழித்துவிட அவள் உபயோகித்த சிறுகுடையின் நுனி, இவற்றின் நினைவுதான் அவனுக்கு எஞ்சியிருந்தன.

மூடி கடகடத்தது. அந்தப் பெண் ஒரு கூடையிலிருந்து சில தட்டையான பாத்திரங்களை எடுத்தாள். வர்ணம் தீட்டிய கண்ணாடி டம்ளர்களை அவற்றின்மீது வைத்தாள். அவைகளின் மேலே அவள் குனிந்தபோது அவளுடைய நீண்ட தலைப்பின்னல் தோளின்மீது நழுவி விழுந்தது. கடற்கரையிலிருந்த பெண் குட்டையான கூந்தலும், வெண்ணிறக் கழுத்தும், ஒளிவீசும் சருமமும் பெற்றிருந்தாள்.

காலி டப்பாவை எடுத்துக்கொண்டு பையன் உள்ளே ஓடி வந்தான்.

சிறுவர் கூட்டம் ஒன்று இப்போது வாசலருகே நின்று, அந்நியர்களை வெறித்து நோக்கியது. இரண்டாவது டப்பாவையும் அவனிடம் கொடுத்தபோது, பையனின் சந்தோஷத்துக்கு ஒரு அளவேயில்லை. இம்முறை அவன் வெளியே ஓடவில்லை; ஒரு பாயின்மேல் உட்கார்ந்தான். அவன் அம்மா அவனுக்கும் சிறிது தேநீர் கொடுத்தாள். கலைஞன் ஒரு பெரிய துண்டு சர்க்கரையை அவனது கண்ணாடி டம்ளருக்குள் போட்டான். சர்க்கரையிலிருந்து கிளம்பிய குமிழிகளால் சிறுவன் வசீகரிக்கப்பட்டான். அதை வெளியே எடுப்பதற்காக அவன் தன் விரலை உள்ளே நுழைத்தான். சூடான தேநீர் அவன் சருமத்தைச் சுட்ட போதிலும் அவன் வேதனைக்குரல் எழுப்பவில்லை. ஏனெனில், இளகிய சர்க்கரையின் சுவை மிக இனிதாக இருந்தது. ஆராய்ச்சியாளன் புன்னகை பூத்தான். மனிதவர்க்கத்தின் கடந்த காலத்திலிருந்து ஒரு காட்சியை அவன் நினைவுகூர்ந்திருக்கவேண்டும்.

அப் பெண் மறுபடியும் கெட்டிலை நிரப்பினுள். தனது குறும்பு மகனைப் பார்த்துச் சந்தோஷமாகப் புன்னகைத்தாள்.

அவள் புன்முறுவல் கலைஞன் பார்வைக்குத் தப்பவில்லை. அது ரொம்பவும் பழக்கம் உள்ளதாகத் தோன்றியது. இரண்டு பேர் ஒரே மாதிரி இருக்கிறபோது, அவர்களது இளமுறுவலும் ஒரே மாதிரித்தான் இருக்கும். முதலில், பெண்ணின் மேலுதடு துடித்தது; பின் அவள் உதடுகள் விரிந்தன; முறுவல் கண்களில் ஒளியேற்றியது.

கலைஞன் தனது சித்திர ஏட்டைப் பைக்குள்ளிருந்து சுண்டி இழுத்தான். பாறைகளும் பிற வரைபடங்களும் நிறைந்த தாள் களைப் புரட்டினன்; பிறகு, நெருப்பருகே அமர்ந்திருந்த பெண்ணை நேர்த்தியாக வரைந்தான்.

அவள் உருவத்தின் புறக்கோடுகள் அவனுக்குப் பழக்க மானவை; அவன் மனக்கண்ணினுல் அவன் அவற்றை அநேக தடவைகள் தீட்டிப் பார்த்திருக்கிருன்.

பையனைத்தவிர வேறும் எவரும் அவனுடைய ஏட்டில் உள்ள சித்திரத்தைப் பார்க்கவில்லை. ரோமத் தொப்பி அணிந்த ஆளுக்குச் சொந்தமான ஏட்டின் வெள்ளைத் தாள்கள், அனைத்தை யும் எடுத்துக் காட்டுகிற நீரூற்றின் தெளிந்த நீரைப்போல், ஒவ்வொரு பொருளையும் பிரதிபலிக்கும் கண்ணுடியாக அக் குழந்தைக்குத் தோன்றியது.

சிறிது நேரத்துக்குப் பிறகு, வழிகாட்டி குதிரைகளைக் கொண்டுவந்தான். கடிவாளங்களை மாட்டி, இடுப்பு வார்களை இறுக்கி, சேணப் பையைப் பிணைத்துவிட்டு, அவன் அந்தப் பெண்ணிடம் விடை பெறுவதற்காகத் திரும்பிச் சென்ருன். அவள் எழுந்து தன் தலைக்குட்டையை வேகமாக நெற்றிக்கு மேலே இழுத்துவிட்டாள். முன்னே நீண்ட அவனது கையை அவள் விரல் நுனிகள் லேசாகத் தொட்டன. மற்ற இருவரும் தங்கள் கைகளை நீட்டினுர்கள். ஆனுல் அவளோ தன் கையைத் தனது நெஞ்சின்மீது அழுத்திக்கொண்டு தலையைத் தாழ்த்தி அவர்களுக்கு விடை கொடுத்தாள்.

கலைஞன் சிறுவனுக்குச் சில வெள்ளிக் காசுகள் கொடுத்து அவன் தலையை வருடினன்.

மூன்று குதிரைகள் காகவபெர்தாவின் பாறைச் சரிவுகள் வழியே கீழிறங்கி, அடியிலுள்ள பள்ளத்தாக்கை நோக்கி நடந்தன. மலைமீது குதிரை சவாரி செய்த மூன்று மனிதர்களும் தனித்தனியே அவரவர் எண்ணங்களில் ஆழ்ந்திருந்தனர்.

வழிநெடுக வயலட் பூக்கள் மலர்ந்திருந்தன. கலேஞன் தன் சேணத்திலிருந்து வளேந்து குனிந்து ஒரு பூவைப் பறித்தான். அதைத் தனது சித்திர ஏட்டில், அடுப்பருகே மெலிந்த பெண் ஒருத்தி இருந்த படம் தீட்டப்பட்ட பக்கத்தில் வைத்துக் கொண்டான்.

குதிரைகளின் குளம்புகளுக்குக் கீழே கற்கள் சிதறின. அவை இடுக்குகளுக்குள்ளே ஓசையிட்டு உருண்டன.

கலேஞன் உள்ளத்தில் ஒரு கடல் புரண்டது. அது தனது கரைகள்மீது முதலில், கறுப்பு வெல்வட் தொப்பி அணிந்த அழகிய தலே ஒன்றை மேலே உயர்த்தும்; பிறகு கனத்த குழல் கற்றைகள் முதுகில் தொங்க நீண்ட ஆடை அணிந்த ஒரு பெண்ணேக் காட்டும்; அப்புறம், ஒரு கோட்டையின் இடிபாடுகளே யும், அதன் சுவர்களினடியில் மலர்ந்திருக்கும் கருஞ்சிவப்புப் பூக்களேயும் பிரதிபலிக்கும்.

* * *

அந்தி மயங்கியது.

ஒரு மனிதன் மலேமேல் உள்ள அதே பாதையில் ஏறிக் கொண்டிருந்தான். அவன் இடுப்பு வாரில் ஒரு அரிவாள் சொருகி யிருந்தது. அவன் களேத்திருந்தான். நாள் முழுவதும் அவன் தினேப்பயிரின் கட்டையான தண்டுகளே அறுத்துக்கொண்டிருந் தான். அவன் முதுகு வலித்தது. ஆகவே அவன் மெதுவாக அடி எடுத்து வைத்தான். தனது கைத்தடியின்மீது அழுத்தமாகச் சாய்ந்து, மூச்சு வாங்குவதற்காக அடிக்கடி நின்ருன். அப்படி நின்றபோதெல்லாம் அவன் முழங்கால்கள் நடுங்கின. கோட்டையில் மறைந்துகிடந்த புதையலேப்பற்றி வழிகாட்டி தெரிவித்தானே, அதே ஆள்தான் அவன். குதிரைக்காரர்கள் சவாரி செய்து கீழே செல்வதை அவன் தன் வயலிலிருந்து தலே நிமிர்ந்து பார்த்திருந்தான். அவர்களுடைய சேணப் பைகளில் தங்கம் நிறைந்திருந்ததாக அவனுக்குத் தோன்றியது. அவனுடைய வெள்ளாடுகளும் செம்மறிகளும் இடிபாடுக ளிடையே மேய்ந்துகொண்டிருந்த வேளேகளில் அவன் உட்கார்ந் திருந்த அதே பாறையின் அடியில் பல நூற்ருண்டுக் காலமாகப் புதைந்துகிடந்த தங்கம் அது. இந்த எண்ணம் அவன் மன அமைதியைக் கெடுத்ததாலோ, அல்லது அவன் வெகுவாகக் களேத்திருந்ததனுலோ, மாலேநேர வேட்டையின்போது பசித்து அலேயும் ஒரு கரடி மாதிரி அவன் எரிச்சல் அடைந்திருந்தான்.

அவன் முதல் குடிசையை அடைந்ததும், அவனே வரவேற்க வெளியே ஓடிவந்த நாயை எட்டி உதைத்தான். தனது இடுப்பு வாரிலிருந்த அரிவாளே எடுத்து ஒரு மூலேயில் வீசி எறிந்தான். பிறகு, தடிக்கம்பை அடுப்பருகே சாத்திவிட்டு அவன் பாய்மீது அமர்ந்தான்.

அடுப்புப் புகைந்துகொண்டிருந்தது. கெட்டில் கொதித்துக் கொண்டிருந்தது. இரண்டு சர்க்கரைக் கட்டிகள் ஒரு திண்டின் மேல் கிடந்தன.

கதிர் அறுப்பவன் தன் காலணிகளேக் கழற்றி, அவற்றிலிருந்த பதர்களே வெளியே அகற்றி முடிப்பதற்குள், அவன் மனேவி வந்து சேர்ந்தாள். அவளுடைய கைவளேகள் ஒலி எழுப்பின. நீண்ட ஆடையின் மடிப்புகள் சரசரத்தன. அவள் மகன், காலி டப்பாக் களேக் கைகளில் அணேத்தவாறு அவள் பாவாடையைப் பற்றி யிருந்தான்.

தன் பொக்கிஷங்களேக் காட்டுவதற்காக அவன் தந்தையிடம் ஓடினன். குதிரையில் வந்தவர்கள் தனது பாய்மீது உட்கார்ந் திருந்தார்கள் என்று அந்த மனிதனுக்கு சட்டென்று புலனுயிற்று. அப்புறம், கருணேயுள்ள அந்நியன் தந்த வெள்ளிக் காசுகளேச் சிறுவன் அவனிடம் காட்டினன்.

அம் மனிதன் பையனே தூரத் தள்ளினன். டப்பாக்களே விசிறி அடித்தான். பையனேப் போலவே அவை உருண்டு புரண்டன. ஆனல், சிறுவன் துள்ளி எழுந்து அவற்றை மறுபடியும் பொறுக்கிக்கொண்டான். அப்புறம் தாயின் பாவாடையில் முகத்தைப் புதைத்து அவன் அழுதான். தந்தை அவனுக்காக வருத்தப்பட்டான். அவன் சிறுவனேக் கூப்பிட்டு, காசுகளேக் காட்டும்படி கேட்டான். பையன், அழுகையுடன் சிரிப்பும் சேர, காசுகளேத் தன் கையில் பொத்திக்கொண்டு அவன் அருகில் வந்தான். வெள்ளேத் தாள்களோடு மினுமினுத்த ஏதோ ஒன்றை அந்நியன் தனது சட்டைப்பையில் வைத்திருந்தான் என்று அவன் தந்தையிடம் சொன்னன். தனக்குக் காசுகள் தந்த மனிதன் அதன் பக்கங்கள் ஒன்றில் தன் அம்மாவின் படத்தை வரைந்து எடுத்துப் போனதையும் கூறினன்.

குடியானவனின் குமுறும் உள்ளத்தில் மின்னல் போல் பொருமை பாய்ந்தது. அவன் பரக்க விழித்தான். முகம் வெளிறியது. அந்தப் பெண் தன் மகனே நோக்கினள். முகம் சிவந்தாள். அவள் கன்னங்களில் செம்மை படிவதை அவள் புருஷன் கவனித்தான். அடுத்த கணம் அவன் எழுந்து நின்முன்.

முடி அடர்ந்த அவன் கை கனத்த தடியைப் பற்றியது; அந்தப் பெண்ணின் முதுகுமேலே அறைந்தது.

அவள் ஆடையின் பொத்தான்கள் கலகலத்தன. நீண்ட குழல்கற்றைகள் குலைந்து சரிந்தன. கெட்டில் சாய்ந்து விழுந்தது. தடியின் நுனி முறிந்து ஒரு மூலையை நோக்கிப் பறந்தது. அவள் அழவேயில்லை; வேதனையால் வெறுமனே நெளிந்தாள். முதுகின் மீது கையை வைத்தபடி அவள் வீட்டை விட்டு வெளியே போனாள். அங்கே போய் அழுவாள். சிறுவன், இன்னும் டப்பாக்களை இறுகப் பற்றிக்கொண்டு அவள் பாவாடை மடிப்புகளில் ஒளிந்தபடி அவள்கூடப் போனான்.

புருஷன், ஓயாது முறுமுறுத்தவாறு தினைத்தோசைகள் சிலவற்றைத் தின்றான். பிறகு ஆட்டுத் தோல் தொப்பியைத் தலைக்குக் கீழே வைத்து, பாயில் நீட்டி நிமிர்ந்தான்.

மீண்டும் காகவபெர்தா மலைச்சிகரத்தின்மீது மவுனம் கவிந்தது. இரவின் கருமை வந்து சூழ்ந்தபோது அடுப்புகளில் நெருப்பு அணைந்துவிட்டது. ஊர் நாய்கள், வனவிலங்குகளிடம் கொண்ட அச்சத்தால் நடுங்கியவாறே, வீடுகளுக்கு வெளிப் புறத்தில் சுருண்டு கிடந்தன. ஆடுகள் புல்லில் படுத்திருந்தன. அந்தப் பெண் ஒரு பாயில் படுத்து, அருகில் கிடந்த குழந்தையை நீண்ட ரோமப் போர்வையால் மூடியிருந்தாள்.

ஒரு மேகம், ஏதோ ராட்சச நத்தையைப்போல், மலை மீதிருந்து குடிசைகளை நோக்கி ஊர்ந்து வந்தது.

கனத்த இருள் பாறைகளையும் பாசியையும் மூடி மறைத்தது. தூங்கும் ஆடுகளின் ரோமத்தின்மீது இரவின் ஈரம் படிந்தது.

வயலட் பூவின் இதழ்கள்மேலே பனி விழுந்தது. சின்ன வண்டு ஒன்று, அதன் மணத்தில் கிறக்கமுற்று, பூக்கிண்ணத்தில் உறங்கிக்கிடந்தது. உலகமே மணம் நிறைந்த வயலட் பூவாக அந்த வண்டுக்குத் தோன்றியது.

வாக்தாங் அஞன்யன்
(1905)

# துரோகி

மாரிக்காலத்தின் ஒரு குளிர்ந்த நாளில் நாங்கள் ஓய்வு பெறுவதற்காக, பெர்சிய எல்லை அருகிலிருந்த மலையடிவாரக் குக்கிராமம் ஒன்றில் தங்கினோம். அங்கே இரவைக் கழித்துவிட்டு மறுநாள் காலையில் மலை ஆடுகளை வேட்டையாடப் போகலாம் என்று எண்ணினோம். நெட்டையாக உயர்ந்திருந்த ஒருவன் வீட்டில் நாங்கள் தங்கினோம். அவன் முகம் கோணலாய், வெளிறியும் வருத்தமாகவும் காணப்பட்டது. அதன் ஒரு பகுதி துண்டில் மூடுண்டிருந்தது.

சுடர்விட்டு எரியும் கணப்பின் முன்னே நான் கிழக்கத்திய முறையில் உட்கார்ந்து, எனக்குப் பிடித்தமான பாணியில் வேட்டையையும் வேட்டைக்காரர்களையும்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன்.

''நான்கூட முன்னொரு காலத்தில் வேட்டைக்காரனாக இருந்தேன். ஆனால் அதை விட்டுவிட்டேன். அது ஒரு அயோக்கியத் தொழில்'' என்று வீட்டுக்காரன் பெருமூச்சுடன் சொன்னான்.

''ஒருவர் வேட்டையாடுவதை நிஜமாகவே விட்டுவிட முடியுமா?'' என்று என் கூட்டாளி கேட்டான்.

அந்த மனிதன் மறுபடியும் நெடுமூச்சு உயிர்த்தான்.

''மிகப் பெரிய பாம்பு ஒன்று என் வேட்டைக்கு முடிவு கட்டி விட்டது.''

''இது சுவாரஸ்யமாக இருக்கிறதே'' என்று நான் நினைத்தேன்.

பேசாமல் இருந்த வீட்டுக்காரன், எங்கள் வற்புறுத்தலுக்கு இணங்கி, இறுதியாக மனமிளகி, பின்கண்ட கதையைச் சொன்னான்: கணப்பருகே அமர்ந்து, தனது ஹுக்காவைப் புகைத்தபடி அவன் சாவதானமாகக் கூறினான்.

''ஒரு காலம் இருந்தது'' என்று அவன் ஆரம்பித்தான். ''அப்போது என் முகம் கோணியிருக்கவில்லை. ஜனங்கள்

பார்வையில் படாதவாறு இப்போது நான் அதை மூடி வைத்திருப்பதுபோல் அப்போது மறைத்திருக்கவில்லை. அக்காலத்தில் நான் இவ்வளவு துயரத்தோடும் வாடித் தளர்ந்தும் இருக்கவில்லை. நானும் உங்களைப்போல் இளமையோடும் அழகாகவும் இருந்தேன். தோளில் துப்பாக்கியைச் சுமந்துகொண்டு பெரிய மாசிஸ் மலைமுகட்டின் சரிவுகளில் வேட்டையாடப் போனேன். வேட்டைதான் உற்சாகமற்ற என் வாழ்க்கையின் ஒரே சந்தோஷமாக இருந்தது. அதே வேட்டைதான் என் முகம் இப்படிப் பயங்கரமாக உருமாறிப்போனதற்கும் காரணமாக இருந்தது.''

அந்த வீட்டுக்காரன் நெட்டைச் சுலைமான் தன் முகத்தை மூடியிருந்த துண்டை அகற்றினான்.

எங்கள் ரோமம் குத்திட்டு நின்றது. அவனுக்கு வலது கன்னமே இல்லை. நெற்றிக்கும் கீழ்த்தாடைக்குமிடையில் ஒரு பெரிய துளை இருந்தது. அதன் வழியே வெள்ளெலும்புகள் கோரமாகத் துருத்திக்கொண்டிருந்தன. ஒரு கண்ணுக்குப் பதிலாகப் பயங்கரமான கறுப்புக்குழி ஒன்று இருந்தது. அந்த மனிதனது தலையின் வலப்புறம் சுமார் இருபது வருஷ காலமாக மக்கி மடிந்திருக்கும் என்று தோன்றியது. எலும்புகளிலிருந்து சதை அழுகி உதிர்ந்துவிட்டது. இடது பக்கம், இன்னும் உயிரோடிருந்தபோதிலும், சாவின் அருகாமையில் பயந்து கலங்கி, நிலையான அச்சத்தின் சாயலைத் தாங்கியிருந்தது.

அவன் கதை மர்மம் நிறைந்தது எனத் தோன்றியது. அதை அறிய நான் ஆவலோடு தவித்தேன்.

சுலைமான் மறுபடியும் தன் தலையை மூடி மறைத்துக்கொண்டு பேசினான்: ''இது எப்படி ஏற்பட்டது, இயற்கை ஏன் என்னை இவ்வளவு கொடூரமாகத் தண்டித்தது என்று இப்போது நான் உங்களுக்குச் சொல்வேன்.

ஒரு சமயம் பனிக்காலத்தின்போது, நான் துப்பாக்கியும் கையுமாய், ஒரு நரியை வழிமறிப்பதற்காக, மாசிஸ் மலை அடிவாரத்தில் உலர்ந்த புல்களினூடே ஓடிக்கொண்டிருந்தேன். என் பார்வை நரிமீதே பதிந்திருந்தது. என் காலின் கீழே என்ன இருந்தது என்றே நான் கவனிக்கவில்லை. குறுகி ஆழமாக இருந்த ஒரு குழியின் அடிமட்டத்தில் போய் விழுந்த பிறகுதான் நான் அதைக் காணமுடிந்தது. அது ஒரு கிணறு மாதிரியே இருந்தது. எனக்கு மேலே உயரத்தில், குழியின் வாய்க்கு மேலாக வளர்ந்து தொங்கிய செடிகளினூடு, நீலவானத்தின் ஒரு துணுக்கை நான் பார்க்க முடிந்தது.

என்னதான் கடுமையாக முயன்றாலும், நான் வெளியேற இயலவில்லை. குழியின் சுவர்கள் மிருதுவான வழுக்குப்பாறையால் அமைந்திருந்தன. கையால் பற்றிக்கொள்ளவோ, காலுக்குத் தாங்கலாக அமையவோ அங்கே எதுவும் இருக்கவில்லை. அடியோடு நம்பிக்கை இழந்து நான் ஒரு கல்மீது உட்கார்ந்தேன். அதுமாதிரிச் சாவது எவ்வளவு மடத்தனமானது என்று எண்ணினேன்.

திடீரென்று ஒரு மூலையில் இரண்டு கண்கள் மினுமினுப்பதை நான் கண்டேன். நெருக்கமாகப் பார்த்தேன். என் தேகம் விறைத்தது. ஒரு பெரிய பாம்பு அங்கே சுருண்டு கிடந்தது. அது என்னையே நிலையாகப் பார்த்துக்கொண்டிருந்தது.

ஆகவே, நான் பயத்தால் செயலிழந்து, ஒரு பாம்புக்கு நேர் எதிராக உட்கார்ந்திருந்தேன். நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்தபடி இருந்தோம். எங்களில் யாரும் அசையத் துணியவில்லை.

அதைச் சுடுவதற்கு முயலலாமா என்ற எண்ணம் எனக்கு எழுந்தது. ஆனால், நான் அதை ஒரேயடியாகக் கொல்லாமல், வெறுமனே காயப்படுத்தினால் என்ன நேரும்? அப்புறம் என் கதி என்ன ஆகும்?

முதலில் பகைமை உணர்வால் பளபளத்த பாம்பின் கண்கள், மெதுமெதுவாக அமைதியுற்றது. அது தனது தட்டையான பெரிய தலையை வெளியே நீட்டி, முன்னே நகர்ந்தது. என் மீதிருந்த பார்வையை அது அகற்றவேயில்லை.

'இப்போது அது என்னை உணவாக விழுங்கப்போகிறது' என்று நான் நினைத்தேன். பயம் என் இதயத்தைக் கவ்வியது. நான் என் துப்பாக்கியை எடுக்க விரும்பினேன். ஆனால் என் கை கீழ்ப்படிய மறுத்தது. இதற்குள் பாம்பு மெதுவாக என் அருகில் வந்து, சுருண்டு, என் கண்களுக்குள் நேரே உற்றுப் பார்த்தபடி தலையை உயர்த்தியது.

நான் ஒரே அடியாக நடுங்கிக்கொண்டிருந்தேன். உண்மைதான். அது பகை உணர்வு எதுவும் கொண்டிருந்ததாகத் தோன்றவில்லை. ஆனாலும் பாம்பு என்ன செய்யும் என்று யாருக்குத் தெரியும்? அலட்சியப்படுத்துவதற்குரிய ஜந்து இல்லையே அது. ஒரு பாம்பின் பார்வையை எதிர்த்து நோக்குவதற்கு ஒருவன் வைரநெஞ்சு பெற்றிருக்கவேண்டும்.

நான் ஆடாது அசையாது இருந்தேன். பாம்பும் அசையவில்லை. அது ஒரு கல்பகாலம் நீடித்ததாகத் தோன்றியது.

சிறிது நேரத்துக்குப் பிறகு அது தன் தலையை என் மடிமீது வைத்தது. என் உடம்பின் கதகதப்பு அந்தப் பிராணிக்குப் பிடித்திருக்கவேண்டும். ஏனெனில், சிறிது சிறிதாக, சுருள் சுருளாக, அது தன் தேகம் முழுவதையும் என் மடியில் சீராக வைத்துக்கொண்டது. எனது மேல்சட்டையின் ஓரத்தால் நான் அதை மூடினேன். அது சூடாகவும் சுகமாகவும் தூக்கத்தில் ஆழ்ந்தது.

இப்போது நான்தான் குளிரால் நடுங்க நேரிட்டது. ஒரு பாம்பின் குளிர்ந்த உடலை உணர்ந்தபடி இருப்பது வெறும் விளையாட்டில்லை.

இருந்தாலும், கொஞ்சம் கொஞ்சமாக நான் அமைதி அடைந்தேன். பாம்புகளின் இயல்புகளை நான் நினைத்துப் பார்த்தேன்—அவற்றுக்கு நாம் தீங்கிழைக்காமல் இருந்தால், அவைகளுக்கு நல்லவர்களாக நடந்தால், அவையும் நமக்குத் தீமை செய்யாமல் நம் நண்பர்களாக இருக்கும். இந்தப் பாம்பு வயது முதிர்ந்து, அனுபவம் மிக்கது என்று தெரிந்தது. நான் இருந்த நிலைமையைக் கண்டு என்னை அப்படியே விட்டுவைக்க அது தீர்மானித்திருக்கவேண்டும்.

'ஐயோ! வல்லமை மிகுந்த இயற்கை எனது துயர வேளையில் எனக்கு ஒரு பாம்பைத் துணைக்கு அனுப்பியிருப்பதாகத் தோன்று கிறது. நல்லது எனக்கு எது கிடைக்கிறதோ அதைக்கொண்டு நான் திருப்தியுறவேண்டும். இனி என்ன ஆகும் என்பதையும் பார்க்கலாமே' என்று எனக்கு நானே கூறிக்கொண்டேன்.

மேலேயிருந்து வந்துகொண்டிருந்த வெளிச்சம் மங்கலாகத் தொடங்கியது. விரைவிலேயே எனது பொந்துக்குள் காரிருள் சூழ்ந்தது.

பாம்பு அமைதியாக உறங்கியது. அதன் குளிர் என் உடலைக் குத்தி உள்ளே பாய்ந்தது. அந்த இரவு எனக்கு ஒரு வருஷம் போல் இருந்தது.

காலையில், பாம்பு கண் விழித்தது. தனது தலையை உயர்த்தி, மீண்டும் என் கண்களுக்குள் வெகுநேரம் பார்த்தது. முடிவில், அது தன் பெரிய வாயைத் திறந்து, முரடான முடிச்சு விழுந்த நாக்கினால் என் கைகளை நக்க ஆரம்பித்தது.

நான் துணிவு பெற்று அதன் தலையையும் கழுத்தையும் தடவிக்கொடுத்தேன். அதன் குளிர்ந்த வழுவழுப்பான சருமத்தைத் தொட்டபோது அருவருப்பினால் என் உடல் நடுங்கிய போதிலும், நான் தடவினேன். எனது அன்பான வருடுதல்

பாம்பின் உள்ளத்தை இளகவைத்ததுபோலும். இப்போது அது மிகுந்த நட்பும் மென்மையும் கலந்த கண்களால் என்னைப் பார்த்தது. அதனால் என் பயம் முழுவதும் கரைந்தது.

இறுதியில், பாம்பு என் பக்கத்திலிருந்து விலகி, எட்ட இருந்த ஒரு மூலைக்கு ஊர்ந்துபோய், வெள்ளைக் கல் ஒன்றை நக்கத் தொடங்கியது. அது என்ன ரகமான கல் என்று எனக்குத் தெரியாது. ஆயினும், அடுத்து வந்த நாட்களிலும் பாம்பு அடிக்கடி அதை நக்கியது.

நடுப்பகலில், பனிக்காலச் சூரியன் அதிக வெப்பத்தோடு இருக்கையில், பாம்பு தன் வாலின்மீது எழுந்து நின்று, சுவர்மீது வழுக்கி ஏறி, பொந்து வழியாக வெளியே பார்த்தது. அது எவ்வளவு நீளமாக இருந்தது என்று அப்போது நான் கண்டறிந்தேன். குழிக்கு மேலே இருந்த சில செடிகளைப் பிடித்தவாறு அது தன்னை வெளியே இழுத்துக்கொண்டது. நான் எழுந்து, வெளியேறுவதற்காக மீண்டும் பல தடவைகள் முயன்றேன். ஆனால் வீணாக என்னை நானே சோர்வுறச் செய்ததுதான் கண்ட பலன். நம்பிக்கை இழந்து நான் பழையபடியும் மூலையில் உட்கார்ந்தேன். என் கண்கள் கலங்கின.

'எக்கச்சக்கமான நிலையில் மாட்டிக்கொண்டேன். இதை விட அபத்தமான சாவு இருக்க முடியுமா?' என்று எண்ணினேன். என் குழந்தைகளை நினைத்தேன். என் நெஞ்சு வலித்தது.

சிறிது நேரத்துக்குப் பிறகு, தலைக்கு மேலே சலசலப்புக் கேட்டது. பாம்பு, வாயில் ஒரு முயலைக் கவ்வியபடி, தலையை பொந்துக்குள் நீட்டுவதைப் பார்த்தேன். அது ஒரு செடியை வாயால் பற்றிக்கொண்டு தன்னைக் கீழே தாழ்த்தியது.

அப்புறம்—நான் பொய் சொன்னால் அல்லா என்னைச் சாகடிப் பாராக—அது முயலை எனக்கு முன்னால் வைத்தது. முயலையும் என்னையும் மாறிமாறிப் பார்த்தவாறு இருந்தது. பாம்பு கோபம் கொண்டு, அங்கு யார் எஜமான் என்று எனக்குக் காட்ட முற்படலாம் என்ற பயத்தால் நான் அந்த முயலைத் தொடுவதற்குத் துணியவில்லை. ஆனால், அது முயலின் பக்கமே வரவில்லை. வெறுமனே முயலைப் பார்த்தது; பிறகு என்னைப் பார்த்தது. எனக்கு எதையோ புரியவைக்க முயல்வதுபோல் அது அவ்வாறு தொடர்ந்து செய்தது.

முடிவில் நான் முயலை எடுக்கத் துணிந்தேன். பாம்பு நகரவில்லை. பள்ளத்தின் தரைமீது காய்ந்த இலைகளும் சுள்ளிகளும் ஏராளமாகக் கிடந்தன. நான் அவற்றில் ஒரு குவியல் சேகரித்து,

தீ மூட்ட விரும்பினேன். ஆனால் அப்படி நான் சுதந்திரமாகச் செயல்படுவதைப் பாம்பு எவ்வாறு மதிக்குமோ என்று தயங்கி அந்த எண்ணத்தைக் கைவிட்டேன்.

மாலையில் மறுபடியும் பாம்பு என்னிடம் ஊர்ந்து வந்தது. அதன் பல சுருள்களை என் மடியில் வைத்து, மீதிப் பகுதியால் என் பாதங்களைச் சுற்றிக்கொண்டு தூக்கத்தில் ஆழ்ந்தது. வெப்ப காலத்தில்கூட, ஆராரட் பள்ளத்தாக்கில் இரவு நேரங்கள் குளிர்ந்துதான் இருக்கும். எனவே, குளுமையான ரத்தம் பெற்ற அந்தப் பிராணிக்கு இரவு நேரங்களில் கதகதப்பு அளிப்பதனால் நான் எவ்வளவு பெரிய சேவை செய்துகொண் டிருந்தேன் என்பது எனக்குத் தெரியும். அதே வேளையில், 'நீ ஒரு பாம்பை வளர்த்தால், தொல்லைகளை எதிர்பார்த்திரு' என்ற பழமொழியையும் நான் எண்ணிப்பார்க்கத் தவறவில்லை. அது தரக்கூடிய தொல்லையின் நினைப்பு என் உடம்பைச் சிலிர்க்க வைத்தது.

மறுநாள் மீண்டும் பாம்பு, வெயில் காயவும் ஏதேனும் உணவு தேடவும் வெளியே சென்றது. முயலை அது விட்டுச் சென்றது. எனது சக்கிமுக்கிக் கல்லும் இரும்பும் என்னிடமே இருந்தன. ஆகவே, நான் நெருப்பு மூட்டினேன். முயலைத் தோல் உரித்து, உப்புச் சேர்த்து, சிறிது வாட்டி எடுத்தேன். முறையான விறகு இல்லை. இலைகளும் சுள்ளிகளும் சரியானபடி எரியவில்லை. அதனால் முயல் மோசமாக அரைவேக்காட்டு நிலையில் இருந்தது. ஆனாலும், பசித்த வேட்டைக்காரன் நெருக்கடி வேளையில் பச்சை மாமிசத்தையும் தின்னக்கூடும். முயல் மிக மிருதுவாக இருந்தது. நான் அதில் பெரும் பகுதியை விரைவில் தின்றுவிட்டேன்.

உடனடியாக, அதை ஏன் சாப்பிட்டோம் என்ற வருத்தம் எனக்கு ஏற்பட்டது. எனக்குப் பெரும் தாகம் உண்டாயிற்று. பித்துப் பிடிக்கக்கூடிய அளவுக்கு அது மிகுந்தது.

மாலையில் பாம்பு திரும்பி வந்தது. இம்முறை அது ஒன்றும் கொண்டுவரவில்லை. நான் பாதி முயலை வைத்திருந்தேன். அதன் குடல்கள், தோல், தலை, கால்கள் ஆகியவற்றை ஒளித்து வைத்திருந்தேன். பாம்பு வந்து சேர்ந்ததும், அதன் நல்லெண்ணத் தைப் பெறலாம் என்ற நினைப்போடு, எஞ்சிய முயல் இறைச்சியை அதனிடம் கொடுத்தேன். பாம்பு அதை ஒரே வாயில் விழுங்கியது. பின்னர் நான் முயல் தோலில் பொதிந்துவைத்த குடல் பகுதி களையும் தலையையும் பாம்பின் முன் வைத்தேன். அவை அனைத்தையும்கூட அது விழுங்கியது. ஒரு ஓநாய் அல்லது நாய் விழுங்குவதுபோல் அல்லாது, மெதுவாக, ஆனால் பசியோடு, உள்ளே இழுத்து இழுத்துத் தின்றது.

அதன் பிறகு நாங்கள் மேலும் சிறந்த நண்பர்கள் ஆனோம். பாம்பு மறுபடியும் மூலையில் இருந்த வெள்ளைப் பாறையை நக்கத் தொடங்கியது. என்னையும் அவ்வாறு செய்ய அழைப்பது போல், அடிக்கடி என்னைப் பார்த்துக்கொண்டே நக்கியது.

நான் அருகில் சென்றேன். அந்தக் கல்லைக் கையில் எடுத்து, பாம்பின் விஷநாக்குப் பட்டிராத பக்கங்களை நக்கினேன். தாகம் அவ்வளவு தூரத்துக்கு என்னை வதைத்தது. அதனால் நான் எதையும் முயன்று பார்க்கத் தயாராக இருந்தேன். பெர்சியப் பாலைவனங்களில் பயணம் போகிற மக்கள் தங்கள் வாய்களில் ஒரு சிறிய உருண்டைக் கூழாங்கல்லைப் போட்டு உறிஞ்சுவார்கள்; அது எச்சிலைச் சுரக்கச்செய்து தாகத்தைத் தணிக்க உதவும் என்று நான் கேள்விப்பட்டிருந்தேன்.

நான் கல்லை நக்கினேன். தாகம் தணிவதை உணர்ந்து வியப்படைந்தேன். அந்தப் பாறுங்கல் ருசி எதுவும் இல்லாதிருந்தது; ஆனாலும் அது தாகத்தைத் தணித்தது. அது எச்சிலைச் சுரக்கச் செய்ததனாலா, அல்லது ஏதோ ஒரு மாயசக்தியை அந்தக் கல் பெற்றிருந்ததனாலா—அது எனக்குத் தெரியாது.

இந்தவிதமாக மேலும் இரண்டு தினங்களை நான் போக்கினேன். அதற்குள்ளாகப் பசியாலும் தாகத்தாலும் நான் வெகுவாகப் பலவீனம் அடைந்தேன். என்னால் எழுந்து நிற்கவும் இயலவில்லை.

ஒரு நாள் காலை பாம்பு என்னைச் சுற்றி வளைத்துக்கொண்டது. அதன் சுருள்களினுள் நான் கட்டுண்டிருந்தேன்.

இது மிகவும் சுகமான நிலை என்று பாம்பு கண்டுகொண்டது. ஏனெனில், இந்நிலையில் அதன் நீண்ட உடல் முழுவதையும் நான் வெம்மைப்படுத்த முடிந்தது. திடீரென உயரே இறக்கைகளின் படபடப்பு ஓசை எழுந்தது. ராஜாளியால் துரத்தப்பட்ட ஒரு புறு எங்கள் குழிக்குள் விழுந்தது. திகைப்படைந்து ஒரு மூலையில் அமர்ந்தது. எங்களைக் கண்டதும் அது பறந்து போக முயன்றது; ஆனால் பாம்பின் சக்தி வாய்ந்த பார்வை அதை அந்த இடத்திலேயே நிலைபெற வைத்தது.

ஒரு பாம்பின் பார்வைக்கு உரிய சக்தியை நான் அறிவேன். பறவை வசமாக மாட்டிக்கொண்டது என்று உறுதியாக உணர்ந்தேன்.

பாம்பு அதன் கண்களையே நோக்கியது. புறு செயல் இழந்து உடல் நடுங்க நின்றது. தனது இரையை வைத்த கண் வாங்காது பார்த்தபடி, பாம்பு அமைதியாக அதை நோக்கி ஊர்ந்தது. அப்பலைப் பறவையைக் கழுத்தில் கவ்வி எடுத்து என்னிடம் கொண்டுதந்தது.

நான் இரண்டு துண்டு இறைச்சியை எடுத்துக்கொண்டு மீதியைப் பாம்பிடம் போட்டேன். அது பறவை முழுவதையும், இறகுகளையும் சேர்த்து விழுங்கியது. நான் பச்சை இறைச்சியில் உப்புச் சேர்த்துத் தின்றேன். பிறகு கல்லை நக்கத் தொடங்கினேன்.

தாகம் அடக்க முடியாதது ஆயிற்று. அதனால் நான் பித்தனானேன். புலம்ப ஆரம்பித்தேன். சுவரைப் பிறாண்டினேன். வெளியே போகவேண்டும் என்று வெறியோடு குதித்தேன். மீண்டும் உள்ளேயே விழுந்தேன். பாம்பு வியப்போடு என்னைக் கவனித்திருந்தது. நான் வெளியேற விரும்பினேன் என்பதை ஒருவாறு அது புரிந்துகொண்டது என்று தோன்றியது. ஏனெனில், அது பொந்தை விட்டு வெளிப்பட்டு, ஒரு செடியைப் பிடித்துக்கொண்டு வாலைக் கீழே தணித்தது.

நான் அதை ஆச்சர்யமாகப் பார்த்தேன். அதன் செய்கையின் பொருள் எனக்குப் புரியவில்லை.

ரொம்ப நேரம் அது அப்படியே இருந்துவிட்டு, பிறகு தன் வாலை மேலே இழுத்தது. தலையைத் தாழ்த்தி, கேள்விக் குறிப்போடு என்னைப் பார்த்தது. பின் மறுபடி முன்போல் கிடந்தது. அதன் வால், யானையின் துதிக்கைபோல், என் தலைக்குமேல் தொங்கியது.

சில பாம்புகள் எவ்வளவு வலிமை மிகுந்தவை என நான் அறிவேன். அதன் வாலை நான் பற்றிக்கொண்டால் அது என்னை மேலே தூக்கிவிடும் என்ற உறுதி எனக்கு இருந்தது. அதே வேளையில் நான் அதைக் காயப்படுத்தி அதற்குக் கோபம் உண்டாக்கிவிடுவேனோ என்ற பயமும் இருந்தது. அவ்வாறானால்...

'அதனால் என்ன? இப்போது இருக்கிற நிலைமையைவிட மோசமாக ஒன்றும் ஆகிவிடாது' என்று எண்ணினேன். பாம்பின் வாலைப் பிடித்தேன். அது பெரும் முயற்சி எடுத்தது. அதன் வால் ஒரு இரும்புத் துண்டுபோல் கடினமாயிற்று. உடனே அது என்னைக் குழிக்குள்ளிருந்து வெளியே தூக்கிவிட்டது.

படுகுழியில் நெடுநாட்கள் இருந்த பிறகு மீண்டும் சூரிய வெளிச்சத்தைப் பார்த்ததும், எனது அன்புக்கு உரிய வயல்களையும், ஆராஜ் நதியின் அலைமோதும் தண்ணீரையும், எங்கள் கிராமத்தின்மீது சுருளும் புகையையும் கண்டபோது, நான் புதிதாகப் பிறந்ததுபோல் உணர்ந்தேன். ஒரு குழந்தை மாதிரி சந்தோஷப்பட்டேன்.

நான் என்னைக் காப்பாற்றிய பாம்பின் கழுத்தைக் கட்டிக் கொண்டு விம்மி அழத்தொடங்கினேன். என் தலை சுற்றியது.

மூர்ச்சித்து விழும் நிலையில் நான் இருந்தேன். என் கால்கள் என்னைச் சுமக்க முடியாது தள்ளாடின. நான் தடுமாற்றத்தோடு முன்னேறினேன். பாம்பு தன் தலையைக் காற்றில் உயர்த்தியபடி, புல் சரசரக்க, என் பின்னால் ஊர்ந்து வந்தது.

வழியில் நாங்கள் ஒரு முயலைப் பார்த்தோம். அதை நான் சுட்டேன். பாம்பு துள்ளியது. அதன் கண்கள் கொடூரமாக நோக்கின. ஆனாலும் நான் முயலை எடுத்துத் தனக்கு முன்னே வைத்ததைக் கண்டதும் அது அமைதி அடைந்தது. பாம்பு முயல் முழுவதையும் விழுங்கியது. அது பாம்பினுள் மெதுவாக நகர்ந்து, அதன் உடலை உப்பவைத்ததை நான் கவனித்தேன்.

ஆகவே, நட்பு உணர்வோடு நாங்கள் கிராமத்தை அடைந்தோம். இருள் பரவிக்கொண்டிருந்தது. மேய்ச்சலிலிருந்து திரும்பிவந்த பசுக்கள் கத்தின. கூரைகளின்மேலே புகை நின்றது. நாய்கள் குரைத்தன. பாம்பு அதற்கும் அப்பால் முன்னே போகாமல் பின் தங்கியது. நான் ஊருக்குள் நுழைந்ததும் திரும்பிப் பார்த்தேன். பாம்பு உலர்ந்த புல்லில் கிடந்து தன் கண்களால் என்னைப் பின்பற்றியது.

என் மனைவியும் மக்களும் பெரிதாகப் பிரலாபித்து என்னை வரவேற்றனர். அனுதாபத்துக்கு உரிய அவர்கள் மறுபடியும் என்னைக் காணமுடியும் என்ற நம்பிக்கையை இழந்துவிட்டிருந்தனர். குர்துக்கள் மாசிஸ் மலையில் என்னைப் பிடித்துக் கொலை செய்திருக்கவேண்டும் என்றே அனைவரும் எண்ணினர்.

கிராமத்தில் உள்ள மக்கள் என் கதையைக் கேட்ட பிறகு, பாம்புகளைப்பற்றி நல்லவிதமாக எண்ணினர்.

ஒரு வருஷம் சென்றது.

அன்று கோடையின் வெப்பமான நாள். நாய்கள் தங்கள் நாக்குகள் வெளியே தொங்க, தொழுவங்களில் பதுங்கிக் கிடந்தன. கோழிகள் நிழல் அடர்ந்த மூலைகளில் பாதுகாப்பாக ஒதுங்கி ஒண்டியிருந்தன. எருமைகள் சேற்றுக் குட்டைகளில் தங்கள் கழுத்து வரை அமிழ்ந்திருந்தன.

திடீரென்று பரபரப்பு ஓசைகளை நான் கேட்டேன். எங்கள் ஜனங்கள் எல்லோரும், பெரியவர்களும் சிறியவர்களும் தெருவுக்கு வந்து, சந்நியாசிகள்போல் உடை அணிந்திருந்த நான்கு அந்நியர்களைப் பின் தொடர்ந்து போவதைப் பார்த்தேன். ஒருவன் குழல் ஊதிக்கொண்டிருந்தான். இன்னொருவன் ஒரு பறையை அடித்து முழக்கினான். மற்ற இருவரும் வர்ண விசித்திரங்கள் நிறைந்த சில பெட்டிகளையும் பாம்புகள் இருந்த ஒரு இரும்புக் கூண்டையும் இழுத்துச் சென்றார்கள்.

ஊர் சதுக்கத்தை அடைந்ததும் அவர்கள் தங்கள் சுமைகளைக் கீழே வைத்தார்கள்; பெட்டிகளையும் கூண்டையும் திறந்தார்கள். ஒரு கம்பளத்தைப் பரப்பி, கூண்டை அதன்மீது கவிழ்த்தார்கள். சமுக்காளத்தில் ஏகப்பட்ட பாம்புகள் ஒன்றன்மீது ஒன்று ஏறி நெளிவதைப் பார்த்ததும் பெண்கள் கூச்சலிட்டனர்; குழந்தைகள் உற்சாகத்தோடு கத்தின.

அந்தப் பாம்புகளை எல்லாம் பார்க்கவேண்டுமே! ஒரு பாறைத்துண்டு போன்ற நிறமுடைய ஒரு வகைப் பாம்பு; பிரமாண்டமான உடலும் தட்டையான பெரிய தலையும் கொண்ட குர்ஜாப் பாம்பு; அகன்ற வாய் உள்ள கன்னங்கரிய விஷப்பாம்பு; பிரகாசமான ஷக்மார்; முடிக்கொம்புப் பாம்பு; மற்றும் அநேக வகைகள்.

சந்நியாசிகள் குழல் ஊதிக் கொட்டு அடித்தார்கள். பாம்புகள் தங்கள் வால்களில் எழுந்து நின்று நாட்டியம் ஆடுவது போல் வேடிக்கையாக அசைந்து நெளிந்தன.

மற்ெருரு சந்நியாசி தனது அச்சமின்மையை விளம்பரப் படுத்திக்கொண்டிருந்தான். பாம்புகளில் மிகுந்த விஷமுள்ள ஒன்றை—ஒரு விரியனை—எடுத்து, அதைத் தன் மார்பின்மேல் அவன் போட்டுக்கொண்டான்; பாம்பு சந்நியாசியின் உடம்பில் ஊர்ந்து, சட்டைக்குள் புகுந்து, கால்சட்டையினுள் மறைந்து, பிறகு திடீரென்று உடுப்பில் காணப்பட்ட ஒரு ஓட்டையின் வழியாக, அல்லது திறந்த கழுத்துப்பட்டை வழியாக எட்டிப் பார்க்கும்.

அப்புறம் அவன் வேறொரு பாம்பை எடுத்து, அதன் தலையைத் தன் வாய்க்குள் வைத்தான். பெண்கள் அலறினர். சந்நியாசியோ அமைதியாகச் சிரித்து, தனது தாடியைத் தடவினன். குடியானவர்களில் ஒருவன் சொன்னன்:

'இதில் எல்லாம் ஒன்றுமே இல்லை. அதன் பல்லை அவர்கள் பிடுங்கிவிட்டார்கள். அதற்கு இப்போது விஷமே இல்லை. எனது கிழத் தாத்தாகூட இப்படிப்பட்ட ஒரு பாம்பைத் தன் வாய்க்குள் திணிப்பதற்குத் தயங்கமாட்டார்.'

'மாட்டாரா? நல்லது. இதுக்கு விஷம் கிடையாது என்று நீ எண்ணினல், இங்கே ஒரு கோழிக்குஞ்சு கொண்டுவா' என்று சந்நியாசி கூறினன்.

அந்த விவசாயி தன் பேச்சை வாபஸ் பெறத் தயாராக இல்லை. அவன் ஒரு சேவலைக் கொண்டுவந்து, பாம்பின் முன்னல் வைத்தான்.

பாம்பு அச்சுறுத்தும் பார்வையோடு தன் கழுத்தை முன்னே நீட்டியது. அதன் கண்கள் சிவப்பாய் ஒளிர, அது சீறியது. முன்னால் பாய்ந்து சேவலின் கொண்டையில் கடித்தது. ஒரு சிறு துளி ரத்தம் கீழே வடிந்தது. கொண்டையில் லேசாக ஒரு கீறல் மட்டுமே தென்பட்டது. ஆனால், விஷம் மிக வலுவானதாக இருந்ததால், சேவல் உடல் வீங்கி எங்கள் கண் முன்னாலேயே செத்தது.

'இதை ஆழக் குழிதோண்டிப் புதையுங்கள். நாய்கள் அதைத் தொட்டுவிடக்கூடாது' என்று சொல்லி, சந்நியாசி பாம்புகளைச் சேகரம் செய்தான். பிறகு கூட்டத்தை நோக்கி அவன் சொன்னான் :

'நல்லது, மக்களே! இங்கே யார் வீட்டிலாவது பாம்புகள் தொல்லை தருகிறதா? நாங்கள் அவற்றை நொடிப்பொழுதில் அகற்றிவிடுவோம்.'

'ஏன், அவை எங்களுக்குத் தொல்லையாக இல்லை. ஒரு பாம்பு எங்களின் உபகாரியாக்கும்' என்று கிழவர்களில் ஒருவர் சொன்னார்.

'ஏவாளைக் கெடுத்த பாம்பு என்று முதல் மனிதனின் நண்பன் ஆயிற்று?' என்று சந்நியாசி பரிகாசக் குரலில் கேட்டான்.

'எங்கள் பக்கத்து வீட்டு நெட்டைச் சுலைமான் உயிரை ஒரு பாம்பு காப்பாற்றிய நாள் முதல்தான்' என்று என் நண்பன் அஸ்க்யார் கூறினான்.

'ஓ, அவ்வளவு புத்திசாலியான பாம்புகள் உங்களிடம் இருக்கின்றனவா?'

அவர்கள் என் கதையை விவரமாகச் சந்நியாசிக்குச் சொன்னார்கள். அவன் கண்கள் பேராசையால் ஒளிர்ந்தன. ஆட்டின் ஈரல் துண்டைக் கண்டுவிட்ட ஒரு பூனை மாதிரி அவன் விழித்தான்.

'சுலைமான், என் நண்பனே! அந்தப் பாம்பை என்னிடம் தா. நான் அதைத் திபிலிசுக்கும், பாகு நகரத்துக்கும் எடுத்துப் போவேன். அதைப் பார்த்து மக்கள் வியப்படைவார்கள்' என்று அவன் சொன்னான்.

'அப்படிச் செய்வது யோக்கியமான விஷயம் ஆகாது. அதற்கு நான் ஒருபோதும் சம்மதியேன்' என்று நான் பதிலளித்தேன்.

'சுலைமான், என் நண்பனே! அல்லா சாட்சி. இதில் அயோக்கியத்தனம் என்ன இருக்கிறது? நான் அதைப் பட்டிலும்

வெல்வட்டிலும் வைத்துக் காப்பாற்றுவேன். ருசிகரமான இனிப்புப் பண்டங்கள் கொடுத்து வளர்ப்பேன். இந்தக் காட்டுச் செடிகளிடையே வசிக்கையில் அது சதா குளிராலும் பசியாலும் சிரமப்படும். என்னிடம் இருந்தால் அது கதகதப்போடு சுகமாக வாழும். சும்மா எங்களுக்கு அந்த இடத்தைக் காட்டு, சுலேமான். நாங்களே அதை எடுத்துக்கொள்வோம். அதற்காக நான் உனக்குப் பத்து துமான் நாணயங்கள் தருவேன்.'

'சந்நியாசி, நீ தீர்க்கதரிசியின் பக்தன். இரக்கம் பற்றி உபதேசித்தவாறு நீ சுற்றித் திரிகிறுய். ஆனுலும் இங்கே நீ தீய காரியம் செய்யும்படி என்னைக் கட்டாயப்படுத்துகிறுய்' என்று நான் கூறினேன். 'ஆ, என் பையா, பத்து துமான் நாணயங்களைக் கொண்டு ஒரு மாடு வாங்கலாமே' என்று எனக்குள் நினைத்துக்கொண்டேன்.

'உன் பாபத்தை மன்னிக்கும்படி நான் தீர்க்கதரிசியிடம் வேண்டுவேன், சுலேமான். நீ சும்மா எனக்கு அந்த இடத்தைக் காட்டு.'

சந்நியாசி கீழே ஒரு கம்பளத்தை விரித்து, முழந்தாளிட்டு, கிழக்கு நோக்கித் திரும்பி இருந்து, குனிந்து வணங்கினுன். தன் கைகளை உயர்த்தி, முணுமுணுக்க ஆரம்பித்தான்.

அதனுல் ஊக்கம் பெற்ற நான், என் நண்பனை, என் உயிரைக் காப்பாற்றிய பாம்பை, பதினைந்து துமான்களுக்கு விற்க இசைந்தேன். மிக இழிந்த பிறவியானேன்.

சந்நியாசிகள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். என் பாம்பின் வீடான குழியை நோக்கி நாங்கள் எல்லோரும் போனேம்.

அந்த இடத்தை நெருங்க நெருங்க, என் மனசாட்சி என்னை அதிகம் உறுத்தியது. நாசமாய்ப் போகிற இந்த தரித்திரம்—அது மனிதனுக்குச் செய்கிற தீங்குகள்—அவனை ஒரு திருடனுக, கொலைகாரனுக, அல்லது ஒரு துரோகியாக ஆக்கிவிடுகிறதே.

'பரவாயில்லை. பார்க்கப்போனுல் அது ஒரு ஊமைப் பிராணிதானே. காட்டிக்கொடுப்பதுபற்றி அதற்கு என்ன புரியப்போகிறது? அது ஒரு மனிதனு என்ன! அதன் கண்களை நேரே பார்க்க நான் வெட்கப்படவேண்டியதில்லையே' என்று என்னை நானே தேற்றிக்கொள்ள முயன்றேன்.

முடிவாக நாங்கள் அந்தக் குழியை அடைந்தோம். நான் ஒருபுறமாக ஒதுங்கி நின்றேன். பாம்பு பொந்தில்தான் இருந்தது.

சந்நியாசிகளில் ஒருவன் பெர்சியப் பட்டுச் சமுக்காளம் ஒன்றைக் குழிக்குள் தொங்கவிட்டான். சூரிய ஒளியில் ஆயிரம் வர்ணங்களில் அது சுடர்வீசி தகதகத்தது. பாம்பு அந்தச் சமுக்காளத்தைப் பார்த்துத் திடுக்கிட்டுத் திகைத்தது. நான் புதர்களிலிருந்து எட்டிப் பார்த்தேன். மன்னர் என் சொந்தத் தம்பியையே இராணுவத்திற்காக இழுத்துச் செல்வது போன்ற உணர்வினுல் என் இதயம் வேதனையோடு துடித்தது.

சந்நியாசி, மென்மையான இனிய குரலில், தாலாட்டும் அரபுப் பாடல் ஒன்றைப் பாடத் தொடங்கினுன். ஒரு பறையில் லேசாகத் தாளம் கொட்டினுன். மணிகள் கிண்கிணிக்கும்படி அதை ஆட்டினுன். பாம்பு தன் சுருள்களுக்கு மேலாகத் தலையை உயர்த்தி, ஆச்சர்யத்தோடு நோக்கியது. ஆயினும், அந்த இசைக்கு அதை அமைதிப்படுத்தும் ஒரு சக்தி இருந்ததை நான் கவனித்தேன்.

சந்நியாசி தன் சட்டைப் பையிலிருந்து பிரகாசமான ஒரு பொருளை எடுத்து பாம்பின் முன்னே காட்டினுன். அதே வேளையில் குழலில் ஒரு இனிய ராகத்தை இசைக்கலானுன்.

ஓ, இன்னிசையின் சக்திதான் என்ன! இன்னிசை எவரையும் பைத்தியமாக்கிவிடும். உலகத்தின் மிக உயர்ந்த அழகியைக்கூட ரத்த வெறிபிடித்த ஒரு ஓநாயாக, அல்லது கொடிய பாம்பாக, அது மாற்றிவிடும்.

இசைக்கு இணங்கி அந்தப் பாம்பு பல வர்ணச் சமுக்காளத்தின்மீதேறி மேலே வந்து, பாட்டுப் பாடிய சந்நியாசியின் மடியில் தலைவைத்துக் கிடந்தது.

இப்படியாக அந்தப் பாம்பு ஏமாற்றப்பட்டு, ஒரு கூண்டுக்குள் அடைக்கப்பட்டது. என்ன நடக்கிறது என்று பார்க்காமல் இருப்பதற்காக நான் சிறிது தூரம் விலகிச் சென்றேன். நான் ஒரு இழிந்த செயலைச் செய்துவிட்டேன். எனக்காக நானே வெட்கினேன்.

பாம்பு பத்திரமாகக் கூண்டில் அடையுண்டு, கூண்டின் மூடி இறுகச் சாத்தப்பட்டதும், சந்நியாசி என்னிடம் வந்து, பேசிய பணத்தை எனக்குத் தந்தான். ‘சுலைமான், என் நண்பனே! நீ இதை நல்ல முறையில் பயன்படுத்துவாய் என்று நம்புகிறேன். நீ எனக்குப் பெரும் பொக்கிஷம் ஒன்றைக் கொடுத்திருக்கிருய்’ என்ருன்.

அந்தப் பணம், நெருப்புபோல், என் உள்ளங்கையைச் சுட்டது.

கூண்டுக்கு ஒவ்வொரு புறமும் ஒரு கைப்பிடி இருந்தது. அதைப் பற்றித் தூக்கி, தங்கள் கொள்ளைப் பொருளை அவர்கள் உற்சாகமாகச் சுமந்து சென்றார்கள். அவர்கள் என்னைக் கடந்த போது பாம்பு சட்டென்று தன் தலையை உயர்த்தியது. என்னை வன்மத்தோடு ஒரு பார்வை பார்த்தது. சீறிக்கொண்டு, விடுபட்டு வெளியேற முயற்சிப்பதுபோல் அது கூண்டின் இரும்புக் கம்பிகள்மீது உடலால் மோதியது.

அது என்னை அடையாளம் கண்டது. அந்தக் கொடிய பிராணி என்னைக் கண்டுகொண்டது. நான் அதைக் காட்டிக் கொடுத்தேன் என்று அது புரிந்துகொண்டது. நான், முன்பு அந்தப் புறு செயலிழந்து நின்றதுபோல், அதே இடத்தில் அசையாது நின்றேன். பாம்பு திரும்பவும் என்மீது ஒரு உக்கிரப் பார்வை வீசியது. தன் தலையைக் கம்பிகளோடு அழுத்தி, மஞ்சளும் பச்சையும் கலந்த விசித்திரமான எச்சிலை என் முகத்தை நோக்கித் துப்பியது. என் வலது கன்னத்தில் இருந்த ஒரு சிறிய புண்ணில் வந்து பட்டது அது.

'ஏ, கேவலமான நாயே! உனக்காக நான் கவலைப் பட்டேனே. உன்னை நன்கு கவனித்து, நரகக் குழியிலிருந்து சூரிய வெளிச்சத்துக்கு இட்டு வந்தேனே. பதினைந்து துமான் களுக்கு நீ என்னை விற்கவேண்டும் என்பதற்காகத்தானு நான் உன் உயிரைக் காப்பாற்றினேன்? அசிங்கம் பிடித்த சின்னப் பயலே; உன் துரோக நெஞ்சின்மீது நான் காறித் துப்புகிறேன்' என்று பாம்பு சொல்ல விரும்பியதுபோல் அது அமைந்தது.

நான் பயந்து கூச்சலிட்டு மயங்கி விழுந்தேன். அப்புறம் என்ன நடந்தது என்றே எனக்கு நினைவில்லை.

இதற்குப் பிறகு பல மாதங்கள் நான் அரைப் பைத்தியமாக இருந்தேன். பகலும் இரவும் அந்தப் பாம்பு என் கண்முன் நின்றது.

அது தன் பற்களிலிருந்து உறிஞ்சிய விஷம் அந்த எச்சிலில் கலந்திருந்தது. என் முகத்திலிருந்த புண்ணுக்குள் புகுந்து அந்த விஷம் முகத்தைத் தீய்த்து, அதைத் தின்றது. முடிவில், என் கன்னம் அழுகத் தொடங்கியது. சதை துண்டு துண்டாக உதிர்ந்தது. நான் இப்போது இருக்கிற நிலைமை இப்படித்தான் ஏற்பட்டது.''

நெட்டைச் சுலைமான் தனது ஹுக்காவை உறிஞ்சினுன். கணப்பில் கிடந்த கரித்துண்டுகளைக் கிளறினுன். ஒரு பெரு மூச்சுடன் சொன்னுன் :

''ஆமாம், சகோதர வேட்டைக்காரர்களே! இதுதான் என் கதை.''

ஸெரோ கான்ஸாடியன்
*(1915)*

# வெள்ளை ஆட்டுக்குட்டி

கிழத் தோட்டக்காரன் நவசார்த் குளித்து ஓய்வெடுப்பதற்காக முந்திரி மரத்தடியில் பொங்கிப் பெருகிய நீரூற்றுக்குப் போனான். வெயிலில் கருகிய தன் முகத்தின்மீது குளிர்ந்த நீர் படட்டும் என்று அவன் குனிந்தானோ இல்லையோ, அவனது குழுத் தலைவன், ''ஏ நவசார்த்! சீக்கிரம் வா! உன் மகன் அர்ஷாக் வந்திருக்கிறான்!'' என்று அவனை அழைக்கும் குரலைக் கேட்டான்.

''என்ன?'' என்று கிழவன் பரபரப்புடன் கத்தினான். பிறகு சிரமத்தோடு நிமிர்ந்தான். தனது வயதுக்கு மீறிய வேகத்துடன் அவன் அந்த ஆள் நின்ற இடத்துக்கு விரைவாகத் திரும்பினான். ''நீ என்ன சொன்னாய்? அவன் எப்போது வந்தான்? எங்கே இருக்கிறான்?''

''அவன் கிராமத்தில் இருக்கிறான். நானே அவனைப் பார்த்தேன். நீல ஸெடான் காரை அவன் ஊர் வழியாக ஓட்டிச் சென்றான். நீ அதிர்ஷ்டசாலிதான் நவசார்த்; ஆண்டவன் உனக்கு ஒரு அருமையான மகனை அருள்புரிந்திருக்கிறார்!''

சூரியன் முன்னைவிடப் பன்மடங்குப் பிரகாசமாக ஒளிரத் தொடங்கியது. நவசார்த் காற்றில் மிதப்பதுபோல் உணர்ந்தான். பரவசத்தினால் அவன் இதயம் துடித்தது.

நவசார்த் ஊரின் பக்கமாகப் பார்த்தபோது எதையோ சிந்தித்ததாகத் தோன்றியது. ஆனால் உடனே அவன் வேகமாகத் திரும்பி மதுவடிக்கும் இடம் நோக்கி ஓடினான்.

அவன் பத்து வருஷங்களாக அர்ஷாக்கைப் பார்க்கவில்லை. ஒவ்வொரு வருஷமும் அவன் நம்பிக்கையோடு ரஸ்தாவை நோக்குவான்; காத்திருப்பான். அவன் பொறுமையோடு காத்திருந்தான். இப்போது, நெடுங்காலத்துக்குப் பிறகு, அவன் மகனைப் பார்ப்பான். அர்ஷாக் நல்ல சமயத்தில் வந்திருக்கிறான்; பழத்தோட்டங்களில் கனிவகைகள் நன்கு பழுத்துள்ளன. அவன் இன்னும் திடமாகவும் உற்சாகமாகவும் இருந்தான்.

நவசார்துக்கு அந்த ஊரில் உறவினர் எவரும் உயிரோடில்லே. அவன் வாழ்க்கை மகிழ்வு நிரம்பியதாக அமையவில்லே. அவனுக்குச் சொந்தமாகக் குழந்தை எதுவும் கிடையாது. அவன் மனைவி பல வருஷங்களுக்கு முன் இறந்துவிட்டாள். அவனுடைய சகோதரனும் மைத்துனியும் யுத்தத்தின்போது பட்டினியால் செத்துப்போனுர்கள். அவர்களின் ஒரே மகன் அர்ஷாக் மட்டும் எஞ்சியிருந்தான்.

ஓடை ஓரத்தில் தரைமீது கிடந்த மண்வெட்டியை எடுத்து நவசார்த் தோண்ட ஆரம்பித்தான். மண் ஈரமாக, திராட்சை ரச வாடையுடன் இருந்தது. அவன் பத்து வருஷங்களுக்கு முன்பு புதைத்து வைத்த ஒரு சிறு ஜாடியை வெளியே எடுத்தான். அந்த மண்பாண்டத்தின் குளிர்ந்த ஸ்பரிசம் அவனுக்கு மகிழ்வளித்தது. திராட்சை மதுவின் நுண்மையான நறு மணத்தை நுகர்ந்தபடி அவன் புன்னகைத்தான். ''அது சிங்கப்பாலாக மாறிவிட்டது'' என்று தானே சொல்லிக் கொண்டான். பிறகு, ஆற்றின் கரை அருகே நின்ற பெரிய மல்பெரி மரத்தின் கீழே தர்பூசணிப் பழங்களில் மிகவும் பெரிதாக இருந்தது நன்கு முற்றியிருந்தது என்பதை அவன் நினேவு கூர்ந்தான். அதன் காம்பை நறுக்கி, அவன் தனது நீண்ட சட்டையின் விளிம்பினுல், பழத்தின் மீது படிந்திருந்த வெண்ணிறத் தூசியைத் துடைத்தான். அதன் மினுமினுப்பான கோடுகளே வியந்தான்.

''என் அர்ஷாக்கிற்கு தர்பூசணிப் பழங்கள் பிடிக்கும்'' என்று அவன் முணுமுணுத்தான். கீழே முழந்தாளிட்டு அமர்ந்து, பழத்தைச் சுற்றிக் கைகளே வைத்து, கடுமையாக அழுத்தினுன். அப்போது காதை அதன்மீது பதித்திருந்தான். பழத்திலிருந்து எழுந்த ஓசையைக் கேட்டு அவன் திருப்தியோடு தலேயசைத்தான். அப்புறம் அவன் அத்திமரத்துக்குப் போனுன். சிரமத்தோடு அதன்மீதேறி, தேன் என இனித்த பழங்களே, அங்கும் இங்கும் பறவைகள் கொத்தியிருந்தவற்றைப் பறிக்க லானுன். மிகச் சிறந்த பழங்களாகத் தேடிப்பறித்து அவற்றைப் பிரகாசமான ஒரு கூடையில் மெதுவாகச் சேர்த்துவைத்தான்.

பின்னர் நவசார்த் கரை வழியே, ஆறு மாதமேயான வெள்ளேநிற ஆட்டுக்குட்டி ஒன்று மேய்ந்துகொண்டிருந்த இடத்துக்குப் போனுன். அந்தக் குட்டியை அவன் விசேஷமான ஒரு சந்தர்ப்பத்துக்காகக் காப்பாற்றிவந்தான்.

''அர்ஷாக் வீட்டுக்கு வந்துவிட்டான். அந்த நாளேக் காண்பதற்கு எனக்குக் கொடுத்துவைத்திருக்கிறது'' என்று

நவசார்த் தனக்குத் தானே கூறிக்கொண்டு, ஆட்டுக்குட்டியை அவிழ்த்தான். அது பலமாகக் கத்தியது.

''நாம் போகலாம், பயலே. வா. அர்ஷாக் வீட்டுக்கு வந்திருக்கிறான்'' என்று நவசார்த் சொன்னான்.

கிராமத்துக்குச் செல்லும் செங்குத்தான பாதையில் அவன் ஏறி நடந்தான். கனத்த கூடை அவன் தோள்களை அழுத்தியது. மது ஜாடியில் தெறித்தது. எளிய சாதுவான ஆட்டுக்குட்டி சில சமயம் அவனுக்கு முன்னே ஓடியது, அல்லது அவனுக்குப் பின்னால் நடந்தது.

வழியில் அவன் சந்தித்த ஆட்கள், ''பகல் நேரத்தில் இவ்வளவு சீக்கிரமாக எங்கே போகிறாய்?'' என்று கேட்டார்கள்.

''அர்ஷாக் பார்த்துப் போவதற்காக வீட்டுக்கு வந்திருக்கிறான்'' என்று கிழவன் பெருமையோடு பதிலளித்தான்.

வழியில் ஒவ்வொரு மரமும் செடியும், ஒவ்வொரு கல்லும் ஊற்றும் அர்ஷாக்கின் குழந்தைப் பருவத்தை அவனுக்கு நினைவூட்டின. அநேக தடவைகள் அவன் குழந்தையை முதுகில் சுமந்துகொண்டு அந்தச் செங்குத்தான பாதையில் சென்றிருக்கிறான். ஓய்வு பெறுவதற்காக அவன் இந்தக் கல்மீது அமர்வான். நவசார்த் ஒரு பீயர் பழத்தை அர்ஷாக்கிடம் கொடுத்து, அவனது மூக்கை தன் நீண்ட சட்டையின் விளிம்பால் துடைப்பான். அர்ஷாக் நீர் குடிக்க ஆசைப்பட்ட ஊற்று அதோ இருந்தது. நவசார்த் தன் கைகளில் நீரை அள்ளுவான். அவன் கைகளிலிருந்து அர்ஷாக் குடிப்பான். சிறிய பழத் தோட்டம் இதோ இருந்தது. மரங்கள் இன்னும் வளமாகக் கனிகள் தந்தன. பனிக்காலத்திலும் வெகுநாட்கள் பசுமையாக நின்றன. அர்ஷாக் ஏழு வயதாக இருந்தபோது, அந்தச் செர்ரி மரத்திலிருந்து கீழே விழுந்து காலை ஒடித்துக்கொண்டான். நவசார்த் அவனைச் சுமந்து, தூரத்துக் குடியிருப்பில் வசித்த டாக்டரிடம் கொண்டுபோனான்.

அப்புறம், அவன் அந்தப் பையனைக் கல்வி கற்பதற்காக அனுப்பி வைத்ததும், நகரவாழ்வுக்குத் தக்கபடி அர்ஷாக் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் விற்றுவிட்ட எல்லாப் பொருள்களையும்பற்றி நவசார்த் எண்ணினான். அது ஒரு நீண்ட பட்டியல் ஆகும். ஆனால் அர்ஷாக் யுனிவர்சிட்டியில் கற்றுத் தேர்ந்தான். அதன் பிறகு மாஸ்கோவில் மேல்படிப்புப் படித்தான். உலகத்தில் உயர்ந்த நிலையை அடைந்தான்.

தலைநகரில் அர்ஷாக் செய்துகொண்டிருக்கும் மிக முக்கியமான வேலைபற்றியும், அவனுடைய பெரிய காரைப்பற்றியும்,

மாஸ்கோவில் ரொம்பப் பெரிய வீட்டில் அவன் வசித்தான் என்பதையும் நவசார்த் தன் ஊர்க்காரர்களிடம் அடிக்கடி சொல்வான்.

கிழவன் கிராமத்தை அடைவதற்கு அவசரப்பட்டான். மது ஜாடியில் தெறித்தது. எளிமையான, பயந்த ஆட்டுக்குட்டி அவனைப் பின்தொடர்ந்தது.

அவன் முடிவில் வீடு சேர்ந்தான். ஆனால் அர்ஷாக்கின் காரை வெளியே காணவில்லை. ''அவன் ஏன் நேரே இங்கு ஓட்டி வரவில்லை?'' என்று நவசார்த் ஆச்சர்யப்பட்டான். ''ஆ, என்ன பேச்சு இது! இங்கே கற்கள் ரொம்பவும் கூர்மையாக இருக்கின்றன. டயர்கள் கெட்டுப்போகும் என்று அவன் பயந்திருப்பான். அவன் வீடு வரை காரை ஓட்டி வராததும் நல்லது தான்.''

அவனது ஒற்றை மாடித் தட்டுக்கட்டு வீடு, ஒரு மெத்தையும் மண்தரையும் கொண்டு, கழுகின் கூடுபோல் மலைச்சரிவில் ஒட்டியிருந்தது. அநேக வீடுகளில் அதுவும் ஒன்று.

நவசார்த் முற்றத்தில் புகுந்து, ஜாடியையும் கூடையையும் தரையில் வைத்தான். ஆட்டிக்குட்டிக்கு ஒரு கைப் புல் வீசிவிட்டு சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் வாழ்விலேயே முதல் முறையாக அந்த வீடு பரிதாபத்துக்கு உரியதாகவும் தளர்ந்து குன்றியும் காணப்பட்டது அவனுக்கு.

''நல்லது. இது அர்ஷாக்கின் வீடுதானே? இங்குதான் அவன் வளர்ந்தான். தன் சொந்த வீட்டைப் பார்த்து அவன் வெட்கப் படமாட்டான்'' என்று அவன் தனக்கு ஆறுதலாகச் சொல்லிக் கொண்டான். முற்றத்தைச் சுத்தம் செய்யத் தொடங்கினான்.

''வாழ்த்துகள், நவசார்த். அர்ஷாக் வந்திருக்கிறானே.'' பக்கத்து வீட்டுக் கிழவிதான் வேலிக்கு மேலாக எட்டிப் பார்த்தபடி பேசினாள்.

நவசார்த் சந்தோஷப் பெருக்கினால் சிவந்தான். ''நன்றி. உன்னைப் பிரிந்து ஊர் சுற்றுகிறவனும் திரும்பிவந்து சேரட்டும்.''

''நான் அர்ஷாக்கைப் பார்த்தேன்.''

''அவன் இங்கே வந்தானா?''

''இல்லை. நான் ஊசிகள் வாங்கக் கடைக்குப் போனேன். பண்ணை அலுவலகத்தின் முன்னால் அவன் நிற்பதைப் பார்த்தேன். எவ்வளவு நேர்த்தியான இளைஞனாக இருக்கிறான். அவன் ஒரு ராஜா மகன் இல்லை என்று யாரும் சொல்லமாட்டார்கள்.

அவன்மேல் வைத்த கண்ணை என்னால் திருப்பவே முடியவில்லை. ஆண்டவன் உனக்கு அருள்புரியட்டும்.''

கிழவன் உணர்ச்சி துளும்பிய குரலில் ''நன்றி'' என்றான். அவன் முற்றத்தைச் சுத்தப்படுத்துவதில் ஆர்வமாக ஈடுபட்டான்.

முதலில் அவன் அசுத்தங்களை அகற்றினான். ''என் பையன் செருப்புகளை அசிங்கமாக்குவதை நான் விரும்ப மாட்டேன்.'' அப்புறம், துருத்திக்கொண்டிருந்த ஒரு ஆணியை கல்லினால் அறைந்து தட்டினான். ''அர்ஷாக்கின் கை அதிலே பட்டால், அவன் சட்டை கிழிந்துபோகும்.''

நவசார்த் கதவைத் திறந்தான். வெறும் சுவர்மீது ஒரு கட்டில் கவனிப்பற்றுச் சாய்ந்திருந்தது. ''அர்ஷாக், நீ இந்தக் கட்டிலில் படுத்து உறங்கியது நினைவிருக்கிறதா? நான் இங்கே தரையில் தூங்கினேன் என்று அவனிடம் சொல்லுவேன்.'' இப்படி உரக்கச் சிந்தித்தவாறே அவன் கட்டிலைச் சரிப்படுத்தினான். ''இதுதான் நீ சாப்பிட்ட பழைய கிண்ணம். பார், அர்ஷாக்! இதோ உன் மரக்கரண்டி. தச்சன் மானஸிடமிருந்து நான் இதை வாங்கி வந்த நாள் உனக்கு நினைவிருக்கிறதா? அதில் பூ வேலைப் பாடு எதுவும் இல்லையே என்று நீ கோபம் கொண்டாய். உடனே நான் அதை ஓவியனிடம் எடுத்துப்போய், உனக்காக வர்ணம் தீட்டச் செய்தேன் என்று அவனிடம் கூறுவேன்.''

இவ்வாறு நினைப்பிலேயே அர்ஷாக்குடன் உரையாடிக் கொண்டு, அவன் ஊற்றுக்குப்போய் கொஞ்சம் தண்ணீர் எடுத்து வந்தான். முற்றத்தை, மெத்தையை, உட்புறத்தின் தரையை, தண்ணீரால் தெளித்தான். பிறகு பெருக்கத் தொடங்கினான்.

மீண்டும் அடுத்த வீட்டுக் கிழவியின் தலை வேலிக்கு மேலே தோன்றியது.

''நவசார்த், அர்ஷாக் சேர்மன் வீட்டுக்குப் போயிருக்கிறான், தெரியுமா?''

''தெரியாதே. அங்கே அவன் எப்போது போனான்?''

''நீ வருவதுக்குச் சற்று முன்புதான்.''

''வீட்டில் யாரும் இல்லை என்பதை அவன் பார்த்திருக்க வேண்டும். அதனால் ஓய்வெடுக்க அங்கே போயிருப்பான். அவன் வந்து சேருவான். வழி தவறிவிட மாட்டான்.''

''நிச்சயமாக.''

நவசார்த் சிறிதளவு விறகுச் சுள்ளி எடுத்துவந்து, வெளிப்புற அடுப்பின் பக்கத்தில் அடுக்கிவைத்தான். பிறகு இடுப்பு

வாரிலிருந்து கத்தியை எடுத்தான். ஆட்டுக்குட்டி அருகில் போனான். கடைசி நேரத்தில் மனம் மாறினான். ''அர்ஷாக் வருகிறவரை காத்திருப்பேன்'' என்று அவன் தீர்மானித்தான். சேர்மனின் இரட்டைமாடி வீடு இருந்த திசையைப் பார்த்தான். ''அவன் ஏன் இன்னும் அங்கேயே இருக்கிறான்? சீக்கிரம் இருட்டி விடுமே. அத்திப் பழங்கள் கெட்டுப்போகும். கார்னல் பழம் ருசி இழந்துவிடும்.''

அவன் பழங்களைக் கூடையிலிருந்து வெளியே எடுத்து சன்னல் விளிம்பில் வைத்தான். பிறகு, அண்டை வீட்டாரிடமிருந்து ஒரு புதிய மேஜை விரிப்பு இரவல் வாங்கி, மேஜைமீது பரப்பினான். கம்பளியை உதறி, சாய்வு ஆசனத்தை மூடினான். அதன்மேல் ஒரு தலையணையை வைத்தான்.

இப்போது எல்லாம் தயார். இன்னும் அர்ஷாக் வரவில்லை. ''என்ன விஷயம்? அவன் ஏன் சேர்மன் வீட்டுக்குப் போனான்?'' நவசார்த் எரிச்சலோடு வியப்புற்றான். அவன் கைகளில் ஒரு நடுக்கம் பாய்ந்தது. ஆயினும், இவ்வாறு சொல்லி, தன்னைத் தானே அவசரமாகத் தேற்றிக்கொண்டான் :

''அர்ஷாக் முக்கியமான மனிதன். அங்கே எட்டிப்பார்த்து, கிராமத்தில் நிலவரங்கள் எப்படி இருக்கின்றன என்று சேர்மனிடம் கேட்டாக வேண்டுமே. எனக்கு ஏன் இந்த ஆத்திரம்? அவன் இரண்டு நாட்கள் என்னுடனேயே இருக்கப் போகிறான். அவனை நான் என் பார்வையிலிருந்து தப்பவிட மாட்டேன். இழந்த காலத்தை நாங்கள் சரிக்கட்டி விடுவோம்.''

சூரியன் அஸ்தமித்தது. ஆனாலும் அர்ஷாக் இன்னும் வீட்டுக்கு வரவில்லை. கிழவனின் ஆவல் அதிகரித்தது. ஒருகணம் அவன் சேர்மன் வீட்டுக்குப் போகக் கிளம்பினான். ஆனால், உடனே தன் நினைப்பை மாற்றிக்கொண்டான்.

அவன் வெளிமுற்றத்துக்குப் போய், பக்கத்து வீட்டுக்காரியின் பேரனைக் கூப்பிட்டான்.

''அங்கே ஓடி அர்ஷாக் என்ன செய்துகொண்டிருக்கிறான் என்று பார். நான் வீட்டுக்கு வந்துவிட்டேன்; அவனுக்காகக் காத்திருக்கிறேன் என்று அவனிடம் சொல்லு'' என்றான்.

சிறுவன் வெகு விரைவில் திரும்பினான்.

''என்ன, நீ அர்ஷாக்கைப் பார்த்தாயா?''

''ஆமாம்.''

''அவன் என்ன செய்கிறான்?''

''ஒயின் குடிக்கிறான்.''

''நான் வீட்டுக்கு வந்துவிட்டேன் என்று அவனிடம் சொன்னாயா?''

''ஆமாம்.''

''அவன் என்ன சொன்னான்?''

''சரிதான் என்றான்.''

நவசார்த் அவ் வார்த்தைகளைத் தனக்குள் திரும்பவும் சொன்னான். ''நல்லது. அப்படியானால் அவன் சீக்கிரம் வீடுவந்து சேர்வான் என்று அர்த்தம். நான் அடுப்பைப் பற்றவைக்கிறேன்.''

விரைவில் அடுப்பில் தீ நன்கு பற்றி எரியும்படி செய்தான். அப்புறம், இறைச்சி சுடும் சாதனங்களைச் சுத்தப்படுத்தினான். வீட்டினுள் மறுபடி போனான். விளக்கிலிருந்த தூசியைத் துடைத்தான். காத்திருப்பதற்காக மேஜை முன் அமர்ந்தான்.

நேரம் முடிவில்லாமல் இழுபட்டது. கிராமத்தில் விளக்குகள் எரியலாயின. வீடுகள் இதமான தோற்றம் கொண்டன. தெரு ஓசைகள் அடங்கிக்கொண்டிருந்தன. பின்னர், தூரத்தில் நாய்கள் சோகமாய்க் குரைக்கும் சத்தம் மட்டுமே கேட்டது.

அர்ஷாக் இன்னும் வரவில்லை. தீ அணைந்தது. அடுப்பில் ஒரு குவிய ..ாம்பலே எஞ்சியது. ஆட்டுக்குட்டி புல்மீது படுத்து அசைபோட்டுக்கொண்டிருந்தது. நவசார்த் செவிகளைக் கூர்மையாக்கி இருட்டுக்குள் கவனித்தான். அவன் கண்கள் வலித்தன; நீர் பெருக்கத் தொடங்கின. தலை கனத்தது. அவன் எழுந்தான். ஆனால், கால்கள் நகர மறுத்தன. ''நான் ஏன் அவனிடம் பிச்சை கேட்கப் போகவேண்டும்? அவனைவிட நான் வயது முதிர்ந்தவன். அவன்தான் என்னிடம் வரவேண்டும்'' என்று அவன் குறைபடத் தொடங்கினான். ஆனால், பிறகு திரும்பவும் இப்படிச் சொல்லித் தன்னைத் தேற்றினான்: ''நல்லது. அவன் முக்கியமான மனிதன். ஒருவேளை சேர்மனோடு கலந்து பேசவேண்டிய முக்கிய வேலை ஏதேனும் அவனுக்கு இருக்கலாம். அவன் கட்டாயம் காலையில் வருவான்.''

ஆனாலும்கூட, அவன் காத்திருந்தான். இரவில் வெகுநேரம் வரை காத்திருந்தான். இருட்டினுள் விடாது உற்றுப் பார்த்ததனால் கிழவனின் கண்கள் மங்கிப்போயின. அவன் மெதுவாகத் தூக்கத்தின் வசப்பட்டான். நவசார்த் மேஜை முன் உட்கார்ந்தபடியே தூக்கத்தில் ஆழ்ந்தான்.

எவ்வளவு நேரம் தூங்கினான் என்பதை அவன் அறியான். முற்றத்திலிருந்து கூப்பிட்ட அடுத்த வீட்டுக்காரியின் குரலால்

அவன் விழிப்படைந்தான். கண்களைத் திறந்ததும், சூரியனின் முதல் கிரணங்கள் சன்னலுக்குள் எட்டிப்பார்ப்பதைக் கண்டு வியப்புற்றான்.

''நவசார்த்! ஏ நவசார்த்!'' என்று பக்கத்து வீட்டுக்காரி கூப்பிட்டாள்.

அவன் வீட்டைவிட்டு வெளியே பாய்ந்தான். அடுத்த வீட்டுக்காரி வேலிக்கு மேலாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். ''இன்று எப்படி நீ இவ்வளவு நேரம் தூங்கிவிட்டாய்?'' என்று கேட்டாள்.

''என்ன, அர்ஷாக் வீட்டுக்கு வந்துகொண்டிருக்கிறானா?''

''இல்லை'' என்று கூறி அவள் தலையை ஆட்டினாள். ''உன் அர்ஷாக் ஊரைவிட்டுப் போகிறான். ரஸ்தாவைப் பாரேன்.''

கூரை இடிந்து தலைமீது விழுந்தது போன்ற உணர்வு நவசார்துக்கு ஏற்பட்டது. அவன் தணிவான தொழுவத்துக்கு ஓடி, கூரைக்கு ஏறினான். அர்ஷாக்கின் கார் சாலையின் வழியே, சூரிய ஒளியில், பளபளத்துக்கொண்டு விரைந்தது. சிறிதாகிச் சிறிதாகி சீக்கிரத்தில் மறைந்தது.

நிதானமற்ற அவனது நடை ஒரு கிழவனுக்கு உரியதுதான். நவசார்த் பழத்தோட்டங்களைநோக்கிச் சென்ற பாதையில் தன் வழியே இறங்கி நடந்தான். தரையையே பார்த்த அவன் கண்கள் குழிக்குள் ஆழ்ந்தவையாய் தோன்றின. அவனது முதுகு முன்னை விட அதிகம் குனிந்து காணப்பட்டது. வெண்ணிற ஆட்டுக்குட்டி அவனுக்குப் பின்னால் துள்ளி ஓடியது.

காஷாக் ஜியுல்நஸாரியன்
*(1918)*

# ஆறுவது கட்டளை

அவன் ஒரு பெரிய கவி என்று எல்லோரும் சொன்னார்கள்.

மரியா மகதலேனாளின் பாபத்தை மன்னித்த ஆண்டவனிடம் அவன் நம்பிக்கை வைத்திருந்தால்! ஆனால் அவன் மத நம்பிக்கை கொண்டவன் அல்ல. மேலும், தன்னலத் தியாகம் மடத்தன மானது என்று அவன் கருதினான். அவன் ஆண்மை நிறைந்தவன். அவனோடு பழகிய பெண்கள் அப்படித்தான் நம்பினார்கள். தடித்த உதடுகளும், உணர்ச்சி நிறைந்த பெரிய வாயும், நெளி நெளியான கரிய தலைமுடியும் பெற்றிருந்த அந்த இளைஞனோடு அவர்கள் சுற்றித் திரிந்தார்கள். ஒரே பார்வையில் வெற்றி கொண்ட, ஏக்கம் நிறைந்த கரும்கண்கள்தான் அவனின் மிகச் சிறந்த அம்சமாக விளங்கின. அவன் கழுத்தில் 'டை' கட்டிக் கொள்வதில்லை. மிகச் சமீபகால நாகரிக முறைகளை அவன் பின்பற்றமாட்டான்.

நேர்த்தியாக அலங்கரித்துக்கொண்ட யுனிவர்சிட்டி மாணவர்களை ''இஸ்திரிபோட்ட உடுப்புகள்'' என்று பெண்கள் பரிகசித்தார்கள். ஆனால், எப்போதும் அசிங்கமான தமாஷ் களைப் பேசிக்கொண்டு—தன் அம்மாவின் முன்னிலையில்கூட அவற்றைக் கூற அவன் தயங்கமாட்டான்—புகையும் கறுப்புக் குழாயை உறிஞ்சியவாறு காணப்பட்ட பார்கெவ் ஆராமஸை ஒரு 'காட்டுமிராண்டி' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அவன் ஒவ்வொருவரையும் வியப்பில் ஆழ்த்தினான். ஆனால், இளம் பெண்கள் ஆச்சர்யம் அடையவில்லை. அவனைக் கண்டதுமே காதல் கொண்டார்கள்.

''ஆறுவது கட்டளையாவது: விபசாரம் செய்!''

ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தங்கள் புனிதமான எழுத்துகளை உருவாக்கிய ஒரு மீனவனும் ஒரு தச்சனும் வாழ்க்கையைப்பற்றி என்ன கண்டார்கள்? அப்போது கூட மரியா மகதலேனா அருகிலேயே வாழ்ந்துகொண்டிருந் தாளே!

''அஸ்மிக் ஒரு பரிசுத்த கன்னி. ஒருநாள் அஸ்மிக் ஒரு புதிய கிறிஸ்துவைப் பெற்றெடுப்பாள்; அந்தக் கிறிஸ்து நமது நாகரிகத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பார்; அதன் பிறகு முதலாவது குரங்கு திரும்பவும் கோடாரியைக் கண்டுபிடிக்கும்; அணுசக்தி ராக்கெட்டுகளை உற்பத்தி பண்ணக்கூடிய ஒரு புதிய சமூகத்தினர் தோன்றுவதற்கு அது உதவியாக இருக்கும்'' என்று ஜிகாம் சொன்னான்.

யுகமுடிவு நாள் (கடைசித் தீர்ப்பு நாள்) பற்றி ஒவ்வொரு தலைமுறையும் தனக்குத் தோன்றிய வகையில் விளக்கம் கூறுகிறது.

அஸ்மிக் புனித கன்னியாகவே இருந்தாள். கரிய குழாயை, நெளிநெளிக் கூந்தலை, ஒரே பார்வையில் வெற்றி கொள்ளும் ஏக்கம் நிறைந்த கரும் கண்களை அவள் கண்டாள். ஆயினும் அவள் அவற்றுக்கு அடிமைப்பட்டுவிடவில்லை. அவளுடைய சிநேகிதிகள் சீற்றம் கொண்டார்கள். இளைஞர்களோ, ''அஸ்மிக்கா? அவள் எதுக்கு உதவுவாள்? அவள் நடப்பதையும் பேசுவதையும் சிரிப்பதையும் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கிறது'' என்று வெறுப்புடன் சொன்னார்கள்.

''அவள் தன் வாழ்வில் ஒரே ஒரு முறைதான் அழுதாள்; காலில் ஒரு ஆணி குத்திவிட்டபோது'' என்றார்கள்.

அவளை அவ்வளவு அழகுடன் படைத்து இயற்கை தன் சக்தியை வீணடித்துவிட்டது என்றே அனைவரும் நம்பினர். அவள் பார்கெவ் ஆராமைசைக்கூட கவனிக்கவில்லை. ஆயினும் அவன் அவளைக் கவனித்தான். அஸ்மிக் பெண்கள் அனைவரிலும் மிகுந்த வசீகரமானவளாகவும் வெகு அடக்கம் உள்ளவளாகவும் இருந்ததாலேயே அவன் அவளைக் கவனித்தான். அவள் குருடி போல் தோன்றியதே முக்கியக் காரணம் ஆகும். அவள் அவனைப் பார்த்தபோதிலும், உண்மையில் அவனை அவள் பார்த்ததில்லை.

''நாம் நாடகம் பார்க்கப் போகலாம்.''

அஸ்மிக்கின் கண்கள் மின்னிப் பிரகாசித்தன.

''வா, போவோம். இன்று என் மனம் சோர்ந்திருக்கிறது.''

''மனம் சோர்ந்தபோது மட்டும்தான் நீ நாடகத்துக்குப் போவாயோ?''

''இல்லை. நான் அப்படிச் சொல்லவில்லை.''

''ஜெம்மா என்ன ஆனாள்?''

''அவள் அலுப்புத்தர ஆரம்பித்துவிட்டாள்.''

''நான் இன்னும் அப்படி ஆகவில்லையோ?''

''நாம் ஒருவரை ஒருவர் இன்னும் அறிந்துகொள்ளவே இல்லையே'' என்று பார்கெவ் புன்னகைத்தான்.

''அதை நீ விரும்புகிறுயா?''

''ஆமாம்.''

''ஏனோ?''

''நீ புதிதாக இருக்கிறுய். அழகாக இருக்கிறுய். நீ எப்படிப் பட்டவள் என்று நான் இன்னும் தெரிந்துகொள்ளவில்லை.''

''அப்படியானுல் நான் நிச்சயமாக வரமாட்டேன்.''

''நிச்சயம் நீ வருவாய்.''

இறுதியில் அஸ்மிக் இணங்கிவிட்டதை அறிந்த ஒவ்வொரு வரும் திகைப்படைந்தனர்.

ஜியார்ஜியப் பிரதேசத்தின் நடிகன் ஒருவன் தனது குழுவுடன் அன்று அந்திநேரத்தில் நாடகம் நடித்துக்கொண்டிருந்தான். ஒரு ஜியார்ஜிய ஒத்தெல்லோ, ஆர்மேனிய டெஸ்டிமோனுவின் கழுத்தை நெரித்துக் கொல்வதைக் காண்பதற்காக நகரத்தில் பாதிப்பேர் கூடியிருந்தார்கள்.

டெஸ்டிமோனு வழக்கமாகக் கொல்லப்படுவதுபோல்தான், அவனும் அவளைக் கொன்றுன். அஸ்மிக்கின் உணர்ச்சிப் பிரதிபலிப்பைக் கண்டு பார்கெவ் ஆச்சர்யம் அடைந்தான்.

நாடக அரங்கைவிட்டு வெளியேறியதும், அவன் ''நாம் ஒரு ஓட்டலுக்குப் போவோம்'' என்று சொன்னுன்.

''நாடகம் அற்புதமாக இருந்தது, இல்லையா?''

''நீ அருகில் இருக்கையில் எதுவும் அருமையாகவே இருக்கும்.''

''ஏன்? நான் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையே?''

''அதனுல் என்ன? நாம் ஓட்டலுக்குப் போவோம். அது தான் நான் விரும்புவது.''

''அப்படியானுல் நான் வரவில்லை.''

''ஓ, சும்மா வா.''

அவர்கள் உள்ளே பிரவேசித்ததுமே மூன்று முக்காட்டுக் காரிகள் ஓடிவந்தார்கள். இந்த வகையில் பள்ளிப் பெண்கள் மூவர் புகழ்பெற்றவர் ஆனுர்கள். பார்கெவ் ஆராமஸ் அவர் களுக்குத் தன் கையெழுத்தை இட்டுத்தர இசைந்தான். அந்தக்

கணத்திலிருந்து அவர்களது 'ஆட்டோகிராப்' புத்தகங்கள் வரலாற்றுச் சாசனங்கள் ஆகிவிட்டன.

சிங்காரத்தலையினர் மூன்று பேரும் போனார்கள்.

அஸ்மிக் ஒரு கோணல் புன்னகையோடு சொன்னாள்: "நீ ரொம்பப் பிரசித்தமானவன் என்று தெரிகிறது."

"நான் நன்றாக எழுதுவேன். கடைசியாக ஆர்மேனியர்கள் ஒரு நல்ல கவிஞனை அடைவார்கள்."

"இல்லை. அவர்கள் அடையமாட்டார்கள்."

"என்ன சொல்கிறாய்?"

"அவர்கள் அடையமாட்டார்கள். நீ உண்மையான உள்ளொளி பெற்றவனில்லை. நீ உன்னிடமும் உனது அறிவிலும் வெறுமனே மோகம் கொண்டிருக்கிறாய்."

"நான் அறிவாளி என்றுதானே சொல்கிறாய்?"

"ஆமாம். நீ அறிவாளிதான். திறமை உள்ளவன்கூட."

"பின்னே என்ன குறை?"

"எனக்குத் தெரியாது."

"இதுவரை யாராவது உன்னைக் காதலித்தது உண்டா? நீ யாரையாவது காதலித்திருக்கிறாயா என்று நான் கேட்கவில்லை. உன் ஆசிரியர்களில் ஒருவராவது உன்னைக் கண்டு கிறங்கியிருக்க வேண்டுமே?"

"இல்லை. நான் காதல் வசப்பட்டதேயில்லை. அதற்கும் இப்போதுள்ள இதற்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குத் தெரியவில்லை."

"நாம் காதலால் உயிர் வாழ்கிறோம்" என்று பார்கெவ் தொடர்பு இல்லாமல் பேசினான். "நாம் கவிதை எழுதுகிறோம். இரண்டாயிரம் வருஷங்களுக்கும் மேலாகவே ஆர்மேனியர்களாகிய நாம் காதலிப்பதற்காகவே வாழ்ந்திருக்கிறோம்."

"நல்லது. பின்னே, காதலியேன்."

"யாரை?"

"என்னை."

பார்கெவ் சிரித்தான். "நான் காதலிப்பேன். ஆனால் நீ என்னை மறுத்துவிடுவாய். மரியா மகதலேனாதான் என் ருசிக்கு அதிகம் பிடித்தவள். நீ பரிசுத்த கன்னி."

''நான் அறிவேன். நான் ஒரு புதிய கிறிஸ்துவைப் பெற்றெடுப்பேன் என்றுகூடச் சொல்கிருர்கள்.'' இதைக் கூறிவிட்டு அஸ்மிக் சிரித்தாள். பிறகு அவள் பணியாளுக்குச் சைகை காட்டிஞள். ''என் கணவருக்கு ஒரு கிளாஸ் காக்னக் வேண்டும்.''

பணியாள் சென்ருன். பார்கெவ் தன் கையிலிருந்த பானத்தைக் குழப்பத்தோடு கீழே வைத்தான்.

''நீ என்ன சொன்ஞய்?''

''ஒரு கிளாஸ் காக்னக்கை உன்ஞல் குடிக்க முடியாதா?''

''நிச்சயமாக முடியும்.''

''நான் காசு கொடுப்பேன். இதில் குழப்பம் அடைவதற்கு ஒன்றுமில்லை. பார்க்கப்போஞல், நாம் இருவரும் மாணவர்கள் தானே.''

பணியாள் திரும்பி வந்தான். ''மன்னிக்கவும். உங்களுக்கு எந்த ரகம் தேவை என்று கேட்க மறந்துபோனேன்.''

''என் கணவர் மிகச் சிறந்த பானத்தை மட்டுமே குடிப்பார்.''

பார்கெவ் அவநம்பிக்கையோடு அவளை உற்றுப் பார்த்தபடி இருந்தான்.

''அப்படி விழிக்காதே. அது மரியாதை இல்லை'' என்று கூறி அவள் சிரித்தாள்.

''விஷயம் சுவாரஸ்யமாகிக்கொண்டிருக்கிறது.''

''ரசமான விஷயங்கள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. நமது ஜனவரி விடுமுறையின்போது நாம் கல்யாணம் செய்து கொள்வோம்.''

''என்னிடம் வந்த பெண்களை எல்லாம் நான் மணந்திருந் தால், எனக்கு எத்தனை மனைவிகள் இருப்பார்கள் தெரியுமா?''

''ஆஞல், நீ என்னை மணந்துகொள்வாய். நான் வித்தியாச மானவள்.''

புறப்படுவதற்காக அவர்கள் எழுந்தபோது அஸ்மிக் சொன்ஞள்: ''கோர் என்னைவிட அதிக அழகி. நாஸிக் என்னை விட இனியவள். குழாயை வாயில் வைத்திருக்கையில் நீ நன்ருகவேயில்லை. அதை எப்படிப் புகைப்பது என்றும் உனக்குத் தெரியவில்லை. இனிமேல் புகை பிடிக்காதே.''

மறுநாள் காலை பார்கெவ் அஸ்மிக்பற்றியே எண்ணிக் கொண்டிருந்தான். அவளைப்பற்றி அதிகம் நினைக்க நினைக்க, அவனுக்குக் கோபம் அதிகமாக வந்தது. ஒரு கண்ணாடியைக் கடந்து சென்றபோது அதில் தெரிந்த தனது பிம்பத்தை அவன் பார்த்தான். அவனுடைய புகைக்குழாய் அவனுக்கு நன்றாகத் தான் இருந்தது. அஸ்மிக் சொன்னது தப்பு. அவன், வழக்கம் போல், குழாயைப் புகைத்தவாறே யுனிவர்சிட்டிக்குப் போனான். பேராசிரியர் லாலெயன் தாழ்வாரத்தில் அவனை நிறுத்தினார்.

''நான் உன் புத்தகத்தைப் படித்தேன், இளைஞனே. அது எனக்குப் பிடித்திருக்கிறது.''

''நன்றி.''

''எனக்கு நன்றி சொல்வதற்கு ஒன்றுமில்லை. நீ தற்பெருமை கொள்ளாமல் இருந்தால், நீ ஒரு உண்மையான கவிஞன் ஆவாய்.''

''என்ன?''

''பரவாயில்லை. உனது அடுத்த வகுப்புக்கு மணி அடிக்கிறது.''

வகுப்புகளின் இடைவேளையின்போது, முற்றிலும் எதிர் பாராத விதத்தில், ''இன்று மாலை நாம் என் அத்தையைப் பார்க்கப் போவோம்'' என்று அஸ்மிக் சொன்னாள்.

''எதுக்காக?''

''அவள் பழங்காலத்து மனுஷி. எனக்கு மணமகனாக வரப் போகிறவனைத் தான் பார்த்தால் ஒழிய, என் கல்யாணத்துக்குச் சம்மதிக்க மாட்டேன் என்று அவள் சொல்லியிருக்கிறாள்.''

''இந்தப் பேச்சை நிறுத்து!''

''நீ திரும்பவும் அந்தக் குழாயைப் புகைக்கிறாயா?''

''என்னை யார் தடுப்பது?''

''நீ புகை பிடித்துக்கொண்டேயிருந்தால் நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள மாட்டேன்.''

''அதை நிறுத்து என்று நான் சொன்னேன்!'' என்று பார்கெவ் கோபமாய்க் கூறினான்.

''கோபப்படாதே. நான் நேற்றே அதை உன்னிடம் சொன்னேன்.''

அது விசித்திரமாகப் படலாம். அன்று மாலை அவர்கள் சந்திக்கத்தான் செய்தார்கள்.

"நீ பரிசுத்த கன்னி என்றே எல்லோரும் எண்ணுகிறார்கள்."

"அவர்கள் எல்லோருமே தப்புதான். உன் கழுத்துப்பட்டி அழுக்காக இருக்கிறது."

"அதைப்பற்றி உனக்கு என்ன?"

"என் கணவனைக் கவனிக்கவேண்டியது என் கடமை."

"உன் கேலிப் பேச்சுகள் எனக்கு விளங்கவில்லை."

"நான் கேலி பேசவில்லை. மிக உண்மையாகவே பேசுகிறேன்."

"ஆனால் நான்..."

"என்னைக் காதலி."

"என்னை நானே அதுக்குப் பலவந்தப் படுத்த முடியாது."

"பலவந்தம் பண்ணாதே. சும்மா உன் நெஞ்சைக் கேட்டுப் பார். நான் என் வார்த்தைகளை வாபஸ் பெறுகிறேன். நாம் என் அத்தையின் வீட்டுக்குப் போகவேண்டியதில்லை."

ஸாரிக்கின் இருப்பிடத்துக்கு உரிய சாவிகள் பார்கெவ் பையில் கலகலத்தன.

"வா, போவோம்."

"எங்கே?"

"சும்மா வா."

"நான் விளையாட்டுக்குச் சொன்னேன். எரவானில் எனக்கு அத்தை யாரும் இல்லை."

"அது முக்கியம் அல்ல. நாம் போகலாம்."

அஸ்மிக் படுக்கைமீது உட்கார்ந்தாள். அவளது பருத்தித் துணி ஆடையின் கீழ்ப்பகுதி சற்றே மேலேறியது.

"நாம் கல்யாணம் பண்ணிக்கொள்வோம் என்று நீ சொல்கிறாய்?" என்று பார்கெவ் கரகரத்த குரலில் கேட்டான்.

"இனிமேல் இல்லை."

அவன் சட்டென்று அவளை முத்தமிட்டான். பிறகு பின்வாங்கினான்.

"நான் உன் கல்யாணத்தை இங்கே நிறைவேற்ற மாட்டேன்" என்று கூறி அவள் முறுவலித்தாள்.

"பின்னே நீ ஏன் இங்கே வந்தாய்?"

''நீ கெட்டுப்போய்விட்டாய். எல்லாம் உனக்கு வெகு சுலபமாக வந்து சேர்கிறது. நாம் போகலாம்.''

''நீ எங்கும் போகப்போவதில்லை.''

''அசட்டுத்தனமாக நடக்காதே. நான் போய்க்கொண்டிருக்கிறேன் என்று நீ நன்கறிவாய். நீ வாசல்வரை வந்து என்னை வழி அனுப்பலாம்.''

பார்கெவ் காதல் தவிர்ந்த ஏனைய உணர்ச்சிகளை—கோபம், ஆச்சர்யம், வேதனை அனைத்தையும்—அனுபவித்தான்.

''வருத்தப்படாதே'' என்று கூறி, அஸ்மிக் திடீரென்று அவனைத் தழுவினாள். ''இதற்கு முன் உன்னை யாரும் காதலித்தது இல்லை. அவர்கள் உன்னை ஏமாற்றினார்கள். அவர்களை ஏமாற்றி விட்டதாக நீ நினைத்தாய். என்னை வீட்டுக்கு இட்டுச்செல்.''

அதிசயம்தான். அவனது உண்மையான முதல் கவிதை அன்று இரவு பிறந்தது. வெறுக்கத் தகுந்த, வித்தியாசமான, ஒரு பெண்ணைப்பற்றிய கவிதை அது.

அவனுடைய நண்பர்கள் புரியாது குழம்பினார்கள். பார்கெவ் ஆராமஸின் குழாய் திடீரென்று மறைந்துபோயிற்று. அவன் சட்டைகள் இப்போதெல்லாம் சதா சுத்தமாகவே இருந்தன.

இயல்பாக, அவர்கள் அந்தச் சமயத்தில் கவலைப்படவில்லை. அவளுடைய படிப்பு அறையின் சன்னலுக்குக் கீழே அவன் பல மணி நேரம் நிற்க நேரிட்டது. சதுக்கத்தில் ஒரு பெஞ்சில், தன்னை மணந்துகொள்ளும்படி அவளை அவன் திரும்பத் திரும்ப கேட்கவேண்டியதாயிற்று. அப்புறம், பார்கெவ் ஆராமஸ் கழுத்தில் ஒரு 'டை' கட்டக் கற்றுக்கொண்டதும், அவன் மற்ற அனைவரையும் போலவே ஆகிவிட்டான். அஸ்மிக் மட்டுமே வித்தியாசமாகக் கருதினாள். அவள் வேறுவிதமாகக் கருதி, வெகுவாகச் சந்தோஷப்பட்டாள்.

அபிக் அவாகியன்
*(1919)*

# தென்பிராந்திய ஜுரம்

ஆயிரம் வருஷங்கள் ஆனாலும்கூடத் தென்பிரதேச மக்கள் கிழவேட்டைக்காரன் பாபெஹை நினைவு வைத்திருப்பார்கள். ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகும், பாப்பி வயல்களிலிருந்து திரும்பி வருகிற, வெயிலில் காய்ந்து களைத்துப்போன விவசாயி கள் அந்தக் குன்றின் சரிவுமீது நின்று, பாபெஹைப்பற்றித் தங்கள் மூதாதையர் பின்னியிருக்கும் கதைகளை நினைவுகூர்வர்.

கிழவன் சொன்னதை நான் நினைத்துக்கொள்கிறேன்: ''நான் மூன்று முறை கீழே இறங்கி, நாணல் காட்டினுள் போனேன். ஆனால், புலிகளைத் தேடி அல்ல. அங்கே வெகு தூரத்தில் ஒரு இடத்தில் நீரூற்று ஒன்று இருக்கிறது; அதன் நீர் ஆகாய நீல நிறத்தில் இருக்கும் என்று என் தந்தை என்னிடம் சொல்வது வழக்கம். அந்த நீரூற்றைக் கண்டுபிடிக்க நான் ஆசைப்பட்டேன்.''

நாங்கள் மெதுவாகச் சிரிப்போம். ஏனெனில் பாபெஹ் ரொம்ப முதியவன்.

பாபெஹ் அவனது வாழ்நாளில் அந்த நீரூற்றைக் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால், நொறுங்கிப்போன அவனது மிச்ச சொச்சங்களை நாங்கள் கண்டோம். அவற்றை எடுத்து வந்து இங்கே குன்றின் சரிவில் புதைத்தோம்.

பாபெஹுக்குப் பிறகு, கிராமத்தில் சாய்ஃபி எனப் பெயர் கொண்ட மூன்று சகோதரர்கள் தோன்றினார்கள். அவர்களில் மூத்தவன் பெயர் வாலி—வாலி சாய்ஃபி. அவன், வரிசையாகச் சென்ற அமெரிக்க லாரிகளைக் கொள்ளையடித்து வருவதற்காகத் தன் சகோதரர்கள் இருவரையும் அனுப்பினான். ஆனால், நாங்கள் கிராமத்திலேயே இருந்தோம். அவன் ஒரு அமெரிக்கனுக்கு நாற்பது புட்டி பேரீச்சை மதுவும், நாற்பது கிலோகிராம் கஞ்சாவும் கொடுத்து, பதிலுக்கு ஒரு சாதாத் துப்பாக்கியும் ஒரு பெட்டி நிறையத் தோட்டாக்களும் பெற்றுக்கொண்டான் என்று ஜனங்கள் சொன்னார்கள். அவன் நாணல் காட்டுக்கு வழக்க மாகப் போவான். பாபெஹ் போல அவன் கீழே இறங்கி நாணல்

காட்டுக்குள்ளே போகவேண்டிய அவசியம் இல்லை. தூரதரிசிக் கண்ணாடி பொருத்திய ஒரு சாதாத் துப்பாக்கி அவனிடம் இருந்தது. நாணல் காட்டிலிருந்து அரை மைல் விலகி அவன் உட்கார்ந்திருப்பான். தனது நாணல் காட்டைவிட்டு மடத்தனமாக வெளியே வருகிற எந்தப் புலியையும் அவன் சுட்டுவிடுவான். பிறகு தனது இரையைத் தோளில் சுமந்துகொண்டு கிராமத்துக்குத் திரும்புவான்.

அவன் எப்படி நடந்தான்!

அந்தக் காலத்தில், ஒரு ஆகஸ்டு மாத நடுப்பகலில், அஸிரியன் ஜியார்ஜின் திறந்தவெளி விடுதியில் நாங்கள் ஜின் குடித்துக்கொண்டிருந்தோம். நாங்கள் சோர்வடைந்து, ஒருவரை ஒருவர் பார்த்தபடி, வெயிலால் பாதிக்கப்பட்டு எங்களில் எவராவது ஒருவர் வாய்விட்டுச் சிரிக்கத் தொடங்குவதை எதிர்பார்த்துக் காத்திருந்தோம். நாங்கள் ஐந்து பேர்: பூக், ஹேறி, ரிவே என்று மூன்று அமெரிக்கப் போர்வீரர்கள்; கூர்ஜென் ஹோவ் ஹான்னிசியன் எனும் பெயர் உடைய செம்படை வீரன் ஒருவன்; மற்றும் நான்.

ரஸ்தாவுக்கு அப்பால், மறுபுறத்தில், கோபுரம்போல் ஒரு மலை நிமிர்ந்து நின்றது. குகே மார்—பாம்பு மலை – என்று பூர்வ குடியினர் அதைக் குறிப்பிடுவர். அதன் அடிவாரத்தில் உள்ள பாதை வழியாக விவசாயிகள் வீடு திரும்பிக்கொண்டிருந்தார்கள். பாப்பி வயல்களிலிருந்து அவர்கள் திரும்பி வந்தார்கள். தூரத்தில், குனிந்து நடந்த கறுப்பு மனிதர்களையும், அவர்கள் காலடிகளிலிருந்து கிளம்பிய வெள்ளைப் புழுதியையும் நாங்கள் பார்க்க முடிந்தது. சரிவான பாதை முடிவுக்கு வந்த இடத்தில், அவர்கள் எங்களுக்குத் தென்படாமல் மறைந்தார்கள். வெகு நேரத்துக்குப் பிறகு அவர்கள் மறுபடியும் தோன்றினார்கள். மாலை வேளையில் குளுமையாக இருக்குமா இராதா என்று அவர்கள் முகங்களைப் பார்த்து நாங்கள் யூகிப்பது வழக்கம்.

அப்புறம் வாலி சாய்ஃபி, தான் கொன்ற ஒரு புலிக் குட்டியைத் தோள்மீது சுமந்துகொண்டு காட்சி அளிப்பான்.

ரஸ்தாமீது அவன் ஷா-இன்-ஷா (சக்கரவர்த்தி) மாதிரி நடப்பான். தனது மஞ்சள் மீசையினூடாக எங்களை நோக்குவான். எங்களுக்கு வணக்கமாகத் தலையசைப்பான்.

கூர்ஜென் மகா எரிச்சல்கொண்டு, தனது தானியங்கித் துப்பாக்கியின் கட்டையை உள்ளங்கையால் அறைவான்.

''என்னை அனுமதியுங்கள்! நான் அந்த ஆளை ஒரு நாயைச் சுடுவதுபோல் சுட்டுத்தள்ளுவேன்...... பாபெஹுக்குப் பிறகு இவன் என்ன மனுஷன்...? சாதாத் துப்பாக்கியும் அவன் தோரணையும்!'' என்று கூறுவான்.

ஒரு நாள் நான் சட்டென்று ஒரு தீர்மானத்துக்கு வந்தேன். ''நாளை, விடியலுக்கு முன்னே, நான் நாணல் காட்டுக்குப் போகிறேன். நீல நீரூற்றை நான் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்'' என்று சொன்னேன்.

நாங்கள் மீண்டும் அஸிரியன் ஜியார்ஜின் திறந்தவெளி விடுதியில் இருந்தோம்.

எவ்விதமான காரணமும் இல்லாமலே எல்லோரும் எழுந்து நின்றார்கள். அவர்களது விசித்திரக் கண்களை நான் வெகுநேரம் கவனித்தேன். அவர்கள் பார்வை, வழக்கமில்லாத விதத்தில், ''தெற்கத்திய ஜுரம்'' என்று கூறுவதாக எனக்குப் பட்டது.

பிறகு, பனிப்படலத்தில் நான் கூர்ஜென்னைப் பார்த்தேன். அவன் தனது கைக்கடியாரத்தைப் பார்த்துவிட்டு வெளியேறினான். போர் வீரர்களான ரிவே, ஹேரி, பூக் மூவரும் வேறு திசைகளில் போனார்கள். அவர்களில் ஒருவன் தரையில் விழுந்து, சாக்கடையை நோக்கி உருண்டான். அஸிரியன் ஜியார்ஜ் அவனை அருகே இழுத்து, அவன் மண்டைமீது ஒரு குளிர்ந்த துவாலையைப் போட்டான். மற்றவர்கள் பிரிந்து மறைந்தார்கள்.

* * *

உதயத்திற்கு முன்பே நான் புறப்பட்டேன். இரவில் காற்றே இல்லை. தெற்குப் பிரதேச ஒலியாந்தர் மரங்களின் அகல இலைகள் தளர்ந்து தொங்கிக்கொண்டிருந்தன. வழியில் நான் கிராமவாசிகளைச் சந்தித்தேன். நாங்கள் பேசினோம். உலகத்தின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் மேகங்கள் மறைந்து விட்டன; மழையே இல்லை என்றும், பொதுவாக உலகில் என்னதான் இருக்கிறது என்றும் அவர்கள் அனைவரும் வருத்தப் பட்டார்கள்.

''நீங்கள் இந்த ரோடு வழியே எங்கே போகிறீர்கள், ஐயா?'' என்று அவர்கள் எல்லோரும் ஒன்றாகக் கேட்டார்கள்.

''இவ்வழியே போய் கீழே இறங்கி நாணல் காட்டுக்குள் போகப் போகிறேன். அங்கே நீலநிற நீரூற்று ஒன்று இருக்கிறது என்று பாபெஹ் சொல்வது வழக்கம். அந்த நீல ஊற்றை நான்

கண்டுபிடிக்கப் போகிறேன். உங்களுக்கு பாபெஹைத் தெரியுமா?'' என்றேன்.

குடியானவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். வருத்தமாய்ச் சிரித்தார்கள். பாப்பி வயல்களை நோக்கிச் சரிவின் மேலேறி நகர்ந்தார்கள்.

சூரியன் இப்போதுதான் மலைச் சிகரங்களுக்கு மேலே தலை காட்டியது. நாணல் காடு பொன்மயமாக மாறியது. ஆ கடவுளே, என்ன பிரகாசம்! சூரியனைவிடச் சிறந்தது; சூரியனைப் பார்க்கிலும் அதிகப் பிரகாசம் கொண்டிருந்தது அது!

நாணல்களை விலக்கிக்கொண்டு நான் முன்சென்றேன். நான் திரும்ப வேண்டிய வழி அடியோடு தவறிவிட்டது என்று எண்ணிக் கொண்டேன். நீரூற்றைக் காண்பது வரையில், எவ்வளவு தூரம் கடந்துவிட்டேன் என்று நான் அறியேன். அது நேர்த்தியாக இருந்தது. தண்ணீர் கனமாய், நீலநிறமாக, நுரையின்றி இருந்தது. நான் அதன் அருகில் அமர்ந்து, பாபெஹை நினைத்தேன். தண்ணீர்க் குளுமையின் அழகை ரசிப்பதற்காக நான் வெகுநேரம் அங்குத் தங்கியிருந்தேன். திடீரென நாணல்கள் சலசலக்கத் தொடங்கின. என் புறங்கழுத்தில் வெப்பமான மூச்சுப் பட்டதை நான் உணர்ந்தேன்.

''எங்கள் உலகத்துக்கு உன் வருகை நல்வரவு ஆகட்டும். ஆயிரம் நல்வரவு உனக்கு'' என்று ஒரு களைத்துப்போன குரல் கூறியது.

நான் உலர்ந்த புல்லின்மேல் வைத்திருந்த துப்பாக்கியை எடுக்கக் கையை நீட்டினேன்.

''சுடு! கொல்லு! எங்கள் தோல்களைத் தோளில் வை, போ! ஜனங்கள் மத்தியில் பெருமையாய் நட!''

பேசியது ஒரு கிழட்டுப் புலி. உலகத்திலேயே மிகவும் கிழடான புலி அதுவாகவே இருக்கலாம். துப்பாக்கிக் கட்டையிலிருந்து அது எப்படித் தனது பாதத்தை அகற்றிவிட்டு என்னைப் பார்த்து நின்றது என்று நான் கண்டேன்.

''என்ன மனிதன் அந்த வாலி சாய்ஃபி? எப்படிப்பட்ட மனிதன் அவன்?'' என்று புலி கேட்டது.

அது தனியாக இல்லை. எங்களைச் சுற்றியிருந்த நாணல்களின் பின்னால் மேலும் அநேக புலிகள் காத்திருந்தன என்பதை நான் கவனித்தேன்.

''அவன் தன் இரண்டு சகோதரர்களையும் அமெரிக்க லாரிகளைக் கொள்ளையிடுவதற்காக அனுப்பியவன். ஒரு துப்பாக்கி

பெற்று, உங்களைச் சுட்டுக்கொண்டிருப்பவன். அரை கிலோ மீட்டருக்கு அப்பாலிருந்து, தன் துப்பாக்கியின் டெலஸ்கோப் மேலேயிருக்கும் விசையைத் தட்டி, உங்கள் நெற்றிக்கு நேரே குறிவைத்துச் சுடுகிறான். சரியாகத் தாக்கிவிடுகிறான்'' என்று நான் சொன்னேன்.

''லோரஸ்தானின் பாபெஹை உனக்குத் தெரியுமா?''

''நிச்சயமாக நான் அறிவேன்.''

கிழட்டுப் புலி என்னைச் சுற்றி வட்டமிட்டு அசைந்தது. கிழடு தட்டிய அதன் பிடரியையும், பழுப்பு நிறமாக இருந்த கண்களையும் நான் பார்த்தேன். அக் கண்கள் ஊடுருவி நோக்கின.

''அவர் நாணல் காட்டுக்குள் வருவது வழக்கம். பலமுறை பழுதுபட்டு ஒக்கிட்ட ஒரு துப்பாக்கி அவரிடம் இருந்தது. அவர் வயது முதிர்ந்தவராகி, எங்களை நேசிப்பதை நிறுத்தும் வரை நாங்கள் அவரை நேசித்து வந்தோம். அப்புறம் அடிக்கடி அவர் எங்களில் ஒருவரைச் சுட்டு, தனது இரையை வீட்டுக்குக் கொண்டு போனார். அப்போது என் உறவினன் ஒருவன் அவரை அடித்துக் கொன்றான். வாலி சாய்ஃபியை நாணல் காட்டுக்குள் கூட்டி வா'' என்று அது சொன்னது. ''அவனை நீ நாணல் காட்டுக்குள் இட்டு வரவேண்டும் என்று நாங்கள் எல்லோரும் கேட்டுக்கொள் கிறோம்'' என்று இறுதியாகச் சொன்னது.

பிறகு அது திரும்பி, நாணல்களை நோக்கியது. உடனே புலிகள், இரைஞ்சும் பிடரிகளுடன், கெஞ்சும் வால்களுடன், யாசிக்கும் பார்வைகளோடு வெளிப்பட்டன.

''வாலி சாய்ஃபியை இங்கே கூட்டி வா'' என்று அவை தங்கள் வாயை அசைத்துக் கெஞ்சின.

கிழப் புலி கூறியது :

''வாலி சாய்ஃபி இவர்களை எல்லாம் துக்கத்திற்கு உள்ளாக்கி விட்டான். இவர்களின் குழந்தைகளை அவன் தோளில் தூக்கிப் போனான். இவர்களின் தந்தைகளையும் தாய்மாரையும் வண்டி களில் போட்டுக்கொண்டு போனான்.''

எல்லாப் புலிகளும் ஏக காலத்தில் தங்கள் வாய்களை உயர்த்தி துக்கத்தோடு உறுமின. அவற்றின் செம் மீசைகளூடு கண்ணீர் உருண்டு ஓடுவதை நான் பார்த்தேன்.

''நல்லது. இப்போது என்னைப் போகவிடுங்கள். நான் வாலி சாய்ஃபியை இங்கே அழைத்து வருவேன். இங்கேயே விட்டுச் செல்வேன்'' என்றேன்.

''ம்ர்ர்...ர்...ர்...'' என்று புலிகள் உறுமின. ஆனந்தத்தோடு மண்ணைப் பிருண்டின.

கிழப் புலி என்னைப் பார்த்துச் சொன்னது: ''அந்தத் தண்ணீரில் ஒரு வாய் குடி.'' கனத்த நீல நீரிலிருந்து நான் குடித்தேன். ''நாளை உதயத்தில்'' என்றேன். ''இப்போது நான் போகட்டும்!''

''எங்கள் எல்லை வரை நானும் உன்னோடு வருவேன். உன் துப்பாக்கியை எடுத்துக்கொள்'' என்று கிழப்புலி கூறியது.

நான் துப்பாக்கியை எடுத்தேன். பாம்பைச் சுழற்றி வீசுவது போல் நான் அதை வீசி எறிந்தேன். ''அது தேவையில்லை'' என்றேன்.

புலிகள் ''ம்ர்ர்...ர்.. ர்...'' என்று கூறித் தரையைப் பிருண்டின.

நாணல்களை விலக்கிக்கொண்டு அது வழிகாட்டியது. அதன் வால் நுனி முதல் வாய் முனை வரை ஒரு முடிவற்ற சோகம் நிலைத்திருப்பதை நான் கண்டேன்.

எல்லையை அடைந்ததும், ''நன்றி, இதோ ரோடு வந்து விட்டது. இனி நான் என் வழியைக் கண்டுகொள்வேன்'' என்றேன்.

கிழப் புலி கண்களை மூடி, என் கையை நக்கியது.

* * *

வாலி சாய்ஃபி வீட்டில் இல்லை. அவன் மனைவி சோனி வீட்டுக்குள் என்னை அழைத்துச் சென்றாள். சொன்னாள்:

''ஐயா, நீங்கள் ரொம்பவும் தூசி படிந்து, ரொம்பவும் களைத்திருக்கிறீர்கள். அந்தச் சோபாவில் படுத்திருங்கள். வாலி எந்த நேரத்திலும் வந்துவிடுவார். நான் உங்களுக்காகத் தேநீர் தயாரிப்பேன்.''

நான் வெகுவாகக் களைத்திருந்ததால், சோபாவில் படுத்தேன்.

''வாலி எங்கே?'' என்று கேட்டேன்.

''அவர் நாசமாய்ப் போக...''

சோனி அழுதிருந்தாள். இப்போது அவள் துயரத்தால் தன் விரல்களைக் கடித்தவாறு இருந்தாள்.

''என்ன நடந்தது?'' என்று கேட்டேன்.

அவள் தன் சிங்கார ஆடையை அகற்றிவிட்டு அம்மணமாக என் முன் நின்ருள்.

"ஐயா, வாலி என்னை என்ன பாடு படுத்தியிருக்கிருர், பாருங்கள்."

அந்த அழகிய பெண்ணை அவன் தகர்த்து நொறுக்கி, வெறுமனே உயிரோடு மட்டும் விட்டுவைத்திருந்தான்.

"நாளை விடியற்காலை நாம் அவனை அகற்றிவிடுவோம்" என்றேன்.

வாலி சாய்ஃபி துப்பாக்கி தோளில் தொங்க வீடு வந்து சேர்ந்தான். அம்மணமாய் நின்ற மனைவியையும், சோபாவில் படுத்திருந்த என்னையும் அவன் தன் மீசையினூடாகப் பார்த்தான்.

"வாருங்கள், ஐயா. நீங்கள் உங்கள் வீடு மாதிரி நினைத்து எல்லாச் சவுகரியங்களையும் அனுபவியுங்கள். இப்போது நாம் ஜின் குடிப்போம்" என்ருன்.

ஆகவே நாங்கள் குடிக்க ஆரம்பித்தோம்.

நான்காம் முறை குடித்தபிறகு நான் சொன்னேன்: "வாலி, பொன்னிறப் புலி ஒன்று நாணல் காட்டில் வந்திருக்கிறது. பலபேர் அதைப் பார்த்திருக்கிருர்கள். அதன் தோலுக்கு இருபத்தையாயிரம் தருவதாக அமெரிக்கன் கர்னல் அறிவித்திருக்கிருர். நீ என்ன சொல்கிருய்?"

வாலி சாய்ஃபி உற்சாக வெறியில் கத்தினுன்.

"நாம் நாளைக்கே அதிகாலையில் போவோம் ஐயா. ஏய் சோனி, இன்னும் ஜின் கொண்டு வா...! இருபத்தையாயிரம்! அது தீர்ந்தது!"

நான் அந்தக் கிழட்டுப் புலியையும், நாணல்களின் பின்னுலிருந்து வந்த துயரம் நிறைந்த புலிகளையும் எண்ணிக் கொண்டேன். அவை அனைத்தும், "வாலி சாய்ஃபியை இங்கே கூட்டி வா!" என்ற அர்த்தத்தில் "ம்ர்ர்...ர்...ர்" என்று குரல் கொடுத்தன.

சோனி இப்போது வேருெரு சிங்கார ஆடையினுல் தனது காயங்களை மூடி மறைத்து, உதயவேளைக்காகக் காத்திருந்தாள்.

அடிவானம் வெளுக்கத் தொடங்கியதும், வாலி மூன்ருவது காலி பாட்டிலை வெளியே எறிந்துவிட்டுச் சொன்னுன்:

"நாம் போவோம், ஐயா."

அவன் தனது துப்பாக்கியை நன்ருகப் பரிசோதித்தான். அதை முத்தமிட்டான். நாங்கள் புறப்பட்டோம்.

சோனி ரகசியக் குரலில் என்னைக் கெஞ்சினுள்:

''ஐயா, அவரை அங்கேயே விட்டுவிடுங்கள்!''

அந்த நேரத்தில் அவளுடைய கண்கள், கிழப் புலியின் கண்களைப்போல் மட்டுமன்றி, ''வாலி சாய்ஃபியை இங்கே கூட்டி வா!'' என்று கெஞ்சிக் கேட்ட எல்லாப் புலிகளின் கண்களைப் போலவும் தோன்றின.

*   *   *

நடந்து தள்ளாடி நாங்கள் மிகுந்த களைப்புடன் அந்த இடத்தை அடைந்தோம்.

நாணல்களையும் தன் துப்பாக்கியையும் மாறி மாறிப் பார்த்தபடி, ''நான் இவைகளைச் சுட்டுப் பரத்திவிடுவேன்'' என்று வாலி அர்த்தமில்லாமல் கத்தினுன்.

நாங்கள் நீல நீரூற்றருகில், நாணல்கள் சலசலக்கும் வரை அமர்ந்திருந்தோம்.

மண்வாசனை என்னை அணுகியது. புலிகள் சந்தோஷத்தால் மண்ணைப் பிருண்டுகின்றன என நான் புரிந்துகொண்டேன்.

''ஆயிரம் நல்வரவு, வாலி சாய்ஃபி. உனக்காக நாங்கள் நீண்ட நெடுங்காலமாய்க் காத்திருக்கிருேம்.''

சாய்ஃபி, உலர்ந்த புல்மீது கிடந்த துப்பாக்கியை எடுக்கக் கை நீட்டினுன். அதே நேரத்தில் கிழட்டுப் புலி, துப்பாக்கியிலிருந்து தன் பாதத்தை உயர்த்தி, அவனை நேராக நோக்கி நின்றது.

''சுடு, வாலி சாய்ஃபி, லோரஸ்தான் ராஜாவே!''

இதர புலிகள் நாணல் புதர்களினூடாக முன்னே வந்தன. அவை தங்கள் கண்களால் என்னிடம் பேசின. ''இவனை இட்டு வந்ததற்காக நன்றி. இப்போது வீட்டுக்குப் போ. யாராவது உன்னை எல்லைவரை கொண்டுவிடுவர்... யார் போவது?''

''நான்'' என்று அவை அனைத்தும் கத்தின.

ஒரு புலி என்னேடு வந்தது. பாறைகளுக்குப் பின்புறமிருந்து அது சுடப்பட்டிருந்தது. அப்படி அடிபட்டதில் அதன் பின்பக்க இடதுகால் நொண்டியாகிவிட்டது. அது நாணல் புதர்களை விலக்கியவாறு முன்னே சென்றது. முணுமுணுத்தது.

''வாலி நெற்றியில் குறிவைத்துச் சுடுவதில் கெட்டிக்காரன். இப்போது இது என்ன நிலைமை?''

ஒரு நொண்டிப் புலியினுல் உண்மையில் என்ன பயன் என்று நானும் எண்ணத் தொடங்கினேன். சந்தேகமின்றி அது இரவில் நாணல் காட்டைவிட்டு வெளிப்பட்டு, மலை விளிம்புகளுக்கு வரவேண்டும். நட்சத்திர ஒளியினுல் போதையுற்று, நகங்கள் நீண்டிருக்கக் கால்களை நீட்டி, ஒளியோடு ஒரு நட்சத்திரத்தை எட்டிப் பிடிப்பதற்காக அது சுற்றித் தாவும். அவ்வளவுதான். அதன் அழிவை நோக்கி மகத்தான வீழ்ச்சி.

''போ'' என்றது நொண்டிப் புலி.

நாங்கள் எல்லையை அடைந்துவிட்டோம். அங்கிருந்து ரஸ்தா ஆரம்பமாயிற்று.

''நாங்கள் எல்லோரும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்'' என்று கடமை உணர்வோடு முனகிவிட்டு அது திரும்பி நடந்தது.

நான் ரஸ்தாமீது உட்கார்ந்து அதைக் கவனித்தேன். அது சாவகாசமாக நடந்தது. அங்கே நடக்கவேண்டியது எல்லாம் முடிந்திருக்கும் என்ற நிச்சய உணர்வு உடையவர்கள் அப்படித் தான் நடப்பார்கள்.

ஆனுல் நாணல் காட்டுக்குப் போகிற பாதை ஆரம்பிக்கிற சரிவின் ஓரத்தில் அந்த நொண்டிப் புலி நின்றது. அதற்கு ஏதோ தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில், அது திரும்பிப் பார்த்தது.

''போ'' என்று அது கூறியது.

நான் போனேன்.

ராபேல் ஆராம்யன்
*(1921)*

# ஒரு சிறுவனும் பெரிய லாரி டிரைவரும்

ஒரு தொழிலாளர் குடியிருப்புக்கு இட்டுச் செல்கிற செங்குத்தான இறக்கம் ஒன்றின் ஓரத்தில் ஒரு விடுதி இருக்கிறது. ஜனங்கள் அபூர்வமாகத்தான் அங்கே தங்குவர். அதனால், அங்கு ஒரே ஒரு இரவுப்பொழுதைக் கழிக்கிற யாரையும் வெகுகாலம் வரை நினைவு வைத்திருப்பார்கள். குறைந்தபட்சம் இன்னொரு நபர் வந்து தங்கும் வரையிலாவது நினைவுகூர்வர். தன் சிறு மகனுடன் தனித்து வாழும் ஒரு பெண்தான் அவ் விடுதியின் சொந்தக்காரி. ஒரு இரவை அங்கே கழிக்கவேண்டிய ஒரு சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது.

பிரயாணம் போவது குறித்தும், அயல்நாடுகளையும் கண்டறியாத நகரங்களையும் பார்ப்பதுபற்றியும் நான் என் வாழ்நாள் முழுவதும் கனவு கண்டிருக்கிறேன். ஆனால், நடைமுறையில், எனது சிறிய ஆர்மேனியாவின் எல்லைகளுக்கு அப்பால் நான் போனதே இல்லை. நான் வேறு வேலை பார்க்கத் தகுதியற்றவனாக இருந்ததனாலேயே ஒரு லாரி டிரைவர் ஆனேன் என்று மக்கள் நினைக்கிறார்கள். சில பேர் எவ்வளவு விந்தை மனிதராக இருக்கிறார்கள்! அவர்கள் பிறர்மீது எந்தப் பழியையும் சுமத்திவிடுகிறார்கள். ஒருவன் தன்னையே அறிந்துகொள்ளவில்லை என்றுகூடக் குறை கூறுகிறார்கள். உண்மையில், நான் என்னை ரொம்ப நன்றாக அறிவேன். முகம் பார்க்கும் கண்ணாடிமுன் நிற்கிறபோதெல்லாம், நீதான் உலகத்திலேயே மிகுந்த குரூபியாக இருக்கவேண்டும்; இல்லையேல் நீ ஏன் எவருடைய அன்பையும் ஒருபோதும் அடையமுடியாதவனாக இருக்கிறாய் என்று எனக்கு நானே கூறிக்கொள்ளும் அளவுக்கு நான் என்னை வெகு நன்றாக அறிவேன். ஆனாலும் நீ நல்ல இதயம் பெற்றிருக்கிறாய் என்றும் நான் கூறுவது உண்டு.

நான் அதிகம் அளக்கிறேன் என்று நினைக்கிறீர்களா? அப்படி இல்லை. அதுதான் சரியான உண்மையாகும். இல்லையெனில், விடுதியின் சொந்தக்காரியையும் அவளுடைய வாயாடிச் சிறு மகனையும் நான் ஒருபோதும் கவனித்திருக்கமாட்டேன்.

விடுதியின் முன் என் லாரியை நிறுத்தி, கீழே இறங்கி, விடுதியின் முன்னறைக்குள் நான் போன முதல் தடவை, அந்தப் பையன் என்னைச் சந்திக்க வந்தான். புன்முறுவலுடன் கேட்டான்:

''நீங்கள் வெகுதொலைவிலிருந்து வருகிறீர்களா?''

நான் அவனைப் பார்த்துச் சிரித்தேன்.

''வெகு தொலைவு என்று நீ எதைக் குறிப்பிடுகிறாய்?''

சிறுவன் தன் சட்டைப் பையிலிருந்து, கசங்கிய உலகப் படம் ஒன்றை எடுத்தான். மடிப்புகளில் கிழிந்திருந்தது. அதை அவன் மேஜைமீது பரப்பினான். ஒவ்வொரு நகரத்தையும் சுட்டிக் காட்டியவாறு சொன்னான்:

''லண்டனிலிருந்தா? பாரிஸ்? நியூயார்க்? மாஸ்கோ?''

நான் அவனை இடைமறித்தேன். உடனே குறுக்கிட்டுச் சொன்னேன்:

''இம்முறை எரவானிலிருந்து.''

பையன் படத்தின் மீது மீண்டும் குனிந்தான்.

''நான் எரவானைப் பார்த்ததேயில்லை'' என்று வருத்தத் தோடு சொன்னான்.

அப்போதுதான் அவன் அம்மா அறைக்குள் வந்தாள்.

''ஆ! அருமையான விஷயம்! கடைசியாக நமக்கு ஒரு விருந்தாளி வந்துவிட்டார். ஒரு மாதம் முழுவதும் எங்களைத் தேடி ஒருவர்கூட வரவில்லை. என் சின்ன மகன் தனியாகவே பயணம் செய்யவேண்டியதாயிற்று. பிரயாணம் போவது உங்களுக்குப் பிடிக்குமா?'' என்றாள்.

''உலகப் படத்திலா?'' என்று நான் கேட்டேன்.

''படத்தில் ஏன் கூடாது?''

உண்மைதான், ஏன் கூடாது என்று நான் நினைத்தேன். ஒருவன் ஏன் உலகப் படத்தில் பிரயாணம் செய்யக்கூடாது என்று எனக்கு நானே கேட்டுக்கொண்டேன். நான் அவர்களைப் பார்த்துச் சிரிக்கவில்லை என்று அவர்களுக்கு உறுதி கூற விரும் பினேன். நான் கூற ஆசைப்பட்டது அதுதான். ஆனால்,

''நான் பிரயாணம் செய்ய ஆசைப்படுகிறேன். உலகப் படத்திலும்தான்'' என்று சொன்னேன்.

அந்தப் பெண் என்னை நோக்கிச் சிரித்தாள். அவள் அழகாக இருந்தாள்; ஆச்சர்யப்படும்படியான அழகு அவளிடமிருந்தது

என்று நான் சட்டென உணர்ந்தேன். நான் அழகில்லாதவன் என்ற நினைப்பு எனக்கு வந்தது. அதனால்தான் அவள் என்னை விரும்பக்கூடும் என்ற எண்ணம் எனக்கு எழவேயில்லை. ஓ, அப்படிப்பட்ட ஒரு எண்ணம் என் மண்டைக்குள் ஒருபோதும் புகாது. பெண்கள் ஏன்தான் ஆணின் தோற்றத்தில் அவ்வளவு கவனம் செலுத்துகிறார்களோ என்று நான் அடிக்கடி அதிசயித்தாலும்கூட!

"நான் உலகம் பூராவும் சுற்றியிருக்கிறேன். எல்லாவித நகரங்களுக்கும் போயிருக்கிறேன். அங்கெல்லாம் எனக்கு நண்பர்கள் இருக்கிறார்களே! அது உங்களுக்குத் தெரியுமா?" என்று சிறுவன் பெருமையாகச் சொன்னான்.

"சரிதான்" என்றேன். நான் என் குழந்தைப் பருவத்தை நினைத்துக்கொண்டேன். நான் படித்த நாடுகளையும் நகரங்களையும்பற்றிய கதைகளை என் பள்ளித் தோழர்களிடம் சொல்வது வழக்கம். ஆனால் அவர்களோ, "நீயே கற்பனை பண்ணிச் சொல்கிறாய்" என்றுதான் கூறுவர். நான் வீட்டுக்கு வந்து அழுவேன். இனி வேறு எதையும் அவர்களிடம் சொல்வதில்லை என்று தீர்மானிப்பேன். ஆயினும், மறுநாள் எல்லாம் திரும்பவும் நிகழும். என்னோடு படித்தவர்களில் ஒருவன் பிற்காலத்தில் ஒரு பெரிய கப்பலின் தலைவன் ஆனான். இன்னொருவன் விஞ்ஞானியானான். மூன்றாமவன் ஒரு பெரிய நிறுவனத்தின் தலைமை அதிகாரியானான். நானோ—ஒரு லாரி டிரைவர். ஒரு சமயம் அவர்களில் ஒருவனை நான் வீதியில் சந்தித்தேன். அவன் தயவுகாட்டிப் புன்னகை புரிந்தான். "நல்லது, கனவு காண்பவனே! வாழ்க்கை உன் விஷயத்தில் எப்படி இருக்கிறது? அன்றொரு நாள் நாங்கள் பலரும் கூடியிருந்தோம். உன்னைப்பற்றிப் பேசினோம்" என்றான். என்னைப்பற்றிப் பேசினீர்களாக்கும்; என்னை அழைக்கவேண்டும் என்று நீங்கள் நினைக்கவே இல்லையே என்று நான் எனக்குள் சொல்லிக்கொண்டேன்.

"இந்த நகரங்களுக்கெல்லாம் நான் போயிருக்கிறேன்" என்று சிறுவன் சொன்னதை நான் கேட்டேன். படத்தில் அவன் சுட்டிக்காட்டுவதைப் பார்த்தேன். "நான் அங்கே போயிருக்கிறேன். எனக்கு அங்கு நண்பர்கள் இருக்கிறார்கள். நான் அங்கே வந்து அவர்களைப் பார்க்கவேண்டும் என்று அவர்கள் காத்திருக்கிறார்கள்."

"படிப்பதற்கு இருக்கிற பயண நூல்கள் அனைத்தையும் அவன் படித்துவிட்டான்" என்று அவன் தாய், என் பெயரைத்

தனது புத்தகத்தில் பதிவு செய்யும்போது தெரிவித்தாள். ''ஏன் நீங்கள் கல்யாணம் செய்துகொள்ளவில்லை?'' என்று வியப்பினுல் விழிகளை உயர்த்தியபடி அவள் கேட்டாள்.

எங்கள் கண்கள் சந்தித்தன. வாதுமைபோன்ற வடிவத்தைக் கொண்டிருந்த அவளுடைய சாம்பல் நிறக் கண்களின் அழகு என்னைத் தாக்கியது. அதனுல் அவள் கேள்விக்குப் பதில் அளிக்க மறந்தேன். அவள் என்னிடம் வருத்தம் கொள்வதற்கு மாருக, என் பார்வையைக் கண்டு தன் கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

''அட, இதைப் பாரேன்! உன்னையும் கவனிப்பதற்குச் சில பேர் இருக்கிருர்கள்'' என்று எனக்கு நானே சொன்னேன். இது அடிக்கடி நிகழக்கூடியதுபோல், 'சில பேர்' என்று சொன்னேனே தவிர, உண்மையில் என் பார்வையைக் கண்டு ஒரு பெண் தன் கண்களைத் தாழ்த்திக்கொண்டது இதுதான் முதல் தடவையாகும். ஆமாம். முதல் முதல் தடவை.

''நீங்கள் அதிகம் பிரயாணம் செய்ததால், உங்களுக்குக் கல்யாணம் பண்ண நேரம் இல்லாமல் போய்விட்டது என்று நான் யூகிக்கிறேன்'' என்று அவன் எல்லாம் தெரிந்த தோரணையில் பேசினுன்.

நான் ஆர்மேனியாவின் எல்லைகளுக்கு அப்பால் போனதேயில்லை; பெண்கள் என்னை விரும்பாததனுலேயே நான் கல்யாணம் செய்துகொள்ளவில்லை என்பதை அவர்களுக்கு நான் விளக்கிச் சொல்லவில்லை. நான் எதுவும் பேசவில்லை. அனுபவம் நிறைந்த பிரயாணியாக அந்தக் குழந்தை என்னை மதிப்பிடுகிறது; அவன் தாய் தனது விழிகளைத் தாழ்த்தினுள்....

மாலையில், எனது லாரியில் பாரம் ஏற்றியானதும், நான் அதை முற்றத்துக்கு ஓட்டிவந்து நிறுத்திவிட்டு மாடிக்குப் போனேன்.

---

விடுதியில் நான் மட்டுமே விருந்தினன். அதனுல் மிகச் சிறந்த அறை எனக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனுல், நான் என் அறைக்குப் போகவில்லை.

நடு அறையில் கிடந்த ஒரு ஈஸிச்சேரில் உட்கார்ந்து காத்திருந்தேன். நான் காத்துக்கொண்டிருந்தது மகனுக்காகவா, அல்லது முற்றத்தில் யாருடனே பேசி நின்ற அம்மாவுக்காகவா என்பதை நான் சொல்ல இயலாது.

பையன்தான் அங்கே வந்தான். நான் அவனை முதல் முறையாகக் கூர்ந்து நோக்கினேன். அவனுக்குப் பெரிய கண்கள்—அவன் முகத்தில் கண்களைத் தவிர வேறு எதுவுமில்லை என்று தோன்றும் அளவுக்குப் பெரிய கண்கள்—இருந்ததைக் கவனித்தேன்.

அவன் ஹல்லோ கூறி, எனக்கு அருகில் ஒரு நாற்காலியில் அமர்ந்தான். உட்கார்ந்ததும் கேட்டான் :

''நீங்கள் எப்பவாவது டாஹிட்டி போயிருக்கிறீர்களா?''

நான் அதுபற்றிச் சிந்தித்தேன்.

''நீ எதுக்காகக் கேட்கிறாய்?'' என்றேன்.

''விசேஷமாக ஒன்றுமில்லை. அருமையான வாழைமரங்களை அங்கு அவர்கள் வளர்க்கிறார்கள்'' என்று அவன் சொன்னான்.

நான் வாழைப்பழங்களை ருசித்ததே இல்லை. ஆயினும் உதட்டைச் சப்பிக்கொண்டே சொன்னேன் :

''நேர்த்தியான விஷயம் : வாழைப்பழங்கள் வெகு இனிப் பானவை.''

''பெர்சிய வளைகுடாவில் முத்துக் குளிப்பவர்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?''

திரும்பவும் நான் யோசிக்கலானேன். அவனுக்கு நான் எப்படி பதில் அளிக்கவேண்டும்?

''இல்லை. நான் பார்த்ததில்லை. நான் பெர்சிய வளைகுடா வுக்குப் போகையில், காலதாமதம் ஏற்பட்டது. முத்துக் குளிப்பவர்கள் எல்லோரும் வீட்டுக்குப் போய்விட்டார்கள்.''

''என்ன பரிதாபம்!'' என்று சிறுவன் சொன்னான்.

அவனது சாம்பல் நிறக் கண்களின் தோற்றத்திலிருந்து, அவன் அடுத்த கேள்வியை யோசித்துக்கொண்டிருந்தான் என்று நான் அறிந்தேன். அதற்குள் நான் முந்திக்கொண்டேன். என் கண்ணால் நான் கண்டிராத நாடுகளைப்பற்றி நானே பார்த்தது போல் அவனுக்குச் சொன்னேன். ஆப்பிரிக்காவில் சிங்கங்களையும் காட்டெருமைகளையும் வேட்டையாடுவதுபற்றியும், குள்ள மனிதர்கள் சிறுத்தைப் புலிகளைக் கொல்ல உபயோகிக்கும் சிறிய ஈட்டிகள்பற்றியும் சொன்னேன். அவன் முறுவலித்தான்.

''இந்தக் காலத்தில் யாரும் ஈட்டிகளைக்கொண்டு வேட்டை யாடுவதில்லை. அவர்கள் துப்பாக்கிகள் வைத்திருக்கிறார்கள்'' என்றான்.

அவன் தன் பையிலிருந்து, கசங்கிய உலகப் படத்தை எடுத்து மேஜைமேல் பரப்பி, மஞ்சள் வர்ணம் பூசப்பெற்ற ஆப்பிரிக்கா மீது குனிந்தான்.

''இப்போது ஆப்பிரிக்காவில் பயங்கரமான வெப்பம் நிலவும். இங்கே கிளிமாஞ்சரோ மலையடிவாரத்தில் கறுப்பு மான்கள் மந்தை மந்தையாக மேய்கின்றன'' என்ருன்.

அவன் கண்கொட்டாமல் ஆப்பிரிக்காவைப் பார்த்தான். கறுப்பு மான்களும், வரிக் குதிரைகளும், நெருப்புக் கோழிகளும் கூட்டம் கூட்டமாக என்னைக் கடந்து புதர்களை நோக்கி ஓடுவதை நான் பார்ப்பதாகத் தோன்றியது. சிங்கங்களின் அடங்கிய கர்ஜனையை, நரிகள் மற்றும் கடுவாய்களின் பயங்கரக் கூச்சல்களை நான் கேட்பதாகவும் தோன்றியது. அங்கே, படத்தின்மீது குனிந்து உட்கார்ந்திருந்த நாங்கள், யானைகளின் காலடித் தடங்களைப் பின்பற்றி இருண்ட காடுகளில் திரிந்தோம்; எங்களுக்கு முன்ஞல் குள்ள மனிதர்கள் சிறிய ஈட்டிகளைக் காற்றில் ஆட்டி அசைத்தவாறு ஓடிஞர்கள்.

''நீங்கள் எங்களோடு டீ சாப்பிடுகிறீர்களா? இந்த நேரத்துக்குச் சாப்பாட்டு அறை மூடப்பட்டிருக்கும்.''

நான் தலையை உயர்த்தினேன். விடுதித் தலைவி மிக அருகில் நின்றதைப் பார்த்தேன். அவளது வாதுமை வடிவச் சாம்பல் நிறக் கண்கள் அன்பை ஒளிபரப்பின. அவள் சிரித்துக்கொண்டிருந்தாள். இரண்டாவது முறையாக, எங்கள் பார்வைகள் சந்தித்தன. மீண்டும் அவள் தன் கண்களைத் தாழ்த்திஞள். நான் என்ன மடையன்! அவள் என்னை என் தோற்றத்தைக் கொண்டு மதிப்பிடுவாள் என்று எண்ணினேனே!

''நீங்கள் அனுமதி அளித்தால், உங்கள் பையனை நான் என்னேடு நகரத்துக்கு அழைத்துப் போவேன். சில நாட்களுக்குப் பிறகு நானே அவனை உங்களிடம் கொண்டுவந்து சேர்ப்பேன்'' என்று கூறினேன்.

''ஒவ்வொருவரும் அவனைக் கூட்டிப் போவதாக உறுதியாய்ச் சொல்கிருர்கள். ஆனல் எவரும் அப்படிச் செய்வதில்லை.''

''நான் தவருது செய்வேன்'' என்றேன்.

சிறுவன் சந்தோஷத்தால் முகம் மலரத் தனது உலகப் படத்தை மடித்தான். பெரிய உலகம் முழுவதையும் தன் சிறிய சட்டைப் பைக்குள் திணித்தான். நடு அறையை விட்டு வெளியே ஓடினன்.

காலையில் நாங்கள் கிளம்பினேம். அதுதான் சிறுவனின் முதல் பயணம். நாங்கள் பெரிய நகரத்தினூடே லாரியில் சென்றபோது, அல்லது இருவரும் சேர்ந்து அதன் வீதிகளில்

நடக்கையில் நான் எனக்குள் கூறினேன் : சீக்கிரம் நாங்கள் திரும்பிச் செல்வோம். அவன் அம்மா என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தால், வாதங்கொட்டை போன்ற தன் சாம்பல் வர்ணக் கண்களை மறுபடியும் தாழ்த்தினால், நாங்கள் இரண்டு பேரும்—இந்தச் சிறுவனும் நானும்—உண்மையான யாத்திரை போய், விந்தை நகரங்களையும், புதிய மனிதர்களையும் பார்ப்போம். பிறகு வீடு திரும்புவோம். அங்கே அவன் அம்மா எங்களுக்காகக் காத்திருப்பாள். பையன் தன் பைக்குள்ளிருந்து உலகப் படத்தை எடுத்து, நாங்கள் பார்த்த எல்லா நாடுகளையும் பற்றி அவளுக்குச் சொல்வான். டாஹிட்டி பற்றியும், பெர்சிய வளைகுடாவின் முத்துக் குளிப்பவர்கள்பற்றியும், ஆப்பிரிக்காவில் உள்ள சிங்கங்கள் மற்றும் கறுப்பு மான்கள்பற்றியும் சொல்லுவான். எங்கள் கதைகளை நாங்கள் சொல்லி முடித்ததும், புதிய யாத்திரைகள்பற்றிய கனவுகளில் நாங்கள் ஆழ்ந்துவிடுவோம். அவ் வேளையில் அவள் எங்களுக்காகத் தேநீர்—இனிமையும் மணமும் நிறைந்த புதிய தேநீர்—தயாரிப்பாள்.

எம்கிர்திச் சார்கிஸ்யன்
*(1924)*

# பெண்களே, நீங்கள் எப்படி மாறிவிட்டீர்கள்!

நீங்கள் எப்படி மாறிப்போனீர்கள்! உண்மையாகவே நீங்கள் மாறிவிட்டீர்கள். நான் இளைஞனாக இருந்தபோது, பெண்கள் உங்களைப்போல் இருந்ததில்லை. காலம் முன்னேறுகிறது. நாங்கள் காலத்தோடு நகரவேண்டும் என்று நீங்கள் சொல்வீர்கள். இதை நான் அறிவேன். இயல்பாக, அது சரியானதே. ஆனால், அது மட்டுமல்ல விஷயம். என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள். உங்கள் குதி உயர்ந்த காலணிகளும், நாகரிக உடைகளும் மட்டுமே உங்களை மாற்றிவிடவில்லை. இல்லவே இல்லை! ஆண்களின் உடைகளில் நாகரிகமானவற்றைத்தான் நானும் அணிகிறேன். ஆனால் அது என்னை ஒரு அணுகூட அதிக நவீனமானவனாக ஆக்கிவிடவில்லை. இவ்விஷயத்தில் நான் தேர்ந்தெடுப்பதற்கு வேறு வகையில்லை என்பதுதான் காரணம் ஆகும்.

ஆனால், நாம் விஷயத்தைவிட்டு விலகிவிட்டோம் என்று எண்ணுகிறேன். நான் சொல்லிக்கொண்டிருந்த விஷயத்துக்குத் திரும்புவதானால், பெண்களே, நீங்கள் ரொம்பவும் மாறிப் போனீர்கள். அதுவும் நல்லதுக்குத்தான்.

எனினும், நடந்த காரியங்கள் தங்களுக்காகப் பேசட்டும். அநேக வருஷங்களுக்கு முன்பு நான் எப்படிக் காதல் வயப்பட்டேன் என்பதையும், என் அண்டை வீட்டுக்காரனின் மகன் கேரன் சமீபத்தில் எவ்வாறு காதலில் ஈடுபட்டான் என்றும் உங்களுக்குச் சொல்கிறேன்.

## என் காதல்

எங்கள் நகரம் மிகப் பெரியது அல்ல. எங்கள் ஊரைப்போல் பதினைந்து நகரங்கள் சேர்ந்தால்தான் எரவான் போன்ற மாநகருக்கு ஈடாகக்கூடும். எங்களுக்கும் ஒரு கூட்டுப்பண்ணை இருந்தது. அதன் தலைவர் பெயர் கார்சோ. சரியாகச் சொல்வதானால், துருவேறிய கிழட்டுக் கார்சோ. கார்சோவின் காரோட்டிதான் அவருக்கு இந்தப் பட்டப் பெயரை வைத்ததாகச் சொல்கிறார்கள்.

கார்சோ நடக்க விரும்புவதில்லை. அவர் நடக்கமாட்டார். பண்ணையின் கார் அவருக்கு பூட்ஸ் மாதிரி இருந்தது. வயல்களுக்கும் ஜில்லாக் கமிட்டிகளுக்கும் அவர் காரில்தான் போனார். வழியில் யாரோடாவது பேச விரும்பினால், அவர் காரை நிறுத்தி, சன்னல் வழியே தலையை வெளியே நீட்டிப் பேசினார், விவாதித்தார் அல்லது வசை பாடினார். அது எவராக இருப்பினும் சரியே. சுருங்கச் சொன்னால், நாம் படுக்கப் போகிற வரை செருப்புகள் அணிவதுபோல், அவர் வீட்டு வாசல்படி வரை பண்ணையின் காரில் சவாரி செய்தார். அவரால் முடிந்திருக்குமானால் அவர் நேரே தன் படுக்கைக்குக் காரிலேயே போயிருப்பார். சுருக்கமாகச் சொல்வதானால், காரில் துரு ஒட்டியிருந்ததுபோல் கார்சோவும் ஒட்டிக்கொண்டிருந்தார்.

நான் அவரை அவரது முழு உயரத்தில் கண்டதேயில்லை. எனக்கு அவர் எப்போதும் ஒரு காரின் சன்னல் வழியாக வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் ஒரு தலை மாத்திரமே. நான் அறிந்ததெல்லாம், அவர் தனக்குக் கீழே நான்கு சக்கரங்களையும், சத்தமிடும் ஒரு ஊதுகுழலையும், இரவில் கண்ணைக் குருடாக்கும் ஒரு ஜதை முகப்பு விளக்குகளையும், தன் இடப்புறத்தில் ஒரு டிரைவரையும் கொண்டிருந்தார் என்பதே. அவர் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு எங்கள் எல்லோரையும்போல் போனதில்லை. போகிற போக்கில் பொங்கி எழுகிற மஞ்சள் நிறப் புழுதியோடுதான் அவர் எப்போதும் விரைந்தார். அந்தப் புழுதியை நான் மறவேன். அது காரில் ஒட்டியிருந்தது! அவர் உடைகளையும் முகத்தையும் மூடியிருந்தது; அது அவருடைய பூட்சின் பளபள வர்ணத்தைத் தின்றுவிட்டது; அவரது ஆத்மாவினுள்ளேயும்கூட ஊடுருவியிருந்தது. ''நாசமாய்ப் போக! அது துரு மாதிரி இருக்கிறது'' என்று கூறி, கார்சோ காறித் துப்புவார். உடனே டிரைவரிடம், ''அதன்மேலே ஏறிப் போ!'' என்பார்.

கார் முன்னே பாய்ந்து, ரஸ்தாவின் பளபளப்பான கருநிற முதுகின்மீது ஓடும். மஞ்சள் புழுதி, ஏதோ மந்திரத்துக்குக் கட்டுப்பட்டதுபோல் நின்றுவிடும்; ரஸ்தாவின் தளத்தில் மோதி மறைந்துவிடும்.

கார் நகருக்குள் புகுந்து, பண்ணை அலுவலகத்துக்கு வெளியே நின்றதும், கார்சோ கூட்டுப்பண்ணை விவசாயிகளை நோக்கித் தலையசைப்பார்; பிறகு, ஆபீசுக்குள் போவார்.

''அவர் கோபமாய் இருக்கிறார். ஏதோ ஒரு புயலில் அவர் சிக்கியிருக்கிறார்; அல்லது, அவரே ஒரு புயல் மாதிரி சாடப்

போகிறார்'' என்று கிழவன் மேட்டோ சொல்வான். அவன் எப்போதும் தலைவரின் கோபப் பார்வையில் ஒரு புயலை எதிர் பார்த்திருந்தான். ''அவர் ஏன் தனது மூக்கிற்கு அப்பால் பார்க்க முடியவில்லை என்று அவரை யாராவது கேட்க வேண்டும்'' என்பான்.

''அவருக்குக் கிட்டப் பார்வை. துரு அவர் கண்களைக் கவ்விக் கொண்டது. காலுக்கு அடியில் உள்ள தரையை அவரால் பார்க்க முடியாது. அவர் தன் கண்களை ஒருபோதும் வானத்துக்கு உயர்த்துவதில்லை. அவர் வெறுமனே துரு ஏறிய கிழட்டுக் கார்சோ. அவ்வளவுதான் விஷயம்!''

காதலுக்கும் கார்சோவுக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் என்னைக் கேட்கலாம். ஒரே தாவலில் எந்த முடிவுக்கும் வராதீர்கள். துரு சில சமயம் தங்கத்தைக் கொண்டுவர முடியும். ஒருபுறம் கடுகு நிறத்தில் தூசி இருக்கிறது; அதே சமயம் சில இலைகளின்மீது படிந்திருப்பதுபோல் வெள்ளிய நட்சத்திர தூசியும் இருக்கிறது என்று வாழ்க்கை நமக்குக் காட்டுகிறது.

துரு ஏறிய கிழ கார்சோவுக்கு ஒரு மகள் இருந்தாள். ஏரெல் அல்லது ஏரெவிக் என்று பெயர். அப்படியென்றால் சூரியஒளி எனப் பொருள். அவளுடைய மாற்றாந்தாய் திருமதி ரோசா என்று அழைக்கப்பட்டாள். ஏரெவிக் சூரியன்போல் இருந்தாள்; ஆனால் ரோசா ஒரு ரோசாப்பூ போல் இல்லவே இல்லை. நான் அவளை, திருமதி முள்ளி என்று குறிப்பிடுவேன். பாவம் ஏரெவிக். துருவுக்கும் முள்ளுக்குமிடையே சிக்கி அவதிப் பட்டாள்.

அவள் உதயத்துக்கும் முன்னரே எழுந்துவிடுவாள். நடுராத்திரிக்கு முன் படுக்கப் போகமாட்டாள். செய்திகள் சொல்லப்போவதிலும், சமையல் தவிர இதர வீட்டு வேலைகள் எல்லாம் செய்வதிலும் அவள் நாட்கள் கழிந்தன.

''சீக்கிரம்! நீ எங்கே போய்த் தொலைந்தாய்? வெங்காயத்தை எடுத்துத் தா!''

''ஓ, நீ செத்த பூனையைவிட ரொம்ப மோசம்! உன்னால் வேகமாக நடக்க முடியாதா என்ன?''

''படுக்கையை உலரப் போடு! சீக்கிரம் செய்!''

அதுதான் திருமதி முள்ளி. கிழட்டுத் துரு ஏறி தன் பங்குக்கு ஏவுவார்:

''ஏரெவ், என் பூட்சுக்குப் பாலிஷ் போடு!''

''ஏரெவ், என் மேல்சட்டை தூசியாக இருக்கிறது!''

''ஏரெவ், எங்குப் பார்த்தாலும் தூசி நிறைந்திருக்கிறதே!''

அவர்கள் ஏரெவ்வை விட்டுவைக்கவில்லை. ஓ ஏரெவிக்... அவள் எனக்குச் சூரியனைவிட முக்கியமானவள். நான் இதை உணர்ந்துகொண்டபோது, அவள் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் படித்தாள்; நான் பத்தாவது வகுப்பில் இருந்தேன். எங்கள் வகுப்பு அறைகள் ஹாலுக்குக் குறுக்கே எதிர் எதிராக இருந்தன. எங்கள் வீடுகள் ரஸ்தாவின் குறுக்கே எதிர் எதிராக இருந்தன. சுருங்கச்சொன்னால், நாங்கள் சூரியனையும் பூமியையும்போல் இருந்தோம்; எப்போதும் எதிர் எதிராக; எப்போதும் தூரம் தூரமாக.

ஏரெவிக் ஒல்லியாய் அழகாய் இருந்தாள். பெரிய, கரிய, மிரண்ட கண்கள் அவளுடையவை. அவள் அதிக அழகுடன் வளர்ந்தாள். அதுவே அவள் கண்கள் சிவந்து கலங்கக் காரணமாயிற்று. திருமதி முள்ளிக்கு அவளைக் காணவே சகிக்காது. அவளைத் தாக்குவதற்குக் கிட்டும் எந்த வாய்ப்பையும் முள்ளி நழுவ விடுவதில்லை. கார்சோவும் அவளைப் பின்பற்றினார். ஆகவே, ஏரெவிக்கின் கரிய பெரிய கண்கள் எப்போதும் கண்ணீரால் நிறைந்திருந்தன.

அவர்கள் வீட்டுவாசலுக்கு வெளியே நான் அவளுக்காகக் காத்திருந்தேன். ''நீ எப்படி வளர்ந்துவிட்டாய், ஏரெவிக்! நீ எவ்வளவு அழகாக வளர்ந்திருக்கிறாய்!'' என்றேன்.

அவள் ஆச்சர்யமாக என்னைப் பார்த்தாள். என்னை அவள் நம்பவில்லை என நான் கண்டேன். ''அவர்கள் என்னைப் போதுமான அளவுக்குப் பழிக்கிறார்களே, ஆர்மன். நீயும் சேர்ந்து பழிக்கவேண்டுமா?'' என்றாள்.

''ஆனால், நான் உண்மையைத்தான் சொல்கிறேன். நீ நிஜமாகவே ரொம்ப அழகு.''

அவள் கோபம் கொண்டவள்போல் தோன்றினாள். அவள் முகம் ரத்தமேறிச் சிவந்தது. ஆயினும், அவள் கண்கள் சிரித்தன. ''இவ்வளவுதானா? இன்னும் ஏதாவது உண்டா?'' என்றாள். அங்கிருந்து போக முயன்றாள்.

''இன்று மாலை பழத்தோட்டத்துக்கு வா. நான் உனக்காகக் காத்திருப்பேன்.''

அவள் ஒருகணம் தயங்கினாள். பிறகு வேகமாக வீட்டினுள் சென்றாள்.

அன்று மாலை அவள் பழத்தோட்டத்துக்கு வந்தாள். அந்த மாலை சூரியஒளி நிரம்பியதாக விளங்கியது.

''ஹல்லோ'' என்று அவள் நாணத்துடன் சொன்னாள்.

நாங்கள் வெகுநேரம் மவுனமாகவே இருந்தோம். என் உதடுகள் அதற்கு முன் பேசியிராத பிரியமான வார்த்தைகளை முணுமுணுத்தன. ஆனால், அவை அவற்றை மவுனமாய் என் மனசில் மட்டுமே முனகின. அவள் என்னைக் கூர்மையாகக் கவனித்தாள். தலை தாழ்த்தி, பேசாமலே இருந்தாள்.

''நீ வந்ததில் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். நீ ரொம்ப இனிமையாக இருக்கிறாய்; மிக இனிமையாக...''

''அதனால்தான் நான் வந்தேன். இதற்கு முன் எவரும் என்னிடம் இதைச் சொல்லவில்லை.'' இதைக் கூறியதும், தான் சொன்னதற்காக வருத்தப்படுகிறவள்போல் அவள் திரும்பவும் மவுனமானாள். பிறகு, சில நொடிகள் கழித்து, ''நீ விளையாட்டுக்குச் சொல்லவில்லையே? அப்படிச் சொன்னாயா, ஆர்மன்?'' என்று கேட்டாள்.

''சத்தியமாய்ச் சொல்கிறேன், நீ சூரியன்போல் இருக்கிறாய், ஏரெவிக்!''

நாங்கள் நகருக்குத் திரும்பி நடந்தோம். மனமில்லாமலே பிரிந்தோம்.

அது பேச்சுகள் இல்லாத, முத்தங்கள் இல்லாத, காதலாக இருந்தது. ஈடுகள், நம்பிக்கைகள் அல்லது வாக்குறுதிகள் இல்லாத, பொங்கிப் பிரவாகிக்கும் பெரிய காதல் அது. நாங்கள் மனசால் முத்தமிட்டுக்கொண்டும், ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டும், மவுனமாக நடந்தோம். பிறகு அதே பாதையில் வீட்டுக்குத் திரும்பினோம். நெடுநேரம் இல்லாமல் போனதற்காகத் திருமதி முள்ளி ஏரெவிக்கை இரண்டுமுறை அடித்தாள்.

இதற்கிடையில், வயல்களில் வசந்தம் வந்து சேர்ந்தது. அது எங்களைக் கூப்பிட்டுக்கொண்டிருந்தது. ஒரு நாள் பள்ளிக்கூடம் முடிந்ததும், ஏரெவிக்கும் நானும் வயலட் பூக்கள் பறிப்பதற்காகப் போனோம்.

ஆண்டவனே, எப்படிப்பட்ட வசந்தம் அது! மலைகளும், சமவெளிகளும், பள்ளத்தாக்குகளும் பசுமையில் மூழ்கி, வெயிலில் காய்ந்துகொண்டிருப்பதாகத் தோன்றின. எண்ணற்ற மலர்கள் எங்கும் சிதறிக்கிடந்தன. அப்போதுதான் முதல் தடவையாக ஏவெரிக் சந்தோஷமாகச் சிரித்ததை நான் கேட்டேன். அவள் வண்ணத்துப்பூச்சிகளைத் துரத்திக்கொண்டு அங்குமிங்கும்

ஓடினாள். அப்புறம் ஓடையில் குதித்தாள். என்மீது தண்ணீரை வாரி இறைத்தாள்.

''நான் பைத்தியமாகிவிட்டேன், இல்லையா?'' என்றாள்.

இப்போது அவள் உண்மையாகவே சூரியன்போல் இருந்தாள். அவள் சேகரித்த மலர்க் கொத்துகளை ஒழுங்காக அடுக்குவதற்காகப் புல்லின்மீது உட்கார்ந்ததும், நான் குனிந்து அவளுடைய மெலிந்த கழுத்தில் முத்தமிட்டேன். அவள் சருமம் கதகதப்பாகவும் வெல்வட்போல் மென்மையாகவும் இருந்தது. என் உதடுகள் பூக்களையும் சூரிய ஒளியையும் சுவைத்தன. அவள் தடுக்கவில்லை. ஆனால், நான் அவள் முகத்தைப் பார்த்த போது, அவள் கண்கள் நீர் நிறைந்து பயந்துபோயிருந்ததைக் கண்டேன். அவள் அழத் தொடங்கினாள்.

''நீ ஏன் அப்படிச் செய்தாய்?'' என்று கூறி, அவள் தன் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டாள். நான் செய்ததில் ஏதேனும் தவறு இருந்ததா என்ன? அவளை முத்தமிட்டதில் என்ன தப்பு? அவள் மீண்டும் ஏச்சு வாங்கியதுபோல், அவள் கண்கள் கலங்கிச் சிவந்தன. ஆனால், நான் அவளை முத்தம்தானே இட்டேன்!

நாங்கள் வீடு திரும்பலானோம். திடீரென்று எங்களைச் சுற்றி புழுதிப்படலம் எழுந்தது. ஏரெவிக் நிலைகுலைந்து நின்றாள். ''ஓ, அப்பா!'' என்றாள்.

இதற்குள் அவள் அப்பா கார் கதவைத் திறந்தார். தூசி படிந்த பூதம் ஒன்று எங்களை நோக்கி வந்தது. அப்போதுதான் கார்சோவுக்கு நான்கு சக்கரங்கள் இல்லை; இரண்டு கால்களே இருந்தன என்று கண்டேன். அவர் அவ்வளவு பெரியவராய், அகன்ற தோள்களை உடையவராய் இருப்பார் என்று நான் கனவிலும் கருதியதில்லை.

''நீ இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய், ஏரெவிக்?''

முதலில் அவள் தன் பூங்கொத்தின் பின் மறைய முயன்றாள். பிறகு மவுனமாக அதைத் தன் தந்தைக்கு அளித்தாள். ஆனால் அவர் பூக்களை மண்ணில் விட்டெறிந்தார்.

''இங்கே இந்தப் பிச்சைக்காரப் பயலுடன் என்ன செய்து கொண்டிருக்கிறாய்; துப்புக் கெட்டவளே?'' என்று அவர் கத்தினார்.

புழுதி பூக்களை விழுங்கியது. எங்களையும் அது விரைவில் விழுங்கிவிடும். கார்சோ என் பக்கம் திரும்பினார். ''எச்சரிக்கையாக நடந்துகொள், பையா! நீ உன் தகுதிக்கு மீறிய செயலில்

இறங்குகிறாய்!'' என்றார். ஏரெவிக்கின் கூந்தலைப் பற்றி இழுத்து அவளைக் காருக்குள் தள்ளினார். அது, புழுதியைக் கிளப்பியவாறே உறுமிச் சென்றது. அந்தப் புழுதி கடுகு நிறத்தில் காணப் பட்டது. ஒ, அந்தக் காரை நன்றாகக் கழுவிச் சுத்தப்படுத்த வேண்டும்!

அன்று மாலை வயோதிகர்கள் பண்ணை அலுவலகத்துக்கு வெளியே கூடி நின்று பேசினார்கள்: ''அவர் திரும்பவும் கோபமாக இருக்கிறார். அவர் ஒரு புயலில் சிக்கியிருக்கிறார்; அல்லது அவரே ஒரு புயல் மாதிரி சீறப்போகிறார்'' என்று கிழவர் மேட்டோ சொன்னார். ''அவர் ஏன் தன் மூக்கிற்கு அப்பால் பார்க்க முடியவில்லை என்று அவரிடம் யாராவது கேட்க வேண்டும்.''

''அவருக்குக் கிட்டப் பார்வை. துரு அவர் கண்களைத் தின்று விட்டது. தன் காலடியில் இருப்பதை அவரால் காண இயலாது. அவர் தன் கண்களை வானத்தின் பக்கம் திருப்பியதேயில்லை. ஆ, பேசி என்ன பிரயோசனம்? அவர் துரு ஏறிய கிழ கார்சோ. அவ்வளவுதான் விஷயம்.''

புயல் எங்கள் தலைமீது வெடித்தது. நாங்கள் சந்திப்பது சாத்தியமே இல்லை என்றாயிற்று. பள்ளிக்கூடத்தில் என்னிடம் வருவதற்குக்கூட ஏரெவிக் பயப்பட்டாள்.

படித்துத் தேறியதும் நான் மேல் படிப்புக்காக ஏரெவான் நகருக்குப் போனேன். சிறிது காலத்துக்குப் பிறகு, ஏரெவிக்கிற்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்று அறிந்தேன். அதன் பிறகு, துரு ஏறிய கார்சோ தன் பதவியிலிருந்து நீங்கியதுபற்றிக் கேள்வியுற்றேன். இப்போது அவர் இரண்டு கைகளும் இரண்டு கால்களும் பெற்றிருக்கிறார் என்றும், அவர் நடப்பதற்குத் தன் கால்களை உபயோகிக்கிறார் என்றும் ஜனங்கள் சொல்கிறார்கள். நகருக்குச் செல்லும் வழி நன்கு செப்பனிடப்பட்டிருக்கிறது. இப்போதெல்லாம், கார்களின்மீதும், ஆட்களின் கண் இமைகள் மேலும், அவர்களது ஆத்மாவினுள்ளும் ஒட்டிக்கொள்ளும்படி, ரஸ்தாவில் புழுதி கிளம்புவதில்லை.

என் இதயத்தின் அடியில் ஒரு இடத்தில் ஏரெவிக்கின் நினைவு நிலைத்திருக்கிறது. அவள் கழுத்து, பூக்களின் சூரிய ஒளியின் சுவையைப் பெற்றிருந்ததும் நினைவிருக்கிறது.

விசித்திரம்தான்; இல்லையா, பெண்களே? ஆனால், இது புராதன வரலாறு இல்லை, தெரியுமா?

இதெல்லாம் இருபது வருஷங்களுக்கு முந்தி நடந்ததுதான்.

## கேரனின் காதல்

''ஹாய், கேரன்!''

ஏரெவிக்தான் கூப்பிட்டாள். அவள் எங்கள் சன்னல்களுக்கு வெளியே தலைகாட்ட வேண்டியதுதான்; எங்களுக்கு உணர்ச்சி பொங்கும். திடீரென்று எங்கள் உள்ளங்களில் ஆனந்தம் நிரம்பியதுபோலிருக்கும். ஏரெவிக் நீலவர்ண உடையில், வானத்தின் ஒரு துணுக்குக் கீழிறங்கி எங்களிடம் வந்ததுபோல் விளங்குவாள். கேரன், ''மெரினு'' கீதத்தைச் சீட்டி அடித்தபடி, படிக்கட்டில் இறங்கி ஓடுவான். பிறகு, ஏரெவிக்கின் கையோடு தன் கையை இணைத்துக்கொண்டு, காதல் பாதையில் வேகமாக ஓடுவான். தனது மதிப்புமிக்க வானத் துணுக்கையும் தன்னோடு இழுத்துக்கொண்டு போவான்.

முற்றம் எங்கள் கண் முன்னே இருண்டுவிடும். அரைச் செவிடாகி, முதிர்ந்து தளர்ந்துவிட்ட, எண்பது வயதுக் கிழவரான வானேகூட, அவர்களைப் பார்த்துப் பெருமூச்செறிந்தார். அவருக்கே கேட்காத, ஆனால் எங்களுக்குத் தெளிவாகக் கேட்கும் ஒரு குரலில், ''ஆ, என்ன அற்புதமான பெண்! இவளைப் போன்ற ஒருத்தியை நான் முத்தமிட விரும்புகிறேன்'' என்பார்.

எங்கள் பக்கத்து வீட்டு எரானூய் அத்தை அவரை ஆங்காரத்தோடு பார்த்து, ''இந்த வயசிலுமா! அவர் தன்னைப்பற்றி வெட்கப்படவேண்டும்!'' என்று கூறுவாள்.

ஏரெவிக் வெறுத்து ஒதுக்கிய கேரோ, எங்கள் அண்டை வீட்டுக்காரன். ஏரெவிக்கும் கேரனும் போன பின்னர் மாடிக்குப் போவான்; காஸியோவின் ''சிரி, கோமாளி, சிரி'' என்ற பாடலை—பாக்லியாக்கியின் கீதத்தை—தொண்டை வறளும் வரையில் பாடுவான். ஆனாலும், அவன் ஒருபோதும் சிரித்ததில்லை. அப்புறம், வேறு எங்காகிலும் ஆறுதல் தேடுவதற்காக அவன் வெளியே போவான்.

இக் காட்சி தினசரி நடைபெற்றது. அந்தப் பெண் வராவிட்டால், முற்றத்தில் வசித்த அனைவரும் கவலைகொள்வார்கள்.

''இன்று சீதோஷ்ண நிலைமை ரொம்ப மோசமாகிவிடும். மழை பெய்யப்போகிறது'' என்று கிழவர் வானே, அன்று நாள் வெகு இனியதாக இருந்தபோதிலும், அறிவிப்பார்.

எரானூய் அத்தை அவரை அனுதாபத்தோடு நோக்குவாள். ''அப்பாவி மனிதர். இந்த வெயிலிலும்கூட அவருக்குக் குளிர்கிறது! வயதாகிவிட்டது, அதுதான் காரணம்'' என்பாள்.

கேரோ தென்படமாட்டான். வழக்கமான பாடலைப் பாடவும் மாட்டான். அவன் தனது குரலைப் பாதுகாத்தான் போலும்.

அவள் வரத் தாமதமானால், கேரன் மெதுவாகப் படிகளில் இறங்கிப்போவான். அவன் கால்கள் எப்படிச் சோர்ந்து நடந்தன என்று நாங்கள் உணர முடியும். அவன் சீட்டி அடிக்காமல் இருந்தால், ஏரெவிக் வரவில்லை என்று அர்த்தம். அவன் திடீரென்று சீட்டி அடிக்கத் தொடங்கினால் நாங்கள் அனைவரும் நிம்மதியாக மூச்சுவிடுவோம். அவர்கள் சேர்ந்து போவதைப் பார்ப்பதற்காக பால்கனிக்கு விரைவோம்.

எங்கள் கட்டடம், மண்டி நின்ற புதர்கள் மற்றும் மரங்களின் பசுமையில் மறைந்திருந்தது. வருஷம்தோறும் மேன்மேலும் உயரமாகவும் அடர்த்தியாகவும் வளர்ந்து வந்த அவை எங்கள் அழகான கட்டடத்தை ஒரே அடியாக மறைத்து, அந்நியர் கண்களில் பட்டுவிடாதபடி பேராசையோடு பாதுகாத்தன. இந்த அடர்ந்த பசுமையில் மிகவும் ஆறுதலான ஒரு விஷயமும் இருந்தது. போக்குவரத்து இரைச்சல்களை அது கிரகித்துக் கொள்கிறது; கோடைகால வெப்பத்திலிருந்து எங்களைக் காப்பாற்றுகிறது. குளிர் காலத்தில், மரங்கள் கடும் பனியால் மூடுண்டு சைபீரியாவின் தைகாப் பெருநில மரங்களைப்போல் காட்சி தரும். இலையுதிர்காலத்தில், எல்லாம் மொட்டையாக நிற்கையில், எங்கள் தோட்டம் கிழவன் வானேவை ஒத்திருக்கும். அப்போது, தோட்டம் குளிர்ந்திருக்கிறது. கிழட்டு வானேவும் குளிருடன் இருக்கிறார். குளிர்காலத்தில் சூரியன்கூட அவற்றைப் பார்ப்பதனால் குளிரடைந்துவிடுவதாகத் தோன்றும்.

எல்லோரும் எங்கள் தோட்டத்தைக் காதலர் தோட்டம் என்று அழைக்கிறார்கள். காதல் ஜோடிகள் வருஷம் முழுவதும், பகலிலும் இரவிலும், எல்லா நேரங்களிலும் இங்கே முத்தமிடுகிறார்கள். ஒரு நாளைக்கு இருபத்துநான்குமணி நேரத்துக்கும் அதிகமாக இருக்குமானால், அவர்கள் அப்போதும் முத்தமிடுவார்கள்.

வாழ்க்கையில் நல்லதாக இருக்கிற அனைத்தும் நன்றாகப் பற்றிப் பரவுகின்றன. முக்கியமாக, முத்தமிடுவது. ஆகவே, கீழே முத்தமிட்டுக்கொண்டிருக்கும் காதலர்களைப் பார்க்கையில், இரண்டு பிள்ளைகளின் தகப்பனான நான்கூட அவர்கள் வழியைப் பின்பற்றவேண்டும் என்ற உணர்ச்சியை அடைகிறேன். பத்து வருஷங்களுக்கு முன்பு என் மனைவியின் முத்தத்திற்காக எவ்வளவு ஆசைப்பட்டேனே அதே ஆர்வத்துடன் உள்ளே போகிறேன்.

சுருங்கச்சொன்னால், கேரனும் ஏரெவிக்கும் காதலித்தார்கள். அவர்கள் காதல் எங்கள் அனைவருக்கும், என்னில் தொடங்கி கிழ வாளே ஈருக, எல்லோருக்கும், நல்ல உதாரணமாக விளங்கியது.

குளிர்காலத்தில் கேரனும் ஏரெவிக்கும் எங்கள் கட்டடத்தின் கீழ்ப்பகுதியில் தாழ்வாரத்தில் சந்திப்பார்கள். இரவில் வெகு நேரம் ஆனபின் பிரிந்து போவார்கள்.

''நல்லது. நான் போகவேண்டிதுதான். எனக்கு முத்த மிட்டு விடைகொடு'' என்று ஏரெவிக் கூறுவாள்.

''நான் உன்னை வீடுவரை கொண்டுவிடுவேன்'' என்று சொல்லி, கேரன் அவளை முத்தமிடுவான்.

''உனக்கு ஜலதோஷம் ஏற்படும், அன்பே. கூட வராதே'' என்று ஏரெவிக் மிக மென்மையான குரலில் சொல்லுவாள்.

''உனக்கு ஜலதோஷம் பிடிக்காதோ?''

அவர்கள் விவாதிக்கத் தொடங்குவர். பிறகு கேரன் அவளை வீட்டுக்கு இட்டுச் செல்வான். திரும்பி வருகையில், உற்சாகம் இழந்தவனாய், குளிரால் பாதிக்கப்பட்டுக் காணப்படுவான். அவர்களைப்பற்றி எவரும் மோசமான வார்த்தை எதுவும் சொல்லமாட்டார்கள்.

''அவர்கள் இரண்டு பேரையும் ஒன்றாகப் பார்ப்பதே ஒரு சந்தோஷம்தான்'' என்று எரானூய் அத்தை சொன்னாள்.

அவன் தேர்ந்தெடுத்திருக்கிற காதலியைப்பற்றி, கேரனின் அம்மா வெகுவாகச் சந்தோஷப்பட்டாள். தனது எதிர்கால மருமகளைப் பார்த்துக்கொண்டே, ''இவளைப்போல் இன்னொரு பெண்ணை இந்த நகரிலேயே காண முடியாது'' என்று அவள் சொன்னாள்.

அவள் சொன்னது சரிதான்.

அந்த இளம் காதலர்களின் சந்தோஷம் இரண்டு தடவைகள் ஏறக்குறைய தகர்ந்து நொறுங்கும் நிலையை அடைந்தது. இரு முறையும் காதல் அனைத்தையும் வென்றது.

வசந்தம் வந்ததும். ஏரெவிக் தனது மேலங்கியை உதறி எறிந்தாள். மறுபடியும் நீலவானத்தின் ஒரு துணுக்கு பூமியில் துள்ளித் திரிவதாகத் தோன்றியது. வசந்தம் ஓவிய நிபுணனின் வர்ணப்பலகையை எடுத்துச் சென்றுவிட்டதாகவும், அதனா லேயே பூமி நெடுகிலும் ஒரே வர்ணவிஸ்தாரம் கொட்டிக் கிடப்ப தாகவும் தோன்றியது.

கேரன் வசந்த காலத்தில் பிறந்தவன். ஏரெவிக்கும் வசந்தத்தின்போது பிறந்தவள் என்று நான் அறிவேன். அது எனக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனால், அப்படித்தான் இருக்கும் என்று நான் யூகிக்கிறேன். ஏனெனில், வசந்தம், வசந்த காலத்தில்தான் பிறக்க முடியும். இதில் எனக்கு திட நம்பிக்கை உண்டு.

கேரனின் பிறந்த நாளை, கட்டடம் முழுவதுமே கொண்டாடுவது வழக்கம். ஒவ்வொரு பகுதியினரும், அவ் விசேஷ நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காகத் தங்கள் பிரதிநிதியை அனுப்பினார்கள். இயல்பாக, ஏரெவிக்தான் அனைவரிலும் மிகுந்த சந்தோஷம் கொண்டிருப்பாள்.

புறக்கணிக்கப்பட்ட கேரோ தனக்குப் பிடித்த ''சிரி, கோமாளி, சிரி'' பாடலைப் பாடியதும், ஏரெவிக்தான் மற்றவர்களைக் காட்டிலும் பலமாகக் கைதட்டினாள். பிறகு கேரோ மீண்டும் பாடினான். அவர்கள் ''ஸ்வாலோப் பறவைகளின் நடனம்'' என்ற இசையை மீட்டியதும், ஏரெவிக்கைத் தன்னுடன் நடனம் ஆடும்படி கேரோ கேட்டான். மாலை நேரம் முழுவதும் அவர்கள் ஆடினார்கள்.

அன்று இரவு கேரோதான் ஏரெவிக்கை வீட்டுக்கு இட்டுச் சென்றான் என்றும், அவளிடம் தனது காதலை அவன் தெரிவித்தான் என்றும் மறுநாள் எல்லோரும் பேசிக்கொண்டார்கள். அதை யார் கண்டறிந்தது என்பது ஒருவருக்கும் தெரியாது. ஆனால் ஒன்று தெளிவாகத் தெரிந்தது: அந்தப் பெண் அவன் பேச்சை அன்புடன் கேட்டுக்கொண்டிருந்தாள்; பிரிந்தபோது, புன்முறுவல் பூத்து, ''போய் வா, கேரோ—கேனியோ'' என்றாள்.

இந்தப் பரபரப்பான செய்தி எங்கள் முற்றத்தில் பல சூடான சர்ச்சைகளையும், அதிகமான விமர்சனங்களையும் உண்டாக்கியது.

''த்சு, த்சு. அவளும் மற்ற எல்லா அழகான பெண்களையும் போன்றவள்தான் என்று சொல்கிறீர்கள்?'' என்று எராநூய் அத்தை அங்கலாய்த்தாள்.

உரக்கக் கத்தியும் சைகைகள் காட்டியும் இந்த விஷயம் கிழட்டு வானோவுக்கும் புரியவைக்கப்பட்டது. விநோதமாகத் தோன்றலாம், அவர் சிறிதளவுகூட ஆச்சர்யப்படவில்லை.

''அந்தப் பெண் பார்வைக்கு அழகானவள். அவ்வளவு அழகான பெண் ஒருவனுக்கு மட்டும் என்பது அளவுக்கு மீறியதாகவே இருக்கும்'' என்று அவர் மெதுவாகச் சொன்னார்.

இளையவர்கள் சிரித்தார்கள். கிழவர் வானோ சுதந்திரக் காதலில் நம்பிக்கை உடையவர் என்பதை இவ்விதம் அவர்கள் கண்டுகொண்டார்கள்.

ஏரெவிக் அவனைத் தேடி வராதபோதிலும், கேரன் இன்னும் ''மெரினு'' கீதத்தைச் சீட்டியடித்துக்கொண்டிருந்தான். அவள் வராமல் இருந்ததால் இப்போது எவரும் கவலைப்படவில்லை. அவள் கேரனுக்குத் துரோகம் இழைத்துவிட்டாள்; அப்படியிருக்கையில் அவளைப்பற்றி ஏன் கவலைப்படவேண்டும்? ஆயினும், ஒரு சோக மேகம் எங்கள் முற்றத்தில் கவிந்துதான் இருந்தது.

கேரோ பாட்டுப் பாடுவதை நிறுத்திவிட்டான். அவன் தனது பால்கனி பக்கம் வந்தால், எரானூய் அத்தை தனது வெறுப்பான பார்வையை அவன்மீது பாய்ச்சிவிட்டுச் சொல்லுவாள்: ''இன்னொருவனின் காதலியை இவன் திருடிக் கொள்வான் என்று எனக்கு எப்பவும் தெரியும். ஒரு கொள்ளைக் காரனின் மூஞ்சி இவனுக்கு இருக்கிறது.''

''அவன் நேர்த்தியானவன். பெண்கள் அவனை விரும்புகிறார்கள். நான் அவனைப் பார்த்துப் பொறாமைப்படுகிறேன்'' என்று கிழட்டு வானோ பதிலுக்குச் சொன்னார்.

''அவனிடம் அப்படி நேர்த்தியானது என்ன இருக்கிறது? அவன் தன் நண்பனுக்குத் துரோகம் செய்துவிட்டான்.''

''ஆனாலும்கூட'' என்று கிழட்டு வானோ அர்த்தபுஷ்டியோடு கூறினார்.

''கேரன்!''

ஏரெவிக்தான் கூப்பிட்டாள். நாங்கள் எல்லோரும் அவரவர் பால்கனிக்கு ஓடினோம். மறுபடியும் எங்கள் கண்கள் மகிழ்ச்சியினால் ஒளிர்ந்தன. பிறகு, கேரன் ''மெரினு''வைச் சீட்டி அடித்தவாறு கீழே ஓடினான். ஏரெவிக்கின் கரத்தோடு கரம் கோத்து, காதல் பாதையில் வெகு வேகமாக ஓடினான். தனது மதிப்பு மிக்க வானத் துணுக்கையும் தன்னோடு இழுத்துக் கொண்டு போனான்.

''இது எனக்குப் புரியவில்லை'' என்றார் கிழவர் வானோ.

''ஏன் புரியவில்லை? அவள் கேரோவைப் புறக்கணித்து விட்டாள்!'' என்று எரானூய் அத்தை அவரிடம் உரக்கச் சொன்னாள்.

வானோ உடனே தன் கருத்தை மாற்றிக்கொண்டார்: ''ஆமாம். அவள் நல்ல பெண். அவள் பெற்றோர்கள் வாழ்க!'' என்றார்.

கேரோ தன் அறைக்குள் அடைந்துகிடந்து பாட்டுப் பாடினுன். கேனியோவின் துயரத்தைத் தனது துயரமாக்கிக் கொண்டான். கேரோ அந்தப் பெண்ணை அபகரித்துக் கொள்ள விரும்பியது உண்மைதானு என்று அண்டைவீட்டுக்காரர்கள் கேரனைக் கேட்டார்கள். உண்மைதான் என்று கேரன் சொன்னுன். அவன் அமைதியாக இருந்தான். கேரோபற்றிப் பேசுகையில் அவன் குரலில் கோபம் தொனிக்கவில்லை. ஆனுல் அவ்விஷயமாக வேறு எந்தத் தகவலும் அவன் தரவில்லை. ஆயினும், அவன் தனது ஏரெவிக்பற்றி மிகவும் பெருமைப் பட்டான்.

''நான் ஒருவன் மட்டும்தான் ஏரெவிக்கைக் காதலிக்கிறேன் என்று நினைக்கிறீர்களா? தம்மை மணந்துகொள்ளும்படி ஏகப் பட்ட பேர் அவளைக் கெஞ்சிக் கேட்கிருர்கள். அவர்கள் அனைவருக்கும் மறுப்புக் கூறுவதற்கே அவளுக்கு நேரமில்லை.''

கேரன் சந்தோஷமாக இருந்தான். நாங்கள் எல்லோரும் ஆனந்தம் கொண்டோம்.

திடீரென்று கோபம் மறுபடியும் அச்சுறுத்தியது.

ஏரெவிக்கின் பெற்ருேர் அவர்கள் கல்யாணத்துக்குச் சம்மதிக்கவில்லை. பேராசிரியரான அவள் தந்தை அதைப்பற்றிப் பேசக்கூட விரும்பவில்லை. தன் மகளுக்குக் கல்யாணம் செய்து வைக்கும் எண்ணமே தனக்கு இல்லை என்றும், அப்படி என்றைக் காவது செய்தாலும் ஒரு செம்மானின் மகனுக்கு அவளைக் கொடுக்கப்போவதில்லை என்றும் கேரனின் பெற்ருேரிடம் அவர் சொன்ஞர்.

''நீர் அளவுக்கு அதிகமாக எடுக்கிறீர். உம்மால் விழுங்க முடிகிற அளவுக்கும் அதிகமாகக் கடிக்க வேண்டாம்'' என்று அவர் கேரனின் தந்தையிடம் கூறிஞர்.

எங்கள் கட்டடத்தில் வசித்த அனைவரும் கோபமும் ஆத்திரமும் அடைந்தார்கள்.

''அவள் தந்தை ஏன் தனது மூக்கிற்கு அப்பால் பார்க்க முடியவில்லை என்று அறிய விரும்புகிறேன்'' என எரானூய் அத்தை சொன்ஞள்.

''அவருக்குக் கிட்டப் பார்வை. அவர் தனது 'பெட்டி-பூர்ஷ்வா' நோக்கைப் பிடித்துக்கொண்டிருக்கிருர்'' என்று கிழவர் வாஞே முடிவு கட்டிஞர்.

''கேரன்!''

அப்போதுதான் விடிந்திருந்தது. கட்டடத்தில் குடியிருந்தவர்கள் அரைகுறை ஆடைகளோடு அவரவர் பால்கனிக்கு ஓடிவந்தார்கள். ஏரெவிக்தான் கூப்பிட்டாள். அவள் கீழே நின்று சிரித்துக்கொண்டிருந்தாள். எத்தகைய பிரகாசமான, வெயில் நிறைந்த இனிய நாள் அது! ஏரெவிக் கைகளில் ஒரு சிறு பெட்டியும் ஒரு மூட்டையும் வைத்திருந்தாள். அவள் கண்களில் வைராக்கியம் நிறைந்திருந்தது. எல்லாத் தாக்குதல்களையும் எதிர்த்து நின்ற காதலினுல் அவை மின்னின.

கேரன், ''மெரினு'' கீதத்தைச் சீட்டி அடித்தவாறே கீழே ஓடினுன். உடனேயே இருவரும் சந்தோஷமாகப் படி ஏறி மேலே வந்தார்கள். கேரனின் அம்மா வாசலிலேயே அவர்களை வரவேற்ருள். ''ஏரெவிக், என் சூரிய ஒளியே!'' என்ருள்.

ஏரெவிக் இப்போது எங்களைச் சேர்ந்தவள். அண்டை அயலார் பலரைக்கொண்ட எங்கள் பெரிய குடும்பத்தில் அவளும் ஒரு நபர் ஆகிவிட்டாள். எங்கள் சேர்மானத்தை, எங்கள் செல்வக் களஞ்சியத்தை, எண்ணி நாங்கள் மகிழ்கிரேும். ஏரெவிக்கின் அலைபாயும் சிரிப்பு, கானியோவின் உரத்த துயரப் புலம்பலை மூழ்கடித்துவிட்டது. நீலவானத்தின் இந்தத் துணுக்கு இப்போது உயரே ஐந்தாவது மாடியில், வானத்துக்கு நேராகக் குடியிருக்கிறது.

''அவள் தன் வீட்டைக் கண்டுகொண்டாள்'' என்று எரானூய் அத்தை சொன்னுள்.

''காதல் அமரத்துவமானது. மரணத்தைவிட வலியது காதல். மாக்சிம் கார்க்கி இப்படித்தான் சொல்கிருர்'' என்று கிழவர் வானே கூறினுர்.

ஆமாம். காதல் வலிமையானதுதான். ஆனுல் வலிமை மிகுந்திருக்கிறவர்களுக்கு மட்டுமே.

நீங்கள் எவ்வளவு மாறிப்போனீர்கள், பெண்களே. உண்மையாகவே மாறிவிட்டீர்கள். உலகமும் உங்களோடு மாறுதல் பெறுகிறது. இதை நீங்கள் அறிவீர்கள். அரைச் செவிடும் முற்றிலும் தளர்ந்துவிட்டவருமான எண்பது வயது வானேகூட மாறிப்போனுர்.

நீங்கள் எப்படி மாறிவிட்டீர்கள்...

அகாசி ஐவாசியன்
*(1925)*

# ரகசியப் பேச்சு

எகோர் பூமன்ட்ஸ் திடீரென்று தன் சொந்தக் குரலைக் கேட்டுச் சட்டென நின்ருன். நடுத்தெருவில் அவன் உரக்கப் பேசியிருக்கிருன். குழப்பமுற்று அவன் சுற்றிலும் நோக்கினுன். சிறிது தொலைவில் சதுக்கத்தில் உள்ள ஒரு கறுப்புக் கட்டடத்தின் ஐந்தாவது மாடி சன்னல் ஒன்றிலிருந்து ஒரு பெண் கீழே பார்த்துக்கொண்டிருந்தாள். டாக்சி நிற்கும் இடத்தில் இரண்டு டிரைவர்கள் தங்கள் வண்டிகள்மீது சாய்ந்து நின்றபடி பேசிக் கொண்டிருந்தார்கள். அவை ''ஏரோஃப்ளோட்''டின் நகர ஏஜன்சிக் கட்டடத்தின் முன்னுல் நின்றன. அந்தக் கட்டடம் உருக்குலைந்த அட்டைப்பெட்டி மாதிரித் தோன்றியது. ஒரு ஸ்திரீ ஒரு பெஞ்சில் உட்கார்ந்திருந்தாள். அவர்களில் யாருக்கும் அவன் பயனற்றவன். அவன் அமைதி அடைந்தான். ஆகவே யாரும் அவனைக் கவனிக்கவில்லை. அவனது மெலிந்த, பரிகசிப்புக்குரிய, உடலின் சேஷ்டைகளை எவரும் பார்க்கவில்லை. அவனது கூர்மையான, எரிச்சலுற்ற குரலை ஒருவரும் கேட்கவில்லை. எகோர் சவரம் செய்யப்படாத தனது மோவாயைத் தடவினுன். குற்ற உணர்வால் குறுகினுன். கட்டடத்தின் சுவரைத் தொட்டான். தன் வழியில் தொடர்ந்து நடந்தான். இதுபோல் தானுகவே உரக்கப் பேசிக்கொண்டிருப்பதை அவன் பலமுறை உணர்ந்தது உண்டு. அநேக முறை மற்றவர்கள் கண்டிருக்கிருர்கள். அந்தக் காட்சியை எகோர் தன் மனத்திரையில் மீண்டும் கண்டபோது, வெட்கத்தால் குழம்பித் தவித்தான்.

எகோர் தன் கறுப்புச் சட்டையை இழுத்துவிட்டான்; பொத்தானைச் சரியாக மாட்டினுன். தொப்பியைத் தலையில் அதற்குரிய இடத்தில் சீராக வைத்தான். இனிமேல் தெருவில் தானுகவே பேசுவதில்லை என்று தீர்மானித்தான். ''முடிவாக நீ அப்படிச் செய்ய முடியும், எகோர் பூமன்ட்ஸ். மக்களை மாற்ற முடியாது; இது உனக்கே தெரியும்... எத்தனை தடவைகள் நீ முயற்சி பண்ணுவாய்?... உன் சொந்தத் தம்பியிடம்கூட நீ ஒன்றும் செய்யமுடியாது... அதிகாலையிலிருந்தே நீ விளக்குகிருய். வீணுக்கு விளக்கிச் சொல்கிருய். அனைத்தையும் அப்படியே

விட்டுவிடு... அது அவன் நன்மைக்குத்தான்; அவனைப்பற்றி வேறு நினைப்பு உனக்கு இல்லை என்று நீ அவனிடம் சொல்கிறாய்... இதர நினைப்புகள் அபத்தமானவை, கவைக்கு உதவாதவை... அவன் கவனிக்கவில்லை; நம்பவில்லை. வார்சனிக்கிடம் இரண்டு வருஷங்கள் உன்னை நீயே வதைத்துக்கொண்டாய். ஏன்? அவளும்தான் கொஞ்சமும் கவனிக்கவில்லை... அப்போதுதான் உன் தலைமுடி நரைத்தது. அப்புறம் ஸாட்டோவை எடுத்துக் கொண்டாய். இவளுடன் உன் தாடி நரைத்தது... அதன்பிறகு ஜெனியா வந்தாள்... இதற்குள் நீ களைத்துவிட்டாய். நீ பேச விரும்பவில்லை. அவள் அவளுக்காக, நான் எனக்காக! எப்படியோ நாங்கள் இருவரும் சேர்ந்து வாழ்வோம் என்று நீ நினைத்தாய்... அப்புறம் அது எப்படிச் சரிப்படும், 'அவள் அவளுக்காக, நான் எனக்காக' என்பது... நல்லது, நாங்கள் எப்படியோ சேர்ந்து இருக்க நேரிட்டது...'' ஜனங்களைப் புரியவைப்பதற்காக அவன் செய்த முயற்சிகள் வீணானவை என்பதை, தான் எவ்வாறு மறுபடியும் மறந்துவிட்டான் என்று எகோர் எண்ணிப்பார்த்தான். அவன் அமைதியாக விளக்க முற்பட்டான். இந்தப் பெண் தனது குறிப்புகளை ஏற்றுக்கொள்ளவில்லை, புரிந்து கொள்ளவுமில்லை என அவன் அறிந்ததும், விஷயங்கள் முன்னைப் போலவே நடந்ததை உணர்ந்தான். ஆனால் ஒரு தடவை ஆரம்பித்த பிறகு அவனால் நிறுத்த முடியாது. அவன் விளக்கிச் சொல்வான். உடனே அவன் குரல் ஓங்கி ஒலிக்கும். பிறகு கத்தல் ஆகிவிடும். ஜெனியாவுக்கு வெறுப்பு வளரும். ஒருநாள் அவள் அவனை விட்டுப் போய்விட்டாள். அப்புறம், அவன் நண்பர்களும் அதேபோல்தான் நடந்துகொண்டார்கள். மாக்சிம், செரோ, ஸக்கார் எல்லோரும் அவனை விட்டு விலகிப் போனார்கள்... பின்னர் இதர ஆட்களும்கூட... எப்போதாவது அவர்கள் அவனைக் கேலியும் பண்ணினார்கள். ''இதோ சீர்திருத்த வாதி வருகிறார்'' என்றார்கள். சகிக்கமுடியாத தன்னம்பிக்கை யோடும், பயங்கரமான ஞானத்துடனும், ஆரோக்கியமான நேர்பார்வையோடும் அவர்கள் அவனைப் பார்ப்பார்கள். ''என்ன ஐயா சீர்திருத்தவாதி! நீங்கள் கவனித்துப் புரிந்துகொள்ள வேண்டும். இதையே நான் விரும்புகிறேன்... நீங்கள் கவனிப்பதில் சிரத்தை கொண்டால், எல்லாம் சீராக அமையும்... ஏன் எவரும் கவனித்துக் கேட்பதில்லை?... ஜனங்கள் உமது கண்களுக்கு நேரே பார்க்கிறார்கள்; வேறு விஷயங்களை எண்ணுகிறார்கள்... அதாவது, அவனுக்கு எது நல்லது என்று அவனுக்கே தெரியும். நீ அவனை ஏய்க்க முடியாது... அவன் நூறுபேரை ஏமாற்ற முடியும்... அவன் இவ் வார்த்தைகளையும் அறிவான்...''

பிறகு, எகோர் தன் விஷயத்துக்கு வருகிறான். நைந்து, இரத்தம் செத்த எண்ணங்களை அவன் தன்னுள்ளிருந்து பிழிகிறான். மீண்டும் அவன் தனது குரலை உயர்த்துகிறான். கூப்பாடு போடுகிறான். அதிக வேகத்தோடு கத்துகிறான்... அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உரத்த சத்தத்தை அவர்கள் கட்டாயம் கிரகித்தே ஆகவேண்டும் எனத் தோன்று கிறது. அவர்கள் சிரத்தை காட்டவில்லை என்று அறிந்தாலும் கூட, அவன் தனது குரலை மேலும் உயர்த்துகிறான். தொண்டை புகைந்து, தன் குரல் உச்சத்தினால் தானே திணறிப் போகிற வரையில் அவன் கத்துகிறான். நெற்றியில், கழுத்தில், முகத்தில் எல்லாம் ரத்த நாளங்கள் விம்மிப் புடைக்கின்றன... வேறு என்ன செய்ய முடியும்?... எகோர், முக்கியமாக அண்மைக்காலத்தில், பரிகசிப்புக்கு உரியவனாகிவிட்டான். அவன் பேசுகிறான், பேசு கிறான்; வீணாகப் பேசுகிறான் என உணர்கிறான். ஆனால் இன்னும் பேசுகிறான்... மக்கள் அவனை வெறுத்து ஒதுக்குகிறார்கள். ''திரும் பவும் நீ முணுமுணுக்கிறாய், எகோர்!'' என்கிறார்கள். ஆமாம். அவன் முணுமுணுக்கிறான். சந்தேகம் இல்லாமல் அது முணமுணப்புதான். ஆனால், ஒரே ஒரு தடவை மாத்திரம் நீங்கள் நிஜமாகவே கவனித்துக் கேட்டால், நான் திரும்பவும் பேசமாட்டேன். ஒரு விஷயம் சொல்லப்படுவதற்கு ஒரே முறை போதும்தான். அப்போது அது முணமுணப்பு ஆகாது. நானும் ஒரு கிழவனாகத் தோன்றமாட்டேன். கவனியுங்களேன்... எகோர் தெருவில் தெரிந்தவர்களை அடிக்கடி நிறுத்துவான். அவன் சொல்ல வேண்டியதை அவசரமாகவும் ஆவலோடும் அவர்களிடம் வெளியிடுவான். அவர்கள் கண்களைக் குறுக்கி அவனைப் பார்ப்பார்கள். எகோரின் வார்த்தைகள் அவர்களது கன்னக்கதுப்புகளில் செம்மை சேர்க்கும். அவர்கள் தனது பேச்சைக் கவனிக்கவில்லை என்று அவன் தெளிவாகப் புரிந்து கொள்வான். ''ஏன் அவர்கள் கவனிப்பதில்லை?'' எகோர் அவர்கள் சட்டைக்கையைப் பிடித்து இழுப்பான். ''அது சரி, அது சரி'' என்று அவர்கள் சொல்வார்கள். என்றாலும், அவர்கள் அவன் பேச்சைக் கவனமாய்க் கேட்கவில்லை என்பதை எகோர் கண்டுகொள்வான்...

எகோர் களைப்படைய விரும்பினான். அவனால் பேசமுடியாத அளவுக்குக் களைத்துப்போக, சிந்திக்க இயலாத அளவுக்குக் களைப்புற அவன் விரும்பினான். களைப்படைந்து லேசாகச் சிரிக்கவும், களைத்து அலுத்து, அனைவருடனும் அமைதியாகி, மற்றவர்களின் சித்தத்துக்கு இணங்கிப்போய், மாலையில் சோர்வுடன் வீடு திரும்பி நிம்மதியாய்த் தூங்குவதற்கும் அவன் ஆசைப்பட்டான்.

எகோர் ஆற்றைக் கடந்து பழைய நகரினுள் புகுந்தான். புழுதி படிந்த ரஸ்தாக்கள் வழியாகவும், குகைகளினூடும் நடந்து போனான். கடந்த காலத்தில் அக் குகைகள் ஒற்றை அறை, இரட்டை அறை வீடுகளாக இருந்தன. இப்போது அவை காலியாய், தூசி படிந்து, இரங்கத்தக்க நிலையில் இருந்தன...

பண்படுத்தப்பட்ட ரஸ்தா வெறும் பாதையாகியது. அந்தப் பாதையும் சிறிது சிறிதாகப் புல்பூண்டுகளில் மறைந்தது. பழைய நகரின் மிக உயரமான இடத்தில் எகோர் உட்கார்ந்தான். எகோருக்கு உள்ளத்தில் இன்னும் அமைதி ஏற்படவில்லை. அவனது நரம்புகளும் இதர பகுதிகளும் இடம் மாறிவிட்டதாக அவனுக்குத் தோன்றியது. அவன் தன்னைத் தானே அமைதிப் படுத்தவும், தான் அமைதியுறுமலிருக்கவும் கீழே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆற்றின் இந்தப் பக்கம், பழைய நகரத்தில், காலியாய், வெற்றுக் கூடுகள் ஆகிவிட்ட குகைகள் துருத்திக்கொண்டு, செயலற்ற தன்மையில் சுற்றிலும் ஆச்சர்யத்தோடு பார்த்த வாறு நின்றன... சில தொழுவங்களும் ஒரு இடுகாடும் அவற்றுக்கு எஞ்சியிருந்தன. அங்கு வசித்தவர்கள் ஒளிமயமான, வசதி நிறைந்த வீடுகளுக்குக் குடிபோய்விட்டார்கள். அவர் களுக்கு வீடுகள் வெகு எளிதாகக் கிடைத்தன. அதிலும் குறிப்பாக, இக் குகைகளில் ஒன்று இடிந்து விழுந்த விபத்துக்குப் பிறகு அது வெகு சுலபமாயிற்று.

எகோர் தன் பார்வையின் போக்கில், ஒத்த பரிமாணத்தில் நேராகவும் குறுக்காகவும் அமைந்திருந்த தெருக்களின் பக்கம் தன் தலையைத் திருப்பினான். நேர் தெருவின் கடைசிக்குப் பார்வையைக் கொண்டு சென்று, தலையை அந்த உயரத்துக்கு நிமிர்த்தி, பிறகு குறுக்குத் தெரு வழியாகத் திருப்பினான்... தெரு வழியே கார்கள் வேகமாய்ச் சென்றன. இடைக்கிடை அவைகளில் ஒன்று திசை மாறி, குகைகளுக்கு உல்லாசப் பயணிகளைக் கொண்டு சேர்க்கும். பஸ்ஸிலிருந்து அவர்கள் கும்பலாக இறங்குவார்கள்; அதிசயித்து நிற்பார்கள்...

குகையின் உச்சமான இடத்தில் அமர்ந்திருந்த எகோர் அவர்களது வியப்பைக் காணமுடிந்தது. 'மயிர் அடர்ந்த மக்கள், இரண்டு மீட்டர் உயரம் வளர்ந்தவர்கள், கல் கோடாரிகளை வைத்திருந்தவர்கள்' இக் குகைகளில் வசித்திருக்கவேண்டும் என்று பயணிகளுக்குத் தோன்றியிருக்கும். எனினும், ஒரு சில வருஷங்களுக்கு முன்னரே இக் குகைகளில் ஒன்றில் எகோர் பூமான்ட்ஸே வசித்தான்.

பயணிகள் குழு உச்சிக்கு வந்தது. அவர்களின் வழிகாட்டி மூச்சுவிடாமல் சொல்லிக்கொண்டிருந்தான். ''இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில், எஞ்சியிருக்கிற குகைகளும் காலி செய்யப்படும். நிர்மாண வேலைகளில், எங்கள் நகரம் நம் நாட்டில் ஐந்தாவது இடத்தைப் பிடித்திருக்கிறது. இக் குகைகளில் வசித்தவர்கள், இந்த அரை-அநாகரிக அறைகளை விட்டு, அதோ உள்ள சிறிய ஆற்றைக் கடந்து, காங்கிரீட்டும் டிஃபாவும் கொண்டு கட்டப்பட்ட பெரிய, விசாலமான, வெளிச்சம் மிகுந்த கட்டடங்களுக்குக் குடிபோகிறார்கள்.''

''கற்காலத்திலிருந்து நேரே இருபதாம் நூற்றாண்டினுள்ளே'' என்று ஒரு சங்கோஜப் பிரயாணி சமத்காரமாகப் பேச முயன்றார். அங்கே வந்து பார்த்த எந்தப் பயணியும் இதே எண்ணத்தை வார்த்தைக்கு வார்த்தை அப்படியே சொல்வது சகஜம் என்பதை அவர் சந்தேகிக்கக்கூட இல்லை.

பயணிகள் கோஷ்டி, ஒரு நூலில் கோத்ததுபோல், வரிசையாக, சிறிய தேவாலயத்தை நோக்கி ஏறிச் சென்றது. அவர்களை காண வாய்ப்பு இல்லாததனால், அங்கே வசித்தவர்கள் தினசரி திரும்பத் திரும்ப போய் அனுபவித்ததை அவர்கள் உணரவில்லை. அவர்கள் ஆலயத்தினுள்ளே போனார்கள். மெலிந்த மெழுகுவத்திகள் ஆலயத்தில் எரிந்துகொண்டிருந்தன. ஒவ்வொரு பக்கத்திலும் காணப்பட்ட, ரசனையற்ற விதத்தில் பூ வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்த அழுக்கான துணிகள், துவாலைகள், பெண்களது ஆடைகளின் துண்டுகள், மற்றும் நோயாளிகளிடமிருந்து கிடைத்த பல்வேறு உடைகளை எல்லாம் அவை வெளிச்சப்படுத்தின... ஆட்டுத்தலை ஒன்று ஒரு பீடத்தின் மேல், மெழுகுவத்திகளிடையே வைக்கப்பட்டிருந்தது. அதன் கண்கள் மூடியிருந்தன. வியப்புக்குரிய வகையில் ஒரு வருத்தம் எகோரைப் பற்றியது. பிறகு பயணிகள், எகோரையும் பழைய நகரத்தையும் தனித்திருக்கும்படி விட்டுவிட்டுப் போய்ச் சேர்ந்தார்கள்.

இறுகலான கால்சட்டை அணிந்த அந் நகரவாசிகள் இருவர் தண்ணீரில் பம்ப் வைத்து, இன்னும் மக்கள் வசித்து வந்த குகைகளில் ஒன்றினுள் நீர் பாய்ச்சிக்கொண்டிருந்தனர்.

எகோர் தன்னுள் எரிச்சலுற்ற பகுதியை ஒடுக்கிவிட்டதாகத் தோன்றியது. ஆயினும், தனிப்பட்ட அந்தரங்கமான தந்திரம் எதுவோ ஒன்று மறுபடியும் அவனது எரிச்சலை உற்சாகத்தோடு தூண்டிக்கொண்டிருந்தது. ''நீ பேசு பேசென்று பேசுகிறாய். ஆனால் எவரும் உன்னைக் கவனிப்பதில்லை... நான் ஏன் கவனிக்

கிறேன்; அவர்கள் ஏன் கவனிப்பதில்லை?... நான் எதையும் விரும்பவில்லை... நான் அவர்களுக்கு நல்லதே நினைக்கிறேன்— அவர்கள் கவனித்தால் போதும்...''

தான் மறுபடியும் பேசிக்கொண்டிருப்பதை எகோர் உணர்ந்தான். சுற்றிலும் பார்த்தான். தூரத்தில் இரண்டு புள்ளிகள் நகர்ந்துகொண்டிருந்தன. முதலில் அவை பறவைகள் போல் தோன்றின. அப்புறம், அவை மெதுவாக அசையவும், ஆடுகள்போல் தெரிந்தன. பிறகு எகோர் சிரமத்தோடு கவனித்து, அவை மனித உருவங்கள் என்று எப்படியோ புரிந்து கொண்டான். ஆனாலும், வெகு தொலைவில் இருந்ததால், அவர்கள் குழந்தைகளா, பெரியவர்களா, பெண்களா அல்லது ஆண்களா என்று அவனால் கண்டுகொள்ள முடியவில்லை.

திடீரென்று அருகில் ஆட்கள் பேசுவதை எகோர் கேட்டான். குழப்பமுற்று அவன் சுற்றிலும் பார்த்தான். யாரும் இல்லை. அவர்கள் மறுபடியும் பேசினார்கள். தெளிவாகவும் புரிந்து கொள்ளும் விதத்திலும். எவ்வித முயற்சியும் இல்லாமலே, பேசியவர்களின் தொனியையும், உச்சரிப்பையும், சுவாசத்தையும் கூட அவன் தெரிந்துகொண்டான். ஒருவர் எரெவானிலிருந்து வந்தவர்—ஒரு இளம் பெண்; மற்றவர் ஸான்கிஸீரிலிருந்து வந்தவர்—ஆண் என்றும் அவன் முடிவு செய்தான்— ஆனால், குரல்கள் எங்கிருந்து வந்துகொண்டிருந்தன? எகோர் மேலே பார்த்தான், புன்னகைத்தான், கீழே நோக்கினான்; தூரத்தில் தெரிந்த இரண்டு புள்ளிகளின் குரல்களே அவை என்று அவன் நம்பிக்கை இல்லாமலே உணர்ந்தான்— அதிசயம், நவீன உத்திகள், வருங்கால மர்மங்கள்பற்றி நினைத்தான்... பிறகு, அது ஒரு எளிய விஷயம் என அவன் நினைவுகூர்ந்தான். பார்க்கப் போனால், ஏற்கெனவே எப்போதும் தூரத்துக் குரல்களை அவன் இங்கே கேட்டது உண்டு. அது எப்படி நிகழ்ந்தது என அவன் ஒருபோதும் சிந்தித்ததில்லை. ஆனால் அவற்றை அவன் கேட்டிருந் தான்... தெளிவாகக் காண இயலாத தொலைதூர இடங்களி லிருந்து வந்த குரல்கள் மிக அருகில் கேட்பதாகத் தோன்றின. அதைப்பற்றி எல்லாம் இப்போது அவன் வேறுவிதமாகச் சிந்திக்க லானான். காற்று, தடங்கல் எதுவும் இல்லாதபோது, நல்ல கடத்தி ஆக அமைகிறது. மிகச் சரியாகச் சொன்னால், அது மனிதனின் தொடர்ச்சியாக இருக்கிறது; மறுபடியும் மனிதனாக மாறுகிறது. எகோர் பழங்கால விஷயத்தை நினைவுகூர்ந்தான். (அதை அவன் எப்படி மறக்க முடியும்?) அவன் சின்னப் பையனாக இருந்தபோது, இங்கே வசித்த காலத்தில், அவாக் கிசன்ட்சும் ஹோவன்னஸ் பூமன்ட்சும் ஒரு குகை உச்சியிலிருந்து இன்னொரு

குகை உச்சிக்குப் பேசிக்கொள்வதை அவன் பார்ப்பது வழக்கம். அவர் தனது குகை உச்சியிலிருந்து கீழே இறங்க விரும்பியதும், ஹோவன்னஸும் அங்கே ஏறெடுத்துப் பார்க்காமலே கீழிறங்கினுன். ஒருவரின் எண்ணங்கள் மற்றவரின் எண்ணங்களோடு செய்தி பரிமாறிக்கொண்டன. இந்தக் கணத்தில் எகோர் விஷயங்களின் நிலையைக் கிரகித்தான். ''உலகம் ஒரு பொருள். அவன் அனைத்தையும் கண்டான். உடனேயே, ஒரே பார்வையில். வர்ணங்கள் வர்ணங்களுக்குள் ஊடுருவின; பரிமாணங்கள் பரிமாணங்களுக்குள்ளும், செடிகள் செடிகளுக்குள்ளும் கலந்தன... பொருள்கள் பொருள்களோடு, ஒன்று மற்றென்றுடன், கற்களும் மண்ணும், பூக்களும் செடிகளும், புதர்களும் முட்களும், எல்லாம் ஒரே ரகத்தில், அனைத்தும் ஒரே உரிமையோடு, சர்வமும் ஒரே அழகுடன் சேர்ந்தன... தன் எண்ணங்கள் இவ்வாறு, உடனடியாகவும் ஒரே பார்வையிலும், கற்களை, பூமியை, முட்களை, தன் தந்தையை, பிரயாணிகளைக் கேட்பதை எகோர் உணர்ந்தான்... எகோரைக் கேட்கிறவர்கள், எகோரின் சோக எண்ணங்களினுல் தான் தாங்களும் வருத்தம்கொள்கிறுர்கள் என்பதை எப்படி அறிவார்கள்? எகோரின் வேதனை காரணமாகவே கல் உருளுகிறது; எகோரின் புதுப்பிக்கப்பட்ட அச்சம் காரணமாகவே மீன் ஆற்றில் மூழ்கி இறக்கிறது; எகோரின் திரண்ட சிந்தனைகள் காரணமாகவே மேகங்கள் திரள்கின்றன என அவர்கள் எவ்வாறு அறிதல்கூடும்?

எகோர் மறுபடியும் தன் எண்ணங்களை நகரச் செய்தான். பிறகு புதிய நகரில் சிராபின் வீட்டைத் தேடிக் கண்டுகொண்டான். அதையே உற்றுநோக்கினுன். வீட்டின்மீது முணுமுணுக்கத் தொடங்கினுன்.

''சிராப், போனமுறை நீ என்மேல் கோபமாக இருந்தாய். நான் ஏதோ ஜாடையாகப் பேசுவதாக நீ எண்ணிஞய். நான் எதைச் சொன்னேனே, அதையேதான் குறிப்பிட்டேன். என் மனசில் வேறு எண்ணம் எதுவும் இல்லை...''

அதன் பிறகு, சிராபின் வீட்டை அடுத்திருந்த நான்கு மாடிக் கட்டடத்தின்மேல் எகோர் தன் பார்வையைத் திருப்பினுன்.

''கார்ஜின், நீ ஏன் என்னைக் கேலி பண்ணுகிறுய்? நான் ஷீஸ் ஷிக்குடன் சேர்ந்திருப்பதில் கேலி பண்ணுவதற்கு என்ன இருக்கிறது? நாங்கள், இரண்டு முதியவர்கள், ஒன்ருக வசித்தால் என்ன? நாங்கள் நகரின் தூரத்து மூலைகளில் இருக்கிறோம். இனிமேல் ஒரே அறையில் வசிப்போம்... இதில் என்ன தப்பு? இதில் கேலி பண்ண என்ன இருக்கிறது?... முடிவில், நீகூடச் சரியாகவே

உணர்வாய். நீ சரியாக உணர்வாய் என்பதை நீ இப்போது அறியவில்லை— நாம் ஒருவரோடு ஒருவர் பிணைந்திருக்கிறோம். எந்த ஒரு பிணைப்பும் நம் எல்லோருடைய பிணைப்புகளையும் உறுதிப்படுத்தும்...'' எகோர் முணுமுணுப்பதை நிறுத்தினான். பிறகு வெறுமனே நினைத்தான். மீண்டும், பார்த்து, ''குறுக்கிடாதே, கார்ஜின். அதிகமாக உன்னைப் பொறுத்திருக்கிறது— குறுக்கிடாதே...''

எகோர் சிறிது நேரம் மவுனமாக இருந்தான். பிறகு அவன் தன் பார்வையை நகர்மீது நகர்த்தினான். கடைசி ஓரத்திலிருந்த பிரகாசமான சிவப்புக் கூரைகொண்ட வீட்டின்மேல் பதித்தான்.

''அர்சுமான், நீ என்னை அப்படிப் பார்க்காதே! உனது பார்வை ஒவ்வொன்றும் என் இதயத்தை நசுக்குகிறது— நான் செத்துப்போவேன். நிச்சயமாக நான் சாவேன். நான் இறந்து விட்டால், நீ அற்பமாக உணர்வாய். நீ அதைப் புரிந்துகொள்ள வில்லை. நீ என்னைக் கவனித்துக் கேட்பதில்லை. நீயாக அறியவு மில்லை— நாம் இருவரும் அற்பர்களாக உணரவேண்டும் என்று விரும்புகிறாயா? நான் சாகவேண்டும், நீ அற்பமாக உணர வேண்டும் என்று? சரிதானே, அர்சுமான்!''

பிறகு எகோர் நோக்கினான். நகரில் உள்ள ஒரு குடிசையை தேடிக் கண்டான். வீடுகளை எண்ணினான். தான் தவறு செய்த தாக முடிவு கட்டி, மறுபடியும் அந்தக் குடிசையைத் தேடினான். ஆனால், அவன் விரும்பிய குடிசையைக் கண்டுபிடிக்க இயலவில்லை. தன்னில் தானே சிறிது நாணி, நகரத்தை விட்டு வெளியே செல்லும் ரஸ்தாவைப் பார்த்துப் பேசினான்.

''நாஸலி, அன்பே! நான் உனக்குச் சொன்னது உண்டு. அநேக தடவைகள் சொன்னேன். ஆனால் நீ என் பேச்சைக் கவனிக்க மறுத்தாய். நான் உண்மையாக உன்னைக் காதலித் தேன்... காதலிப்பது என்றால் பெரிதாக ஒன்றுமில்லை என்று உனக்குத் தோன்றியது. அது வெறும் பாட்டும் ஆட்டமும் சோம்பலும்தான் என்று நீ நினைத்தாய்... நீ இப்போது வருத்த மாக இருப்பதை நீ உணரவில்லை. ஆனால் நான் உணர்கிறேன். நீ கவனிக்க மாட்டாய். நான் பேசியபோது நீ தளர்ச்சி அடைவது வழக்கம். நான் கூப்பாடு போடுகையில் நீ கோபம் கொள்வாய். உனக்காகத்தான் நான் அப்படிக் கூச்சல் கிளப்பினேன், நாஸலி, அன்பே...''

எகோர் வருத்தம் அடைந்தான். ரஸ்தா சிறிதாகி, மேலும் மேலும் குறுகி, அங்கேயே முடிந்துவிட்டதுபோல் தோன்றியது.

பின்னர் எகோர், காலஸ்டுடன் பேசினான். அவன் விரிவாகப் பேசினான். தான் விரும்பியதைத் தெளிவுபடுத்திய பிறகு அவன் மவுனமானான்.

''எகோர்!'' என்று கூப்பிட்ட குரலைத் திடீரெனக் கேட்டான் எகோர். அருகில் யாரும் இல்லை. எகோர் புன்னகைத்தான். அது தெளிவாக இருந்தது. தூரத்துப் பாறையின் முகட்டிலிருந்து யாரோ என்னவோ சொல்லியிருக்கவேண்டும். அது வெகு தூரத்தில் இருந்தது; கண்ணுக்குத் தென்படவில்லை.

''நான் கேட்டேன்'' என்று எகோர் முணகினான். அப்புறம் நெடுநேரம் சிந்தித்தான். தன் எண்ணங்களைக் கூறி முடிக்கிற வரை அவன் மற்றவர்களோடு பேசினான். இறுதியில் அவர்கள் தான் சொன்னதைக் கவனித்துக் கேட்டார்கள் என்ற நம்பிக்கை எழவே, அவன் அமைதியாக மூச்சுவிட்டான். குகையிலிருந்து கீழே இறங்கினான். நகருக்குள்ளே போனான்.

வி. பெத்ரோசியன்
(1932)

# அம்மாவின் வீடு

அம்மாவின் வீட்டுக்கு அவன் தனியாக ஒரு சாவி வைத்திருந்தான். வழக்கமாக அவன் வாசல் மணியை அடிப்பதில்லை. ஏனெனில், அவன் அம்மா தூங்கிக்கொண்டிருந்தால் விழித்து விடுவாள்; அல்லது, தூங்காமலிருந்தால் அவள் அதைக் கேட்க மாட்டாள். நாலைந்து மாதங்களாக அவன் அம்மாவைப் பார்க்க வில்லை. மாஸ்கோவுக்கும் அயல்நாடுகளுக்கும், பல்வேறு பெரிய அலுவல்கள், சிறு வேலைகள் என்று போயிருந்தான். ''ஓ, எனக்கு மட்டும் நேரம் இருந்திருந்தால்...'' அவன் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான். தாழ்வாரத்தில் விளக்கு எரிந்தது.

''அம்மா—அம்மா!''

பதில் இல்லை.

அவன் அறைக்குள் போனான். படுக்கை நன்கு விரிக்கப் பட்டிருந்தது. தரை சுத்தமாக இருந்தது. ரேடியோ ஒலிபரப்பிக் கொண்டிருந்தது. அவன் அம்மா எப்போதும் ரேடியோவைக் கத்தவிட்டிருப்பாள். ''அது ஏதோ மனிதக் குரலாக இருக்கிறதே. நான் உள்ளேயும் வெளியேயும் போய் வரும்போது, எனக்கு நானே பேசிக்கொள்கையில், எனக்குப் பதில் கிடைப்பதுபோல் தோன்றுகிறது'' என்று அம்மா கூறுவாள்.

அம்மா சமையலறையிலும் இல்லை, பால்கனியிலும் இல்லை. வழக்கமான அசிரத்தையுடன் அவன் ரேடியோவை நிறுத்தினான். பச்சைத் துணியால் மூடப்பட்டிருந்த பழைய சோபாவில் படுத்தான். அம்மா வீட்டில் இல்லாததும் சரிதான்; மெத்தச் சரியானதே...

அம்மா குடிப்பதற்கு ஏதாவது வைத்திருக்கிறாளா? அவன் சோம்பலோடு எழுந்து, ரிப்ரிஜெரேட்டரைத் திறந்தான். அரை பாட்டில் பிராந்தியும், இரண்டு பாட்டில் பீரும் இருந்தன. அவை சூடாக இருந்தன. அவன் பீர் புட்டியைத் திறந்தான். அவனால் ஒரு வாய்கூட விழுங்க முடியவில்லை. அது புளித்துப் போயிருந்தது. அவன் தேதியைப் பார்த்தான். ஒரு மாதம் ஆகியிருந்தது. வாகனுக்கு பீர் ரொம்பவும் பிடிக்கும் என்று

அவன் அம்மா அறிவாள். அவன் மூன்று நான்கு மாதங்களாக ஊருக்கு வரவில்லை. அந்த நினைப்பை அவன் தன் மனசிலிருந்து அகற்றினான். தனிமை என்று கூறப்படும் உலகின் பயனை நன்கு அனுபவிக்க, எதைப்பற்றியும் சிந்திக்காமலிருக்க அவன் ஆசைப் பட்டான். அதிலும் விசேஷமாக, தன்னைச் சுற்றிலும் ஒளி நிறைந்த ஊர் அமைதியோடு நிலவ, குழந்தைகளின் தனிக் குரல் களும், பூச்சிகளின் மந்தமான சலிப்பூட்டும் இரைச்சலும் மாத்திரம் கேட்டுக்கொண்டிருந்த சூழ்நிலையை அனுபவிக்க விரும்பினான். அவன் அம்மா வீடு ஒதுக்குப்புறத்தில், தோட்டங் களுக்கு நடுவில் இருந்தது. அங்கே கார்கள் வருவதில்லை. அவனிடமும் கார் கிடையாது. அவன் திரும்பவும் சோபாவில் படுத்து, எதையும் சிந்திக்காமலிருக்க முயன்றான்.

அம்மாவும் நகருக்கு வந்து தங்களோடு வசிக்கவேண்டும்; மாரிக்காலத்திலாவது அவள் அவ்வாறு செய்யவேண்டும் என்று அவளை வலியுறுத்திக் கூப்பிடுவதற்காக அவன் வந்திருந்தான். சக்திவாய்ந்த பேச்சு ஒன்றை அவன் நினைத்துப் பார்த்தான். ''இது கேவலம், அருமை அம்மா. நான்தான் உனக்கு எல்லா மான ஒரே மகன். ஆண்டவனுக்கு நன்றி. எங்களுக்கு ஒரு வீடு இருக்கிறது. அதில் நான்கு அறைகள் உள்ளன. உனக்கு உன் மருமகளையும் பிடித்திருக்கிறது. இது வெட்கமாக இல்லையா? இன்னும் எத்தனை காலம் தனிமையில் உன் வாழ்நாளைக் கழிக்கப் போகிறாய்?'' என்று அவன் கேட்பான்.

டெலிபோன் மணி அலறியது. இனிமையான அசதி உடனே ஓடிமறைந்தது. அந்த அலறல்மீது அவனுக்கு மிகுந்த அலுப்பு. டெலிபோன் அலறிக்கொண்டேயிருந்தது. அவன் எழுந்து, மெதுவாய் சோம்பலுடன் நடந்தான். அது அலறுவதை நிறுத்தி விடலாம்... அவன் ரிசீவரை எடுத்தான். ''அனுஷ் அத்தை?'' அது ஒரு பெண்ணின் குரல். ''நான் உன்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பிவிடவில்லை என்று நம்புகிறேன். நீ நகருக்குப் போகிறாயா என்று கேட்க நினைத்தேன். ஆராமேய்ஸ் அவன் காரில் உன்னை அழைத்துப் போவான். அவன் நான்கு மணிக்குப் போவான்.'' அந்தப் பெண் நிறுத்தாமல் பேசினாள். ''அவனைக் காத்திருக்கும்படி நான் சொல்கிறேன். நீ போகிறாயா?'' ''அம்மா வீட்டில் இல்லை'' என்றான் அவன். ''நல்லது'' என்று அந்தப் பெண் சொன்னாள். ஃபோன் பஸ்-பஸ்-பஸ்ஸ் என்றது. பேச்சு துண்டிக்கப் பட்டது. வாகன் புன்னகைத்து, ரிசீவரை அதன் இடத்தில் வைத்தான். அவள் யாரோ என்று அவன் அதிசயித்தான்... பிறகு அவன் உண்மையாகவே தளர்ச்சி அடைந்தான். ''இந்த நாலு சுவர்களுக்கிடையில் நீ எத்தனை காலத்துக்கு அடைபட்டுக்

கிடப்பாய்? உன்னை நகரத்துக்கு இட்டுச் செல்லும்படி அடிக்கடி அவளையும் இவளையும் கேட்பாய்?'' அவன் அம்மா அவனுக்கு ஒரு கவலையாக இருந்தாள். அவன் ஊருக்கு அடிக்கடி வராமல் இருந்தாலும்கூட, அம்மாவைப்பற்றிய கவலை அவன் மூளைக்குள் சதா குறுகுறுத்தது. அவன் அம்மா எரெவானில், அவன் வீட்டில், இருக்கிறாள் என்று உறுதிப்படுத்துவதன் வாயிலாக, அவன் அந்தக் கவலையைப் போக்கடிக்க விரும்பினான். இந்த வாழ்வின் இறுக்கம் ஒரு கவலையால் குறையுமே. வாகன் அம்மா வுடன் சண்டை போடத் தன் மனசுக்குள் ஆயத்தம் செய்தான். ''இவ்வளவுதான் விஷயம். நாம் போகப்போகிறோம். எனக்கு நேரமில்லை. என்னைப் புரிந்துகொள்! உனக்குச் சொந்த மானவர்களை விட்டு விலகி நீ தனியாக வசிக்கும் அளவுக்கு உன் வாழ்வில் எவ்வளவு எஞ்சியிருக்கிறது? உனக்கு வேறு யார் இருக்கிறார்கள்?''

இன்னும் எவ்வளவு காலம் அவன் அம்மா உயிரோடு இருப்பாள்? ஒரு தடவை (அப்போது அவன் தனிச் சாவி வைத்திருக்கவில்லை) அவன் வந்தபோது, அவள் வீட்டுக்குள் இருப்பதாக அண்டை அயலார் உறுதியாகச் சொன்னார்கள். அவன் கதவைத் திரும்பத் திரும்ப தட்டினான். பதிலே இல்லை. அவன் பரபரப்புடன், பலமாகத் தட்டினான். பக்கத்து வீட்டுக் காரர்கள் கூடிவிட்டார்கள். சற்று நேரத்துக்கு முன் அவள் வீட்டுக்குள் போனதைப் பார்த்ததாக அவர்கள் அனைவரும் உறுதி கூறினார்கள். வாகனை பயம் கவ்வியது. சன்னல் சட்டத்தை உடைத்து, ஒருவாறு உள்ளே புகுந்தான். அவன் உடல் முழுவதும் வேர்வை பெருகி ஓடியது. அம்மா தரையில் விழுந்து கிடக்கிறாள்; அம்மா ரேடியோ அருகில் உயிரற்றுக் கிடக்கிறாள்—இப்படிப் பலவிதமாக அவன் கற்பனை பண்ணினான்.

ஆனால் அவன் அம்மா தூங்கிக்கொண்டிருந்தாள். அவள் தன் மேல்போர்வையைக் களைய மறந்து அப்படியே தூங்கிப் போனாள்.

''அம்மா?'' முதலில் எச்சரிக்கையான குரலில் அவன் கூப்பிட்டான். ஒருவேளை எதிர்பாராத விதமாக அவள்... ''அம்மா!'' குழப்பமடைந்து கூப்பிட்டான். அவள் கையைத் தொட்டான். சூடாக இருந்தது. நாடித் துடிப்பு அமைதியாக இருந்தது.

''ஓ! நான் தூங்கிவிட்டேன்'' என்று அம்மா விழித் தெழுந்தாள். ''ஓ, என்னைக் காப்பாற்று. என் வாகன் வந்திருக்கிறான். நான் தூங்கிக்கிடந்திருக்கிறேனே...''

அதன் பிறகு அவன் எப்போதும் தனியாக ஒரு சாவி வைத்துக்கொண்டான். மாஸ்கோ, அயல்நாடு, அநேக வேலேகள். ''ஓ, நேரமே இல்லே...!'' அவன் நான்கு மாதங்களாக அம்மாவைப் பார்க்கவில்லே!

வீட்டில் சாப்பிடுவதற்கு ஏதேனும் இருந்ததா? பொரித்த மொச்சைகள் இருந்தன—வாகனுக்குப் பிடித்த உணவு. வேறு தானியங்களும் இருந்தன. எதுவும் சூடாக இல்லே. ஆறிப்போன உணவை வாகன் உண்டான். மெல்லிசான கிராமத்து ரொட்டி இல்லே. நகரில் வாங்கி வந்த ரொட்டி இருந்தது. யார் வாங்கி வந்திருக்கக்கூடும்? நல்லது. இதுதான் கடைசி. அவன் அவளேத் தன்னேடு நகருக்குக் கூட்டிப் போவான். ''நீ அவளேக் கிராமத்தில் தனியாக விட்டிருக்கிருய். அயலார்கள் இப்போதே ரகசியமாகப் பேசுகிருர்கள். தனியாக... ஒரு நாள் இருந்துபார். நீ பைத்தியமாகிவிடுவாய்'' என்று ஹாஸ்மிக் திட்டமாகக் கூறிவிட்டாள்.

மொச்சைப் பயறு, ஆறியிருந்தாலும் ருசியாக இருந்தது. அதைச் சூடுபண்ண அவனுக்குச் சோம்பல். அவன் சிறிது பிராந்தி குடித்தான். அது உள்ளே ஓடியது. ரத்த நாளங்களில் பாய்ந்து, தேகத்தின் சகல பாகங்களிலும் பரவியது. ஒருவித அசதி அவனேக் கவ்வியது. அவள் எங்கே போயிருக்கக்கூடும்? மருமகள் வீட்டுக்கா? அந்த ஊரில் இருந்த அவர்களின் ஒரே ஒரு உறவினள். அவனுடைய அம்மா வழி அத்தையின் மகள். அவளே அவன் மூன்று—நான்கு வருஷங்களுக்கு முன்பு பார்த்தது தான். அவள் பெயர் வாஸகானுஷ் ஆக இருக்கவேண்டும்; அல்லது மய்ரானுஷ். எதுவோ, ''அனுஷ்'' அதில் இருந்தது. அவளுக்கு ஏழு குழந்தைகள். அதை அவன் நிச்சயமாக நினேவு வைத்திருந்தான். ஏனெனில், ஏழில் ஆறு பெண்கள். மறுபடியும் டெலிபோன் அலறியது. இம்முறை அவன் உடனடியாக ரிசீவரை எடுத்தான்.

''அம்மா வீட்டில் இல்லே. இது வாகன்.''

''வாகன், அருமைப் பையா!'' ஒரு ஆண்குரல் பேசியது. ''ஹலோ. அராகெல் பேசுகிறேன்.''

''அராகெல்?''

''உனக்கு எப்படி நினேவிருக்கும்? நான் உன் அப்பாவின் நண்பன். நானும் அர்மெனுக்கும்தான். அவன் நகருக்குப் போய்விட்டான். நீங்கள் ஒருவரை ஒருவர் பார்ப்பதில்லேயா?''

அவரை எப்படிக் கூப்பிடுவது? மாமா என்ரு?

''ஹல்லோ, அராகெல் மாமா! அம்மா எங்கே இருக்கிறாள், தெரியுமா? நான் இரண்டு மணி நேரமாகக் காத்திருக்கிறேன்.'' இயல்பாக அவன் கைக் கடியாரத்தைக் கவனித்தான். ''நான் இங்கே வந்து ஒன்றேகால் மணி நேரம் ஆகிறது. அவளைக் காணவில்லை.''

''நான் சொல்கிறேன், அருமை வாகன்.'' அவர் ஈழையிழுக்கும் குரலில் பேசினார். அவர் அதிகம் புகை பிடித்தார். அவருக்கு ஆஸ்துமா இருக்கிறது என்று தெளிவாகப் புரிந்தது. ''அவள் செட்ராக்கின் வீட்டில் இருக்கலாம். அவன் பேத்தி கல்யாணம் இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் நடக்க இருக்கிறது. நல்ல பையனைப் பார்த்துத்தான் கொடுக்கிறான். அல்லது, அகாலக்காலக்கிலிருந்து வந்திருக்கும் சிற்ப வேலைக் காரன் வீட்டுக்கு அவள் போயிருக்கலாம்; அல்லது, வால்நட் வாங்குவதற்காகக் கடைத் தெருவுக்குப் போயிருக்கலாம். இப்போது ஜாம் செய்யவேண்டிய காலம். வீட்டுக்கு வந்து தனக்கு உதவும்படி அவள் நேற்று மரியத்திடம் சொல்லிக் கொண்டிருந்தாள். மரியம் என் மருமகள். அவள் ஆஸ்பத் திரியில் நர்ஸ் வேலை பார்க்கிறாள். மெடிக்கல் இன்ஸ்டிடியூட்டில் படித்துத் தேற அவளால் இயலவில்லை. அவளுக்கு நான்கு குழந்தைகள். அவள்தான் என்ன செய்வாள்...? அல்லது, அவள் மருமகள் வாஸானுஷ் வீட்டுக்குப் போயிருக்கலாம். பாவம், அந்தப் பெண் ஒரு மாதமாக உடம்பு சுகமில்லாமல் இருக்கிறாள். புற்றுநோயாக இருக்கும் என்று சந்தேகிக்கிறார்கள்... அல்லது, அவள் செயின்ட் ஸார்கீஸ் சர்ச்சுக்குப் போயிருக்கலாம்... இன்று தான் நாள்... அல்லது...''

''அங்கே ஃபோன் இல்லையோ?''

''செயின்ட் ஸார்கீஸிலா?''

''இல்லை, என் அத்தை வீட்டில்.''

''ரிசீவரை வைத்துவிடு. நான் பார்த்துவிட்டு, உன்னைக் கூப்பிடுகிறேன்.''

சன்னலிலிருந்து தோட்டங்களைத்தான் பார்க்க முடிந்தது. இலையுதிர்காலம் வந்து நாளாகியிருந்தது. பசுமை எல்லாம் மஞ்சளாக மாறியிருந்தது. சேகரம் செய்யப்பெற்ற திராட் சைகள் ஒயின் ஆகவும், சாராயமாகவும், மற்றும் பலவிதமான பொருள்களாகவும் மாறின. திடீரென்று அவனுள் ஒரு கிளர்ச்சி எழுந்தது. அம்மாவின் திராட்சைத் தோட்டத்தில் இப்பவும் ஏதாவது திராட்சைப் பழங்கள், ஒரே ஒரு கொத்தாவது, விடுபட்டிருக்குமா? கடைசி திராட்சைகள் மிகவும் ருசிகரமாக

இருக்கும். குழந்தைப் பருவத்தில் அவர்கள் திராட்சைத் தோட்டங்களுக்குக் காற்று மாதிரி வேகமாய் ஓடுவார்கள். நெடுகத் தேடி ஆராய்ந்து, மறைந்து கிடக்கும் பழக்குலைகளைக் கண்டுபிடிப்பார்கள். அவை ஏற்கெனவே வெயிலில் நன்கு காய்ந்து, சுவையான உலர்ந்த திராட்சைகள் ஆகியிருக்கும். இப்போது ஏதாவது இருக்குமா? அவன் வெளியேறி, திராட்சைத் தோட்டத்துக்கு நடந்தான். அங்கே மூன்று, நான்கு பாத்திகள் இருந்தன. அவன் அம்மாவின் திராட்சைப் பாத்தியின் எல்லைகள் அவனுக்குத் திட்டமாகத் தெரியாது. அயலாரின் பாத்திக்குள் அவன் புகுந்திருக்கலாம். அதனால் தப்பு எதுவுமில்லை. திராட்சைத் தோட்டங்களில் எல்லைக்கோடுகள் இல்லை. நாய் ஏதாவது இருக்கலாம்... தோட்டத்தில் அமைதி நிறைந்த மவுனம் நிலவியது. அவன் திராட்சைக் கொடிகளை ஆராயலானான். குனிந்து பார்த்தான். கிளைகளை மேலே உயர்த்தினான். ஒரு இடத்தில் சேறாக இருந்தது. அவன் கால் வழுக்கியது. காய்ந்த மஞ்சள் இலைகள் மத்தியில் தலையைப் புதைத்து அவன் கண்களை அகல விழித்துப் பார்க்க நேர்ந்தது. அங்கே அது தென்பட்டது. கொடிகளிடையே ஆழ்ந்து புதைந்து, ஒரு கொத்து, மஞ்சளாய், பெரிய பழங்கள் நிறைந்து தொங்கியது. அந்தக் குலை எளிதில் வரவில்லை. அவனிடம் கத்தி இல்லை. அவன் மறுபடி முயன்றான். பழக்குலை விடாமல் பற்றிக்கொண்டிருந்தது. அந்தக் கிளை முறிந்துவிடுமோ என அவன் அஞ்சினான். அம்மா வருத்தப்படுவாள். இறுதியில் அவன் வெற்றி பெற்றான். பழக்குலை அவன் கைக்குக் கிடைத்தது. அது சூரிய ஒளியில் நன்றாக மினுமினுத்தது. அவன் பாத்தியின் வரப்புமேல் உட்கார்ந்து, பழங்களை அதிக ஆசையுடன் தின்னலானான். குழந்தைப் பருவக் குளிர்காலத்தின் இன்சுவை அந்தப் பழங்களில் இருந்தது. அல்லது, அவனாக அதை வருவித்துக்கொண்டானோ? திராட்சைத் தோட்டங்களைத் தானே கவனிப்பதாகவும், கொத்துவது மூடுவது போன்ற வேலைகளில் அயலார் சிலர் உதவுவதாகவும் அம்மா சொல்லியிருந்தாள். யார் உதவினார்கள்?

முந்திய மாரிக்காலத்தில், பாரிஸ் நகரில் ஒரு இத்தாலிய உணவு விடுதியில், அவன் திராட்சைப் பழங்கள் கொண்டுவரச் சொன்னான். பழங்கள் பெரிதாகவும் தெளிவாகவும் இருந்தன. அவற்றினுள் இருந்த விதைகள், மீன்காட்சிசாலையில் காணப் படுகிற மீன்களைப்போல், நன்கு தெரிந்தன. அவை ருசியில்லாத திராட்சைப் பழங்கள். அதைக்கூட அவனாகவா எண்ணிக்கொண்டான்? அல்லது, அது சுவையற்றே

இருந்ததோ? மிஸ் மேரி இப்போது அவனைப் பார்த்தால்! ஒரு குலைப் பழங்களையும் அவன் தின்றுவிட்டானு என்ன? இன்னும் சிலவற்றைக் கண்டுபிடிக்க முடியுமா? அவன் தரையில் படுத்துக் கண்களை மூடினுன்... முந்திய தினம், ஒரு கிழவிக்கு அவன் ரணசிகிச்சை செய்தான். அவளது பித்தப் பையை நீக்கினுன். கிழவியை அவர்கள் வெள்ளைத் துணிகளால் போர்த்து, முகத்தை மட்டும் மூடாமல் விட்டிருந்தபோது, அவன் சட்டெனக் கவனித்தான். அவனுடைய அம்மாவின் உருவம். அபத்தம். அவளோ, சுருக்கங்களும் நரை முடியும் கொண்ட கிழவி. அவள் கண்கள் உடனே மூடிக்கொண்டன. அவன் பயந்துவிட்டான். அவள் நாடித் துடிப்பைப் பரிசோதித்தான். அவளுடைய இதயம் அமைதியாகவும் சீராகவும் துடித்தது. எவ்வளவுக்கு அவன் அந்த மாதின் வாழ்க்கையை நீட்டுவித்தான்? ஒருவேளை அதைக் குறைத்துவிட்டானே?... அவள் பித்தப்பையில் பெரிய பெரிய கற்கள் இருந்தன. தூரத்தில் ஒரு குரல் ''அர்த்த வாஸ்த், அர்த்தவாஸ்த்'' என்று அழைப்பதை அவன் கேட்டான். பிறகு ஒரு விமானம் ஆகாயத்தில் மிகவும் தணிவாகப் பறந்து சென்றது. அவன் தன் கண்களைத் திறக்கவில்லை. மிஸ் மேரி ஒரு ரண வைத்தியர். பாரிஸ் நகரின் வெளிப்புறத்தில் அவளுக்கு ஒரு கிளினிக் இருக்கிறது. அவள் மணம் செய்துகொள்ளவில்லை; தன்னந்தனியாக வசிக்கிறுள். ''ஒரு ரணசிகிச்சையின்போது நான் செத்துப்போக விரும்புகிறேன்'' என்று அவள் அன்று, இத்தாலிய உணவு விடுதியில், சொன்னுள். அது ஒயின் செய்த வேலையா? இல்லை, அவளே திடீரென்று சோகம் அடைந்தாளா? மனிதன், இலையுதிர் காலத்தின் கடைசி திராட்சைகளைப்போல், இலைகளுக்கிடையே மறைந்து, சூரிய கிரணங்களால் மெதுவாகக் காய்ந்து உலர்ந்து, மடிந்துபோக வேண்டும். அவன் கண்களைத் திறந்தான். வானத்தைப் பார்த்தான். நீலப் பாலைவனமாகத் தோன்றியது அது.

''என்ன, வாகன்?''

ஒரு ஆள், நாற்பது - நாற்பத்தைந்து வயதானவன், அவன் தலைக்கு மேலாக நின்றுன். அது யாராக இருக்கும் என்று அவன் யூகிக்க முயன்றுன்...

''இந்த வருஷமும் எங்கள் மார்க்கோவை விட்டு விட்டார்கள். நீ வந்தது நல்லதாயிற்று. என்ன செய்வது, யாருடன் பேசுவது என்று தெரியாமல் நான் தவித்தேன்...''

''என் அம்மா எங்கே போயிருப்பாள்?'' அவனுக்குள் ஒருவித எரிச்சல் மூண்டதை அவன் உணர்ந்தான். ''நீ என் அம்மாவைப் பார்க்கவில்லையா?''

''இல்லையே. நான் பார்க்கவில்லை. பதப்படுத்தப்பட்ட பீச் பழங்கள், வேறு சில பழங்களை எல்லாம் நான் உனக்கு அனுப்ப விரும்பினேன். உன் விலாசத்தை உன் அம்மா எனக்குத் தரவில்லை. உன் டெலிபோன் நம்பரையும் சொல்லவில்லை. நீ வந்தது நல்லதாயிற்று. நீ அவளை உன்னோடு கூட்டிப்போ...''

தன் முன்னே நின்ற அந்த மனிதனைக் கவனமாகவும் நுணுக்கமாகவும் அவன் நோக்கினான். பூமி காய்ந்திருந்தபோதிலும் வெம்மையாக இருந்தது. அந்த ஆளின் பெயரை அவன் நினைவு கூர்ந்தான். அவனைப்பற்றி அவன் மறந்துவிட்டிருந்தான். அவன் பெயர் அர்த்தவாஸ்த். அம்மாவின் அண்டைவீட்டுக்காரன். சிறுவர்களாக இருந்தபோது அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து பழங்கள் திருடியிருக்கலாம். அவன் கண்களை மூடிக்கொண்டான். அவ்விதம் அவன் பொருள்களை நன்றாகப் பார்க்க முடிந்தது. ஏனெனில் அர்த்தவாஸ்தை அவன் பார்க்கவில்லை.

''நான் பழங்களைப் பதப்படுத்தப்போகிறேன்.'' அர்த்தவாஸ்த் சொன்னதை அவன் கேட்டான். ''என்னிடம் இளம் ஒயினும் இருக்கிறது. சுயம்புவான தேன்கூட. முற்றிலும் நயமானது. நகரத்தில் தேன் சர்க்கரைப் பாகினால் ஆனது. மூளை உள்ள தலைக்கு ஊட்டச்சத்து தேவை. இப்போது மார்கோவைப்பற்றி நீ என்ன சொல்கிறாய்? நான் அவளைக் கூப்பிடவா?''

''போ, அர்த்தவாஸ்த். நான் என் அம்மாவுக்காகக் காத்திருப்பேன். பிற்பாடு நானே வருவேன்'' என்றான். கண்களை அவன் திறக்கவேயில்லை.

ஆச்சர்யம்தான். அர்த்தவாஸ்த் இணங்கினான். சற்று நேரத்தில் அவன் காலடி ஓசை சிறிது சிறிதாகத் தேய்ந்து போனதை வாகன் கேட்டான். பூச்சிகள் சலிப்புத்தரும் விதத்தில் இரைச்சலிடுவது தவிர வேறு எதுவும் காதில் விழாத முந்திய அமைதி மட்டுமே அவனைச் சுற்றிலும் நிலைத்திருந்தது.

* * *

அவன் இரண்டாவது தடவையாகப் பிராந்தி குடித்தான். மூன்று நாட்களுக்கு முன்பு, ஒரு ரணசிகிச்சையின்போது, மூர்ச்சைபோட்டு விழுந்த அவனுடைய மாணவிகளில் ஒருத்தியை நினைத்துக்கொண்டான். அட, இந்தப் பெண் சர்ஜன்கள்!

அவன் அம்மாவின் திராட்சைத் தோட்டத்திலிருந்து ஒரு பள்ளத்தாக்கை நோக்கி ஒரு சிறிய பாதை சென்றது. அந்தப் பள்ளத்தாக்கில் இறங்கிப் பார்ப்பதற்கு தனக்கு நேரம் இருந்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணினான். அவனுடைய பள்ளிக்கூடம் அந்தப் பாதையில், பள்ளத்தாக்கிற்கு நேரே முகட்டின்மீது இருந்தது. மாரிக்காலத்தில் பள்ளிக்குச் செல்வது சிரமமாக இருக்கும். பாதை மறைந்துவிடும். அவர்களிடம் ஒரு நாய் இருந்தது. அதன் பெயர் என்ன? அது அவனோடு எப்போதும் பள்ளிக்கு வரும். அது நல்ல நாய். சில சமயம் அவன் தன் பள்ளிக்கூடப் பையை அந்த நாயின் முதுகில் கட்டி விடுவான். அதை அது சுமந்து செல்லும். ''உன் நாய் ஏழாம் வகுப்புக் கல்விப் பயிற்சி பெற்றதா?'' என்று அவன் சகோதரன் ஒரு தடவை கேலி செய்தான்.

மிஸ் மேரியின் விரல்கள் மெல்லிசாய், ஒளி ஊடுருவக்கூடிய அளவு தெளிவாக இருந்தன. அவள் ஏன் அன்று இத்தாலிய விடுதியில் வருத்தம் அடைந்தாள்? ''நீங்கள், கீழ்திசை மக்கள் மனிதவர்க்கத்தின் குழந்தைப் பருவத்தை நினைவுக்குக் கொண்டு வருகிறீர்கள். நீங்கள் நெகிழ்ச்சி அடைகிறீர்கள்; மற்றவர் களின் துயரங்களுக்கு செவிசாய்க்கிறீர்கள்; உடனே அவர்களுக்கு எவ்வாறு உதவலாம் என்று நினைக்கிறீர்கள்.'' மிஸ் மேரியின் கிளினிக் ஒரு மில்லியன் டாலர் மதிப்புப் பெற்றதாகும்.

அம்மாவின் உடைகள் இருந்த அலமாரியின் கதவில் போட்டோக்கள் காணப்பட்டன. முகம் பார்க்கும் கண்ணாடிக்கு பதில் படங்கள் இருந்தன. அம்மா அந்தக் கண்ணாடியை நீக்கி விட்டுச் சாதாக் கண்ணாடி பொருத்தி, அதன் பின்னால் படங்களை வைத்திருந்தாள். அவற்றை அவன் ஒவ்வொன்றாய்ப் பார்த்தான். அவன் சகோதரியின் முகச்சாடை இனம் காண முடியாத அளவு மாறியிருந்தது. அவள் முகம் உள்ளிருந்து இளகிவிட்டது. அவன் அக்காளுக்கு நீலக் கண்கள் என்று அம்மா சொன்னதை நினைத்தான். இராமத்தின் பேரழகியாக அவள் கருதப்பட்டாள். ஒரே ஒரு காட்சி மட்டும் அவன் மனசில் பதிந்து, இன்னும் பசுமையாக இருந்தது. அவன் அத்தான் இராணுவத்தில் சேர்வதற்காகப் பிரிந்து போன நிகழ்ச்சி. அக்கா தன் கணவனை வழி அனுப்புவதற்காக அவனையும் ரயில் நிலையத்துக்கு அழைத்துப் போயிருந்தாள். அவன் பெயர் ஹாருதூன். அவர்கள் மூவரும் சேர்ந்து நின்றதை அவன் நினைத்தான். இரண்டு மாதங்களில் யுத்தம் தொடங்கிவிடும்; அதன் ஆரம்பத்திலேயே ஹாருதூன் இறந்துபோவான் என்று அப்போது யாருக்கும் தெரியாது. அவள் ஒரு வருஷத்தில் செத்துவிடுவாள்; அவளுள்

உயிர்த்த குழந்தை நன்ருகப் பிறந்து, அதன் தாய் இறந்த ஆறு மாதங்களுக்குப் பிறகு, யுத்த காலத்தின் குளிர் மிகுந்த கொடிய இரவு ஒன்றில் மரணமடையும் என்பதை அக்கா அவ்வேளையில் அறியவில்லை. யாருக்கும் எதுவும் தெரியாது. அந்தக் கணத்தில் அவர்கள் மூன்று பேரும் சந்தோஷமாக இருந்தார்கள். ரயில் நிலையத்தின் சத்தங்களால் அவன் மகிழ்ந்திருந்தான். அவளுள் உயிரோடிருந்த குழந்தையினுல் அக்கா ஆனந்தம் கொண்டாள். ஆண்மை நிறைந்த மனிதன் அவன் என நிரூபித்த மறுக்க முடியாத சான்றுகளால்—அவனுக்கு ஒரு மனைவி இருந்தாள்; ஒரு மகன் பிறப்பான்; அவன் இராணுவத்தில் சேரப் போய்க் கொண்டிருந்தான்—அவள் கணவன் சந்தோஷமாக இருந்தான். அவன் அந்தக் காட்சியை எப்போதும் நினைவுகூர்ந்தான். ஆனுல் அக்காவின் முகத்தை மறந்துவிட்டான். அவன் ஞாபகத்தில் அவனுடைய அக்காள் நீலப் பனி மூட்டத்தில் இருந்த சொந்த மில்லாத ஒரு அழகியாகத்தான் தோன்றினுள்.

மற்றுமொரு டெலிபோன் அழைப்பு.

''ஹலோ!''

''அராகெல் பேசுகிறேன். வாஸானுஷின் டெலிபோன் நம்பர் 1-78. ஆனுல் உன் அம்மா அரை மணிக்கு முன் அங்கிருந்து போய்விட்டாள். அவள் வாஸானுஷுக்கு சாப்பாடு எடுத்துப் போனுள். ஆனுலும், கிராம சோவியத்துக்குப் போவதாகத் தகவல் கூறிவிட்டுப் போயிருக்கிருள். அப்புறம் வால்நட் வாங்க அவள் போவாள். அப்பவே நான் சொன்னேனு இல்லையா! .. இன்னொரு முறை வா. குழந்தைகளையும் கூட்டி வா. ஜாம் செய்வதை அவர்கள் ஆனந்தமாக ரசிப்பார்கள்.''

''அவள் ஏன் கிராம சோவியத்துக்குப் போக வேண்டும்?''

''ஏன் என்று அவளிடம் யார் கேட்க முடியும்? தன்னைத் தனக்காகவே வைத்துக்கொள்கிற ரகம் இல்லையே அவள்.'' ஒரு கணம் அவர் பேசாமல் இருந்தார். ''அருமை வாகன், இது, என் புளிப்புச் சக்தி அதிகம் கூடிக்கொண்டே இருக்கிறது. ஜெர்மனியில் ஏதோ மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிருர்கள். அது உடனடியாகக் குணப்படுத்துகிறது என்றும் சொல்கிருர்கள். அது சம்பந்தமாக உன்னிடம் சொல்லும்படி உன் அம்மாவைக் கேட்டிருந்தேன். சொன்னுளா?''

''இரண்டு மாதங்களாக அம்மாவை நான் பார்க்கவில்லை... அறிவதற்கு நான் முயற்சி செய்வேன்.''

''நல்லது. கடவுள் காப்பாராக. இப்போது நான் கிராம சோவியத்துக்கு ஃபோன் பண்ணுவேன். அவளுடன் தொடர்பு கொண்டதும், நீ வந்திருக்கிறாய் என்று தெரிவிப்பேன்.''

''நன்றி.''

அவன் கைக்கடியாரத்தைப் பார்த்தான். மூன்று மணி நேரத்தில் அவன் ஆஸ்பத்திரியில் இருக்கவேண்டும். அது சாதாரண நாள்தான். விசேஷமாக எதுவும் நிகழவில்லை. இருந்தாலும் அவன் போகவேண்டியது அவசியம். அவன் ரேடியோவை இயக்கினான். அயல்நாட்டுச் செய்திகள் ஒலித்தன. அவன் கவனித்தான். திடீரென்று அவன் தன் அக்காளின் உருவத்தைக் கண்டான். இல்லை. அவன் அக்காளின் உடலை மட்டும்தான்; முகமும் சாயல்களும் இல்லாமல், மவுனமான, பாதுகாப்பு இல்லாத ஒரு உடலை, அவன் தனக்கு முன்னே கண்டான். ரேடியோ உபயோகமற்று இயங்கியது. அவன் தன் அக்காளின் உடலையே கண்டுகொண்டிருந்தான். குளிப்பு அருவியிலிருந்து நீர் கொட்டுவதுபோல், அவன் தலைக்கு மேலாகச் சோகம் கொட்டியது. இப்போது உள்ளார்ந்த இந்தச் சோகம் எப்படி விழித்தெழுந்தது? நினைவுகள் ஏன் திடீரென்று, ஒரு கடியாரத்தின் இயக்கங்கள்போல், அடிக்கத் தொடங்குகின்றன? அவன் அக்காள், தன் முகத்தை இழந்துவிட்டவள், காலத்தின் சோகத்தில் கரைந்துபோனாள். அந்தப் பெண்ணின் பெயரை உச்சரிக்கையில் அது தன் அக்காளின் பெயர் என அவன் ஒருபோதும் எண்ணியதில்லை. தன் அம்மாவை, ஒன்றிரு மாதங்களுக்கு ஒரு தடவைதான் பார்ப்பவளைப் பற்றித்தான் அவன் என்ன அறிவான்? ரணசிகிச்சைக் கத்திபோல் கூர்மையான எதுவோ அவன் இதயத்தைக் குத்தியது. அவன் தன் அம்மாவின் போட்டோவை நுணுக்கமாய்க் கவனிக்கலானான். அவளது இளம் வயதில் எடுக்கப்பெற்ற படம் அது. அப்பாவுடன் சேர்ந்து எரெவானில் எடுத்துக்கொண்டது. அப்பா சவரம் செய்யாத முகத்துடன் காணப்பட்டார். அம்மா சந்தோஷமாக இருந்தாள். அவள் போட்டோவில் மகிழ்ச்சியோடிருந்தாள். தாய்மார்கள் சந்தோஷமாக இருக்க நேர்வது எப்படி? அவர்கள் சந்தோஷம் இல்லாமல் இருக்க நேர்வதும் எப்படி? அவன் அம்மாவோடு மனம் விட்டுப் பேசிக்கூட வெகு காலம் ஆகியிருந்தது. அவன் பத்துப் பதினைந்து நிமிஷங்கள் தங்குவதற்கு வருவான்; வந்ததுமே கைக்கடியாரத்தைப் பார்ப்பான். அம்மாவுக்குச் சிறிது பணம் கொடுப்பான். எப்பவாவது ஒரு தடவை ஒரு ஜதை காலணிகள் அல்லது உடுப்புகள் கொண்டு வருவான். இந்தப் பொருள்கள் அவளுக்கு

உற்சாகம் அளிக்கவில்லையே என்று இடைக்கிடை அவன் மனக் கசப்புக் கொள்வான். அவற்றில் பெரும்பாலானவற்றை அவள் அணிந்ததே இல்லை. அவன் அம்மாவுக்காக ஒரு கம்பளிக் கோட்டு வாங்கி வந்தான்.

''நீ ஏன் இதற்கு ஒரு பெரிய பை அளவு பணத்தைக் கொட்டிக் கொடுத்தாய்?'' அவன் அம்மா முதலில் சந்தோஷப் பட்டாள். ஆனுல். பின்னர் அவள் அதிருப்தி கொண்டாள். அந்தக் கம்பளிச் சட்டை ஆடை அலமாரியில் தொங்கியது. எரெவானுக்குப் போகும்போது ஒன்று அல்லது இரண்டு முறை அதை அவள் அணிந்தது உண்டு. கிராமத்தில் கம்பளி அணிய அம்மாவுக்கு மனமில்லை என்று அவன் புரிந்துகொண்டான். ஆனுல் பின்னர், அவள் அதைக் காட்டுவதற்காக ஊர் ஜனங்களைத் தன் வீட்டுக்கு அழைத்தாள் எனவும் அவன் தெரிந்துகொண்டான். அப்படி ஒரு மகன் தனக்கு இருந்தது குறித்து அவள் பெருமையாகப் பேசியிருக்கலாம். ஒரே ஒரு தடவை அம்மா அழுது, தனது தலைவிதிபற்றிக் குறைப்பட்டாள். அப்போது அவள் விநோதமான ஒரு செய்தியைச் சொன்னுள்: ''நான் அடிக்கடி எண்ணிப் பார்க்கிறேன்—கடவுள் என்னைத் தண்டிக்கும்படி நான் என்ன பாபம் செய்தேன்? உன் அப்பா இறந்தார். அப்புறம் உன் அக்கா. பிறகு உன் அண்ணன். நான் மட்டும் ஒரு அநாதை மாதிரி இப்படித் தனியாக விடப்பட்டிருக்கிறேன். யுத்த காலத்தில் உன்னை வளர்த்துப் பாதுகாப்பதற்காக, நான் அபரானில் ஒயின் விற்கப் போவது உண்டு. சில சமயம் நான் ஒயினில் தண்ணீர் கலப்பது வழக்கம். அதற்காகத்தான் கடவுள் என்னைத் தண்டித்தாரோ? ஆனுல் அது உன் அப்பா செத்த பிறகு நடந்தது. அவர் இருந்தால், என்னை அவர் வீட்டைவிட்டு வெளியே போக விடுவாரா? ஒயின் விற்பது கிடக்கட்டும்!...''

போட்டோவில் அப்பா மயிரடர்ந்தவராய், அன்பானவராய்த் தோன்றினுர். இவ்வேளையில் அவன் தன் தந்தையைவிட மூன்று வயது மூத்தவன். தன் மகனுக்கு அப்பா பெயரை அவன் வைத்திருக்கிருன். அவன் பெயர் அவனுடைய தாத்தாவின் பெயராகும். ஆகவே, அவன் அப்பா பெயரளவில் உயிரோடு இருந்தார், தந்தை பெயரிலும் தன் பெயரிலும். ஆனுல் ஒரு மகனை அவனது தாத்தாவுடன் பிணைக்கிற பந்தம் எது? எதுவுமேயில்லை. ''என் பெயர் பாச்சா உருண்டை நாறுகிறது'' என்று அவன் ஒரு தடவை சொன்னுன். ''உலகம் நவம் நவமான பெயர்களால் நிறைந்திருக்கிறது. இருந்தாலும், நீ போய்ப் புராதனப் பொருள்கள் விற்கும் கடையிலிருந்து

எனக்கென்று ஒரு பெயரைத் தோண்டி எடுத்திருக்கிறாய்.'' அப்பா அவனை அறைந்தார். ஆனால் மறுநாள் அவர் அவனுக்கு ஒரு ஜப்பான் டேப் ரிக்கார்டர் வாங்கித் தந்தார். செயல் படுத்தப்பட்ட அற்பத்தனம் என்றே அதை அவன் கருதினான்.

அவனது ஞாபகங்கள் சில அடையாளங்களால் விழிப்புற்றன. யுத்த காலத்தின்போது அவன் க்யூவில் நின்றான். ரொட்டியை இறக்கி வைத்துக்கொண்டிருந்தார்கள். திடீரென ஒரு பையன், பதினான்கு பதினைந்து வயதிருக்கும், ஒரு முழு ரொட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடினான். கடைக்காரன், ஒரு போர் வீரன், மற்றும் க்யூவில் நின்ற பலரும் அவனை துரத்தியபடி ஓடினார்கள். இவனும் துரத்தினான். முடிவில், அவர்கள் அந்தப் பையனைப் பிடித்தார்கள். ஆனால் ரொட்டி அவன் கையில் இல்லை. தப்பி ஓடிய சில நிமிஷங்களில் அந்தப் பையன் முழு ரொட்டியையும் தின்றுவிட்டான். திடுக்கிட்டும் வியப்படைந்தும், கடைக் காரனும் போர் வீரனும் மற்றவர்களும் பையனையே பார்த் தார்கள். அவன் தலை குனிந்து செயலற்று நின்றான். ஆனால் அவன் கண்களில் தீ கனன்றது. அவன் தின்றுவிட்டான். தின்று தீர்த்தான். ரொட்டியை, சூடாக ஒரு கிலோ கிராம் எடை இருந்த முழு ரொட்டியையும் தின்றான். இந்த நிகழ்ச்சியை இவன் வீட்டில் சொன்னபோது, அம்மா அழுதாள். ''ஏழைக் குழந்தை! அவனை நீ வீட்டுக்கு இட்டு வந்திருக்கவேண்டும். சூடான ஆகாரம் கொஞ்சம் நம்மிடம் இருக்கிறது. அவனை இங்கே வீட்டுக்கு நீ கூட்டி வந்திருக்கவேண்டும்'' என்றாள்.

...அப்புறம் அவன் தந்தை அமைதியாக அவன் அருகில் அமர்ந்தார். பிறகு அவன் அக்கா, அத்தான் ஹாருதூன், அக்கா மகள் உட்கார்ந்தார்கள். அடுத்து அவன் அண்ணன். பின்னர், எங்கிருந்தோ வந்து ரொட்டி திருடிய பையன். அவன் தெளி வாக, மிகத் தெளிவாக அவர்கள் எல்லோரையும் பார்த்தான். அந்தப் பையன் வெறும் காலுடனும் வருத்தமாகவும் இருந் தான். அவன் தன் அம்மாவைச் சந்தோஷப் புன்னகையுடன் கண்டான். கடந்துபோன நாற்பது வருஷங்களின் தொலைவில், நாகரிகம் இல்லாத ஒரு நகரத்தின் ஒரு போட்டோகிராபரது ஸ்டுடியோவின் அறைகளுக்குள் தங்கிவிட்ட சிரிப்பு அது. அப்புறம் பாரிஸ் நகர மிஸ் மேரி ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். எனினும், அவர்கள் அனைவருக்கும் பதிலாக, ரேடியோ அயல்நாட்டுச் செய்திகளை ஒலிபரப்பிக்கொண் டிருந்தது. அந்தக் கனவுத் தோற்றம் எவ்வளவு நேரம் நீடித்தது? ஆயினும், அவன் அம்மா அக் கனவுக் காட்சிகளின் நடுவே நாள் தோறும் வாழ்ந்தாள்.

போக வேண்டியது அவசியம். ஒரு டாக்சி பிடிக்கும் வரை, நகர் போய் சேர்கிற வரையில்... அவன் ஆடை அலமாரியின் கதவை, வழக்கமில்லாத ஒரு சோகத்துடன் சாத்தினான். மவுன மாக இருந்த டெலிபோனை நோக்கினான். சன்னலின் வழியே, தெளிவான பனிக்கால வானத்தைப் பார்த்தான்.

அவன் கதவைப் பூட்டிக்கொண்டிருக்கையில், டெலிபோன் மறுபடி அலறியது. அமைதியாக, அவசரம் இன்றி, அவன் சாவியைப் பூட்டில் மும்முறை சுழற்றினான். பிறகு கதவை லேசாக அழுத்தினான். பூட்டிக்கொண்டதா என்று பார்த்தான். இன்னும் டெலிபோன் பொறுமையாக மணி அடித்துக்கொண் டிருந்தது. அது அராக்கெல் ஆக இருக்கலாம்; அல்லது அம்மா வாகவும் இருக்கலாம். இறுதியில், அவள் இருக்கும் இடத்தைத் தெரிந்து அராக்கல் அவளிடம் செய்தி தெரிவித்திருக்கக்கூடும்.

மூஷேக் கால்ஷோயன்
*(1933)*

# அழைப்பு

1. *''அலே-ஏஹ்...! அலெஹ், என் கண்ணே, அலே-ஏ-ஏஹ்...!''*

ஒரு கிழவன் தன் கைக்கோலில் சாய்ந்தவாறு பாடிக் கொண்டிருந்தான். ஆடுகள் மந்தை மந்தையாக மலைச் சரிவின் மீது திரிந்துகொண்டிருந்தன. ஆனால் ஸோரோ... ஆனால் கிழ ஸோரோ ஆடு மேய்க்கும் இடையன் அல்ல. கிராமத்துக்குப் பொதுவாக ஆடுமேய்ப்பவர் எவரும் இல்லை. ஊர்வாசிகளே முறை வைத்து ஆடுகளைக் கவனித்துக்கொண்டார்கள். அன்று ஸோரோவின் முறை. எனினும், ஸோரோ தன் கோலின்மீது சாய்ந்து பாடிக்கொண்டிருந்தான்.

''அலே-ஏஹ்...! அலெஹ், என் கண்ணே, அலே-ஏ-ஏஹ்!'' சூரிய உதயத்திலிருந்து அவன் அவ்வாறு அழைத்துக்கொண்டிருக் கிறான்.

ஓ, அது எப்போது நிகழ்ந்தது? மீண்டும் வசந்தம் வந்து விட்டது. எத்தகைய நீலமான, கனிவான காலை நேரம்! உலகமே நீலமயம். மாருதா மலை தன் முகத்தின்மேல் நீலத்திரை போர்த்திருந்தது. பள்ளத்தாக்குகளும் மலை இடுக்குகளும் நீல வானத்தால் நிறைந்திருந்தன. கணவாய்கள் மற்றும் மலைச் சரிவுகள்மீது அமைந்திருந்த குக்கிராமங்கள் நீலமாய் மூச் சுயிர்த்தன. தூரத்து தால்வாரிக் நதி கட்டவிழ்த்துவிட்ட நீலம் பள்ளத்தாக்குகளில் வெள்ளமாய்ப் பெருகியது... குழப்பமுற்று ஆடுகளும் குட்டிகளும் மாருதா மலையின் ஓரத்தைக் கண்டு கொண்டதும் உலகத்தோடும் வசந்தத்துடனும் பழக்கம் கொள்ளத் தொடங்கின. எச்சரிக்கை அடைந்த இளம் பிராணிகள் தங்கள் வாய்களாலும் நாக்குகளாலும், கற்களை, கற்கள்மீது படிந்த அலங்காரப் பாசிகளைத் தொட்டு உணர்ந்தன; மண் வாசனையை நுகர்ந்தன; முட்களிலிருந்தும் புல்லிலிருந்தும் பின் வாங்கின. குருவிகளின் படபடப்பைக் கேட்டு மிரண்டு துள்ளின... இளம் பிராணிகள் உலகத்தோடும் வசந்தத்துடனும் உறவாடின. ஆனால், ஸோரோ—அதோ ஒரு பையனாக இருந்தான். பத்துப் பதினொரு வயதுச் சிறுவன், வெள்ளாட்டின் ரோமத்தால்

நெய்யப்பட்ட கால்சட்டையும், வெள்ளாட்டு ரோமத்தாலான காலணியும் அணிந்த பையன், ஸோரோ, நீலநிறக் கற்களின் விளிம்பில் நின்று வேகமாய்க் கவண் எறிந்துகொண்டிருந்தான். வீஷ்-வீஷ்-வீஷ். சிறு கற்களைப் பள்ளத்தாக்கினுள் வீசிக்கொண்டிருந்தான். சிறிய கற்கள் காய்கறிப் பாத்திகளில் நின்ற சிறுமிகளின் தலைக்கு மேலே இரைந்துகொண்டு சென்றன; பள்ளத்தாக்கினுள் பாய்ந்தன. அதுதான் சுவாரஸ்யமான விஷயம்: கற்கள் பள்ளத்தாக்கை அடையும்வரை ஓசையுடன் வேகமாய்ப் பறந்தன. ஆனால், பள்ளத்தாக்கின் மேலாக வந்ததும் அவற்றின் பாதை தகர்ந்தது. கற்கள், அடிபட்ட காகங்கள்போல் நடுங்கிக்கொண்டு, பள்ளத்தாக்கினுள் வீழ்ந்தன.

காய்கறி சேகரிக்கும் பெண்களின் வர்ணமயமான வரிசை மலைச் சரிவின் மேலே வளைந்து வளைந்து ஏறும். அவர்களில் ஒருத்திதான் ஏழு வயதான சின்னஞ்சிறு அலெஹ். மினுமினுக்கும் கரிய விழிகளும், மென்மையான கூந்தலும், வெறும் கால்களும், சிங்காரமான மேல் துணியும் கொண்டிருந்த அலெஹ். உற்சாகத்தால் ஜொலித்த அலெஹ். அவள், அமைதியற்ற சிறு பிராணிபோல், கல்லுக்குக் கல் தாவிக்கொண்டிருந்தாள். அலெஹ்... அவள் ஒரு பூமாலை தயாரித்து, அதை அணிந்திருந்தாள்... அலெஹ்... காற்றில் அசைந்தாடும் வண்ணமலர் கதம்பம்... சின்னஞ்சிறு அலெஹ்... ஸோரோ எதிர்பாராத விதமாக அவளைக் கண்டு, அவள் தன்னுடைய அலெஹ், வேறு எவருக்கும் உரியவள் அல்ல என உணர்ந்தான். அவள் அவனுடைய அலெஹ். அவ்வளவேதான்.

இந்த நீல உலகம் அவனுடையது. அந்தத் தெளிவான காலை நேரமும், பட்டுத்திரை போர்த்திய மாருதா மலையும் அவனுடையவை. திராமைர் மடத்தின்மேலே சஞ்சரித்துக் கொண்டிருந்த வெண்மேகத் துணுக்கு அவனுடையது. பாம்பென நெளிந்து செல்லும் தால்வாரிக் நதியின் நீர்வீழ்ச்சியும் அவனுடையது. கிராமத்துக்கு உயரே படிந்திருந்த புகையும், உயிர்த்துடிப்பு மிக்க அவ் அழகிய குட்டிகளும் ஆடுகளும் அவனுடையவை. சூரியன், வானம், மலர்ந்திருக்கும் கற்கள், அவன் ஏறி நின்று வேகமாகக் கவண் சுழற்ற உதவிய அந்தப் பாறையும், விஷ்-வீஷ்-வீஷ் சத்தமும், வெறிபிடித்த கவணும் அவனுடையவை. அலெஹ்... தலையில் பூமாலை அணிந்து, கல்லுக்குக் கல் தாவிக்கொண்டிருந்த சின்னஞ்சிறு அலெஹ் அவனுடையவள்; வேறு எவருடையவளும் இல்லை; அவனுக்கே உரியவள்.

2. ''அலே-ஏஹ்...! அலெஹ், என் கண்ணே, அலே-ஏ-ஏஹ்...!''

கிழவன் தனது கோலின்மீது சாய்ந்தவாறே பாட்டுப் பாடினுன்.

அந்த வசந்தகாலத்தின் காலே வேளே வெகு நீலமாகவும் அழகாகவும் இருந்தது. ஏனெனில் அன்று சூரிய கிரகணம் நிகழ்வதற்கிருந்தது.

அன்று காலே. பச்சைக் கம்பு வைத்திருந்த ஆடு மேய்ப்போன் கவனித்து, தன் சின்னஞ்சிறு அலெஹைக் கண்டான். ஆனுல் அவன் அவளே இழந்துவிடுவான்...

அடுத்து அவன் ஐம்பத்தைந்து வருஷங்களுக்குப் பிறகு அவளேச் சந்தித்தான்...

தன் இளேய மகனின் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோது, திராட்சை மதுவை அவனே நேரில் போய்ப் பார்த்து ஆராரட் சமவெளியிலிருந்து கொண்டு வருவது என்று ஸோரோ தீர்மானித்தான்... அவனுடைய மற்ற மகன்களுக்குக் கல்யாணம் நடந்தபோது அவனிடம் அவ்வளவாகப் பணவசதி இல்லே. ஆகவே, கல்யாணம் என்ற பெயரில் அவன் ஒரு சிறிய விருந்து மட்டுமே அளித்தான். ஆனுல் இப்போதோ, கடவுளுக்கு நன்றி; அவன் நெருங்கிய நண்பர்களுக்கும் வெறுமனே தெரிந்தவர் களுக்கும், ஊர் முழுவதுக்குமே, தாராளமாகச் சாப்பாடு போடும் அளவுக்கு வசதி பெற்றிருந்தான். ஆராரட் சமவெளியிலிருந்து விசேஷமாகக் கொண்டுவந்த, தேர்ந்தெடுத்த ஓயினே, வீட்டில் சுத்தமாய்த் தயாரித்த திராட்சை மதுவை அவன் அனேவருக்கும் அளிக்க முடியும். தனிக் குடித்தனம் நடத்திய மூத்த மகனும், இரண்டாவது மகனும்—இவனும் தனியாகத்தான் வசித்தான்—தொழிற்சாலேயில் வடித்த ஒயினே வாங்கவேண்டும்—தொழிற் சாலேயில் தயாரான ஒயினுக்கு வேறு எதுவும் ஈடாகாது—என்று அவனுக்கு வலியுறுத்தக் கடுமையாக முயன்ருர்கள். எனினும், ஸோரோ உறுதியாக இருந்தான். ஆராரட் சமவெளியிலிருந்து—ஆராரட் சமவெளியிலிருந்து மட்டுமே என்று அவன் சொன்னுன். அவனே—ஸோரோவே—அதைத் தேர்ந்தெடுப்பான்.

மறுநாள் காலேயில், அவன் தன் மகனின் பக்கத்தில் காரில் உட்கார்ந்து—இது அவனது இரண்டாவது மகன். அவன் சொந்தக் கார் வைத்திருந்தான்—சமவெளி நோக்கிப் போனுன்.

அவர்கள் ஒன்றன் பின் ஒன்ருய்ப் பல கிராமங்களுக்குப் போய் வந்தார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் ஸோரோ பெரிய

ஜாடிகளிலிருந்து ஒயின் எடுத்து ருசி பார்த்தான். ஆனுல் எதுவும் அவன் தேடிய தரத்தில் அமையவில்லை.

அதற்குள் சாயங்காலம் வந்துவிட்டது. வருத்தம் அடைந்த மகன், வண்டியை, இருபுறமும் மரங்கள் வரிசையாய் அடர்ந்து நின்ற சாலை வழியாக ஓட்டிச்சென்ருன். திடீரென்று மரங்களி னூடே ஒரு வழி தென்பட்டது. ஸோரோ, காரணம் எதுவு மின்றி, பரபரப்பு அடைந்தான். "நாம் அதைக் கடந்து விட்டோம்" என்று கூறி, காரின் ஸ்டீயரிங் சக்கரத்தைப் பற்றினுன். கார் சாலையைவிட்டு விலகி ஓடி, புதர்களுக்குள் புகுந்தது. அது பெரிய விபத்து ஒன்றுமில்லை. கதவில் சிறு கீறலும், அங்கும் இங்குமாக லேசாகச் சில கோடுகளும் ஏற்பட்டிருந்தன. மகன் கோபம் அடைந்தான்.

"ஆத்திரப்படாதே, மகனே. விஷயங்கள் நிகழ்ந்து விடுகின்றன. உலகத்தில் எதுவும் நஷ்டமாவதில்லை" என்று ஸோரோ மகனை அமைதிப்படுத்தினுன்.

"இந்தக் கிராமம் எனக்குப் பிடித்திருக்கிறது." சீக்கிரமே அவன் ஊரின் நடுவில் காரை நிறுத்தச் செய்தான். "எப்படி இருந்தாலும் நாம் இங்கேயே வாங்கிவிடுவோம்" என்ருன். அங்கே கூடியிருந்த மக்களை நோக்கி நடந்தான்.

எல்லோரிடமும் ஒயின் இருந்தது. அனைவரும் அவரவர் நிலவறைக்கு அழைத்துச் செல்ல முன்வந்தார்கள். ஆனுல் ஒரே ஒருவன், மெலிந்த ஆசாமி, மட்டும் மவுனமாக இருந்தான். ஸோரோ அவனிடம் பேசினுன்.

"நிச்சயமாக என்னிடம் இருக்கிறது. திராட்சைத் தோட்டமும் இருக்கிறது, திராட்சை மதுவும் இருக்கிறது" என்று அந்த ஆள் பதிலளித்தான்.

"கடவுள் ஆணை. உன் ஒயினைக் கொண்டே நான் என் மகன் கல்யாணத்தை நடத்துவேன். வா, உன் வீட்டுக்குப் போகலாம்" என்று ஸோரோ அறிவித்தான்.

முகப்புக்கு மேலே மரச் சட்டங்களின்மீது திராட்சைக் கொடிகள் படர்ந்து காட்சி தந்த அந்த வீடு மது வாசனையால் நிறைந்திருந்தது. வீட்டுக்கு அருகாமையில் நின்ற ஏப்ரிகாட் மரத்தின் அடிப்பகுதியில் உலர்ந்த மிளகு சிவப்புச் சரங்களாகத் தொங்கி ஊசலிட்டன. மிகச் சிறிய, சுறுசுறுப்பான, கிழவி ஒருத்தி அச் சரங்களைக் கீழே இறக்கிக்கொண்டிருந்தாள்.

ஸோரோவுக்கு அந்த வீடும் திராட்சைத் தோட்டமும் வெகுவாகப் பிடித்திருந்தன. "இங்கே நீ ஒரு நல்ல இடம்

பெற்றிருக்கிறாய், சகோதரா. நீ நன்றாக அனுபவித்து ஆனந்திப்பாயாக!''

இவ் வார்த்தைகளைக் கேட்டதும் கிழவி திரும்பினாள். முதலில் அவள் மிளகை ஒரு சல்லடையில் போட்டுவிட்டு அருகில் வர விரும்பினாள். ஆனால், பிறகு, சிவப்புச் சரங்களைக் கையில் வைத்தபடி அவள் அந்நியனை வியப்புடன் பார்த்து நின்றாள்.

''அவள் உன் மனைவியா?''

''ஆமாம். என் மனைவிதான். அவளுக்கும் உங்கள் ஊர்ப் பக்கம்தான்.''

''அப்படியா? இங்கே வா. இங்கே இப்படி வா, சகோதரி. நாம் அறிமுகம் செய்துகொள்வோம்.'' ஸோரோ சந்தோஷம் கொண்டான்.

முதியவள் அழகாகவும் சீராகவும் நடந்து அருகே வந்தாள். புன்முறுவலுடன் கையை நீட்டினாள். அவள் கையில் கிடந்த மிளகுச் சரங்கள் சலசலத்தன. தன் ஊர்ப்பக்கமிருந்து வந்த பெரியவரை, கையில் மிளகுச் சரங்களுடன் சந்தித்ததால் அவள் குற்ற உணர்வு அடைந்தாள்.

''உனக்கு அங்கே எந்த கிராமம், சகோதரி?''

அவள் பதிலைக் கேட்டதும், தங்கள்மீது கல் எறியப்பட்டதும் ஜனங்கள் குழம்புவதுபோல் ஸோரோ குழப்பம் அடைந்தான். ''ஸாரெகானா?'' ஸோரோ சிரமத்துடன் நிமிர்ந்து நின்றான். ''ஸாரெகான்?'' கிழவி மிக அருகில் நின்றபோதிலும், ஸோரோ வெகு நெருக்கமாகத் தன் முகத்தைக் கொண்டுவந்து, கண்களைக் குறுக்கிக்கொண்டு அவள் கண்களுக்குள் நோக்கினான்... முதியவளின் கண்கள் சோர்ந்துபோய் சோகத்துடன் இருந்தன. ஆனால் அவற்றின் அடி ஆழத்தில் குறும்புத்தனப் புன்னகை ஒன்றின் பொறிகள் சுடரிட்டன.

ஸோரோ தன் தலையைத் தாழ்த்தி அந்த ஸ்திரீயின் கையிலிருந்து தொங்கிய மிளகுச் சரங்களைப் பார்த்தான். பிறகு, தொலை தூரத்திலிருந்து, வெகு வெகு தொலைவிலிருந்து வந்த கோணலான, பாபகரமான, கனலிடும் புன்னகை ஒன்று, சிலந்தி வலையில் சிக்கியதுபோல் அவன் மீசையில் மாட்டிக்கொண்டது. ''அலெஹ்!'' என்று அவன் முணுமுணுத்தான். கிழவிகூடத் தனது பெயரைக் கேட்கவில்லை. ''அலெஹ்'' என்று ஸோரோ முனகினான். நேரே நிமிர்ந்து நின்றான். (சமீப காலத்தில் தன் தந்தை அப்படி நிமிர்ந்து விறைப்பாக நின்றதை மகன் கண்டதேயில்லை.) அவ்வாறு நிமிர்ந்து நின்று, தனக்கு முன்னால் நின்ற

சின்னஞ்சிறு பெண் பிள்ளையின் தலைக்கு மேலாக நோக்கினான். அவன் பார்வை வீடுகளையும் மரங்களையும் ஊடுருவிச் சென்று, தூரத்து மலை விளிம்பின்மீது நிலைத்தது. அவன் நெடிய மூச்சு உயிர்த்து, ''ஹே... அலே... ஏஹ்...! அலே... ஏஹ்!'' என்று கூப்பிட்டான். தூரத்து மலைகளை நோக்கியவாறு மீண்டும் அழைத்தான்: ''அலே... ஏ... ஏஹ்...!''

முதியவள் அமைதி இழந்து, அரைவாசி மூடிய, பனி படர்ந்த கண்களைத் தூரத்தில் பதித்தபடி அவள் பெயரைத் திரும்பத் திரும்ப கூறிக்கொண்டிருந்த ஸோரோவை உற்று நோக்கினாள்.

சிறிது நேரத்துக்குப் பிறகு, தன் மங்கிய பார்வையை அவள் பக்கம் திருப்பி அவன் மீண்டும் முணுமுணுத்தான்: ''நான் ஸோரோ அலெஹ்!'' அவளது உள்ளங்கைகளைத் தன் கைகளில் எடுத்து அழுத்தினான்; அவற்றால் தன் நெற்றியைத் தொட்டான்; அவற்றைத் தன் உதடுகளுக்குக் கொண்டுபோனான்.

முதியவள் குழப்பம் அடைந்தாள். அவர்கள் நாட்டின் வழக்கப்படி பெண்கள் ஆண்களின் கைகளைப் பற்றிட வேண்டும். அவள் அவசரமாக ஸோரோவின் கையை முத்தமிட்டாள். இதற்குள் அவளுக்கும் கண்ணீர் பெருகியது. ஓ, நெடுங் காலமாக மறந்திருந்த கண்ணீர். அது ஸோரோவின் கைகள் மீது விழுந்தது.

அப்புறம், முத்தமிடுவதற்காக ஒருவர் கையை ஒருவர் பிடிக்க, கிழவியின் கைமீது தொங்கிய மிளகுச் சரங்கள் அவர்களின் முகங்களுக்கும் கண்களுக்கும் அருகே குலுங்கின. அலெஹ் தும்மினாள். அவன் கண்களிலிருந்து கண்ணீர் அமைதியாக வழிந்தது. அழுவதில் அவன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான். கண்களைக் கசக்கினான். சூடான, தெளிவான கண்ணீர் அழுக்காகி அவன் இமைகளின் கீழே கசப்பாக மாறியது.

எதிர்எதிராக நின்ற இரண்டு குழந்தைகள் உறுத்துகிற கண்களை முஷ்டியால் துடைத்துக்கொண்டு, கலங்கிய கண்களால் ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

''அப்பா, நேரமாகிறது'' என்று மகன் நினைவுபடுத்தினான்.

ஸோரோ தன்னினைவு பெற்றான். மகனைப் பார்த்தான். வீட்டுக்காரனைக் கவனித்தான். பிறகு தன் பார்வையை அலெஹ் பக்கம் திருப்பினான். மேலும் கீழுமாய்த் தலையை ஆட்டினான்.

''அலெஹ்...'' என்று முனகினான். அவன் என்னவோ கூற ஆசைப்பட்டான். ஆனால் மறுபடியும் வீட்டுக்காரனை நோக்கினான்.

''ஆகவே, இவள் உன் மனைவியா?... உனக்குச் சந்தோஷம் பெருகட்டும்'' என்றான். உடனே ''ஒயின் எங்கே?'' எனக் கேட்டான்.

வீட்டுக்காரன், அளவு கருவியான ஒரு பித்தளைப் பாத்திரத்தில் ஒயின் நிரப்பி, அதைக் கண்ணாடித் தம்ளருடன் ஸோரோவிடம் ருசி பார்க்கக் கொடுத்தான். ஆனால், ஸோரோ பாத்திரத்தில் இருந்ததை அப்படியே பருகினான். ஒரே வாயில் அதை காலி பண்ணிவிட்டு, தன் பாராட்டுதலைக் கூறினான்.

''வெகு அருமை!'' அவன் உள்ளங்கையினால் மீசையைத் தடவிக்கொண்டான். ''என் உள்ளம் குளிர்ந்தது... இவ்வளவு ருசியான ஒயின் இதுவரை என் உதடுகளில் பட்டதேயில்லை, அலெஹ். அது உண்மையிலேயே சுவை மிக்க மது!'' அவன் தலை குனிந்திருந்தது. அறையின் மூலையில் நின்ற முதியவளின் செருப்புகள்மேல் அவன் பார்வை படிந்திருந்தது. அவன் மகனிடம் பேசினான்: ''பார் மகனே, உதயத்திலிருந்து இப்போது வரை நாம் ஏன் கிராமம் கிராமமாகப் புகுந்தும்கூட வெறும் கைகளுடன் வெளியேறினோம் தெரிகிறதா? இதுதான் நான் விரும்பிய ஒயின். வேறு எதுவுமில்லை... ஊற்று!''

''எவ்வளவு? என்ன விலை?'' என்று வீட்டுக்காரன் கேட்டான்.

''ஜாடி முழுவதும் எனக்குத்தான்.'' ஸோரோவின் குரல் சண்டை பிடிப்பதுபோல் ஒலித்தது. ''விலையையும் கணக்கையும் கேட்காமல் ஊற்று... இந்த மது விலைமதிப்பு இல்லாதது. ஒயினின் மதிப்பு மீண்டும் ஒயினேதான். அலெஹ்... ஊற்று!''

வீட்டுக்காரன் அளவு பாத்திரத்தை எடுக்க வந்தான். ஆனால் ஸோரோ அதைக் கொடுக்கவில்லை.

''வேறு எதைக் கொண்டாவது ஊற்று. இது என் கிளாஸ்.''

நின்றவாறே அவன் குடிப்பதைத் தவிர்க்க வீட்டுக்காரன் பெரிதும் முயன்றான். வீடு இருக்கிறது, மேஜை இருக்கிறது; அவர்கள் மனிதர்களாக மேஜை முன் அமர்ந்து பேசலாம், சரியானபடி அறிமுகம் செய்துகொள்ளலாம்; அதிலும் விசேஷமாகப் பழைய நண்பர்கள் திரும்பவும் சந்தித்திருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னான். ஆனால் ஸோரோ கேட்கவில்லை. மகன் சாடை காட்டினான். ஆனால் ஸோரோ, அந்த இடத்திலேயே நின்று, ஜாடியிலிருந்து நேராக எடுத்து, அளவு பாத்திரத்தைக் கொண்டே குடிக்க விரும்பினான்.

முதியவள் ரொட்டியும் இதர தின்பண்டங்களும் எடுத்து வந்து, உண்ணும்படி அவர்களை உபசரித்தாள். ஆனால் ஸோரோ உணவைத் தொடவில்லை. அவன் ஜாடிக்கு அருகே சுவரில் சாய்ந்துகொண்டான். பாத்திரத்தை நிரப்பிக் குடித்தான். நிரப்பினான். பாத்திரத்தை அடிவரை காலி செய்தான். மீசையைத் துடைத்தான். பெருமூச்செறிந்து, முஷ்டியில் ''அலெஹ்...'' என்று முனகினான்.

கிழவி மேஜை முன் எங்கோ பார்த்தவளாய் உட்கார்ந்திருந்தாள். சிறிது நேரத்துக்கு முன்பு, ஸோரோ முற்றத்திற்கு வந்த சமயம், அவள் உணர்வோடும் செயல் வேகத்துடனும் இருந்தாள். இப்போதோ குழம்பிக் குறுகி உட்கார்ந்திருந்தாள். ஒரு முதியவளின் கைப்பிடி அளவாய், அசதியோடு, கண்களில் நீர் பொங்க அவள் இருந்தாள்.

''உன் புருஷனை நான் பார்த்துவிட்டேன், அலெஹ். உனக்கு வேறு யார் இருக்கிறார்கள்?''

''கடவுளுக்குக் கீர்த்தி சேரட்டும். எனக்கு மகன்கள் இருக்கிறார்கள், சகோதரன் ஸோரோ.'' அவள் தன் கண்ணீரை அடக்கத் தீர்மானித்தாள். ''எனக்கு மருமகள்கள், கல்யாணமான பெண்கள், பேரக் குழந்தைகள் எல்லோரும் இருக்கிறார்கள். உனக்கு யார் இருக்கிறார்கள், சகோதரன் ஸோரோ?''

''கடவுள் கீர்த்தி பெருகட்டும். எனக்கு மகன்கள் இருக்கிறார்கள், அலெஹ். மருமகள்கள், மணமான மகள்கள், அலெஹ், ஏகப்பட்ட பேரக் குழந்தைகள், மற்றும் இந்த ஒயின்.'' ஸோரோ திரும்பவும் பித்தளைப் பாத்திரத்தை நிரப்பினான். ''இந்த ருசிமிகுந்த ஒயின் எனது இளைய மகனின் சந்தோஷ வைபவத்துக்காக; அவன் கல்யாணத்துக்காக. அலெஹ்... ஓ, அலெஹ், என் கண்ணே!''

அவன் பாடத் தொடங்கினான்.

மது ஜாடிமீது குனிந்திருந்த வீட்டுக்காரன் ஸோரோவைப் பார்த்தான். பெரிதாகச் சிரித்தான். தனது ஒயின் ரசித்துப் பாராட்டப்படுவதைக் கண்டு அவன் பெருமை கொண்டான்.

''எவ்வளவு ருசியான ஒயின் இது, அலெஹ்!'' என்று ஸோரோ, பாட்டை நிறுத்திவிட்டுச் சொன்னான்: ''இவ்வளவு ருசியான ஒயினை இவ்வளவு காலமும் நீ இங்கே வைத்திருக்கிறாய். நான் அதுபற்றித் தெரியாமலே இருந்தேனே. ஓ, அலெஹ்!'' பிறகு தொடர்ந்து பாடினான்.

வீட்டுக்காரனும் ஸோரோவின் மகனும் ஒயினை அளந்து, விலை கணக்கிட்டு முடித்தார்கள். ஸோரோ பாடிக்கொண்டிருந்

தான். வீட்டுக்காரன் சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டு, தன் மனைவி அருகில் உட்கார்ந்தான். ஸோரோ பாடியவாறே இருந்தான். மகன், ஆட்டுத் தோல்களிலும் சிறு பீப்பாக்களிலும் நிரப்பிய ஒயினை எடுத்துப்போய், வண்டியில் வைத்துவிட்டு, திரும்பிவந்து நிலவறையின் நடுவில் நின்றான். ஸோரோ தன்னை மறந்து பாடிக்கொண்டிருந்தான். பித்தளைப் பாத்திரம் ஏற்கெனவே காலியாகியிருந்தது. பாடும்பொழுதே அவன் கடைசிப் பாத்திர ஒயினைச் சிந்திவிட்டான். தன்னைத் தலை முதல் கால் வரை ஒயினால் நனைத்துக்கொண்டதை அவன் உணரவே யில்லை.

''ஒ, அலெஹ்!'' என்று அவன் பாட்டை ஆரம்பித்தது போலவே முடித்தான். கண்களைத் திறந்தான். ஆனால் அவன் யாரையும் பார்க்கவில்லை. சித்தம் கலங்கிய அலெஹை, சிரித்துக்கொண்டிருந்த வீட்டுக்காரனை, பக்கத்தில் நின்ற மகனை, எவரையும் பார்க்கவில்லை. மகன், அவன் கையிலிருந்த பித்தளைப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு அவன் புஜத்தை இறுகப் பற்றினான்.

''நாம் போவோம், அப்பா!''

ஸோரோ தன் புஜத்தை விடுவித்துக்கொண்டு சுவரோடு உறுதியாக ஒட்டிக்கொண்டான்.

''மாராதுக் பேரில் ஆணையிட்டுச் சொல்கிறேன், நான் இங்கேயிருந்து நகரமாட்டேன். அலெஹ்...''

அவர்கள் வீட்டுக்குள் போகலாம் என்றும், அங்கே ஸோரோ படுத்து சிறிது ஓய்வு பெறலாம் என்றும் வீட்டுக்காரன் யோசனை கூறினான்.

''ஒ, என் கண்களுக்கு இனி தூக்கம் கிடையாது.'' அவன் முஷ்டியால் கண்களைக் கசக்கினான். ''அலெஹ்!'' என்று கூப்பிட்டான். நீ எங்கேபோய் மறைந்தாய்?''

அவன் மகன் திரும்பவும் அவனைப் பிடித்து இழுத்தான். அவனோ மகனை அப்பால் தள்ளிவிட்டு அவனை ஏசினான். வீட்டுக் காரனுக்கும் எரிச்சல் தந்தான். குழந்தை மாதிரி சுவரைப் பற்றிக்கொண்டு, அங்கிருந்து நகர விரும்பவில்லை அவன். இடையிடையே ''அலெஹ்...!'' என்று கூப்பிட்டவாறு இருந் தான்.

வீட்டுக்காரன் அவனைச் சரியான முறையில் கண்டித்தான்.

''நீ என்னை வெளியே துரத்துகிறாய், இல்லையா?'' ஸோரோ குரலை உயர்த்திக் கூப்பாடு போட்டான். இன்னும் சுவரை

விடாது பிடித்து நின்றான். ''இந்த ரொட்டியின் பெயரால், ஒயின் பெயரால், ஜீவிக்கும் ஆண்டவன் பெயரால் சொல்கிறேன். உனது ஜாடிகளை நான் தூள் தூளாக நொறுக்குவேன். நீ என்னை வெளியே துரத்துகிறாய்; அப்படித்தானே? அலெஹ்...!''

மகனும் வீட்டுக்காரனும் சேர்ந்து அவனை வெளியே இழுத்து வர நேர்ந்தது. அப்படி இழுக்கப்பட்டபோது, ஸோரோ கூப்பிட்டுக்கொண்டேயிருந்தான். அங்குமிங்கும் அலெஹைத் தேடினான். அவளைக் காணவில்லை.

முதியவள் உள்ளம் உருகி மூலையில் குறுகி உட்கார்ந்திருந்தாள். அவளுக்குக் கால்கள் விளங்கவில்லை. விடாது அழுதுகொண்டேயிருந்தாள். வெளியே ''அலெஹ்'' என்று கூப்பிட்ட குரலை அவள் கேட்டாள். அவளை யாரும் அவ்விதம் அழைத்ததில்லை—அவ்வளவு அன்பாக, அவ்வளவு இதய பூர்வமாக, அவ்வளவு ஆசையோடு, ஒரு பிரார்த்தனைபோல், ஒரு பாடல்போல், தூரத்து மலைகளிலிருந்து வந்த எதிரொலி போல்... ''அலே... ஏ... எஹ்!'' கொஞ்சம் கொஞ்சமாக அந்த அழைப்பு எட்ட எட்டப் போயிற்று.

ஸோரோ இருண்ட தெருவில் கூப்பிட்டான். அவர்கள் ஊரைவிட்டு வெளியேறிய பின்னும் அவன் அழைத்தான். தூங்குகிற வரை அவன் அவ்விதம் அழைத்துக்கொண்டேயிருந்தான்.

உறக்கத்தில் அவன் உதடுகள் அசைந்துகொண்டிருந்தன: ''அலெஹ்...!''

3. ''அலே-ஏஹ்... அலெஹ், என் கண்ணே, அலே-ஏ-எஹ்...''

கிழவன் தன் கோலின்மீது சாய்ந்தவாறு திரும்பத் திரும்ப பாடிக்கொண்டிருந்தான். ஒரு சிறுவனும் ஒரு சிறுமியும் சரிவின்மீது ஏறி வந்தார்கள். ஸோரோவின் பேரக் குழந்தைகள் அவர்கள். அவனுடைய இளைய மகனின் பிள்ளைகள். அவன் கல்யாணத்துக்குத்தான் ஸோரோ அலெஹின் வீட்டிலிருந்து ஒயின் வாங்கி வந்தான்.

கல்யாணத்துக்குப் பிறகு, அலெஹைப் பார்ப்பதற்காக அவன் சமவெளிப் பக்கம் போயிருந்தான். அப்புறம் மாரிக் காலம் வந்தது. பிறகு வசந்தம் வந்தது. ஸோரோவுக்குச் சதா ஏதாவது ஒரு வேலை இருந்தது. அன்றாடக் கவலைகள் அலைக் கழித்தன. எப்பவாவது அவன் நினைத்துக்கொண்டான். சம வெளிப்பக்கம் போகவேண்டும் என்று மனசில் தீர்மானித்தான். ஆனால் ஒவ்வொரு முறையும் ஏதேனும் ஒரு தடங்கல் குறுக்கிட்டது... இந்த விதமாக வருஷங்கள் ஓடிவிட்டன.

ஆறு வருஷங்கள்.

ஆனால் இன்று... ஆனால் இன்று காலை ஸோரோவின் உள்ளம் கொந்தளித்தது.

அவன் ஆடுகளை, குடும்பத்தை, தன்னையே தன் மனசிலிருந்து அகற்றிவிட்டான்... அவனுக்கு முன்னே பள்ளத்தாக்குகளும் கணவாய்களும் நீல வானத்தால் நிரம்பித் திகழ்ந்தன. ஆராரட் சமவெளி ஒரு நீலத்திரை போர்த்திருந்தது. அக் கடல்அலைத் திரையின்மீது, பொங்கி வழியும் ஆரக்ஸ் நதி ஒரு வெள்ளிய பட்டை அமைத்திருந்தது. அதற்கும் அப்பால் ஒரு வரிசைக் கூடாரங்கள் புயலில் ஆடுவனபோல் எழுந்தும் தணிந்தும் காட்சி அளித்தன. அப்புறம் ஆர்மேனியன் மலைவிளிம்பு. ஆனால் அவனுக்கு, அவன் கண் முன்னால், வேறொரு வசந்தகாலக் காலை மிளிர்ந்தது. பூமாலை சூடிய மற்றொரு உலகம்; நீலத்தில் ஆழ்ந்த வேறு மலைகள்; நகர்ந்து செல்லும் இன்னொரு நதி; சூரியனோடும் உலகத்தோடும் பழகிய வேறொரு மந்தை ஆடுகளும் குட்டிகளும்; ஒரு பச்சைக் கம்பை வைத்திருந்த ஆடு மேய்க்கும் பையன் ஒருவன்; காய்கறி பறிக்கும் சிறுமிகள் வரிசை; பூமாலை அணிந்து கல்லுக்குக் கல் தாவிக்குதித்த சின்னஞ்சிறு பெண் ஒருத்தி வசந்தத்தோடு தோன்றினர்...

''அலெஹ்''—கிழவன் அடிவானத்தை நோக்கியபடி அழைத்துக்கொண்டிருந்தான். ''அலெஹ், என் கண்ணே, அலே-ஏ-எஸ்...!''

அவர்கள் அவன் பக்கத்தில் வந்து நின்றபோதுதான், அவன் தன் பேரப்பிள்ளைகளைக் கவனித்தான். சிறுமி அவன் கால்களைப் பற்றிக்கொண்டிருந்தாள்.

''தாத்தா, ஆடுகள் எங்கே?''

''ஆடுகளா?'' கிழவனுக்கு உடனடியாக அந்தக் கேள்வி விளங்கவில்லை. ''ஆடுகளா?'' அவன் பார்வை தூரத்திலிருந்து மீண்டு அக்கம்பக்கத்தைத் துழாவின. ''ஆடுகளுக்கு என்ன ஆகும், என் ஆட்டுக்குட்டியே?'' என்றான்.

அவன் முழங்கால்கள் வலித்தன. தரை பிடித்து இழுத்தது. அவன் முனகலுடன் கீழே அமர்ந்தான். ஆனால் அடிவானம் அவன் பார்வையைக் கவர்ந்தது. அவன் மனம் அதே விஷயத்தைத் திரும்பவும் சித்திரித்தது.

சிறுமி உணவு மூட்டையை அவிழ்த்தாள். ''நாம் சாப்பிடலாம். இருப்பது பூராவையும் நாம் சாப்பிட்டு விடுவோம், தாத்தா'' என்றாள்.

''எனக்கு ஒரு கிளாஸ் ஒயின் மட்டும்போதும்'' என்று ஸோரோ எண்ணினான். அந்தக் கணத்திலேயே, ''நான் அலெஹைப் பார்க்கப் போவேன்'' என்று அவன் மனம் தீர்மானித்தது.

''ஆடுகள் எங்கே தாத்தா?''

''கடவுளே, என் மண்டை வெடிக்கட்டும்'' என்று ஸோரோ நினைத்தான். அவன் பார்வை இன்னும் சமவெளிமீதே நிலைத்திருந்தது.

''அதோ அலெஹ் என் கண் முன்னே இருக்கிறாள். ஆனாலும் நீண்ட காலம் நான் அவளைப் பார்க்கவேயில்லை. அவளைப் பார்க்க நான் ஒரு முறை போவேன்.''

''ஆடுகள் எங்குமே இல்லை, தாத்தா!''

''எங்குமில்லையா!'' ஸோரோ தன் கோலில் சாய்ந்தவாறே எழுந்து நின்றான்.

''ஆடுகள் அங்கே இருக்கின்றன'' என்று தெளிவில்லாமல் எங்கோ கம்பால் சுட்டினான். ''போங்கள். அவற்றை ஒன்று திரட்டி இங்கே கொண்டுவாருங்கள். அப்புறம் உட்கார்ந்து சாப்பிடுங்கள். நான் கிராமத்தை எட்டிப் பார்த்துவிட்டுத் திரும்பிவருவேன்'' என்று கூறினான்.

ஸோரோ வீடு நோக்கி நடக்கையில், அலெஹைப் பார்க்கப் போகாமல் இருந்ததற்காக வழி நெடுகத் தன்னையே குறைகூறிக் கொண்டான். ஏன் போகவில்லை என்று அவனுக்கே வியப்பாக இருந்தது. நேரம் இருந்ததில்லையா? அவன் கண்களும் கால்களும் செயல் இழந்தனவா? போக அவனுக்கு வசதி இல்லையா? பின்னே அவன் ஏன் போகவில்லை? ஏன் இத்தனை காலமும் அந்தப் பயணத்தைத் தள்ளிப்போட்டிருந்தான்? எந்தவிதமான காரணமும் இல்லாமலே, அவன் மனைவிதான் அவன் மனசில் குற்றவாளியாகத் தோன்றினாள். அவன் வீட்டுக்குள் அடிவைக்கும்போதே கடும்கோபம் கொண்டிருந்தான்.

''உன் கையால் செய்த ரொட்டி மோசமானது!''

வீட்டுக்குள் புகுந்ததுமே மனைவியுடன் சண்டை பிடிக்கத் தொடங்கினான் ஸோரோ. ''அது மோசமாக இருக்கிறது'' என்று திரும்பச் சொன்னான். ''நீ உன் வலது கையால் எனக்கு ரொட்டி தந்தாய். உன் இடது கையினால் என் ஆத்மாவைப் பறித்துக்கொண்டாய். நீ என்னை வேதனைப்படுத்தினாய். இந்தக் கம்பை நான் உன் தலைமேல் அடித்து முறிக்கவேண்டும்.''

அவன் தனது தலையில் அடித்துக்கொண்டான்; முதலில் கம்பாலும் பிறகு முஷ்டியினுலும். அடி அவனுக்கு ஒரு புதிய கருத்தை உண்டாக்கியது.

''கடவுளே, என் தலை வெடிக்கட்டும்! ஏன் அலெஹைப் பார்க்கப் போகவேண்டும்? அவளைப் பார்க்கப் போவானேன்? நான் போய் அவளையே இங்குக் கொண்டு வருவேன்'' என்று நினைத்தான்.

கிழவி குழம்பிப்போய் கலக்கத்தோடு நின்ருள்.

''நீ என் வழியில் நிற்கிருய்'' என்று திரும்பவும் ஆரம்பித்தான் ஸோரோ.

''சரியாகத்தான் சொன்ஞர்கள்—ஆர்மேனியர்களுக்கு புத்தி பிந்தித்தான் வரும் என்று... அது மட்டும் சரியான சமயத்தில் வந்திருந்தால், நான் அன்றைக்கே, ஒயின் வாங்கிய தினத்திலேயே, அலெஹை என்னுடன் இட்டு வந்திருப்பேன்'' என்று எண்ணினுன்.

''உன் பிள்ளைகள், உன் மகள்களும் மகன்களும் எனக்குக் குறுக்கே நிற்கிருர்கள்.''

''அன்றைய தினமே நான் அலெஹைக் காரில் வைத்து இங்கே ஓட்டி வந்திருக்கவேண்டும்'' என்று அவன் நினைத்தான். ஆனுல், அவன் மகன் எதிர்த்திருப்பான், அவனை அப்படிச் செய்யவிட்டிருக்கமாட்டான் என்ற எண்ணமும் அவனுக்கு ஏற்பட்டது.

''அந்த வேளையில் உன் இரண்டாவது மகன் என் வழியில் குறுக்கே நின்ருன். இப்போது உன் இளைய மகன். நான் அவன் கைக்குள் வசிக்கிறேன்... இந்த வீடே ஒரு சிறைதான். என்னுல் மூச்சுவிட முடியவில்லை அதில்... இனி நான் தனியாக வசிப்பேன்.'' ஸோரோவின் தீர்மானம் விரைவாகவும் முடிவானதாகவும் அமைந்தது.

''அதோ அந்தக் குடிசையை இன்று நான் ஒழுங்கு படுத்துவேன். உதயத்தில் போய் அலெஹை இங்கே கொண்டு வருவேன்'' என்று ஸோரோ எண்ணினுன்.

''என்ன செலவானுலும் சரி, நான் விவாகரத்துப் பண்ணுவேன். கடவுளே, நான் நிச்சயம் செய்வேன்'' என்று கத்தினுன்.

''அவர்கள் சம்மதிக்கவில்லை என்ருல், நான் அவளைக் கடத்திக்கொண்டு வருவேன்'' என்று ஸோரோ தனக்குள் தீர்மானித்தான்.

‘‘நான் போதுமான அளவு இதை அனுபவித்தாயிற்று. நீ சம்மதித்தாலும் சம்மதிக்காவிட்டாலும் நான் விவாகரத்து செய்தே தீர்வேன்.’’

ஸோரோ சீறிச் சாடினுன். கிழவி வியப்போடும் குழப்பத்தோடும் பார்த்துக்கொண்டு நின்ருள்.

புது வீட்டின் பின்னுல் ஒரு குடிசை இருந்தது. அவர்களுடைய பழைய வீடு அது. அதன் கதவு ஒரு கம்பியால் பிணைக்கப்பட்டிருந்தது. அதனுள் பழைய சாமான்கள் நிறையக் கிடந்தன. பழைய தொட்டில்கள், துருப்பிடித்த பழைய அடுப்புகள், கலப்பைக் கொழுக்கள், வெட்டரிவாள்கள், கடப்பாறைகள் எல்லாம் இருந்தன. சுமாராக இருந்த ஒரு அடுப்பையும் இரண்டு நாற்காலிகளேயும் அவன் தேர்ந்தெடுத்தான். அவற்றை அந்தக் குடிசையில் வைத்துக் கொண்டான். மற்றவற்றை எடுத்துப்போய், குடிசைக்குப் பின்னுல் அடுக்கினுன். அப்புறம் சுவர்களேயும் கூரையையும் சுத்தப்படுத்தினுன். கதவைச் செப்பனிட்டான். இதோ! இப்போது அது வசிப்பதற்கு ஏற்றதாகிவிட்டது.

மாலேயில் மகன்கள் வீட்டில் கூடியபோது, தந்தை ஏற்கெனவே குடிசையில் தனது படுக்கையை அமைத்திருந்தார். அவருடைய தட்டங்கள் சிலவற்றையும், ஒரு சாக்கு மாவையும் அங்கே கொண்டு சேர்த்திருந்தார். தனிக்குடித்தனம் அமைத்துவிட்டு, தந்தை வாசல்படியில் உட்கார்ந்து அமைதியாகப் புகைபிடித்துக் கொண்டிருந்தார். மகன்கள் குழப்பத்தில் ஆழ்ந்தார்கள்—அப்பாவுக்குக் கோபமூட்டியது யார்? அந்த நிலேமைக்கு விளக்கம் கோரி ஒருவரை ஒருவர் விசாரித்தார்கள். தாயைக் கேள்வி கேட்டார்கள். அப்பாவிடமிருந்தே காரணத்தை அறிய விரும்பினுர்கள். ஆனுல் ஸோரோ சுருக்கமாகச் சொன்னுன், ‘‘என் உள்ளம் இப்படி விரும்புகிறது’’ என்று.

அவர்கள் எவ்வளவோ கெஞ்சியும் அவன் வீட்டுக்குப் போகவில்லே. அவனுடைய இரண்டு மகன்களின் வீடுகளில் வசிக்கவும் விரும்பவில்லே.

அவன் பிரிவு உறுதியாகவும் திட்டமானதாகவும் இருந்தது.

4. மறுநாள் மதியவேளேயில் ஸோரோ சமவெளி கிராமத்தில் இருந்தான். அலெஹ் வீட்டின் முன்புறம் அவன் மேலும் கீழுமாக நடந்தான். அவளேத் தெருவில் சந்திக்க விரும்பினுன். அநேக தடவைகள் அப்படியும் இப்படியும் நடந்த பிறகு, மல்பெரி மரத்தடியில் நின்ருன். மரக்கிளேகளினுல் சன்னலே

வருடினான்; சட்டத்தில் தட்டினான். அடிமரத்தின் பின் பதுங்கி, எதிரொலிக்காகக் காத்துநின்றான். அலெஹ் சன்னலுக்கு வர மாட்டாளா? அவள் வந்தால் அவன் அவளுக்குக் சைகை காட்டுவான். பிறகு அவன் அப்பால் நகர்ந்தான். மறுபடியும் சன்னலுக்குப் போனான். தட்டினான். மீண்டும் மரத்தின் பின் பதுங்கினான். இவ்விதம் திரும்பவும் செய்தான். ஆனால் அலெஹ் தலைகாட்டவில்லை. தெருவில் குழந்தைகளைத் தவிர வேறு ஆட்கள் இல்லை. அது வசந்தகாலம். ஒவ்வொருவரும் ஏதாவதொரு வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

ஆகவே ஸோரோ முற்றத்திற்குள் போகவேண்டியதாயிற்று.

அவன் உள்ளே அடி எடுத்து வைத்ததுமே அலெஹைக் கண்டான். ஒயின் சம்பவம் நிகழ்ந்த தினத்தில், மிளகின் சிவப்புச் சரங்களைச் சேகரித்துக்கொண்டிருந்தபடி அவளைப் பார்த்த அதே ஏப்ரிகாட் மரத்தைச் சுற்றிலும் காய்கறிச் செடிகள் நடப்பட்டிருந்தன. அலெஹ் மண்ணைப் பதப்படுத்திக் கொண்டிருந்தாள்.

அவள் மிகவும் சின்னவளாக இருந்தாள். தோளையும் கழுத்தையும் ஒரு பக்கமாய் சாய்த்துக்கொண்டு ஒரு மேட்டின்மீது உட்கார்ந்திருந்தாள்—அவள் இருந்த விதத்தில், ஸோரோவுக்கு அப்படித் தோன்றியது... அவள் இருந்த விதத்தில்—அவள் மண்ணைப் பதமாய்க் கிளறியபடி முணுமுணுத்துக்கொண் டிருந்தாள் என்று ஸோரோவுக்குத் தோன்றியது—பேச்சையோ, முணுமுணுப்பையோ அவன் கேட்கவில்லை—ஆனாலும், அலெஹ் உண்மையில் பாடிக்கொண்டிருந்ததாக அவனுக்குத் தோன்றியது. ஓ, அவனது புராதன நாட்டின் பாடல்களில் ஒன்றை, ஒயினுக்காக வந்த தினத்தில் அவன் பாடிய பாட்டுகளில் ஒன்றை அலெஹ் முணமுணத்துக்கொண்டிருந்தாள்.

ஸோரோவின் குரலைக் கேட்டதும் அம் முதியவள், அவள் வயதுக்கு வழக்கமில்லாத விதத்தில், உடனடியாக நிமிர்ந்து பார்த்தாள்.

''என் கண்ணே, அலெஹ்!'' ஸோரோ தன் கம்பை ஏப்ரிகாட் மரத்தின்மேல் சார்த்தினான். கிழவியின் கைகளைத் தன் உள்ளங் கைகளில் ஏந்திக்கொண்டான். ''அதிர்ஷ்டமுள்ள சந்திப்பு... நீ சிறிதாக, ரொம்பவும் சின்னவளாக வளர்ந்திருக்கிறாய்... அந்த நாட்களின் அலெஹைப் போல!'' தன் தலையை மலைகளின் பக்கமாக அவன் ஆட்டினான். ''சின்னஞ்சிறு அலெஹ் மாதிரி. உனக்கு நினைவு இருக்கிறதா?— அன்றும் இன்றுபோல் வசந்தத்தின் ஒரு நாள்தான்... நினைவிருக்கிறதா?... நான் அதை

என் கண் முன்னே காணமுடிகிறது. உனக்கு நினைப்பிருக்கிறதா? உன் தலையில் ஒரு பூமாலை இருந்தது. நீ, சின்னஞ்சிறிய பெண். கல்லுக்குக் கல், ஒரு கல்லிலிருந்து இன்னொரு கல்லுக்குத் தாவிக் குதித்தாய். நினைவிருக்கிறதா? அந்த நாள்தான், விசேஷமான அந்த நாளில்தான், என் இதயம் தெறித்தது...''

முந்திய சந்தர்ப்பத்தைப் போலவே இப்போதும் நிகழ்ந்தது. ஸோரேரா தன் முழு உயரத்துக்குத் தன்னை நிமிர்த்திக் கொண்டான். அவன் கண்கள் கலங்கின. தூரத்து மலைகளைப் பார்த்தவாறே........ கிழவி, அமைதியின்றி அவன் முன் நின்று, பாதி மூடிய அவனது விழிகளைத் திருத்தமில்லாது பார்த்துக் கொண்டு.

''உள்ளே போகலாம், சகோதரன் ஸோரேரா.''

''இல்லை. உள்ளே வேண்டாம்; உள்ளே வேண்டாம்; என் கண்ணே'' என்று ஸோரேரா பலமாக ஆட்சேபித்தான். தோட்டத்தின் உட்புறத்தில் இளம் ஆப்பிள் மரம் ஒன்று நின்றது. ''அங்கே, அந்த மரத்தடிக்கு!'' என்றான் அவன்.

பிறகு, பித்தளைப் பாத்திரத்தில் ஒயின் கேட்டான். தன் கம்பை எடுத்துக்கொண்டு நடந்துபோய் ஆப்பிள் மரத்தின் கீழே உட்கார்ந்தான்.

''என் வியாபாரம் நேர்மையானது, அலெஹ்.'' முதியவளின் கையிலிருந்து அவன் ஒயினை எடுத்துக்கொண்டான். ''மாராதுக் எனக்கு உதவிபுரியட்டும்!'' என்றான். ஒயினைக் குடித்துவிட்டு வியாபார ரீதியில் அமர்ந்தான்.

''நல்லது. ஸோரேரா ஏன் வந்திருக்கிறான் என்று இப்போது கேள்.''

''நாம் அறிமுகமானவர்கள். நண்பர்கள்கூட, சகோதரன் ஸோரேரா. ஒரே ஊர்க்காரர்கள். இவ்விதம் பார்க்க வருவது சர்வசாதாரணம். உலகம் நெடுகிலும் சகஜம்தானே!''

''இவ்வளவுதானா, அலெஹ்?... நான் உன்னிடம் சொல்லிக் கொண்டிருந்தேனே.'' ஸோரேரா ஏப்ரிகாட் மரத்தை நோக்கிக் கையை நீட்டினான். ''அந்த நாள் இன்றுபோல் இனிமையானது. என் இதயம் உனக்காகச் சிதறியது, அலெஹ்.''

ஸோரேரா பதிலுக்காகக் காத்திருந்தான். ஆனால் முதியவள் அவனை விசித்திரமாகப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

''தின்பதற்கு ஏதாவது கொண்டு வரட்டுமா, சகோதரன் ஸோரேரா?''

''உணவு வேண்டாம். ஒயின் மட்டும். தயவுசெய்.''

''ஓ மாராதுக்!'' ஸோரோ மவுனமாக உதவி வேண்டினான். ''உனது புனிதக் கரத்தால் மூட்டிவிடப்பட்ட நெஞ்சத் தீ உன் புனிதக் கரத்தாலேயே திருப்தி அடைந்து குளிரட்டும்!''

கிழவி திரும்பி வந்ததும் ஸோரோ தன் பேச்சைத் தொடர்ந்தான்: ''அன்று மாருத் மலையின் உயரமான மடம் உன் அன்பை என் இதயத்துள் புகுத்திய அந்த வசந்த நாளில், அலெஹ், நீ இவ்வளவு உயரம்தான் இருந்தாய்...'' அவன் தரைக்குமேல் சிறிது அளவு அடையாளம் காட்டினான். ''உனக்குத் தெரியுமா? அன்றைக்கே, அலெஹ், காலணி எதுவுமின்றிப் பனி நனைத்த பாதங்களுடன் இருந்த அலெஹ், பூமாலை சூடிய அலெஹ், என்னுடைய அலெஹ் என்று நான் உணர்ந்தேன். அவள் என் அலெஹ். எனக்குச் சொந்தமான அலெஹ். தெரிகிறதா?... அன்று மாருத் எனக்கு ஒரு காதலியைத் தந்தது. ஆனால் மறுநாளே கட்டுப்பாடில்லாத ஜனங்கள் அவளை அபகரித்துச் சென்றார்கள்... ஒரு கடுவாய் இளம் பிராணிகளின் மந்தைக்குள் புகுந்தது. அங்கே கொலையும் அழிவும், பிடுங்குவதும் ஓடுவதும் கொள்ளையிடுவதும் நிகழ்ந்தன. சூரியன் கறுப்பாகிவிட்டது... அன்று சூரிய கிரகணம். அலெஹ், நீயும் நானும் ஒருவரை ஒருவர் இழந்தோம். நான் சொல்வது சரிதானா, என் கண்ணே?''

கிழவன் ஒயின் குடித்தான். சிகரெட் பற்ற வைத்தான். மறுமொழிக்காகக் காத்திருந்தான். கிழவி மவுனமாக இருந்தாள். அவள் கழுத்து ஒரு பக்கமாய்ச் சாய்ந்திருந்தது. அவளுடைய மெலிந்த விரல்கள் பச்சை இலைகளோடு விளையாடிக் கொண்டிருந்தன.

''நீ இப்பவும் என் அலெஹ்தான்'' என்று கிழவன் முணுமுணுத்தான். ''அந்தத் தொலைதூர நாள் கெட்டுப்போகவில்லை, அலெஹ். இன்றும் அது நிலைத்திருக்கிறது. அந்த வசந்த நாள் இன்று போலவே என் கண் முன் நிற்கிறது... ஆடுகளும் குட்டிகளும் மாருத் மலையின் அடிவாரத்தில் துள்ளிக் கொண்டிருக்கின்றன. நீ...''

ஓ, முந்திய நாள் காலை நேரம் மாதிரித் தோன்றிய அந்தக் கடந்துபோன வசந்த நாள், மென்மையான வெல்வட்டிலும் வர்ணங்களிலும் அனைத்தையும் பொதிந்து வைத்த இனிய பொழுது, அவனைவிட்டு அகன்று செல்லாது. ஸோரோ மீண்டும் அதை வர்ணித்தான்.

''இப்படியாக... மாராதுக் என்னில் காதலைப் பதிவு செய்தது. அன்று முதல் இன்று வரை அந்தப் புனிதமான

பாபம் என் உள்ளத்தில் இருக்கிறது, அலெஹ்... வா, உன் இடுப்பு வாரைக் கட்டிக்கொள். நாம் போகலாம், என் கண்ணே!''

முதியவள் திகைப்படைந்து, ''எங்கே?'' என்று கேட்டாள்.

''எங்கே என்று கேட்கிறாய்? பின்னே நான் யாருக்காக அந்தக் கதை எல்லாம் சொன்னேன் அலெஹ்? வா, நாம் ஒன்றுகச் சேர்ந்து நம் கிராமத்துக்குப் போவோம். நன்மையைக் கருதி நான் என் வீட்டிலிருந்து விலகிவிட்டேன். எனக்கு இன்னும் சில வருஷ வாழ்வே எஞ்சியிருக்கிறது. அந்த வருஷங்களை நாம் இருவரும் ஒன்றுய்ச் சேர்ந்து, மாராதுக்கின் விருப்பத்துக்கிணங்க வாழ்வோம்.''

''இவனுக்குப் பைத்தியமா?'' கிழவி தன் வாயைக் கையால் பொத்திக்கொண்டு, தனிமொழிபோல் பேசினுள். ஸோரோ முன் வைத்த ஒயினை எடுத்துவிடத் தயக்கத்துடன் முயன்றுள்.

''இல்லை. ஒயின் இல்லை...! அதுக்கும் ஒயினுக்கும் என்ன சம்பந்தம்? அது ஒயினுல் ஏற்படவில்லை, அலெஹ். இதனுல் வந்தது.'' அவன் கையைத் தன் இதயத்தின்மேல் வைத்தான். ''இதுதான், என் கண்ணே, இதுவே... யாருக்காக நான் அந்த நேர்த்தியான கதையைச் சொன்னேன், அலெஹ்? நீயும் நானும், நமது இரண்டு தலைகளையும் ஒரே தலையணையில் வைத்துப் படுப்பதற்கில்லை என்றுல், பின் அந்தப் பிரகாசமான காலை நேரம் உலகத்துக்கு ஏன் வந்தது?...''

''அது உண்மையாக வருவதற்கில்லை என்றுல், அது உண்மையாகவே நிகழாது போகுமானுல், அந்த நீல வர்ணக் காலை ஏன் பிறந்தது? ஸோரோ தனது சின்னஞ்சிறிய அன்பான அலெஹை அன்று காலையில் கண்டு, மாலைக்குள் இழப்பது என்றுல், அந்தப் பிரகாசமான காலை ஏன் நிலைத்திருந்தது, அலெஹ்?... உலகத்தின் பாபத்தை அதிகப்படுத்துவதற்காக அது வந்துவிட்டு அகன்று போனதா? அது ஸோரோவின் உள்ளத்தை ரணப்படுத்திவிட்டுப் போக வந்ததா? உலகத்தில் இத்தகைய இனிமையான விஷயம் இருக்கிறது என்று ஸோரோவிடம் சும்மா சொல்லிப் போகவா வந்தது, அலெஹ்? அது ஒரு கனவா? அழகிய கதையா? இல்லை. அந்த ஒளிமயமான காலை இருந்தது, இன்னும் இருக்கிறது. வா. உனது இடுப்பு வாரை மாட்டிக்கொள். நாம் போவோம்.'' ஸோரோவின் குரல் அதிகாரத்துடன் தொனித்தது.

''சகோதரன் ஸோரோ, நீ உன் அறிவை இழந்துவிட்டாய்.'' முதியவள் வருத்தப்பட்டாள்.

"நான் உன்னை பலவந்தமாய்த் தூக்கிப் போவேன்" என்று ஸோரோ தரையை முஷ்டியால் தட்டிக்கொண்டே சொன்னான்.

கிழவி தன் உள்ளங்கைக்குள் அடக்கமாகச் சிரித்தாள்.

"நீ என்னை எப்படிக் கடத்திச் செல்வாய், சகோதரன் ஸோரோ?"

"நீ ரொம்பச் சின்னவள். ஒரு கைப்பிடி அளவே இருக்கிறாய். நான் உன்னை ஒரு பைக்குள் திணித்து— ஊரைவிட்டு வெளியேறுகிற வரை சிரமமாக இருக்கும். அதன் பிறகு உலகம் முழுவதுமே என்னைத் துரத்தி வந்தாலும் அலெஹ் என்னுடைய அலெஹ்தான். நான் உன்னைக் கடத்திப் போவேன்" என்று ஸோரோ உறுதியோடு திரும்பவும் சொன்னான்.

முற்றத்திலிருந்து ஒரு ஆண்குரல் அலெஹைக் கூப்பிட்டது. அந்தக் குரல் டெலிபோன் அழைப்பு மாதிரி, "ஹலோ—!" என்று ஸோரோ காதில் விழுந்தது.

"அது என் கணவர்" என்று முதியவள் அவசரமாக எழுந்தவாறு சொன்னாள்.

"உன் புருஷன் நல்ல மனிதன்தான். ஆனாலும் நான் உன்னைத் தூக்கிப் போவேன்; இரவில்—" அவன் அவள் ஆடை விளிம்பைப் பற்றி இழுத்து, ரகசியமாகச் சொன்னான்: "உன் வாயை மூடிக் கொண்டிரு. ஒரு வார்த்தையைக்கூட வெளியிட்டுவிடாதே!"

கிழவி திரும்பவும் அடக்கமாகச் சிரித்தாள். முன்தானை ஓரத்தால் வாயைத் துடைத்துக்கொண்டாள்.

"எழுந்திரு, சகோதரன் ஸோரோ. வீட்டுக்குள் வா."

"வீட்டுக்குள் நான் என்ன செய்யக் கிடக்கிறது? நான் ஊருக்கு வெளியே பதுங்கியிருப்பேன். இருட்டு வந்ததும், திரும்பி வந்து உனக்காகக் காத்திருப்பேன். கடவுள் பேரால் சொல்கிறேன், நான் அவ்விதம் செய்வேன்."

வீட்டுக்காரன் மறுபடியும் கூப்பிட்டான்.

"நான் இங்கே இருக்கிறேன். சகோதரன் ஸோரோ வந்திருக்கிறார்" என்று அலெஹ் பதிலளித்தாள்.

ஸோரோ திரும்பவும் கிழவியின் ஆடையைப் பற்றி இழுத்தான்; பற்களைக் கடித்தான்; முஷ்டியை ஆட்டினான்.

"நான் உன்னைத் தூக்கிப் போவேன், அலெஹ். என்ன ஆனாலும் சரி, நான் உன்னைக் கடத்திச் செல்வேன்" என்று முணுமுணுத்தான்.

வீட்டுக்காரன் அங்கே வந்தான். ''நல்லது! நீயா? வாவா. ஒயின் வேண்டுமா?'' என்று கேட்டுச் சிரித்தான்.

''மிக அதிகம் தேவை, சகோதரா'' என்று ஸோரோ ஒப்புக்கொண்டான். ''உன் ஒயினைப்போல் உலகத்தில் வேறு எங்குமே இல்லை. இருக்கவும் இருக்காது. பெருமைப்படுவதற்கும், என் தலையை உடைப்பதற்கும் உனக்கு உரிமை இருக்கிறது.''

இப்படியும் அப்படியுமாக, அந்தக் குடும்பம் கூடியது. இரண்டு மகன்கள், இரண்டு மருமகள்கள், பேரக் குழந்தைகள் எல்லோரும் கூடி, உணவு உண்ண அமர்ந்தார்கள்.

''கலகலப்பான ஒரு வீட்டின் சாப்பாட்டு அறைதான்'' என்று ஸோரோ பாராட்டுதலாக எண்ணினான். ''கல்யாண விருந்து மாதிரி... மாறாதுக் பேரால், இது எனக்கும் அலெஹுக்கும் கல்யாணம்.''

அது உண்மையிலேயே சந்தோஷமான குடும்பம்தான். அலெஹின் மகன்கள் உற்சாகத்தோடு இருந்தார்கள். அவன் ஒயின் வாங்க வந்த தினத்தில் அவர்கள் வீட்டில் இல்லை. பிறகு அவர்கள் தெரிந்துகொண்டார்கள்—ஒரு ஆள் வந்தான். அவர்களுடைய அம்மாவின் ஊரைச் சேர்ந்த வயோதிகன். சுவாரஸ்யமான மனிதன். அவன் பித்தளைப் பாத்திரத்தால் மிக நிறைய ஒயின் குடித்தான். பாடினான், குடித்தான். குடித்தான், பாடினான். அவனை நிலவறையிலிருந்து சிரமத்தோடுதான் வெளியே கொண்டுவந்தார்கள். பிறகும் அவன் திரும்பி வந்தான். ஆனால், பரிதாபம், அப்பொழுதும் அவர்கள் அவனைப் பார்க்கவில்லை. இதோ அந்த சுவாரஸ்யமான கிழவன் இப்போது அவர்களின் விருந்தாளி. அவன் அடர்த்தியான வெள்ளை மீசை வைத்திருக்கிறான். ஆழ்ந்த சுருக்கங்கள் கொண்டிருக்கிறான். உரக்கப் பேசுகிறான். மதுவைச் சுவைத்து அடிவரை குடிக்கிறான். உடனேயே தன் கிளாஸை நிரப்புகிறான்.

''நீங்கள் எங்களுக்கு மாமா'' என்றான் இளைய மகன். அவன் மிகுந்த உற்சாகத்தோடு இருந்தான். ''எங்களுக்கு அம்மா வழியில் பந்துக்களே இல்லை. நீங்கள்தான் உண்மையில் எங்கள் அம்மா வழி மாமா.''

'நீ என்னை அந்நியனாக, அல்லது உன் மாமாவாக மதிப்பது உன் சொந்த விஷயம்' என்று மனசுக்குள் பதில் கூறினான் ஸோரோ. 'ஆனால் இன்றிரவு நான் உன் அம்மாவைக் கடத்திச் செல்லப்போகிறேன். நான் அவளைத் தூக்கிப்போவேன், பையா.'

இளைய மகன் அதிகம் அம்மாவை ஒத்திருந்தான்.

'அந்தப் பையன் என் மகனாக இருந்திருக்க வேண்டியவன்', என்று ஸோரோ நினைத்தான். ''யார் உன் மனைவி, என் ஆட்டுக்குட்டியே?'' எனக் கேட்டான். அவன் மனைவி, ஸோரோவை அடுத்து உட்கார்ந்திருந்தவள், கருணை உள்ளம் கொண்ட பெண்ணாகத் தோன்றினாள். அவன் அவள் கூந்தலை வருடினான். 'இந்த இனிய இளம் பெண் என் மருமகள்' என்று எண்ணினான்.

''உன் ஆரோக்கியத்துக்காக!'' அவன் ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு கிளாஸ்கள் குடித்தான். பையனை அதிகக் கூர்மையாகக் கவனித்தான். பையனின் கருமணிகள் ஆனந்தத்தால் ஒளிர்ந்தன; அவன் கண்களில் பாடல்கள் இருந்தன. நிச்சயமாகப் பாடல்கள் இருந்தன. இந்தவிதமான கண்களை உடைய இளைஞர்கள் அனைவரும் பொதுவாக நல்ல குரல் பெற்றிருந்தார்கள் என்பதை அவன் கவனித்திருந்தான்.

''நீ பாடுவாயா, என் ஆட்டுக்குட்டியே?''

''பாடுவேன்'' என்று பையன் சந்தோஷமாய்ச் சொன்னான்.

''அப்படியானால், என் குடிக்கு நீ ஒரு பாட்டுப் பாடு!''

பையன் பாடியபோது அவன் மீண்டும் குடித்தான். அவன் கண்களில் பனி படர்ந்ததை உணர்ந்தான்... இவ்வளவு சீக்கிரமா?... ஒரு சிறு கோப்பையால் ஒரு சில தடவைகள் தானே அவன் குடித்திருந்தான்... இனிமேல் குடிக்கக்கூடாது... ஸோரோ விருந்து சாப்பிட வரவில்லை... அவன் மகன்கள் குடிக்கட்டும்... ஆனால் அவனுக்கு ஒரு நோக்கம் உண்டு... அலெஹ் எங்கே இருக்கிறாள்?

முதியவள் உள்ளும் புறமுமாக, அழகாய் சீராக நடந்து கொண்டிருந்தாள். அவள் உதடுகளில் புன்முறுவல் நிலைத்திருந்தது.

''நீ நீண்டகாலம் வாழ்வாயாக, என் சிறுவனே.'' ஸோரோ கோப்பையை உதட்டருகே கொண்டு போனான். தயங்கினான்—குடிக்கவா, வேண்டாமா? ஆனாலும் குடித்தான்.

''உனக்கு இதைவிடப் பெரும்பேறு சித்திக்கட்டும்... ஆனால் அது உன் பாடல் இல்லை. நீ பாட வேண்டிய பாட்டு வேறு ரகமானது... இப்போ கவனி. நான் என் பாட்டைப் பாடுகிறேன்.''

பாடத் துவங்குவதற்கு முன் ஸோரோ கண்களை மூடி, தலை குனிந்து, இடுப்பையும் தோள்களையும் அங்கும் இங்குமாக

அசைத்தான். ஆடியவாறே இருந்தான். பிறகு நீண்ட குரல் எழுப்பினான். ''ஹேயீஈ... ஈ ஈ... ஆ.'' அந்த அழைப்போடு அவன் தன் கையைத் தலைக்கு உயர்த்தினான். பாடலானான்.. முதுமையால் உடைந்து கரகரத்த குரலால் அவன் பாடினான். மூடிய கண்களோடு, தன்னையே மறந்து, ஓ, ரொம்ப வருத்த மாகவும் துயரத்தோடும் தோன்றியபடி பாடினான்.

பாட்டு இயற்கை பற்றியது: கற்களும் வர்ணமயப் பூக்களும் நிறைந்த, ஒரு வண்டியும் சரிவின்மேல் வளைந்து செல்லும் பாதையும் கொண்ட, மலைகளைப்பற்றியது. உக்கிரமாக உழுகிற ஒரு குழு வானத்தை நோக்கி உயர்ந்து செல்வதைப்பற்றியது. மலைப்புறம் நெடுகிலும், சூரிய ஒளியில் மின்னியபடி பரந்து கிடந்த தினை வயல்களைப்பற்றியது.

ஸோரோ கையைத் தலைக்கு மேல் தூக்கிப் பிறகு கீழே போட்டான். ஒரு பாட்டில் உருண்டு விழுந்தது. அவனுக்கு அருகே இருந்த இளம் பெண் கிழவனின் பாடும் கைக்கு இடம் விட்டு ஒரு பக்கமாக ஒதுங்கினாள்.

பாட்டு, பச்சைக் கம்புகள் வைத்திருந்த ஆடு மேய்ப்பவர்கள் பற்றியும், அழகிய முன்தானையோடு காய்கறிகள் சேகரித்த பெண்கள்பற்றியும் இருந்தது.

பாட்டு இயற்கைபற்றியும், காதல்பற்றியும் இருந்தது.

ஸோரோ பாடி முடித்தான். ஆயினும் அவன் இன்னும் பாடலோடு அசைந்தாடிக்கொண்டிருந்தான். அவன் கண்கள் இன்னும் மூடியிருந்தன. பக்கவாட்டில் சாய்ந்து அவன் கூப்பிட்டான், ''அலே-ஏஹ்...!''

அதுவும் ஒரு பாடலா, ஒரு பாட்டின் கடைசி அடியா? அல்லது தன் முதிய மனைவியின் பெயரா? வீட்டுக்காரனால் புரிந்து கொள்ள இயலவில்லை.

எல்லாவற்றையும் அப்படி அப்படியே போட்டுவிட்டு, அலெஹ் மேஜையின் ஓரத்தில் குறுகிக் குழம்பி உட்கார்ந்தாள். சற்று நேரத்துக்கு முன்பிருந்த மகிழ்ச்சி மறைந்துவிட்டது. அவள் உதடுகளின் ஓரங்களில் ஒளிந்திருந்த புன்னகை போய் விட்டது. வருத்தமும் கலக்கமும் கொண்ட சின்னஞ் சிறிய கிழவி தன் ஊர்க்காரனையே பார்த்தவாறு இருந்தாள்.

''அலெஹ்!'' ஸோரோ சன்னலுக்கு வெளியே பார்த்தான். சூரியன் இதற்குள் மலைகளின்மேலே சென்றுகொண்டிருந்தது. ''உலகத்தில் சூரிய அஸ்தமனமே இருக்கக்கூடாது என்று

விரும்புகிறேன்'' என்ற ஸோரோ பாட்டு மாதிரி நீட்டினான்: ''நண்பகல் வேண்டாம், அஸ்தமனம் வேண்டாம், மாலை நேரம் வேண்டாம், இரவும் வேண்டாம், கோடை வேண்டாம், மாரிக் காலம் வேண்டாம் என்று நான் விரும்புகிறேன்... வசந்தம் மட்டுமே இருக்கவேண்டும்... வசந்தகாலமும் காலை வேளையும் மட்டுமே... முதியவராக வளர்வது இருக்கக்கூடாது என்று விரும்புகிறேன், அலெஹ். குழந்தை குழந்தையாகவே இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். நான் அந்த அழகிய கல் மேலும், பனி படிந்த பச்சைப் பயிர்களுக்கு மத்தியில நீ உன் தலையில் ஒரு பூமாலையோடும் இருக்கவேண்டும், அலெஹ்...''

''அம்மா, அவர் உன்னை நோக்கித்தான் பேசுகிறார்!'' எல்லோரும் கிழவனின் தனிமொழியை அமைதியாய்க் கேட்டுக் கொண்டிருந்தார்கள். வீட்டுக்காரனின் இளைய மகன் நெகிழ்ந்து போனான். ''ஸோரோ மாமா உன்னிடம்தான் சொல்கிறார் அம்மா!... அவர் பக்கத்தில் வந்து உட்காரு.''

ஆனால் அம்மாவுக்கு எழுவதற்கே சிரமமாக இருந்தது.

மகன் உதவினான். அவன் அம்மாவை இட்டுவந்து ஸோரோ அருகில் அமர்த்தினான்.

''ஓ, மாராதுக்!'' ஸோரோ எழுந்து, முதியவளை எடுத்துத் தன் மடிமீது வைத்தான்.

உடனே அவள் தன் முகத்தைத் கிழவனின் மார்பில் புதைத்தாள். ஸோரோ தனது தலையைத் தாழ்த்தினான். அவன் கன்னம் அலெஹின் தலைமுடியைத் தொட்டது. அவன் லேசாக அசைந்து, அரைவாசி மூடிய கண்களால் சன்னலுக்கு வெளியே நோக்கி, இசைபோல் இழுத்துக் கூப்பிட்டான்:

''அலே-ஏஹ்...! அலெஹ், என் கண்ணே, அலே-ஏ-ஏஹ்...!''

ஹ்ரான்ட் மாட.வோசியன்
(1935)

# ஆகஸ்ட்

ஆண்ட்ரோ ஒரு வண்டி செய்துகொண்டிருந்தான். பைன் மரப் பலகையைத் திட்டம் பண்ணி முடித்த உடனேயே குறுக்குக் கம்பு தயாராகிவிடும். ஒட்டை போடுவதற்கு வெகுநேரம் பிடிக்காது. ஆகவே, வேலை ஏறக்குறைய முடிந்துவிட்டது. என்ன விசித்திரமான ஜனங்கள் அவர்கள். ஒவ்வொரு பொருளையும் சொர்க்கத்திலிருந்து கிடைத்த வரப்பிரசாதம் போல் கருதுகிறார்கள். பார்க்கப்போனால், அவர்கள் செய்வதும் சரிதான். கொளுத்தும் வெயிலில் நாள் முழுவதும் வேலை செய்வது என்பது விளையாட்டில்லை... சாயங்காலம், ஸானசாரிடம் காளைமாடு இரவல் பெறுவதற்காக அவன் கிராமத்துக்குப் போவான். கோடைக்கால மேய்ச்சல் தளத்தில் விறகுகள் மீந்திருக்கவில்லை எனத் தோன்றியது. அவன் போய், பசுக்களை நோட்டம் விடுவான். அங்கே ஆஷ்கென் நிச்சயம் நல்ல தயிர் வைத்திருப்பாள். கொஞ்சம் தயிர் சாப்பிடலாம்.

எல்லாம் ரொம்ப நல்லதே. ஆனால் ஆண்ட்ரோவுக்கு வண்டிச் சட்டம் பிடிக்கவில்லை. முன்பகுதி மோசமில்லை. அது உருண்டு, மழமழவென்றிருந்தது. நேர்த்தியாக இருந்தது என்றுகூடச் சொல்லலாம். ஆனால் வண்டி என்னவோ சரியாக அமையவில்லை. ஒரு பக்கம் சற்றே சாய்ந்திருந்தது. அவன் அதை ஒரு சங்கிலியால் இழுத்துச் சரிபண்ணி, அப்படியே இரண்டு நாட்கள் இறுக்கிப் பிணைத்து வைக்கவேண்டும். அதைச் சீர்படுத்த வேறு வழியில்லை.

அடிக்கடி ஆஷ்கென், அவனுக்கு வேறொரு பெண்போல், அவன் அறிந்தேயிராத ஒரு பெண்ணாகத் தோன்றுவாள். ஒரு இளம்பெண் மாதிரி, வேறு யாருடைய மனைவியோ போல. அவ்வப்போது ஆஷ்கென் வெகு இனிமையானவள் ஆவாள். அத்தகைய நேரங்களில் அவள் தனது கூர்மையான நாக்கை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாள் என்று யார் சொல்லக்கூடும்? ஏனெனில், அப்போது அவள் கண்களில் கதகதப்பான கங்குகள் கனல அவனைப் பார்ப்பாள். ஆகவே நாம் அவர்களை அப்படித் தான் நடத்தவேண்டும்போலிருக்கிறது.

ஸ்ட்ராபெரிப் புல்வெளியில் அவன் இருந்த இடத்துக்கு ஆஷ்கென் வந்தாள். அங்கே அவன் புல் அறுத்து உலரப் போட்டிருந்தான். அதைப் போராக அடையவேண்டும். அவள் முதலில் அங்கே போய்ச் சேர்ந்திருந்தாள். அவள் விடிகாலையி லேயே பசுக்களைப் பால் கறந்துவிட்டாள். பாலை உறை குத்திவிட்டு அங்கே வந்தாள். அவன் அங்குப் போனபோது, வைக்கோல் சேகரம் செய்யப்பட்டிருந்தது. ஒரு பெண் மரத்தடியில் படுத்துக் கிடந்தாள். அவள் ஒருக்களித்துப் படுத்திருந்தாள். தூரத்தி லிருந்து பார்க்கையில், அவள் இறந்துபோன அமோவின் மனைவி என்று அவன் எண்ணினான். அவன் ஆத்மா சாந்தி அடைக. இறந்த அமோவின் மனைவி ஸிருஷ்போல் இருந்தாள் அவள். ஆனால் அவன் தன்னைப் பார்த்தே சிரிக்கவேண்டி யிருந்தது. அவள் இங்கே என்ன செய்யப்போகிறாள்? ஆனாலும் கூட அது நிஜமாகவே ஸிருஷ் ஆக இருந்தால், அவன் கவலைப்படமாட்டான். ஆயினும், அது ஆஷ்கென். அவள் உதயத்திலேயே பசுக்களைப் பால் கறந்து, பாலை உறை குத்தி விட்டு, இங்கே வந்திருக்கிறாள். புல்வெளி வெப்பமாக இருந்தது. ஆஷ்கெனின் உடல் நனைந்திருந்தது. அவன் களை பொருந்திய அவள் முகத்தைப் பார்த்தான். பிறகு கண்களைப் பார்த்தான். ஆஷ்கென் தூங்கிக்கொண்டிருந்தாள். உண்மையில், அவள் உறங்கும்போது அவளது வழக்கமான நிலையில் இருப்பதில்லை. அவன் ஆஷ்கெனின் கழுத்தில் ஒரு புல்லினால் கிச்சம் காட்டிவிட்டுச் சிரித்தான். ஆனால், அவள் விழித்தெழவில்லை. என்றாலும், அவளது இமைகள் துடித்தன. ''ஒன்றுக்கும் உதவாத மாடன்'' என்று அவள் சொன்னாள். எனினும் அவள் விழித்து எழவில்லை. தூக்கத்திலேயே அவள் அவன் கழுத்தைச் சுற்றித் தன் கைகளை வளைத்தாள். அவள் இன்னும் தூங்கிக்கொண்டிருந்ததாகவே தோன்றியது. அவள் சிரித்தாள். அது முடிகிறவரை அவள் உண்மையில் விழிப்படையவில்லை. அப்புறம் அவள் கண்களைத் திறந்து, வானத்தைப் பார்த்தபடி அங்கேயே படுத்திருந்தாள். அவள் முடிவில் எழுந்தபோது, அது மீண்டும் அவனுடைய ஒட்டி உலர்ந்த ஆஷ்கென்தான், வயதாகிவிட்ட, அதிகம் பேசும் குண முடைய அதே கிழவிதான்.

''ஒவ்வொருவரும் இதற்குள் அவரவர் வைக்கோலைச் சேர்த்து அடைத்துவிட்டார்கள். ஒருவருக்கு ஒருவர் திருடுவதில் அவர்கள் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். ஆனால், இங்கோ நாள் முழுவதையும் குறட்டைவிட்டுக் கழித்தாகிறது. தான் இங்கே வேலை செய்ய வந்ததாக அவன் சொல்லுவான். ஆனால், மழை பெய்தாலும் வெயில் காய்ந்தாலும் அவனுக்குக் கவலை இல்லை.

அவனைப் பொறுத்தவரை மாரிக்காலம் என்று எதுவும் இல்லை. அதனால்தான் அவன் உல்லாசமாய்த் திரிகிறான். அதனால்தான் அவன் வெல்லப்பாகு மாதிரி மெதுவாக ஊர்கிறான். அவனுக்கு வேண்டியதெல்லாம் நேர்த்தியான, உருண்டையான, பள்ளம் படிந்த ஒரு கல்தான். அதன் அடியில் ஊர்ந்துபோய் சுகமாக இருக்கலாமே.''

அவன் தன் கையிலிருந்த கருவியால் அவளைத் தாக்க விரும்பினான். ஆனால் அந்த உணர்ச்சியைக் கட்டுப்படுத்தினான். ஏனெனில், அவளுக்காக அவன் வருத்தப்பட்டான். அந்த அப்பாவி சளசளக்கிறபோது நிறுத்துவதே கிடையாது. அவள் உண்மையில் அற்பமானவள் இல்லை. பழக்கதோஷத்தினால்தான் சும்மா ஏசினாள். அவள் அற்பமாக இருந்தால் அதுகூடப் புரிந்து கொள்ளக்கூடியதுதான். ஏனென்றால், இது சிரமமான வாழ்க்கையே. அவன் நிஜமாகவே ஒவ்வொன்றிலும் மெத்தன மாகத்தான் இருந்தான். உதாரணத்துக்கு ஜிக்கோரை எடுத்துக் கொள்வோம். அவன் சிறிது காலம் கூட்டுப் பண்ணையின் தலைவராக இருந்தான். பிறகு, குழுத் தலைவன் ஆனான். அப்புறம் ஒரு ஸ்டோர்கீப்பரானான்; விற்பனையாளன் ஆனான். பிறகு, பால் பண்ணையின் நிர்வாகி ஆகிவிட்டான். அவனை ஒரு வேலையி லிருந்து வெளியே துரத்த வேண்டியதுதான்; உடனேயே இன்னொரு வேலை தேடிக்கொள்வான். அதெல்லாமே பெரிய தப்பு, எது என்ன என்று அவர்கள் கண்டுகொண்ட உடனேயே அவனை விரட்டி விடுவார்கள்; எல்லாம் மாறிப்போகும் என்று நமக்கு நாமே சொல்லிக்கொள்ளலாம். உண்மையில், நாளடைவில் அவன் விலக்கப்படுவான். ஆனால், விரைவிலேயே வேறொரு அலுவல் மேஜையின் பின்னே அவன் நின்று கொண்டிருப்பான். உடனே, அங்கும் அவன் நீண்ட காலம் நிலைத்திருக்கமாட்டான் என்று நமக்கு நாமே சொல்வோம். நிலைத்திருக்கமாட்டான்தான். ஆனால் அவை அனைத்தின் முடிவான விளைவு என்ன? இதோ ஜிக்கோர், அறுபது வயதாகி, பென்ஷன் வாங்கிக்கொண்டு இருந்தான். தனக்குப் பின்னால் நல்ல பகட்டுடன் காணப்பட்டான். எப்போதும் மிகப் பெரிய, சாறு நிறைந்த துண்டுகளாகப் பார்த்துப் பிடுங்கிக்கொள்ளத் தயாராகவும் இருந்தான். இதோ நானும் இருக்கிறேன், பைன் மரப் பலகைகளைத் திட்டம் பண்ணிக்கொண்டும், இது தற்காலிகமானதுதான் என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டும்.

அவனுக்கும் ஆஷ்கெனுக்கும் கல்யாணம் நிகழ்ந்து ஒரு மாதம் ஆகியிருந்தபோது, அவர்கள் கடுமையாகச் சண்டை

யிட்டுக்கொண்டார்கள். இந்தப் பெண்ணுடன் வாழ்வது தனக்கு சரிப்பட்டு வராது என்று அவன் தெளிவாக உணர்ந்தான். கடந்துபோன இந்த மாரிக்காலத்தில், அவள் அவனை பயங்கர மாக வெறிகொள்ளச் செய்தாள். அவன் அவளை அடித்தான். ''உன் சொந்தக்காரர்களிடமே திரும்பிப் போ!'' என்றான். ஆஷ்கென் தன் போர்வையை எடுத்து மேலே போட்டுக்கொண்டு, பாவாடையைச் சுழற்றியவாறே போய்விட்டாள். அதே நாள் மாலையில் அவள் திரும்பி வந்தாள். அவர்களுடைய மருமகனும், மூத்த மகளும், பேரக்குழந்தைகளை எடுத்துக்கொண்டு அவளுடன் வந்தார்கள். ''தாஆ-ஆத்-தாஆ!'' என்று குழந்தைகள் கத்தின. உறுதிவாய்ந்த, வலிமை நிறைந்த ஆஷ்கனோடு தேன்நிலவு கொண்டாடியபோது கிட்டிய ஆனந்தத்தால் தன் முதுகந் தண்டில் மின்சாரம் பாய்ந்து தலை உச்சிக்கு ஏறியதை அவன் இப்பவும் உணர முடிந்தது. மற்ற வேளைகளில் எல்லாம் முற்றுப் பெறாத அரைகுறை சந்தோஷம் அடைந்ததையும், வாழ்க்கை நெடியது, உலகத்தில் வேறு பெண்கள் உண்டு என்று உறுதியும் நம்பிக்கையும் கொண்டதையும் அவன் நினைக்க முடிந்தது. ''தாஆ-ஆத்-தாஆ!'' என்ன நரகக் கூச்சல்!

அவன் 400ஆவது ரெஜிமெண்டில் பணியாற்றியபோது ஒரு நாள் அவர்களுடைய படைப்பிரிவை ஒரு இசை நிகழ்ச்சிக்கு அழைத்துப் போனார்கள். கோரஸ் பாடியது:

''அழகான அன்னம் போல, அழகான அன்னம் போல,
நீ தோன்றுகிறாய் எனக்கு; அழகான அன்னம் போல.''

வெயிலால் கறுத்த கன்னங்களுடைய பெண்கள் அவர் களுக்குச் சில ஆசனங்கள் தள்ளி உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் ஆராரட் பள்ளத்தாக்கின் சுற்றுப்புறக் கிராமங் களிலிருந்து வந்தவர்களாக இருக்கலாம். சிவப்புக் குட்டைகள் அணிந்த தலைகளைத் தூக்கி, அவர்கள் போர் வீரர்கள் பக்கம் கள்ளப் பார்வை பார்த்தார்கள்.

மார்ட்டின் ஸாக்கியனும் அங்கே இருந்தான். அவன் இஜீவன் வட்டாரத்திலிருந்து வந்தவன். அகலமான முகம் அவனுக்கு. பரிதாபத்துக்குரிய நபரான அவன் கெர்ச் அருகில் சண்டையின்போது கொல்லப்பட்டான். அப்பாவி மார்டின் சார்ஜன்ட் பதவி வகித்தான். ஐயோ பாவம், மார்டின் ஸாக்கியன். ''நாம் இந்தப் பெண்களைக் கூட்டிப்போவோம், ஆண்ட்ரோ. முகத்தில் தேமல் உள்ள பெண்ணை நான் எடுத்துக் கொள்வேன். இன்னொருத்தியை நீ கூட்டிப் போ'' என்று அவன் சொன்னான். ஆண்ட்ரோ அந்த இன்னொருத்தியைப்

பார்த்தான். அவளுக்காக ஏங்கினான். ஆனாலும் அதிகம் கூச்சம் உடையவனாக இருந்தான். அவள் மார்புகள் நன்று உருண்டுதிரண்டு இறுகிக் காணப்பட்டன. பிறகு அவன் மார்டினை நோக்கினான். அவனுடைய சீருடை அளவெடுத்துத் தைத்தது மாதிரி அவனுக்கு எவ்வளவு பொருத்தமாக இருந்தது என்பதைக் கவனித்தான். அவன் இடுப்பைச் சுற்றி யிருந்த எடுப்பான தோல் பட்டையையும் பார்த்தான். இவனது இடுப்புவார் பருத்தி நெசவாலானது; காலணிகள் கொஞ்சம் பெரிதாக இருந்தன; அவற்றுள் இவன் பாதங்கள் ஓசை எழுப்பின. ஆகவே, இவன் ''வேண்டாம், மார்டின். நான் சில வேலைகளைக் கவனிக்கவேண்டியிருக்கிறது'' என்று சொன்னான். அந்த சார்ஜன்டுடன் தொடர்பை ஒரே அடியாக அறுத்துக்கொள்ள வேண்டியதுதான் என்று தீர்மானித்துக் கொண்டு, இவன் ரஸ்தாவை விட்டுத் திரும்பி நடந்தான். இவனும் சரியாகப் பொருந்தியிருக்கிற காலணிகளும், ஆபீசருக்குரிய நல்ல தோல் வாரும் வாங்கவேண்டும் என்று நினைத்தான். மார்டின் அன்று மாலை திரும்பியபோது, இவன் முழு நேரமும் உள்ளுக்குள்ளேயே இருந்தான். அவன் பல்லிளித்தான்,

''அழகான அன்னம் போல, அழகான அன்னம் போல,
நீ தோன்றுகிறாய் எனக்கு; ஒரு அழகான அன்னம் போல''

என்று அவன் பாடுகையில், அவன் கண்கள் கனவில் மிதந்தன.

''நீ ஏன் உடன்வரவில்லை, மடையா?'' என்றான் அவன். ''அதில் அப்படி என்ன விசேஷம் இருக்கிறது?'' என்று வருந்தும் குரலில் ஆண்ட்ரோ பதிலளித்தான். வயிற்றின்மீது படுத்தபடி கிடந்த மார்டின் பாடிக்கொண்டேயிருந்தான். சற்று நேரம் கழித்து அவன் தனது ஈரம் படிந்த கண்களை ஆண்ட்ரோ பக்கம் திருப்பி, ''அசடன்'' என்று சொன்னான்.

பாவம் மார்டின் ஸாகியன். அவனுக்கு படர்ந்த முகமும் அடர்ந்த புருவங்களும் இருந்தன. அவன் சிரித்தால் அழுதுகொண்டிருப்பதுபோல் தோன்றும். அப்படிப்பட்ட ஆள் அவன். அவன் ஸ்ட்ரெச்சரில் கிடந்தபோது, அலட்சியமாக என்றாலும் சிரமத்தோடுதான், கால்மேல் கால் போட்டிருந் தான். அவன் மறுபடியும் அழுதிருக்கவேண்டும் எனத் தோன்றியது.

கிழட்டு நாய் பசார் அவன் தம்பி வீட்டின் முற்றத்தில் குரைக்கத் தொடங்கியது. அவர்களுடைய தாயின் கவலை

தோய்ந்த குரல் உடனடியாக, மொச்சைச் செடி வரிசைகள் பழஞ்சாணிக் குவியல்களுக்கெல்லாம் மேலாம் எழுந்து தொங்கியது. அவள் கத்தினாள்:

''அது ஒரு ப-ரு-ந்-து.''

தெளிவான ஆகாயம் அக் கிழவியின் கண்களில் இருண்டு, பருந்துகளும் ராஜாளிகளும் நிறைந்து காணப்பட்டது. வான மண்டலம் அவள் பார்வைக்குத் தெளிவாகப் புலனான காலத்தில், அவளது வாழ்க்கையில் அவள் கண்ட ஒவ்வொரு பருந்தும், அவை எல்லாமே இப்போது ஒரே சமயத்தில் அங்கே இருந்ததாக அவளுக்குத் தோன்றியது.

''ஹே-ஏ-ஏய்! அதோ ஒரு ப-ரு-ந்-து!''

எந்த வேளையிலும் மழை பெய்யத் தொடங்கலாம் என்றொரு உணர்வு அவளுக்கு இருந்தது. அதனால், புல்வெளியில் கிடந்த வைக்கோல் கெட்டுப்போகும்; வாத்துகள் மொச்சைப் பயறுகளைக் கொத்திவிடும்; கிழட்டு நாய் வழி தவறி வயல்களுக்குள் சென்று செத்துப்போகும்; பருந்து ஒரு பெட்டைக்கோழியைத் தூக்கிப் போய்விடும்; அவளுடைய மருமகள்மார் மகன்களோடு சண்டை பிடிப்பார்கள்; என்றெல்லாம் அவளுக்கு உணர்வு ஏற்படும். அவ்வப்போது அவள் வாத்துகளிடம் கூறுவாள்:

''நீங்கள் எல்லாம் செத்து விழவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.'' ''வைக்கோல் உள்ளே வந்து சேர வேண்டும். ஏ பெண்களா, வைக்கோலை உள்ளே கொண்டுவந்து விட்டீர்களா? நீங்கள் என் அப்பாவிப் பையன்களை என்ன பாடு படுத்தியிருக்கிறீர்கள்; தொணதொணத்து அவர்களைச் சாகடிக்கிறீர்களே, பாருங்கள்! பசார்!'' என்று கத்துவாள்.

பழம் வெயிலில் உலர்ந்துகொண்டிருந்தது. கிழவி என்ன சொல்வாள் என்று பார்ப்பதற்காகக் கிழட்டு நாய் காத்திருந்தது. தேன் கூடுகளில் ஈக்கள் இரைந்தன. சிறிய நீலக் கூண்டுகளுக்கு மேலே சூடான கனத்த ரீங்காரம் கவிந்திருந்தது. அவள் மூத்த மகன் வீட்டின் முன்னே கோடரி கீறிய சத்தம் இப்போது நின்றுவிட்டது. எங்கோ வெகு அருகில் ஒரு பெண் உரக்கச் சிரித்தாள்.

''உன்னைப்பற்றி நீயே வெட்கப்பட வேண்டும் பெண்ணே!'' என்று கிழவி சொன்னாள். ''நீ மலையிலிருந்து எப்போது கீழே வந்தாய்?''

பதில் இல்லை. யாரோ தூரத்தில் மறுபடியும் சிரித்தார்கள். அது ஒரு சிறு பெண் சிரித்தது அல்ல; ஒரு ஸ்திரீயின் சிரிப்பு.

''அன்ட்ரானிக்!'' கிழவி கூப்பிட்டாள். ''அன்ட்ரானிக்! அன்ட்ரானிக்!''

''ஊம்ங்? என்ன விஷயம்?''

''நீ ஏன் நிற்கிறாய், அன்பே?''

மீண்டும் மரங்களுக்கு அப்பால் சிரிப்பு எழுந்தது. அது திரும்பவும் கிழவிக்கு அதிருப்தி தந்தது.

''அது யார் அப்படிச் சிரிப்பது, அன்ட்ரானிக்?''

''எனக்கு எப்படித் தெரியும்?''

''என்ன சொல்கிறாய், அன்பே?''

''எனக்குத் தெரியாது என்று சொன்னேன்.''

''அன்ட்ரானிக்!''

''என்ன?''

''குதிரையை வேறு இடத்தில் கொண்டு கட்டினாயா?''

''ஆமாம்.''

தேனீத் தோட்டத்திலிருந்த தேன் கூடுகளில் தேனீக்களின் கனத்த இசைச்சல் நீடித்தது. ஸாக்கின் கோடைக்காலக் குடிக் கூலிக்காரர்கள் கணவாய் பாதை வழியே ஆற்றுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் சோர்வாகச் சிரித்தார். அது ஒரு பெண். அவள் சோர்வாகச் சிரித்தாள். அவர்கள் நான்குபேர். இரண்டு சிறு பெண்கள்; உண்மையில் குழந்தைகள் தான். பெரிதாக இருந்த ஒரு இளம் பெண். பெருந்தேகிதான் உண்மையில். அவள் ஒட்டகம்போல் நடந்தாள். அவள் நிஜமாகவே சரியான ஆள் தான். நான்காவது, சிறு பெண்களின் தாய்.

முன்னொரு காலத்தில் பெர்சியாவிலோ, வேறு எங்கோ, ஒரு ராணி இருந்ததாகச் சொன்னார்கள். அவள் தன் போர் வீரர்களை அணிவகுத்து நிற்கும்படி செய்வாளாம். அவள் அந்த வரிசைகளைப் பார்த்தவாறு நடப்பாள். அவள் மனசுக்குப் பிடித்த ஒருவனைத் தேர்ந்தெடுப்பாள். அவனை அன்றைய இரவுக்குக் காதலனாக ஆக்கிக்கொள்வாள். மறுநாள் காலை அவன் தலையை வெட்டிவிடச் செய்வாளாம். எவ்வளவு இரக்க மில்லாத ராணியாக அவள் இருந்திருக்கிறாள். அவளோடு இரவைக் கழித்துவிட்டு, சரியான நேரத்தில் தப்பி ஓடுவதற்குத் தேவையான சாமர்த்தியம் பெற்றவன் அவர்களில் ஒருவன் கூடவா இல்லாது போனான்? சன்னல் வழியாகக் குதித்திருக்க லாமே? அங்கு சன்னல்கள் இருந்திருக்கத்தான் வேண்டும்.

''அன்ட்ரானிக்!''

''என்ன, அம்மா?''

''தேனீக்கள் மொய்த்துக்கொண்டா இருக்கின்றன?''

ஈக்களின் இரைச்சல் மேலும் கனத்தது. ஆண்ட்ரோ வானத்தை நோக்கினுன். ''உஷ்ணம்தான் காரணம். சூரியன் அவைகளைச் சுட்டெரிக்கின்றன'' என்று முனகினுன்.

குதிரையை வேருெரு இடத்தில் அவிழ்த்துக் கட்டுவதற்காக அவன் ஆற்றுப்பக்கம் போவதில் தவறு எதுவும் இராது. அப்பாவி ஆல்கோ நாள் முழுதும் ஒரே இடத்தில் மேய்ந்து கொண்டிருந்தது. கயிறு வேறு சிக்கல் ஆகியிருக்கும். பெருந்தேகி புருஷனை விட்டு விலகி வசிக்கிருள் என்று சொன்னுர்கள். பள்ளிக்கூடத் தலைவர் ரூபன் அவளை அணுகியதாகச் சொன்னுர்கள். அவள் மறுப்புக் காட்டவில்லை, ஒரு வருஷம் உடன் தங்குவதற்கு இணங்கிவிட்டாள் என்றுர்கள். ஆனுல், ரூபன் பிற ஸ்திரீகளைப் பார்ப்பதில் அர்த்தம் உண்டா? மற்றவர்கள் உன் மனைவியைப் பார்த்துக்கொண்டிருக்கலாம். ஆகவே நீ உன் உடைமைகள்மீது ஒரு கண்ணையும், உனது சொந்தப் பானையில் உன் மூக்கையும் வைத்துக்கொண்டு ஒதுங்கியிருப்பதே மிகவும் நல்லது.

ஆண்ட்ரோ கோடாரியை நிழலில் வீசினுன். தன் முழங்கால்களில் படிந்திருந்த தூசியைத் தட்டினுன். தொப்பியைக் கண்களுக்கு மேலாக இழுத்துக்கொண்டு கணவாய்ப் பாதை வழியே ஆற்றுக்குப் போனுன். குதிரை, கட்டியிருந்த கயிறு அனுமதித்த அளவுக்கு ஒரு வட்டத்தில் இருந்த புல் பூராவையும் அடிவேர் வரை கரம்பித் தின்றிருந்தது. இப்போது வெற்று வட்டத்தின் நடுவில் கடுமையான வெயிலில் நின்றது.

ஆண்ட்ரோ குதிரையை அவிழ்த்து நீரோட்டத்துக்கு எதிராக நடத்திச் சென்றுன். பாறைகளைத் தாண்டிச் செல்கையில் அவன் கால் வழுக்கித் தண்ணீரில் விழுந்தான். சிரித்தான். ஆனுல் மேலும் சில எட்டுகள் முன்னேறியதும், அவன் திரும்பவும் விழுந்தான். நீரின் மென்மையான சலசலப்புக்கும் மேலாக எழுந்த சிரிப்புச் சத்தத்தைக் கேட்டான். குதிரைமீது கோபம் கொண்டான். கோடைக்காலக் குடிக்கூலிக்காரர்களைக் கடந்து போகையில், அவன் தலைதாழ்த்தி அவர்களுக்கு வணக்கம் தெரிவித்தான். நீரில் கால்களைத் தொங்கவிட்டுக்கொண்டு கரைமீது அமர்ந்திருந்த சிறு பெண்களின் அம்மா இனிமையாக பதிலளித்தாள். சிறு பெண்கள் வெயிலில் கறுத்து, ஒல்லியாக இருந்தார்கள். நாடாக்கள் மாதிரிக் குறுகலாக இருந்த இடுப்புத் துணி தரித்திருந்தார்கள். ஆற்றின் நடுவில் தட்டையாய்

வழுவழுப்பாக இருந்த ஒரு பாறையின்மேல் அவர்கள் நின்று சிரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்திதான் சோர் வாகச் சிரித்தாள். பெருந்தேகி என்ன செய்துகொண்டிருந்தாள் என்று கவனிக்க ஆண்ட்ரோவுக்கு நேரமில்லை. அவன் எரிச்ச லுற்ருன். ஏனெனில், அவளை அவன் பார்க்கவில்லை; அந்தப் பெண்கள் தங்கள் உடம்பில் சில நாடாக்களைச் சுற்றிக்கொண்டு, தாங்கள் ஒழுங்காக ஆடை தரித்திருப்பதாக எண்ணிஞர்கள். அவர்கள் மட்டும் அவனுடைய மகள்களாக இருந்தால், அவன் அவர்களைச் சவுக்கால் விளாசியிருப்பான்.

''ஆ, நாசமாய்ப் போகிற தடிக் கழுதையே!'' ஆண்ட்ரோ குதிரையை அடிக்கத் திரும்பிஞன். பெருந்தேகி அம்மணமாய் ஒருக்களித்துப் படுத்திருப்பதைக் கண்டான். அவள் தன் கைகளைக் கன்னத்தின் கீழே வைத்து, ஒரு காலை மடக்கிக் கொண்டு படுத்திருந்தாள். வெயில்-கண்ணுடி அணிந்திருந்தாள். ஆண்ட்ரோ குதிரையை வெகு கடுமையாகக் கயிற்றிஞல் அடித்தான். ஆல்கோ தள்ளாடியது. மறுபடியும் உட்கார்ந்து விட்டது. அதன் தலை மேலும் கீழும் ஆடிக்கொண்டிருந்தது. முடிவில், அது அமைதியாக எழுந்து நின்று பெருமூச்சு விட்டது. அந்த அப்பாவிப் பிராணி வேர்வையால் நனைந் திருப்பதை ஆண்ட்ரோ கவனித்தான். அதன் பேரில் இரக்கம் கொண்டான். ''ஐயோ பாவம்'' என்ருன்.

பெண்கள் திரும்பவும் கலீரெனச் சிரித்தார்கள். இன்ஞெரு ஸ்திரீ இப்போது நன்கு தெரியும்படி பாறைமீது இருந்தாள். ஆண்ட்ரோ மேய்ச்சல் முளையைத் தரைக்குள் ஊன்றியபோது பெருந்தேகி ரொம்பவும் சிறிய சிவப்பு ஜட்டியும், அதற்கு இணையான மார்க்கச்சையும் அணிந்திருப்பதைக் கவனித்தான். அவள் ஒருக்களித்துப் படுத்திருந்தாள். அவள் கால் உருண்டு திரண்டு காணப்பட்டது. ஆண்ட்ரோ நகைத்தான். சொன்ஞன்:

''இதையும்தான் நீ ஏன் அணிகிருய்?''

பிறகு, அவர்களைக் கடைசித் தடவையாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, அவன் திடீரென்று தன் அப்பாவை நினைத் தான். அவர் அதே பாறைமீது அமர்ந்து, குடியானவர் களுக்கான முரட்டுக் காலணிகள் செய்வதற்காக, பதனிடப் படாத தோலைத் தண்ணீரில் ஊறவைப்பார். அந்த ஆற்றில் ஆட்டு ரோமங்களைச் சுத்தம் செய்த அம்மாவையும் நினைத் தான். அவள் கால்கள் மிக வெண்மையாகவும் மெலிந்தும் இருந்தன. அவன் அருகில் இருந்த ஒரு பாறையில் உட்கார்ந்து நீருடன் சேர்ந்து பாடுவான். ஒரு கணம் அவனுக்குச் சிரிக்க

வேண்டும்போலிருந்தது. உடனே, தன் தந்தை தலையை நிமிர்த்தி இந்தத் தடிப் பெண்பிள்ளை மிகச் சிறிய சிவப்பு ஜட்டி அணிந்து பாறைமீது படுத்திருப்பதைப் பார்ப்பதாக அவன் சட்டென்று கற்பனை செய்தான். உண்மையில் ஆண்ட்ரோ சிரிக்கத்தான் விரும்பினான்; மாறாக, அவன் வருத்தமே கொண்டான். ஏனென்றால், காலணிகளுக்காகத் தோலைப் பதப்படுத்தும் தந்தையை அவன் நினைவுகூர்ந்தான். அவர் தாடி பனிபோல் வெளுத்திருந்தது. தந்தையின் அமைதியான சமாதியை அவன் நினைத்தான். கல்லறையில் நின்ற புல் அமைதியாக அசையாது நின்றது, இந்தப் பெண் அவனுடைய அப்பாவின் பாறைமேல் கிடந்து, வெயில் காய்ந்து சூரியனை சுகமாக அனுபவித்துக்கொண்டிருந்தாள். தண்ணீரில் அவன் அம்மாவின் கால்கள் மிக வெண்மையாய், மெலிவாய் தெரிந்தன. அவள் ஆட்டுரோமத்தைச் சுத்தப்படுத்திக்கொண்டிருந்தாள். அவன் நீருடன் சேர்ந்து பாடினான். மேலும், அப்பாவி ஆல்கோவுக்கு வேர்த்துக் கொட்டியது. வெயிலில் கறுத்த இந்தப் பெண்கள் ஆற்றின் நடுவே பாறைகளுக்கு ஊடாக வெளித்தோன்றிய வலிமையான இரு புது முளைகள்போல் இருந்தார்கள்.

...அவன் தந்தை அவனுக்காக ஒரு கோடாரிக் கைப்பிடி செய்தார். அவன் கறுப்பான பழஞ்சாணிக் குவியல்மீது நின்று ஒரு பூசனிக்காயை வைத்து விளையாடிக்கொண்டிருந்தான். அப்பா தேன்கூடுகளுக்கு மத்தியில், அவற்றின் உள்ளேயிருந்து வந்த இரைச்சல்களைக் கவனித்தபடி உட்கார்ந்திருந்தார்.

''என் கோடாரிக்கு கைப்பிடி இல்லை, அப்பா'' என்று அவன் சொன்னான்.

''நீ சொல்வது கேட்கவில்லை மகனே.'' அப்பா வாயைத் திறந்து சிரித்தவாறு அவனை உற்று நோக்கினார். அவருடைய தாடி பனிபோல் வெளுத்திருந்தது.

அவன் மெதுவாக நடந்து, ஒரு தேன்கூட்டின்மேல் சாய்ந்து நின்று, தந்தையைப் பார்த்துச் சிரித்தான். ''நான் என்ன செய்வேன்? என் கோடாரிக்குக் கைப்பிடி இல்லை என்றேன்'' எனக் கூறினான்.

''நான் செய்து தருவேன், மகனே.''

அவர் நிதானமாகச் செதுக்கி ஒழுங்குபடுத்தினார். வேலை செய்கையில் மென்மையாகப் பேசிக்கொண்டேயிருந்தார். பிறகு ஒரு துண்டுக் கண்ணாடி வைத்து அதை உரசித் தேய்த்தார்.

துண்டுத் துணியால் துடைத்தார். இறுதியில் அந்தக் கைப் பிடியைத் தன் உள்ளங்கைகளால் வழுவழுப்பாக்கினார். அப்புறம் மகனைப் பார்த்துப் பெருமையோடு சொன்னார் :

''அது நல்ல ஆஷ் மரம். உன் அளவு வயது வந்த ஒரு கிளையை நான் வெட்டினேன்.'' தன் மகன் என்ன சொல்வான் என்று பார்க்க அவர் காத்திருந்தார். அவர் தன் வார்த்தைகளில் மிகுந்த பொருள் கலந்து கூறினார்போலும். அவர் பேச்சில் உள் அர்த்தம் ஏதேனும் இருந்திருக்கலாம். ஆனால், நினைத்துப் பார்க்கையில், ஒருவேளை அப்படி இல்லாமலும் இருக்கலாம். நிச்சயமாக, ஆஷ் மரக் கைப்பிடிதான். ஆனால், அவர் அந்தக் கிளையை வெட்டியபோது...

''நான் பிறகு அதைப் பார்க்கப் போனேன். ஆனால் அந்த மரம் அங்கே இல்லை.'' அவர் தன் மகனை உற்று நோக்கியபோது திரும்பவும் வாயைப் பிளந்தார்.

பின்னர் அவர் எழுந்து, வெளிப்புற வீட்டுக்குப் போனார். வழியில் குறுகலான தடத்தைவிட்டு விலகி நடந்தார். எதன் மீதோ மோதிக்கொண்டார். கால்சட்டைப் பொத்தான்களை விரல்களால் திருகியவாறு குனிந்தார்....

''அன்ட்ரானிக்!''

''என்ன?''

''நீ ஏன் வேலை செய்யவில்லை?''

''நீ யார், எங்கள் குழுத் தலைவரா, அம்மா?''

''நீ சொல்வது கேட்கவில்லை, மகனே.''

''நான் வேலை செய்கிறேன் என்றேன். வேலை செய்து கொண்டுதான் இருக்கிறேன்.''

''சரி, அன்பே.''

சூரியகாந்திப் பூக்கள் அமைதியாகச் சூரியனைப் பின் தொடர்ந்தன. தக்காளிச் செடிகளின் கீழிருந்த மண் தண்ணீரை உறிஞ்சியது. பீயர் மரத்திலிருந்து ஒரு பீயர் பழம் உதிர்ந்து விழுந்தது. ஒரு கருவண்டின் கனத்த ரீங்காரம் தேனீத் தோட்டத்தின் சலிப்பான இரைச்சலில் குறுக்கிட்டது. பள்ளித் தலைவரின் மனைவி, இரண்டு வெற்று வாளிகளைத் தூக்கிக் கொண்டு பாதையில் தோன்றினாள். நீரூற்றை நோக்கி மென்மையாக ஆடி அசைந்தவாறு நகர்ந்தாள். அவளது பளிச் சென்ற மேலங்கியின் விளிம்பு, அசைவுக்கேற்பத் திறந்து விலகும் போது அவள் முழங்காலை வெளிப்படுத்தியது; மூடிக்கொண்ட

போது அதை மறைத்தது. அவள் ஊற்றின்மேல் குனிந்தபோது, அவள் பெருகிப் பரவியதாகத் தோன்றினாள். பிறகு நிமிர்ந்து நேரானதும், அவள் சீராகிவிட்டாள். கைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு அவள் அங்கேயே சிறிது நேரம் நின்றாள்.

''அன்ட்ரானிக்?''

ஆண்ட்ரோ, திறந்த தேன்கூடு ஒன்றின் அருகே நின்றான். கூட்டின் கூரையையும் மேல்தட்டையும் பிரித்த வலைச் சதுரத்தை அகற்றிக்கொண்டிருந்தான். ஆனால் அந்த வலை வர மறுத்தது. அவனது செயல்களால் கூடு ஆடியது. இது தேனீக்களை திடுக்கிட்டுக் கும்பலாக வெளியே வரும்படி பண்ணியது. ஒரு ஈ அவன் முதுகின்மேல் ஊர்ந்தது. சட்டைக் கையில் ஒட்டிக் கொண்டது. ஆண்ட்ரோ சிறிது புகையை அதன் மேலே ஊதினான். அது மேலாகப் பறந்து அவன் நெற்றியில் மோதியது.

''அன்ட்ரானிக்!''

''கிழவிக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது!''

ஒரு கழுதை ஒரு சுமை வைக்கோலைத் தூக்கிக்கொண்டு, அடர்த்தியில்லாத காட்டிலிருந்து வெளிப்பட்டது. அது மெதுவாக வந்துகொண்டிருந்தது.

தேன்கூட்டின் சட்டங்கள் கனத்திருந்தன. நிறைந்துவிட்ட அடைகளில் இருந்த தேன் வெயிலில் மின்னியது. இன்னும் இரண்டு நாட்களில் சேகரிப்பதற்கு ஏற்றாற்போல் அது பக்குவமாய்த் தயாராகிவிடும். கீழ்த்தட்டுச் சட்டங்களில் ஒன்றிரண்டை இப்போதுகூட எடுத்துவிட்டு வேறு காலிச் சட்டங்களை வைக்கலாம். காலநிலை மோசமாக மாறினால், அவன் அவற்றைத் திரும்பவைத்துவிடலாம். திடீரென்று அவன் கழுத்தில் ஒரு ரத்தநாளத்தின் வழியே கூரிய வேதனை ஒன்று பாய்ந்தது. அவன் தலைமுடியில் சிக்கிக்கொண்ட ஒரு தேனீ அவன் காதருகில் உரக்க இரைந்தபடி பறந்தோடியது.

''அன்ட்ரானிக்!''

''என்ன விஷயம்? உனக்கு என்ன வேண்டும்?'' அவன் கோபமாய்க் கத்தினான்.

அவன் கழுத்து வலித்தது. கழுதைமீது ஒரு பக்கமாய்ச் சரிந்திருந்த வைக்கோல் சுமை ஆண்ட்ரோவின் வீட்டை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. அதை ஓட்டுபவன் இன்னும் தென்படவில்லை. அது ஒரு கிழவனாக இருக்கலாம்; அல்லது ஒரு குழந்தையாக இருக்கும். ஸ்டீபன் வயிற்று வலியோடு சுகமாக உட்கார்ந்

திருந்தான். கடந்த பத்து வருஷங்களாகவே அவனுக்கும் அவன் வலிகள் நோவுகளுக்கும் குறைவில்லை. ஆனாலும், அவனுடைய பசுவுக்கு எப்போதும் வயிறு நிறையத் தீனி கிடைத்துவந்தது. அவன் மற்ற எவரைக் காட்டிலும் அதிகமான வைக்கோல் சேகரித்து வைத்திருந்தான். ஆண்ட்ரோ சட்டத்தை மாற்றினன். அரைவாசி நிறைந்திருந்த அடுத்த சட்டத்தை எடுத்தான். அதைக் கூட்டின் ஒரு புறத்தில் சாய்த்து வைத்தான். பிறகு நடுவில் அதற்கு ஒரு இடம் கண்டுபிடித்தான். சட்டப்பகுதியை வலை அடித்த சதுரத்தால் மூடியபோது ஒரு தேனீ அவன் உள்ளங் கையில் கொட்டியது. ஆண்ட்ரோ புன்னகைத்தான். இந்தக் கூட்டில் குறைந்தபட்சம் பத்து அல்லது பதினைந்து கிலோ தேன் இருக்கும். அது நல்ல வருஷம். அவன் கூட்டை மூடினன். உள்ளங்கையிலிருந்து கொடுக்கைப் பிடுங்கிவிட முயன்றான். ஆனல் அவன் விரல்கள் பருமனுக இருந்ததால் அதை அவனல் பற்ற இயலவில்லை. உண்மையாகவே ஸ்டீபன் சீக்காக இருந்தான். ஒருவன் அதை நிரூபிப்பதற்காகச் செத்துப்போக வேண்டுமா என்ன? ஒரு பசு எவ்வளவு வைக்கோல் தின்னக்கூடும்? ஒருவன் ஒரு இரவு நன்றாகத் தூங்கினல், மறுநாள் அவன் ஒரு பசுவுக்குப் போதுமான அளவு வைக்கோல் சேகரித்துவிட முடியுமே.

வைக்கோல் சுமை இப்போது மரவேலியைக் கடந்து வந்தது. பிறகு, பசுத் தொழுவம் வழியாகச் சென்றது. பீயர் மரத்தை அடைந்ததும் அது ஆண்ட்ரோவின் வீட்டை நோக்கித் திரும்பியது. அப்போதுதான் அது கழுதை இல்லை என்று அவன் கண்டான்.

''அன்ட்ரானிக்!''

''என்ன?''

''வைக்கோலை யார் கொண்டு வந்தது?''

''மரியம்.''

''என்ன விஷயம், ஒரே சமயத்தில் அவள் இவ்வளவு சுமையைத் தூக்கி வரவேண்டுமா என்ன? என்று அவளிடம் கேள். அவள் குறைவாக எடுத்து வரக்கூடாது?''

''நீயே எல்லாவற்றையும் சொல்லிவிட்டாய்.''

மரியம் வந்தாள். சுமையை மரத்தின்மீது சாய்த்து அசைந்தாடினள். ஒரு கட்டைமீது சாயவே அவள் விரும்பினள். ஆனல், தவறிவிட்டாள். ஆகவே, சுமையோடு தரைமேல் சரிந்தாள். லேசான முறுவல் அவள் உதடுகளில் ஊர்ந்தது.

''நீ எப்போது நகரிலிருந்து இங்கே வந்தாய், நாகரீக குமாரி?''

''ஆகவே நான் வருவதைப் பார்த்துவிட்டுத்தான் நீ தேனை வெளியே எடுத்தாயா? உனக்கு நன்மை உண்டாகட்டும்!''

''ஓ, நிச்சயமாக! முதலமைச்சர் வருவதை நான் பார்த்தேன்.''

அவள் தோள்களின்மீது கயிறுகளை நகர்த்தினாள். ''ஏன், ஒரு முதலமைச்சரைவிட நான் மோசமாகவா இருக்கிறேன்?''

''நேர் எதிர்தான். எந்த அமைச்சருக்கும் இதுபோல் ஒரு சுமை இல்லை.'' ஆண்ட்ரோ சிரித்தான்.

''அது நாசமாய்ப் போக! என் கைகள் மரத்துவிட்டன. அவற்றில் உணர்ச்சி கொஞ்சம்கூட இல்லை.''

''நீ ஏன் கயிறுகளை இவ்வளவு இறுகலாய்க் கட்டினாய்?''

''நான் கட்டவில்லை. அறுப்பவர்கள் கட்டிவிட்டார்கள்.''

''நீ மலையிலிருந்து அவ்வளவு தூரமுமா இதைச் சுமந்து வந்தாய்?''

''இப்போது வேறு எந்த இடத்திலும் புல் இல்லையே. இருக்கிறதா என்ன?''

''உனக்கு நன்மை பெருகட்டும்! நீ நகரிலிருந்து என்று வந்தாய்?''

''நேற்று.''

''பாவாடை எப்படிப் போயிற்று?''

''அங்கே பாவாடை மலைமலையாய்க் குவிந்திருக்கிறது. யாருக்கும் அது தேவைப்படவில்லை.''

''நீ அங்கே அதிக நாள் இருந்தாயா?''

''நான்கு நாட்கள்.''

''அது வெளிப்பட்டிருக்கிறது.''

''அதாவது நான் அழகியாகியிருக்கிறேன் என்கிறாய்?''

''ஆமாம்.''

''உன் மனைவியைப்போல் இல்லை.''

''உனக்குக் கூர்மையான கண்கள். அதில் சந்தேகமில்லை. என் கையில் இருக்கிற ஈக் கொடுக்கை நீ ஏன் பிடுங்கக்கூடாது?''

''அது எப்படி வீங்கியிருக்கிறது பாரேன்.''

''சில சமயம் கொட்டுப்பட்டால், அந்த உணர்வே தெரிவ தில்லை. ஆனாலும், இதைப்போல் இல்லை. உன்னால் கொடுக்கைப் பிடுங்க முடியவில்லை... உன் மருமகனை உனக்குப் பிடித்திருக் கிறதா?''

''அவன் சரியானவன்தான். நல்ல தொழிலாளி.''

''உன் சின்னப் பெண்ணை எப்போது கல்யாணம் பண்ணிக் கொடுக்கப் போகிறாய்?''

ஈக் கொடுக்கை மரியத்தால் பற்றி இழுக்க முடியவில்லை. மேலும், கயிறுகள் அவள் தோள்களைப் பின்னுக்கு இழுத்துத் தடை செய்தன. இந்நேரத்தில், ஆண்ட்ரோ அவள் முழங்கால்களின் மீது சாய்ந்துகொண்டான். அவனுடைய தடித்த கழுத்து குறுக்கே இருந்தது. மேலும், அவள் பாதத்தின் அடியில் மிகக் கடினமான எதுவோ—கட்டையோ சிறு கல்லோ, ஏதோ ஒன்று—தொல்லை கொடுத்தது.

''என்ன மனிதன்!'' என்று மரியம் எரிச்சலோடு சொன்னாள். ''குறைந்தபட்சம் நீ அந்தக் கயிறுகளையாவது எடுத்துவிட்டிருக்கலாம்.'' அவள் சுமையிலிருந்து விடுபட்டு எழுந்து நின்றாள். ஒரு கொடிக் கம்பம்போல் நேராக, உலர்ந்து உறுதியாக நின்றாள்.

''அவளுக்கு மாப்பிள்ளை காத்திருக்கிறான். இந்த வருஷம் அவள் ஒன்பதாம் வகுப்புத் தேறியதும் நான் கல்யாணத்தை முடித்துவைப்பேன்.''

''அதன் பிறகு நீ தன்னந்தனியாக இருப்பாய்.''

''நான் இப்போது தனியாக இல்லையா?''

''கவனி, பெண்ணே! நீ நல்லபடியாக இருக்கையில் நீயே ஏன் கல்யாணம் பண்ணிக்கொள்ளக் கூடாது?''

''போ, என்னைப் பார்த்துச் சிரி.''

ஆண்ட்ரோ கடைசிப் பலகையை உரிய இடத்தில் பொருத்தி ஆணி அறைந்தான். வண்டி செய்து முடித்த பிறகு, வண்டி யோட்டி தன்னைக் கடுமையாகச் சபிப்பான் என்று அவன் உணர்ந் தான். பின்புற ஓரம் மிகவும் அகலமாக இருந்தது.

''நீ ரொம்பவும் சூடாக இருக்கையில் சுற்றுப் பக்கத்தில் நிற்காதே'' என்று ஆண்ட்ரோ கூறினான்.

''அதுவும் ஒரு வண்டி, நீயும் ஒரு தொழிலாளி!''

''வாயாடாதே. உன் வைக்கோலை எடுத்துக்கொண்டு போய்த்தொலை.''

ஆனாலும்கூட, ஆண்ட்ரோ தொழுவிலிருந்து கையில் சங்கிலிகளோடு வெளியே வந்தபோது, அவள் நின்றுகொண்டுதானிருந்தாள். அவளது ஆடை வேர்த்து நனைந்த முதுகோடு ஒட்டியிருந்தது. அவள் மார்பு தட்டையாக இருந்தது; பின்புறம் எடுப்பாக இல்லை. ஆண்கள் அணியும் காலணிகளை அவள் அணிந்திருந்தாள். அவன் எப்போதும் தன்னால் இயன்ற அளவு அவளுக்கு உதவி புரிந்தான். பாசிலின் மரணம்பற்றி அவளுக்குச் சொன்னவர்களில் அவன் ஒருவன் அல்லன். அவளுக்கு ஒரு குதிரை தேவைப்பட்டால் அவன் தருவான். எனினும், மரியம் உலர்ந்துபோய், ஒரு பலகைபோல் தட்டையாக இருந்த மரியமே தான்.

மரியம் கொஞ்சம் தண்ணீர் குடித்தாள். மீதியை, ''போ, என்னைப் பார்த்துச் சிரி'' என்று சொல்லிக்கொண்டே அவன் முகத்தில் வீசி அடித்தாள். உடலோடு ஒட்டிய ஆடையை இழுத்துவிட்டாள். பிறகு, சட்டைக் கையால் தன் தோளைத் துடைத்தாள். ''நகர்வதுக்குக்கூட சோம்பலாக இருக்கிறது. நான் கொஞ்சம் குளிர்ந்து போனேன்'' என்றாள். வண்டியில் உட்கார்ந்தாள்.

''எழுந்திரு. நீ அதை முறித்துவிடுவாய்'' என்று ஆண்ட்ரோ கத்தி, கைகளை உயரே வீசினான். ''நான் இன்று கண்டதை நீ நம்பமாட்டாய். ஆற்றில் ஒரு வெள்ளை எருமையைப் பார்த்தேன். நல்லது, நீ உதவி புரிய விரும்புவதால், அங்கே இருக்கிற அந்தக் கடப்பாறையை எடுத்துக்கொள். இடுக்கியைக்கூட. என்ன விஷயம்; நீ குருடா? அதோ சுவர் அருகே பார்.'' சங்கிலிகளில் ஒன்றை அவன் கடப்பாறையில் சுற்றினான். ''கயிறு எடு. தொழுவில் பார். கனமானது வேண்டும், முட்டாளே. ஆமாம். எருமை எப்படி இருந்தது என்று நீ கற்பனை பண்ணவும் இயலாது! சீராக வெட்டக்கூடிய ஒருவன் அதிலிருந்து பத்து மரியம் செய்ய முடியும். பிறகும் ஒரு ஆஷ்கென் செய்வதற்குப் போதுமான அளவு மீதம் இருக்கும்.''

''நீ உண்மையாகவே நல்ல பார்வை பெற்றிருக்கிறாய், இல்லையா?''

''ஆ, என் பெண்ணே...''

பிறகு மரியம் சொன்னாள்: ''ஆகவே நீ உன் சொந்தப் பெண்களை மறந்துவிட்டு, எருமைகளைப் பார்ப்பதற்குப் போகிறாய்.''

ஆண்ட்ரோ குழப்பமும் வருத்தமும் அடைந்தான். இதோ மரியம் இருந்தாள். ஒரு மகளுக்குக் கல்யாணம் பண்ணிவிட்டாள்.

அவளுக்கு ஒரு தாத்தா இருந்தார். வயது நாற்பதுதான் ஆகியிருந்தது. நாற்பது வயதிலும் ஒரு பெண் பெண்ணாகவே இருப்பாள் என்று கருதப்படுகிறாள். ஆனால் அவள் அப்படி இல்லை. அவள் எப்போதும் ஒரு சாக்கு உருளைக்கிழங்குகளின் கீழே, அல்லது ஒரு சுமை விறகுக் கட்டைகளின் அடியில் குனிந் திருப்பாள். அல்லது ஒரு கோடாரியைச் சுமந்துகொண்டிருப்பாள்; அல்லது குழுத் தலைவனுடன் சண்டை போட்டவாறு இருப்பாள்.

''மரியம்.''

''என்ன?''

''உனக்கு என்ன வயது?''

''பதினாறு. சின்னஞ்சிறு பெண்.''

''இன்னும் நாற்பது ஆகவில்லையா?''

''முப்பத்தாறு. எனக்கு முப்பத்தாறு வயது, ஆண்ட்ரோ.''

அவன் நாக்கைக் கொட்டினான். ''பார்த்தால் பதினான்கு வயதுக்கு அதிகமாகத் தோன்றவில்லை.''

''முட்டாள்'' என்று அவள் வருத்தமாகச் சொன்னாள். ''நீ ஒரு அடுமடையன். அதுதான் நீ.''

''அது எல்லோருக்கும் தெரிந்த சங்கதி.''

''என் புருஷன் இறந்தபோது எனக்கு இருபது வயது.''

''மரியம்.''

''என்ன?''

''நீ இத்தனை காலமும் தனியாகவா இருக்கிறாய்?''

அவள் பீயர் மரத்தைப் பார்த்தாள். பிறகு தேன்கூடுகளை, அப்புறம் ஆண்ட்ரோவைப் பார்த்தாள்.

''நீ இன்னும் என்னைப் பார்த்துச் சிரிக்கிறாய்.''

ஆண்ட்ரோவின் பாதம் கோடாரியுடன் விளையாடிக்கொண் டிருந்தது. ''புருஷன் இல்லாமல் இருப்பது கஷ்டமாக இருக் கிறதா, மரியம்? நான் நினைப்பது என்னவென்றால்—மரம் வெட் டுவது, அள்ளிப் போடுவது, கடுமையான வேலைகளைச் செய்வது இதை எல்லாம் நான் எண்ணவில்லை. அதை நானே அறிவேன். ஆனால், நான் எண்ணுவது, ஒரு ஆண் இல்லாமல் இருப்பது; அது கஷ்டமாக இருக்கிறதா?''

மரியம் அவனை நோக்கினாள். அவள் உதடுகள் ஒரு மெல்லிய கோடாக இறுகியிருந்தன.

''எப்போதாவது யாராவது ஒருவர்— தெரியவில்லை? இடையில் ஒரு மாதிரி?''

அவள் மவுனமாக அவனைக் கூர்மையாய்ப் பார்த்தாள். அப்பாவி, உலர்ந்துபோன மரியம்.

''நீ எதற்காக ஒரு பசு வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறாய், மரியம்? அதை விற்றுவிடு. கல்யாணம் பண்ணிக்கொள். அல்லது, உன் மகளோடும் மருமகனோடும் போய் வசி. இந்தக் கடின வேலைகளை எல்லாம் செய்வதில் என்ன பிரயோசனம்? நீ ஒரு முறைதான் வாழ்கிறாய், தெரியுமா. நீ பசு வளர்க்கக் கூடிய இனத்தைச் சேர்ந்தவள் இல்லை. இதுபோல் இனிமேல் மிகக் கனமான சுமையை இழுத்துச் செல்லாதே, அசடே. கேட்டாயா?''

ஆண்ட்ரோ வீட்டைவிட்டு வெளியே வந்தான். தந்திரக்கார நரி ஜிக்கோர் பீயர் மரத்தின்கீழ், அவனைப் பார்க்காதவன்போல் பாசாங்குசெய்து உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

''நான் ஒரு காவல் நாய் வைத்திருக்க வேண்டும்'' என்று ஆண்ட்ரோ தனக்குள் சொல்லிக்கொண்டான். அவனிடம் ஒரு நாய் இருந்தது நினைவுக்கு வந்தது. ஆனால் அது மலையில் மேய்ச்சல் நிலத்தில் இருந்தது.

''தூங்கிக்கொண்டிருந்தாயா ஆண்ட்ரோ?''

''ஆமாம். ஆனால் மரியம் வந்து என்னை எழுப்பிவிட்டாள்.'' கொட்டாவிவிட்டு அவன் மேலும் சொன்னான்: ''உலகத்தில் புதிதாக என்ன ஏற்பட்டிருக்கிறது?''

''உன் பீயர் பழங்கள் நன்றாகப் பழுத்திருக்கின்றன.''

''எனக்குத் தெரியும், நீ ஒன்று பறித்துக்கொள்.''

''அவற்றைக் கடிக்க எனக்குப் பற்கள் இல்லை. உன் தேனீக்கள் நேர்த்தியாக இருக்கின்றன. என் ஈக்களுக்கு எல்லாம் வெறி பிடித்துவிட்டது. அவை கூட்டமாய் மொய்த்தபடி இருக்கின்றன. போன வருஷம் நல்ல கூடாக இருந்தது. ஆனால் இந்த வருஷம் அவை மொய்ப்பது தவிர வேறு எதுவும் செய்ய வில்லை. நீ வோட்கா தயாரிக்கப் போகிறாயா?''

''பார்க்கலாம்.''

''பார்க்க என்ன இருக்கிறது? இவ்வளவு பழத்தையும் நீ என்ன செய்வாய்? அது கெட்டுப்போவதைப் பார்ப்பது அவமானம்... நான் உன்னை ஒரு உதவி கேட்க விரும்புகிறேன், ஆண்ட்ரோ.'' ஜிக்கோர் அவனை நேராகப் பார்த்தான்.

''சொல்லு, அது என்ன, என்னைக் கேள்.''

''தேனீக்கள் மொய்த்துக்கொண்டிருக்கின்றன. அதிகப் படியான கூடு எதுவும் இல்லை. உன்னிடம் ஒன்று இருக்கலாம். இல்லாவிட்டால், எனக்காக ஒன்று செய்து தா. உனக்கு அதிக நேரம் நேரம் பிடிக்காது. நாசமாய்ப்போகிற தேனீக்கள் என்னைப் பைத்தியமாக அடிக்கின்றன.''

ஆண்ட்ரோ உரக்கச் சொன்னான்: ''பல்லை எல்லாம் இழந்து விடும்படி உனக்கு அப்படி என்ன வயது ஆகிறது?''

''அறுபத்து ஏழு.''

''நான் பந்தயம் கட்டுவேன். நீ என்னை ஏமாற்ற வேண்டிய தில்லை. நான் உபகாரச் சம்பளம் நிர்ணயிக்கும் குழுவைச் சேர்ந்தவனில்லை.'' ஆண்ட்ரோ வருத்தமுற்றவன் போல் பேசினான்.

மரியம் ஓசைப்படுத்தாமல் வீட்டிலிருந்து வெளியே வந்தாள். வாசல் ஓரத்தில் நின்றாள்.

அவர்கள் இருவரையும் வாயில்புறத்தில் அருகருகே பார்த்ததும், ஆண்ட்ரோவின் கறுத்த மீசையையும் இருதயத்தை யும் கருத்தில் கொண்டு, அவர்கள் வெகுகாலமாகத் தொடர்பு கொண்டிருக்கிறார்கள் (தனியான ஒரு பெண் அது இல்லாமல் இருக்க முடியாது) என்று ஜிக்கோர் முடிவு செய்தான். சென்ற மாரிக்காலத்தில் அவள் வீட்டின் முன்புறம் இருந்த மரக் கட்டையை ஆண்ட்ரோதான் களவாடினான் என்று தீர்மானித் தான். அது நல்ல கட்டை. அதை அவனே எடுக்கவேண்டும் என்று எண்ணியிருந்தான். அதற்குள் மற்றவர்கள் அவனை முந்திக்கொண்டார்கள்.

''நான் 1898-ல் பிறந்தேன். அங்கே இரண்டு வருஷம். இங்கே அறுபத்தைந்து. ஆக எனக்கு அறுபத்து ஏழு ஆகிறது. நீ குழந்தையாக இருந்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது.''

''நான் சும்மா பரிகாசம் பண்ணினேன். கோபப்படாதே.''

''நீ பரிகாசம் பண்ணுவிட்டாலும் நான் உன்பேரில் கோபம் கொள்ள எதுவுமில்லை.''

மரியம் எதுவும் பேசாது ஆண்ட்ரோவைக் கடந்து சென்றாள். வைக்கோல் சுமை அருகே ஒரு கணம் நின்றாள். பிறகு கயிறு களின் ஊடே கைகளைப் புகுத்தினாள். குந்தினாள். மண்டியிட்டு, கைகளிலும் கால்களிலும் நின்று, பின் கைகளால் தரையை உந்தி எழுந்தாள்.

''இரு. நான் உதவி செய்கிறேன்'' எனக் கூறி ஜிக்கோர் அவளை நோக்கி அடி எடுத்து வைத்தான்.

அவள் பதில் சொல்லவில்லை. ஆனால், முதலில் ஒரு கையையும், பிறகு ஒரு கால் மூட்டையும் தரையிலிருந்து உயர்த்தி மெதுவாக நிமிர்ந்தாள். அப்படி அவள் நிமிர்ந்து எழத்தொடங்கியதும், ரத்தமேறிய அவள் முகத்தையும் கழுத்தில் விம்மிய ரத்த நாளங்களையும் ஆண்ட்ரோ பார்த்தான்.

இறுதியாக அவள் எழுந்து நின்றதும், ''ஆ, நீ இன்னும் நல்ல பலத்தோடுதான் இருக்கிறாய்'' என்று அவன் சொன்னான்.

அவள் சுமையை முதுகில் நன்கு வசதியாகப் படியும்படி நகர்த்திக்கொண்டாள். அவளது வாடிய புன்சிரிப்பை ஆண்ட்ரோ மீண்டும் கண்டான். பீயர் மரத்தருகில் உள்ள பாதையை அடைந்ததும் அவள் சொன்ன பதிலையும் கேட்டான்.

''ஆமாம். நான் திடமாகத்தான் இருக்கிறேன்!''

சுமை கிளைகளில் சிக்கியது. மரியம் தாழ்ந்து குனிந்தாள். கீழே விழுவதற்கிருந்தாள். ஆனால், பின்வாங்கி, மரத்தின் அடியில் செல்வதற்காகக் குனிந்துகொண்டாள். கிளைகள் நிமிர்ந்து பின்னே துள்ளியபோது, பழுத்த பீயர் பழங்கள் தரையில் விழத்தொடங்கின.

''நான் ஒரு பழம் எடுத்துக்கொள்ளலாமா?'' என்று அவள் கீழே குனிந்தாள்.

''முட்டாள்! மரத்திலிருந்து ஒன்று பறித்துக்கொள். பார். அவை உன் வாயில் வந்து விழுகின்றன'' என்று ஆண்ட்ரோ கத்தினான்.

அவள் தரையிலிருந்து ஒன்றைப் பொறுக்கினாள். மரத்தி லிருந்து இன்னொன்று பறித்தாள். அதிகப்படியாகச் சிரித்தாள்.

''அவள் ரொம்ப நல்ல பெண். இளமையாகவும் இருக் கிறாள். வலிமையுள்ள இளம் பெண்'' என்று கிழ நரி ஜிக்கோர் சொன்னான்.

ஆண்ட்ரோவின் குதிரையை இரவல் கேட்க ஜிக்கோர் வந்திருந்தான். அவன் இரண்டு மூட்டை தானியத்தைக் காசாக்கி விருந்து கொண்டு வரவேண்டும். சுமார் எண்பது கிலோதான் இருக்கும். அதிகமில்லை. அவன் குதிரை அதற்கு லாயக்கில்லை. அது ரொம்பவும் பயந்தது. ரஸ்தாவும் மோசமானது. அவன் இரவில் பயணம் செய்வான். அவனுடைய குதிரை மடத்தன மானது. அது வெறுமனே கால் தடுக்கிக் கீழேவிழும். அவனையும்

இழுத்துத் தள்ளும். அது திடமான குதிரைதான். ஆனால் மடக் குதிரை. சுமை அதிகமாக இல்லை. சுமார் எண்பது கிலோ மட்டுமே. அதிகமாய் போனால், தொண்ணூறு கிலோ இருக்கும். குதிரை வேர்த்து விறுவிறுக்காதபடி அவன் இரவில்தான் பயணம் செய்வான். பகல் நேரத்தில் அது தின்பதற்கு ஓட்ஸ் தானியம் கொடுப்பான். அதை ஓய்வு பெற விடுவான். இரவில்தான் திரும்பிவருவான். அதனால் அதுக்கு அதிகம் சூடு ஏறுது.

ஆஷ்கென்தான் முதலாவதாகப் பசுக்களைப் பால் கறந்து முடித்தாள். அவள்தான் முதலில் பாலை உள்ளே கொண்டு வந்தாள். அதிலும், மற்றவர்களைவிட அதிகமான பால். அவள் பசுக்களைப் பேணினாள். அவற்றைக் கொஞ்சினாள். கன்றுகள் கட்டும் இடத்தைச் சுத்தம் செய்தாள். அவளுடைய கன்றுக் குட்டித் தொழுவம்தான் மற்ற அனைத்தையும்விட மிகச் சுத்தமாக இருந்தது. கன்றுகள் பெரிதாகவும் ஆரோக்கிய மாகவும் இருந்தன. அவள் கன்றுகளை இடையன் பொறுப்பில் விட்டாள். தன் குடிலைச் சுத்தப்படுத்தினாள். முதலில் சலவை சோப்பினால் கழுவினாள். பிறகு வாசனை சோப்பால் கழுவி விட்டாள். தலை வாரிக்கொண்டாள். ஒரு குட்டையைத் தலையில் சுற்றினாள். சில பெண்கள் தலைமீது குட்டை சுற்றிக் கொள்வ தானால் தங்கள் கூந்தலைச் சீப்பால் வாரிவிடமாட்டார்கள். கூந்தலை வாரிக்கொண்டால், தலையில் குட்டை அணியமாட் டார்கள். ஆனால், அவள் அப்படி இருந்தாள்; உள்ளும் புறமும் சுத்தமாக அவள் கூந்தலைச் சீவி முடித்து, தலையில் குட்டை தரித்துக்கொண்டு, தனது தங்கக் கல்யாண மோதிரத்தை விரலில் அணிந்தாள். அப்படிப்பட்ட குடும்பப் பெண்ணாக இருந்தாள் அவள். அவளது எண்ணம் எல்லாம் குடும்பத்தைப் பற்றி மட்டுமே இருக்கும். அப்புறம் அவள் தனது சிறிய தங்கக் கைக் கடியாரத்தைக் கட்டினாள். மிருகங்களின் பண்ணை நிர்வாகியான லெவானைப் பார்க்கப்போனாள். சர்வ சுத்தமும் தூய்மையுமாக, முன் மாதிரி ஆகவும் நாணயமாகவும், உண்மை யாகவும் அழகானவளாகவும் அவள் விளங்கினாள்.

அவள் வெகு அடக்கமாக, அமைதியாக, பணிந்து போகிற வளாக, பாதுகாப்பாற்றவளாக இருந்தாள். சரியான ஆர்மேனியப் பெண்ணாய், ஒரு கிராமத்து ஸ்திரீயாகவும் இருந்தாள். அவள் முதலில் பேச முற்படவில்லை. தன்னைவிட மூத்தவர்களுக்கு மரியாதை காட்டினாள். லெவான் பேசுகிற வரை காத்திருந்தாள்.

"என்ன ஆஷ்கென்?"

''லெவான் மாமா!'' என்ருள். அவள் மிகுந்த கூச்சமும் நாணமும் கொண்டாள். நகரத்தின் துப்புக்கெட்டவர்கள் போலவும், நாட்டுப்புறத்தின் உல்லாசிகள் போலவும் இல்லை அவள். தனது மிகச் சிறந்த பால்காரியான ஆஷ்கென் தன்னிடம் என்ன கேட்க விரும்பினுள் என்று லெவான் யூகிக்கும் வரை அவள் காத்திருந்தாள்.

''நீ சிறிது நேரம் விடுப்பில் போக விரும்புகிருயா?''

ஆஷ்கென் தலையாட்டினுள்.

''சாயங்காலம் பால் கறக்கிற நேரத்துக்குள் திரும்பி விடுவதாக இருந்தால், நீ என்னைக் கேட்கவே வேண்டாம். இது உன் ஓய்வு நேரம். உன் இஷ்டம்போல் செய்.''

ஆனுல், முதலில் அனுமதி பெருமல் ஒரு அடிகூட எடுத்து வைக்காத ரகத்தைச் சேர்ந்தவள் ஆஷ்கென். அவள் அனைத்தையும் புரிந்துகொள்ளக்கூடிய இயல்பு உடையவள். பள்ளத்தாக்கில் பணிபுரிகிற தொழிலாளிகள் சிறிது தயிர் சாப்பிட விரும்புவார்கள் என அவள் அறிவாள். ஆஷ்கென் தாராளமானவள்; சிறிதுகூடக் கஞ்சத்தனம் இல்லாதவள். அவள் தனது சொந்தப் பசுவின் பாலிலிருந்து ஆக்கிய தயிரைக் கொண்டுபோவாள். ஆஷ்கென் முன்யோசனை உடையவள். சுமையின் கனத்தால் உடல் நன்கு குனிய அதை அவளே எடுத்துச்செல்வாள். தன்னை வருத்திக்கொள்ள அவள் ஒரு போதும் தயங்கமாட்டாள். ஆஷ்கென் நுண் உணர்வு உடையவள். அவர்களைத் தனியே சாப்பிடும்படி விட்டுவிட்டு அவள் நகர்ந்துவிடுவாள். ஒரு புல்லைக் கிள்ளியபடி, கண்களைத் தாழ்த்தியவாறு, அடக்கத்தோடு, ஒதுங்கிக்கொள்வாள். பிறகு அவள் மரியத்துடன் நீரூற்றுக்குப் போவாள். அவர்கள் இருவரும் குழந்தைப் பருவத்திலிருந்தே சிநேகிதிகள். ஒருவரை ஒருவர் ஒரே பார்வையில் புரிந்துகொள்வார்கள். ஊற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவது ஒரு பெண்ணின் வேலை என்பதை அவர்கள் இருவரும் அறிவர்.

ஆஷ்கென் வாளியை ஓடும் நீரில் நன்ருக அலம்பினுள். அதைச் சாலை ஓரக்கால்வாய் அடியில் பதிவாக வைத்தாள். அது நிலையாகப் பதிந்திருக்கிறதா, கவிழ்ந்து விழுந்துவிடாதே என்று கவனமாகப் பார்த்தாள். மண்கட்டி எதுவும் வாளிக்குள் விழுந்து விடாதவாறு அவள் மரியத்தை ஒருபுறமாக இட்டுச்சென்ருள். அவளது தலைக்குட்டை கிழிந்துவிடாமல் இருப்பதற்காக அதை அகற்றினுள். அவள் தலைமுடி முழுவதையும் ஒரே அடியாகப் பற்றினுள். அப்போதுதான் கூந்தல் முடிச்சு சிறிதாக இல்லா

மலும் மயிர் பிய்ந்துபோகாமலும் இருக்கும். அவளே அடிக்கத் தொடங்கினாள். தோள்களில், மார்பில், வயிற்றில், முதுகில், பின்புறத்தில் தாக்கினாள். அப்புறம் மறுபடியும் தோள்கள், மார்பு, வயிறு, முதுகு, பின்புறம் எல்லாம் அறைந்தாள். பிறகு, முதுகை மட்டும் குறிவைத்துத் தாக்கினாள். திரும்பத் திரும்ப அடித்தாள். வலித்தது என்று நிச்சயப்படுத்தவும், மற்றவர்கள் பார்வையில் படக்கூடிய விதத்தில் கறுப்பாகவும் நீலமாகவும் தழும்புகள் படியாதவாறும் அவள் அறைந்தாள். பின்னர் அவளுக்குக் குடிப்பதற்குச் சிறிது தண்ணீர் கொடுத்தாள். கூந்தலை வாரிமுடிப்பதற்காகத் தனது சீப்பையும் தந்தாள். அப்புறம் அவள் மரியத்தின் தலைக்குட்டையைத் திரும்பக் கட்டினாள். அவளுடைய வாளியையும் தானே தூக்கிக்கொண்டு நடந்தாள். ஏனெனில், மரியம் நேராக நடக்க இயலாது தள்ளாடினாள்.

கே. சிமோனியன்
(1936)

# கிளைபடர்ந்த வில்லோ மரமும் அசைந்தாடும் நாணலும்

(அலிஸியா கிராகோஸியனுக்குச் சமர்ப்பணம்)

நெர்ஸஸ் மாஷனுக்கு முன்னால் பசுமையான மதுரம் மிக்க புல்வெளி பரந்து கிடந்தது. அங்கே சில குடிசைகள், பொம்மைகள்போல், ஒன்றை விட்டு ஒன்று தூர விலகிச் சிதறி யிருந்தன.

எப்போதும்போல, இந்தக் காலை நேரத்திலும், உலகம் ஒளி ஊடுருவிச் செல்லும் மெல்லிய போர்வையால் அமைதியாக மூடுண்டதுபோல் தோன்றியது.

அந்த அமைதி சில குரல்களின் ஒத்திசைவாக இருந்தது. நமது சித்தத்தை நாம் சிறிது வருத்தினால், கவலையை உண்டாக்கும் நம் எண்ணங்களை நாம் அரை இருளுக்குள் ஆழ்த்தி விட்டால், ஆச்சர்யப்படுத்துகிற அமைதியின் ஆசையூட்டும் சலசலப்புகளை நாம் கட்டாயம் கேட்போம்.

அட கடவுளே! வருத்தப்படுவதற்கு இனியும் சித்தம் எஞ்சியிராவிட்டால், கிளர்ச்சியுற்ற நமது மூளையிலிருந்து நம் எண்ணங்கள் தங்களை விடுவித்துக்கொள்ள விரும்பாவிடில், உள்ளார்ந்த கவலை தொடர்ந்து உக்கிரமானால்?

யாருக்கு வேண்டும் இந்த மதுரமான பசும் புல்வெளியும், இந்த வீடுகளும், இந்த அமைதியும்? சந்தேகங்களை நீக்குவதற்கும் ஆசைகளைக் கொல்லவும் இவற்றை எவர் அமைத்தார்? என்று ஒருவரும் அறியார்.

தொலைதூரத்தில் விடப்பட்டுள்ள என் மூதாதையர் நிலத்துக்கான ஏக்கத்தினால் கஷ்டப்பட நான் விரும்பினால்? எனது கிளைபடர்ந்த வில்லோ மரத்துக்கும் அசைந்தாடும் நாணலுக்கும் நான் ஆசைப்பட்டால்?—இவ்வாறு நெர்ஸஸ் மாஷன் நினைத்தான்.

புல்வெளியின் ஓரத்தில் இருந்த வீடு சொன்னது: ''பார்த் தாயா, என்ன விசித்திரமான ஆசைகள் எல்லாம் பிறக்கின்றன?

நேரம் சென்ற பிறகும் நீ வெளியே இருக்கக்கூடாது என்று உனக்குத் தெரியாதா? நீ வீணுக முரண்டுபண்ணுகிருய். திரும்பி வா. வீட்டுக்கு வா...''

ஹூம்...! ''வீட்டுக்கு வா''. அவன் அம்மா மாலை வேளையில் அப்படித்தான் கூப்பிடுவாள். அவன் அம்மா! மிக சுவாரஸ்யமாகவும் விறுவிறுப்பாகவும் விளையாட்டில் ஈடு பட்டிருக்கும் நேரத்தில் அவள் அவனை அழைப்பது வழக்கம்... புழுதி படிந்த கால் சட்டையைத் தட்டிவிட்டு, சட்டை நெகிழ்ந்து வெளியே தொங்கிவிடாமல் இருக்கவும்—மார்பில் மறைத் திருக்கும் பொன்னிற ஆப்பிள் பழங்கள் வெளியே விழுந்து தெருவில் உருண்டு பள்ளத்துள் பாயாமல் தடுக்கவும்—தனது இடுப்பு வாரை இறுக்கிக்கொண்டு, அந்தப் பையன் மன மில்லாமலே வீடு திரும்புவான்.

வீடு...?

நெர்ஸஸ் மாஷனின் நெஞ்சு படபடத்தது. திடீரென அவனுடைய குழந்தைப் பருவ நினைவுகள் யதார்த்த நிலைமைக்கு வேறு பொருள் சேர்த்தன. ஆனுல் சில கணங்களுக்கு மட்டுமே. ஆயினும், மதுரமான பசும் புல்வெளியின் ஓரத்தில் இருந்த சிவப்பு ஓட்டு வீட்டை நோக்கி வேகமாக நடக்கும்படி அவனைத் தூண்டுகிற அளவுக்கு அவை போதுமானதாக இருந்தன. பிற்பாடு, அந்த அழைப்பு இனிய பிரமைதான் என அவன் நிச்சயமாக உணர்ந்தான்.

அவன் முற்றத்துக் கதவை முழங்காலால் தள்ளித் திறந்தான். நின்று, சுற்றுமுற்றும் பார்த்தான். கடந்துபோன வருஷங்களின் அடியில் அவனது குழந்தைப்பிராயம் நழுவிச் சென்றது. அவன் தன் தாயின் குரலை தூரத்தில் அமைதிப் படுத்திஞன். பொன்னிற ஆப்பிள் பழங்கள் தெருவில் உருண்டோடி, புழுதியில் மறைந்துபோயின. அக் கணத்தில் எது நிஜம் என்று புரிந்துகொள்ள நெர்ஸஸ் மாஷன் முயன்ருன்.

நிச்சயமாக ஏதோ இருந்தது! எதுவோ நிலைபெற்றிருந்தது!

வீடு?

ஹூம்...! மறுபடியும் வீடு!

வழக்கமாக மனிதன் தன் சொந்த வீட்டில் பாதுகாப்பை உணர்கிருன். அவனது சொந்தக் கூரையின் கீழே மனிதன் அவஞக இருக்கிருன். சுதந்திரமாக! ஆனுல் இந்த நேர்த்தி யான, சுத்தமான, ஓட்டு வீட்டில் அப்படி இல்லை. கவலைகளை எழுப்பக்கூடிய அசாதாரண ஆற்றல் அதற்கு இருந்தது.

ஆயினும், நிலைமை அதற்கு நேர்மாறுனது என்று ஓயாது அது வற்புறுத்தியது. அதன் நிலைபேறு பகுத்தறிவின் எந்த ஒரு அளவுக்கும் கட்டுப்படவில்லை. ஆனாலும், எப்படியோ அது உண்மையாக இருந்தது.

...இப்போது அவன் முன்அறைக்குள் நடப்பான். அங்குத் தரையில் பரப்பியிருந்த பாய் அவன் காலடியில் சரசரக்கும். வானத்தின் இருண்ட நீலம் சன்னல் வழியாகத் தென்படும்.

ஆச்சர்யம்தான்! உலகம் இருண்டுவருகிற அதே கணத்தில் தான் அவன் ஒவ்வொரு முறையும் வீட்டினுள் நுழைகிறுன். அது முதலில் கனத்த நீலத்தில் ஆழ்கிறது; பிறகு விசித்திரமான இருட்டில் மூழ்கிவிடுகிறது. இருட்டு, என்ன இருட்டு...! தூரத்தொலைவில் விட்டுவந்த நாட்டில்கூட இத்தகைய இருட்டைக் கற்பனை பண்ணுவது சாத்தியமாக இல்லை. அங்கே மிக ரம்மியமான சந்திரன் மலைகளின் அடுக்குகளினூடே நீந்தியது; அமைதியான ஏரியின் மோன அலைகளில் அது பிரதிபலித்தது.

அது ஒரு அற்புதம்; ஒரு நாடு அல்ல!

நெர்ஸஸ் மாஷன் முன்அறையில் ஆழ்ந்த மூச்சுயிர்த் தான்.

எங்கிருந்தாவது, பாயின் அடியிலிருந்து அல்லது சுவர்க் கடியாரத்தின் பின்னுலிருந்து, அல்லது முகட்டிலிருந்து தொங்கிய விளக்கிலிருந்து, பயம் தனது உருவத்தை வெளிக்காட்டாமலே வந்து நிற்கும்; அது நாலாப் பக்கமிருந்தும் அவன்மீது கவியத் தொடங்கும்; பிறகு அவனுள் கலந்துவிடும்.

நெர்ஸஸ் மாஷன் அனிச்சையாக நடுக்கமுற்றுன். சிரிக்க முயன்றுன். எச்சரிக்கையாக நடுஅறைக் கதவைத் தள்ளித் திறந்து உள்ளே பார்த்தான். ஆனல் அடுத்த கணமே சமைய லறையை நோக்கித் திரும்பினுன். அப்படிக் குதித்துத் திரும்பிய அவனது எதிர்பாராத அசைவுகளும், சிரிக்கும் முயற்சியும் சேர்ந்து ஒரு சோக சித்திரத்தையே உருவாக்கியிருக்கும். ஆனல் சோகமான அல்லது உற்சாகம் நிறைந்த சித்திரங்களில் அவன் சிரத்தை காட்டவில்லை. ஒரு நாளாவது, ஒரு சாயங்கால நேர மாவது, தான் தன்னந்தனியாக இருப்பது சாத்தியப்படுமா? என்று அவன் அதிசயித்தான்.

முன் அறையின் சுவரில் சாய்ந்து, அவன் நிம்மதியாகப் பெரு மூச்சு விட்டான். தன் தலைக்கு மேலே கடியாரத்தின் ஊசல் அப்படியும் இப்படியும் சீராக அசைவதைக் கடைக்கண்ணுல் பார்த்தான்.

நான் தனியாக இருக்கிறேன் என்று அவன் நினைத்தான். நான் தனியாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறேன். எதிர் பாராத விருந்தாளிகள் யாரும் இல்லை. இன்று பயமும் அதிகக் கர்வம் உள்ளதாகத் தோன்றவில்லை. இன்று நான் பயப்படுவ தற்குக் காரணமே இல்லை. ஏனெனில், நான் எனது நாட்டை நினைவுகூர்ந்தேன். பொன்னிற ஆப்பிள்களையும் என் அம்மா வின் அழைப்பையும் எண்ணிக்கொண்டேன்.

இப்போது நான் ஆடைகளை அகற்றிவிட்டு 'ஷவரில்' குளிக்கப் போகிறேன். விழுகிற நீர்ச் சிதறல்கள், ஊசிகள்போல், என் உடலில் குத்தும். பகலில் என் தேகத்தில் படிந்திருக்கக்கூடிய நட்சத்திரத் தூசியைக் கழுவிவிடும்.

''நீ குழம்பியிருக்கிறாயா?'' என்று வீடு வருத்தமாய்க் கேட்டது. தன் இதயம் வேகமாய் அடித்துக்கொள்வதை நெர்ஸஸ் மாஷன் உணர்ந்தான். முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு விரல் இடுக்குகளின் வழியாக அவன் பார்த்தான். அவன் தனியாக இருந்தான். சந்தேகம் இல்லாமல், தனிதான். ''நீ களைத்திருக்கிறாய். பசியாக இருக்கிறாய். குளித்து முடி. அப்புறம் நாம் என்ன செய்யலாம் என்று பார்ப்போம்'' என வீடு தொடர்ந்து கூறியது.

நீ என்ன செய்யக்கூடும்? பொதுவாக, நீ ஏன் உபசாரமாக இருக்கிறாய்? இறுதியாக, நான் களைத்தும் பசியோடும் இருந் தாலோ இல்லாமலிருந்தாலோ உனக்கு என்ன கவலை? உனது சுவர்களின் மேல்கூரையைத் தாங்கியிருப்பது, நான் பாதுகாப் பாக உணரும் விதத்தில் அதை உறுதியாய்த் தாங்கி நிற்பது தான் உன் வேலை.

...நெர்ஸஸ் மாஷன் தனது சட்டைப் பித்தானை அவிழ்த் தான். நடந்தபோதே பாதங்களைக் குலுக்கினான். காலணிகள் அங்கும் இங்குமாகப் பறந்தன. நட்சத்திரத் தூசி படிந்த தன் சட்டையை, அதன் கைகளைப் பிடித்தபடி, தனது முன் கையைச் சுற்றி முதலில் மெதுவாகவும் பிறகு வெறித்தனமாகவும் முறுக்கினான்.

அவன் குளிப்பதற்கு விரைந்தான். யாருக்குத் தெரியும்? அவன் தன்னுடைய மிகப் புனிதமான பாடலையும் பாடலாம்.

''நன்மாலை!''

இல்லை, அது வீடு இல்லை.

நெர்ஸஸ் மாஷனை வழக்கமாக நடு அறையில் சந்திக்கும் ஷாவாஸ்ப்பும் இல்லை. விசேஷமாக அவன் ஸ்டேஷனில் கடமை

யாற்றும்போது சந்திப்பான். ஷாவாஸ்ப்பின் வருகைகள் அறிவுக்கு எட்டாதவையாக இருந்தன. அவற்றின் தலையையோ வாலையோ கண்டுகொள்ளக்கூடியவர் அநேகமாக எவரும் இரார். பார்க்கப்போனால், தானே இதுவரை ஏன் அவனைக் கேட்டறியவில்லை என்று நெர்ஸஸ் மாஷனுக்குப் புரியவில்லை. அவன் சில சமயங்களில் கேட்க விரும்பினான் என்பது சரிதான். ஆனால் திடீரென்று அவன் மனம் வேறெங்காவது திரும்பிவிடும், கேட்கிற விஷயம் மூளையிலேயே கிள்ளி எறியப்பட்டிருக்கும்.

அது புல்வெளியின் எதிர்முனையில் ஷாவாஸ்ப்பின் வீட்டுக்கு எதிர்வீட்டில் வசித்த ஆர்னக்கும் இல்லை.

''நல்ல மாலை, நெர்ஸஸ் மாஷானி!''

என் தொலைதூர அற்புத நாட்டின் பேராலும், அவர்களே பாதுகாக்கிற நாட்டுக்குத் தங்களை ஈடுவைத்துள்ள என் மூதாதைகளின் ஞாபகச் சின்னங்கள் பேராலும்—அவர்கள் கூப்பிடுகிறார்கள், உயிரோடிருக்கும் சந்ததிகளை அவர்கள் ஒருங்கு திரட்டுகிறார்கள்—புனிதமான அனைத்தின் பேராலும் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்: அது மோரிக்கும் இல்லை.

''உனக்கு என்ன வேண்டும்?'' என்று நெர்ஸஸ் உரத்த குரலில் கேட்டான். தலையைச் சுற்றித் துண்டைக் கட்டியிருந்த அவன் அந்தப் பெண்ணைக் கேட்டான். லேசான, ஆகாயக் குட்டையைத் தோள்கள்மீது தொய்வாகத் தரித்திருந்த அவள், நெருக்கமான நட்புடனும், குறிப்பாக தயக்கம் எதுவும் இல்லாமலும், அவ் வேளையின் நுண்மையான நிலைமையைச் சிறிதுகூடப் பொருட்படுத்தாமலும் சிரித்தாள். ''நீயும் எங்கள் புல்வெளியில்தான் குடியிருக்கிறாயா?'' என்று நெர்ஸஸ் மாஷன் கேட்டான். அது எவ்வளவு அபத்தமான கேள்வி என்று அவன் சந்தேகிக்கக்கூட இல்லை. ஏனெனில், மதுரமான பசும் புல்வெளியில் இருந்த குடிசைகளில் வசித்தவர்கள் இவர்கள் மட்டுமே: அவன், ஆர்னக், ஷாவாஸ்ப், மற்றும் மோரிக். ''நீ யார்?'' தன் குரல் தனக்கே அடையாளம் காண இயலாததாகவும் விசித்திரமாகவும் மாறியதை அவன் உணர்ந்தான். ''நீ யார் என்று கேட்கிறேன். ஏன் இங்கு வந்தாய்? என் வீட்டில் உனக்கு என்ன வேலை?''

அதே சமயம், வீட்டின் மகிழ்ச்சியையும் அவன் உணர்ந்தான். நெர்ஸஸ் மாஷன் ''என் வீடு'' என்று சொன்னதைக் கேட்டு அந்த வீடு மகிழ்ந்தது. நம் எல்லோரையும் போலவே, அந்தப் புல்வெளி வீடும்—அதை யார் கட்டியது, அது கட்டப்பட்டதுதானா அல்லது சிருஷ்டிக்கப்பட்டதா? என்று எவருக்கும்

தெரியாது—அந்த வீடுகூட யாருக்காவது சொந்தமாக இருக்க வேண்டும் என்று கனவு கண்டது.

நீண்ட காலமாகவே நான் உணர்ந்துவந்திருக்கிறேன் என்று நெர்ஸஸ் மாஷன் கருதினுன்: இந்த வீடு எனக்குச் சொந்தமாக இருக்க விரும்புகிறது என்பதை நான் வெகுகாலமாகவே கண்டு உணர்ந்திருக்கிறேன். ஏனென்ருல், அவளுக்கு வேறு யார் இருக்கிருர்கள்? அவளுக்கு உறவினர் எவரேனும் இருக்கிருர்களா? அவளுக்கு மூதாதையர் யாராவது உண்டா? வரலாறு ஏதாவது இருக்கிறதா? இந்தப் பக்தியை நான் பாராட்டுகிறேன். ஆனுல் நான் என்ன செய்ய முடியும்—எனது கடைத்தேற்றம், என் சக்தி, என் வலிமை, மற்றும் இதுவும், இதுவரை நான் ஒரு கற்பனை மனிதனுக மாறிவிடாமல் இருப்பதும், என்னை நானே பாதுகாத்துப் பத்திரப்படுத்தியிருப்பதும், எல்லாமுமே எனது தொலைதூர நாட்டின் உண்மையான, திடமான நிலைபேற்றினுல் நிர்ணயிக்கப்படுகிறபோது?

''குளித்துமுடி! நான் இரவுச் சாப்பாடு தயாரிப்பேன்'' என்று அந்தப் பெண் சொன்னுள். துவாலையை நேர்படுத்தினுள். சிதறிக்கிடந்த நெர்ஸஸ் மாஷனின் காலணிகள், காலுறைகள், சட்டை, கவலைகளை எல்லாம் சேகரித்துக்கொண்டு சமைய லறைக்குப் போனுள்.

நீ யார் என்று நீ சொல்லவில்லை! இது உண்மைதான் என்று நெர்ஸஸ் மாஷன், ஷவரின்கீழ் நின்றவாறு எண்ணினுன். ஆனுலும் என் கவலைகளை ஒன்று திரட்டவும், எனது சந்தேகங் களை விலக்கவும், மேலும், ஹும்... மேலும், இரவுச் சாப்பாடு தயாரிக்கவும் நீ வந்திருப்பதை நான் பார்க்கிறேன்.

''நான் உங்கள் இருவரையும் தனியாக விடுகிறேன்'' என்று வீடு கூறியது. ''அவள் யார் என்று தெரிகிறதா? அவள் ஒரு மனைத்தலைவி. ஒரு பெண். ஒரு மர்மம்! அந்த மர்மத்தை அறிந்துகொள்ளச் சம்மதித்தால், அநேக தலைமுறைகள் தூரத் தொலை நாட்டின்மீது கொண்ட ஏக்கத்தினுல் இனிமேல் துயரப் படமாட்டார்கள். நான் உங்கள் இருவரையும் தனித்திருக்க விடுவேன். உங்களைத் தொந்தரவு பண்ணமாட்டேன்'' என்று வீடு தொடர்ந்தது. ''நீ மறதியில் ஆழ்ந்துவிடுவாய். மறதியோடு அளவற்ற ஆனந்தம் வந்து சேரும்.''

என்ன முன்யோசனை! எனினும், இன்று மாலை நான் தனி யாக இருப்பேன், எல்லா விருந்தாளிகளையும் அகற்றிவிடுவேன் என்று நான் உறுதியாக நம்பினேன். எல்லா...? ஆனுல் நாங்கள் மொத்தம் நான்கே பேர்கள்தான் புல்வெளியில்

இருக்கிறோம். நாங்கள் நால்வர்தான், அதனால் என்ன? நாங்கள் எத்தனை பேர் இருக்கிறோம் என்பதில் என்ன வந்துவிடப் போகிறது? அல்லது மற்றவர்கள் யார் என்பதில்? ஷாவாஸ்ப், ஆர்னக் அல்லது மோரிக்...? நான் நெர்ஸஸ் மாஷன். நான் இங்கே வந்ததிலிருந்து ஒரு ஆசை என்னுள் பிடிவாதமாக முளையிட்டு வந்திருக்கிறது. அது பசிய குருத்தாகத் தலைதூக்கியது. நான் மட்டுமே தனித்திருக்க வேண்டும் என்ற என் ஆசை இப்போது வெடிப்புகள் விழுந்த கனத்த பட்டையுடைய மரமாக வளர்ந்திருக்கிறது.

''நீ வெகுநேரம் ஷவரின்கீழ் நிற்கப்போகிறாயா?'' எங்கிருந்து வந்தாள் என்று யாருக்கும் தெரியாத அந்தப் பெண்ணின் குரல் கேட்டது. அக் குரலை அமுக்குவதற்காக நெர்ஸஸ் மாஷன் தண்ணீர் விழுகிற வேகத்தை அதிகமாக்கினான். மெல்லிய நீரோட்டங்களின் சத்தம் அவனை உலகத்திலிருந்து தனிமைப்படுத்தியதாகத் தோன்றியது.

''தொடர்ந்து உன் நாட்டையே எண்ணிக்கொண்டிருந்து நீ ஒரு நாள் புத்தி பேதலிக்கத்தான் போகிறாய்'' என்று, வீடு, சிந்தனையின் நுண்ணிய சாயலோடு குறிப்பிட்டது. ''அப்புறம் நீ என்ன லாபம் அடைவாய்? ஒன்றுமில்லை. என்னை நம்பு; நீ எதுவும் அடையமாட்டாய். கவலைகள், குழப்பங்கள், ஏக்கம் இவைகளினால்தான் நீ கஷ்டப்படுவாய்.''

நீ என் ஆத்மாவை வதைக்கிறாய் என்று நெர்ஸஸ் மாஷன் நினைத்தான். நான் எனது நாட்டை நினைக்காவிட்டால், நீ என்னை அமைதிப்படுத்துகிறவனாகவும் தேற்றுகிறவனாகவும் இருக்க முடியும் என்று நினைக்கிறாயா?

அவன் ஷவரின்கீழ் தலையை ஆட்டினான். குழாயைத் திருகி மூடினான். நீராவி படர்ந்த கண்ணாடியைப் பார்த்தான்.

உருவம் தெரியவில்லை! அதில் அவன் இல்லை! அவன் முகம் அங்கு இல்லை! அவன் பார்வைக்குப் புலனாகவில்லை. மங்கலான உருவெளி வடிவம் மட்டுமே இருந்தது. நமக்குப் பிடித்த எவருடைய உருவத்தையும் நாம் சித்திரிக்கலாம். முடிவில் நம்மை நாமே பூர்த்தி செய்துகொள்வது நம்... நம் சித்தத்தின் கட்டளையைப் பொறுத்தது.

ஹும்...!

தொளதொளத்த ஸ்நான உடையை அவன் அணிந்தான். அதன் அகன்ற கையினால் கண்ணாடிமேல் படிந்திருந்த ஆவியைத்

துடைத்தான். தன்னை மீண்டும் அதில் கண்டுகொண்டதும் அவன் புன்னகை புரிந்தான்.

எனக்கு என்ன லாபம் என்று நீ கேட்கிறாய்? நான் என்னையே அடைவேன் என்பது உண்மையாகவே உனக்குப் புரியவில்லையா? கடவுளே, அது அற்பமான விஷயம் இல்லையே! ஹே...?—என்று நெர்ஸஸ் மாஷன் எண்ணினான்.

''வீணாக நீ விஷயங்களைக் குழப்புகிறாய்.'' பெண்ணின் குரல் மீண்டும் கேட்டது. ''எப்படியிருப்பினும் உன் மூதாதையர் என்னைச் சந்தித்தபோது சந்தேகங்களில் சிக்கவில்லை.''

நெர்ஸஸ் மாஷன் ஸ்நான உடையின் இடுப்புப் பட்டையை இறுக்கிக் கட்டினான். முன் அறைக்குள் வந்தான்—அவனது ஈரக் கால் தடங்கள் தரையில் பதிந்தன.

''இதற்கு என்ன சொல்கிறாய்?'' வீடு எச்சரிக்கையோடு விசாரித்தது.

நான் என்ன சொல்ல? முதலாவது, அவர்கள் சந்தேகம் கொள்ளவில்லை என்றால் அவர்கள் தங்கள் நாட்டில் பிறந்தார்கள், தங்கள் நாட்டில் வாழ்ந்தார்கள், தங்கள் நாட்டிலேயே செத்தார்கள் என்பது காரணமாகலாம். அங்கே வசித்தபடி அவர்கள் இரவு நேர வானவெளி முழுவதின் கீழும் பரந்து கிடக்கக் கூடிய தூரத்து நாடுகளைப்பற்றிக் கனவு கண்டிருக்கக்கூடும். நிச்சயம், அவர்கள் கனவு கண்டிருப்பார்கள். அதற்காக அவர்கள் வெப்பமான கோடை இரவுகளில் வீட்டின் மொட்டை மாடிகளில் படுத்து, மலைகளிலிருந்து வீசிய குளிர்ந்த காற்றை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். இரண்டாவதாக, ஒருவன் தன்னோடு தனியாக இருக்க வழி இல்லை என்கிறபோது இந்தக் கதை எவ்வளவு தூரம் போகும்?

—ஈரக் கால் தடங்கள் படுக்கை அறைக்குள் போயின. பிறகு ஒரு கால் தடத்தைச் சரியாக வாசல்படிமீது அரைவாசி ஆக்கி விட்டுக் கதவு அடைத்துக்கொண்டது. குதிகால் முன் அறையிலும் விரல்கள் படுக்கை அறையிலும் பதிந்தன.

நல்லது, கதவைச் சாத்தியதன் கருத்து என்ன? நெர்ஸஸ் மாஷன் அரைக்கண் மூடிச் சாய்ந்த நிலையில் நினைத்தான். எங்கிருந்து ஏன் வந்தாள் என்று எவரும் அறியாத பெண்ணின் முதுகந்தண்டுமீது தன் சுட்டு விரலை எச்சரிக்கையாக ஊர்ந்து செல்லும்படி செய்தான். பிறகு அவள் தோள் பட்டைகள்மேல் நகர வைத்தான். நீ கதவைச் சாத்திவிட்டாய். மெத்தவும் சரி. ஆனால் இந்த வீட்டில் நாம் எங்கே ஒளிய முடியும்? நாம் எப்படித்

தனியாக இருக்க இயலும்? நம்மோடு நாம் மட்டுமே இருந்து, ஒரே ஆத்மாவாய், ஒரே உடலாய், முதலும் முடிவுமாய் ஆவது எப்படிச் சாத்தியம்?

நான் மறதியில் ஆழ்ந்தேன். நீலப் பனிமூட்டங்களூடு பறந்தேன்: வெண்மையான சூரியனின் கதிர்களுக்கு இலக்காகி, வெப்பமான பாலை நிலங்கள் வழியே நடந்தேன்.

...ஆனால் உனது காதலின் கட்டற்ற கூச்சல் ஏன் பிறந்த தில்லை?

— அந்த மகோன்னத வேளையில், பனிப்படலம் திரித் திரியாய்க் கிழிபட்டிருக்கலாம்; மறதி அநித்தியமான ஆனந்தம் வழங்கியிருக்கலாம்; எனது பிரமைகள் வடிவம் பெற்று எங்களுக்கு ஆறுதல் தந்து இருக்கலாம்.

''நல்லது!'' என வீடு நெடுமூச்சு உயிர்த்தது. ''அப்படி யானால், உன்னை உனக்கே வைத்துக்கொள். நீயே சுதந்திரமாக உணர்ந்திரு, நெர்ஸஸ் மாஷன்'' என்று வீடு விசனத்தோடு கூறியது. ''நான் நிகழ்காலத்தில் கூரையை என் சுவர்கள்மேல் தாங்கி, அதை உறுதியாய்க் காப்பேன்.''

நல்லது, சரியே! இப்போது— இப்போது நான் விழிப்படை வேன். என் கண்கள் மூடியிருக்கின்றன. அதனால் நான் தூங்கு கிறேன் என்று ஆகாது. இதோ நான் விழித்துக்கொள்கிறேன். நான் உலகத்தையும் என்னையும் உணர்கிறேன். நான் அதிசய மான இரக்கத்தையும், வெகு இனிமையான தூய துக்கத்தையும் அனுபவிக்கிறேன். ஏனெனில், எங்கிருந்து ஏன் வந்தாள் என எவரும் அறியாத பெண்ணை நான் நினைக்கிறேன். அவள் பெயர்—? அவள் பெயர் என்ன? அவள் இப்போது சமையல் அறையில் இருக்கலாம்.

...நெர்ஸஸ் மாஷன் வீட்டைச் சுற்றி வருவதற்காக எழுந் தான். அவன் தேடிக்கொண்டிருந்தான். யாரை? — இல்லை. சமையல் அறையில் ஒருவரும் இல்லை. முன் அறையில் இருந்த கடியாரத்தின் ஊசல் சுறுசுறுப்பாக அப்படியும் இப்படியும் ஆடிக்கொண்டிருந்தது. அவனது வெறும் கால்களின்கீழ் பாய் சரசரத்தது. பயம் மீண்டும் அவனுள் புகுந்து, இரக்கத்துக்கும் துக்கத்துக்கும், ஏக்கத்துக்கும், கவலைக்கும் இடம் விட்டு வைக்கா மல் அவனோடு கலந்துவிட முயன்றது.

பயம் மறுபடியும் கர்வம் கொள்ள முயலுமானால், எனக்காக நடு அறையில் என்ன புதிய ஆச்சர்யம் காத்திருக்கிறது என்று பார்க்கலாமே என நெர்ஸஸ் மாஷன் நினைத்தான்.

மோரிக்...? ஷாவாஸ்ப்...? அந்தப் பெயர்கள் உச்சரிக்கப் பட்டு, அறையை நிரப்ப விரும்பவில்லை என்று அவன் உணர்ந் தான். அவை அவனை மூச்சடைக்கப் பண்ணுவதற்காக அவன் தொண்டையிலேயே நின்றன. அவன் நோய்வசப்படுவதை உணர்ந்தான். வாசல் சட்டத்தின்மீது சாய்ந்தான். பலமிழந்து முழங்கால்கள் மடங்குமானால், அவன் அமைதியாக வழுக்கிக் கீழே அமர்ந்து, கால்களைப் பரப்பிக்கொண்டு தரையில் உட்கார வசதியாக இருக்கும்.

மேஜை முன் அமர்ந்து, முந்திய நாள் இரவுச் சாப்பாட்டில் எஞ்சியிருந்ததை அவசரம் இல்லாமல் தின்றுகொண்டிருந்தவன் ஆர்னக் அல்ல.

அவனேதான்.

நெர்ஸஸ் மாஷன் ஆகிய தானேதான்.

ஆகவே நான் என்னுடேயே இருக்கிறேன் என்று அவன் எண்ணினான். நான் விரும்பினால், தொலை தூரத்தில் விடப் பட்டுள்ள எனது நாட்டை நினைத்து ஏங்கி நான் துயரப்படலாம். நான் விரும்பினால், எனது கிளைபடர்ந்த வில்லோ மரத்தையும் அசைந்தாடும் நாணலையும் வைத்திருக்கலாம். நான் விரும்பினால்...

நடு அறையில் மேஜை முன் தானாக இருந்த அவன் சட் டென்று தலையை வாசல் பக்கம் திருப்பினான். இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டான். விரல் இடுக்குகள் வழியே பார்த்தான், பார்த்துக்கொண்டே இருந்தான். மேலும் மேலும்...

நெர்ஸஸ் மாஷன் எச்சரிக்கையோடு கதவை மூடினான்.

நாம் எல்லோரும் எதையாவது விரும்புகிறோம். அடைத்த கதவின்மேல் தன் தோளைச் சாய்த்தவாறு அவன் எண்ணினான். மிகச் சிறிய விஷயம். தொலை தூரத்தில் விடப்பட்டுள்ள நமது பூர்வீக நாட்டில் அதை அடைவது சாத்தியமாகலாம்; அவை இருக்குமானால்... கிளைபடர்ந்த வில்லோ மரமும் ஆடி அசையும் நாணலும் இப்பவும் நீடித்திருந்தால்; அவை உயிரோடு இருக்கு மானால்!

...இரக்கமும் துக்கமும் கனத்துப் பெருகின... எனது ஆசை ஒரு புனித இசையாக மாறிக்கொண்டிருக்கிறது. எங்கிருந்து ஏன் வந்தாள் என்று எவரும் அறியாத அந்தப் பெண் ஜாக் கிரதையோடு சேகரித்த எனது கவலைகள் மீண்டும் என்னைக் கவிந்து சூழ்கின்றன.

பி. செய்துன்சியன்
(1938)

# ஒவ்வொரு பத்திலும் ஒருவர்

அவர்கள் சீக்கிரம் வருவார்கள்...

''புகைப்பதற்கு உன்னிடம் ஏதாவது இருக்கிறதா?''

''எனக்குப் பயமாக இருக்கிறது... நான் சாக விரும்ப வில்லை...''

''வாயை மூடு! ஒன்றும் நடவாது...''

''வீட்டில் பரண்மீது நான் ஒரு பாட்டில் விஸ்கி ஒளித்து வைத்திருக்கிறேன்... அதை யாரும் கவனிக்கவில்லை என்றால், நான் யுத்தத்துக்குப் பிறகு அதைக் குடிப்பேன்...''

''புகைப்பதற்கு உன்னிடம் ஏதாவது இருக்கிறதா? என்று கேட்டேன்...''

''நகரத்தில் செருப்பு தைக்கிறவன் ஒருவனை எனக்குத் தெரியும்... யுத்தத்திற்குப் பிறகு நான் போய் அவனிடம் சேர்ந்து தொழில் பழகுவேன்...''

''இப்போது என்ன நேரம்?...''

அந்தப் போர்வீரர்கள் முகச்சவரம் செய்திருக்கவில்லை. வருத்தமாக இருந்தார்கள். குறைவாகப் பேசினார்கள். ஆனால் சிலசமயம் அவர்கள் பேசியபோது, அதிக முக்கியமில்லாத மிகவும் சின்ன விஷயங்கள்பற்றிப் பேசினார்கள். ஆயினும் அனைவரும் கூர்ந்து கவனித்து ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டார்கள். அவர்கள் தங்களைப்பற்றிச் சொல்ல விரும்பினார்கள். ஒரு விஷயத்தையே பலமுறை திரும்பச் சொன்னார்கள். ஒருவரும் குறைகூறவில்லை. அதை முன்பே கேட்டாயிற்று என்று எவரும் சொல்லவில்லை. அவர்களுக்குச் சலிப்புத் தந்தாலும்கூட, அவர்கள் பொறுமையோடு தொடர்ந்து கேட்டார்கள். எனினும், சிலசமயம் சிலபேர் குறுக்கிட்டு அவர்களை வாய் மூடவைப்பதும் சேர்ந்தது.

''போதும்! ஒவ்வொரு தடவையும் நீ அதே விஷயத்தைத் தான் சொல்கிறாய்...'' உடனே மவுனம் நிலவும்.

அவர்கள் ஒருவரை ஒருவர் கேள்விக் குறிப்புடன் பார்ப்பார்கள். அவன் சொன்னதும் சரியாக இருக்கலாம். ஆனால், அவன் யார், எங்கே இருந்தான்? அவர்கள் எங்கும் தேடுவார்கள். ஆயினும் அவனைக் காணமாட்டார்கள். அவர்களிலேயே யாரேனும் ஒருவர் அதைச் சொல்லியிருக்கக்கூடும். ஏனென்றால் எல்லோரும் தங்கள் கதைகளைக் கூற விரும்பினார்கள். என்றாலும் அவர்களில் ஒருவன்தான் அதைச் சொல்லியிருக்க முடியும்.

ஆனால் மற்றப் போர்வீரன் தொடர்ந்து பேசுவான்.

"ஆடை அலமாரியை அறையின் மூலையில் நான் வைத்த போது (அறை பெரியது; வெளிச்சம் நிறைந்து சுத்தமாக இருந்தது), அதை வாசல் அருகில் வைத்தால் நன்றாக இருக்கும் என்று என் மனைவி சொன்னாள்..."

"ஆனால் வாசல் அருகில் வசதிக் குறைவாக இராதா?" என்று ஒருவன் ஆவலோடு கேட்பான்.

போர்வீரர்களின் இந்தக் குழு யுத்த முன்னணிக்குப் போய் சண்டையிட மறுத்து, சில நாட்கள் ஆகியிருந்தன. இப்போது அவர்கள் எதுவோ நிகழ்வதற்காக பயத்துடன் காத்திருந்தார்கள்.

"அவர்கள் வருகிறார்கள்!" எவனோ ஒருவன் பயந்துபோய் எதிர்பாராத விதத்தில் கத்தினான். அவன் அவர்களில் ஒருவன் தான். ஆனால், விசித்திரமாக, அச் சத்தம் மிகவும், ரொம்ப அதிகம், பழக்கமானதாகத் தோன்றியது...

தண்டனை விதிக்கும் படைப்பகுதி வந்தது.

"நேரே நில்லுங்கள்! சேர்ந்து வரிசையாக நில்லுங்கள்...!" கட்டளை பிறந்தது.

அவர்கள் எப்படியோ அணிவகுத்து நின்றார்கள்.

எவரும் எதைப்பற்றியும் சிந்திக்கவில்லை. அனைவர் கவனமும் தூரத்தில் ஒரு வயலில் சண்டை போட்டுக்கொண்டிருந்த இரண்டு நாய்களினால் மட்டுமே ஈர்க்கப்பட்டது. இருப்பினும், அவை சண்டையிட்டனவா அல்லது சும்மா விளையாடிக்கொண்டிருந்தனவா என்று நிர்ணயிப்பது சிரமமாக இருந்தது.

அதிகாரிகளில் ஒருவர் பேசத் தொடங்கினார். அவருடைய நீண்ட பேச்சில் ஒரே ஒரு விஷயத்தை மட்டுமே வீரர்கள் நினைவு கூர்ந்தார்கள். அவர்கள் துரோகிகளாகக் கருதப்பட்டனர்; இராணுவக் கட்டளைக்குக் கீழ்ப்படியாத குற்றத்துக்காக ஒவ்வொரு பத்துப்பேரிலும் ஒருவர் சுடப்படுவர்.

ஒருவரும் பயப்படவில்லை. ஒவ்வொரு பத்திலும் தான் ஒருவனாக இருப்பான் என்று எவரும் எண்ணவில்லை.

திடீரென்று நரம்புத் தளர்ச்சி உற்ற ஒருவனின் குரல் அமைதியைக் கிழித்து எழுந்தது.

''நான் சாக விரும்பவில்லை... அவர்கள் என்னைக் கட்டாயப் படுத்தி...''

இப்போதுதான் ஒவ்வொருவரும் புரிந்துகொண்டனர். ஒவ்வொரு பத்துப்பேரிலும் ஒருவன் சாவதற்கு இருந்தான். பத்தாவது, இருபதாவது, முப்பதாவது... மொத்தத்தில் அவர்கள் எழுபதுபேர். ஆகவே ஏழுபேர் சாகவேண்டும்.

வரிசையின் முதலாவது வீரன் தன்னிச்சையாகச் சிரித்தான். அவன் திருப்தியுடன் அதிகாரிகளை நோக்கினான். ஏனெனில், அவன்தான் முதல் நபர்; அதனால் அவர்களுக்கு நன்றி உடையவனாகத் தோன்றினான். அதிகாரிகளில் ஒருவர் ஒரு சினிமா நடிகர்போல் காணப்பட்டார். எனவே, அவன் தன் கைகளைப் பைகளுக்குள் நுழைத்துக்கொண்டு சந்தோஷமாக நிமிர்ந்து நின்றான்.

இராணுவக் கட்டளையைச் செயல்படுத்தமாட்டோம் எனத் துணிவதற்கு அவர்கள் யார்? அவர்கள் ஒன்றுமற்றவர்கள், சாதாரணப் போர்வீரர்கள். அவர்கள் தண்டிக்கப்படத்தான் வேண்டும். ஆனால், அந்தச் செயலுக்குத் திட்டமிட்டவர்களில் தானும் ஒருவன் என்பதை அவன் நினைத்துக்கொண்டான். கலக்கமுற்று அவன் வெட்கத்துடன் தன் கைகளைப் பைகளிலிருந்து வெளியே இழுத்தான். தரையையே பார்க்கலானான். அந்த அதிகாரி உண்மையாகவே ஒரு சினிமா நடிகர்போல் தோன்றினாரா என்று சிந்தித்தான்.

இரண்டாவது, மூன்றாவது வீரர்களால் தாங்கள் சாக வேண்டாம் என்று நம்ப முடியவில்லை. நிறுத்தாமல் அவர்கள் எண்ணினார்கள். ஒன்று, இரண்டு... அவன் இரண்டாவது நபர்... ஒன்று... இரண்டு ... மூன்று. அவன் மூன்றாவது ஆள். இருந்த போதிலும், அவர்கள் காரணம் இல்லாமலே முதலாவது நபர் மீது பொறாமை கொண்டார்கள். அதே நிலைமைதான் என்றாலும் கூட, முதலாவது-இரண்டாவது-மூன்றாவது நபர்கள் சுடப்படமாட்டார்கள் என்றாலும், அவர்கள் அவனைப் பார்த்துப் பொறாமைப்பட்டார்கள். அவன் முதலாவதாக, அவர்கள் அனைவரிலும் முதலாவதாக இருந்த காரணத்துக்காகவே வெறுமனே பொறாமைப்பட்டார்கள்.

ஆனால், இதர வீரர்கள் காத்திருந்தார்கள். ஏனென்றால் அவர்களுடைய எண்களை அவர்கள் அறியவில்லை. அவர்கள் உரத்து எண்ண ஆரம்பித்தனர். அவர்கள் மிக மெதுவாகப் பேசினார்கள். முதலாவது வீரன்கூடத் தனது சொந்தக் குரலைக் கேட்டபோது பயந்துவிட்டான்.

''ஒன்று...''

ஒன்பதாவது வீரன் வெளிறினான்; ஏனெனில் அவன் பத்தாவதுக்கு மிக அருகாக நின்றுகொண்டிருந்தான். ஒன்பது, பத்து என்ற எண்களுக்கிடையில் மிக அற்ப வித்தியாசமே இருந்தது. அந்தக் காரணத்தினாலேயே எதுவோ பத்திலிருந்து ஒன்பதின் பங்கில் விழுந்தது. அவன் ஒன்பதிலிருந்து பத்து வரை எண்ணும்படி தன்னையே வற்புறுத்தினான்... ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து ...

நல்லது. எவ்வாறாயினும், ஒரு எண் வித்தியாசம் சின்ன விஷயமல்ல. வித்தியாசம் எதுவும் இல்லை என்றால் ஒன்பதாவது எண் இருக்கவே இருக்காது. அவன் தனது கண்டு பிடிப்பைக் கருதிப் புன்னகைத்தான்.

வீரர்களின் மெதுவான குரல்களை நன்கு கேட்க முடிந்தது.

''பதினாறு ...''

''பதினேழு ..''

''பதினெட்டு ..''

''பத்தொன்பது ...''

பத்தொன்பதாவது நபர் வெட்கமடைந்தான். ஏனெனில் அவன் இருபதாவதுமீது இரக்கம் கொண்டான். அவன் அவர்கள் குடும்பத்துக்கு ஆறுதல் கூறிக் கடிதம் எழுதவேண்டியிருக்கும்... அப்புறம், யுத்தத்திற்குப் பின் அவன் போய் தன்னால் இயன்ற உதவி புரிவதற்காக அவர்களைப் பார்க்க வேண்டியது அவசியமாகும்... எல்லாம் சந்தோஷம் காரணமாகத்தான்... தான் இருபதாவது இல்லை, தான் சாகவேண்டியதில்லை என்பதால் அவன் சந்தோஷப்பட்டான்... மனிதர்கள் எவ்வளவு அற்பர்களாக, எவ்வளவு கோழைகளாக இருந்தார்கள் என்று அவன் புரிந்துகொண்டான். தான் எப்போதும் ஒரு யோக்கியமான மனிதனாக இருந்ததாக அவன் எண்ணினான். இப்போது வாழ்விலேயே முதல் தடவையாக அவன் தன்னையே கண்டுகொண்டான். ஆனால் அவன் ஏன் தன்னைப்பற்றித் தானே அவ்வளவு மோசமாக எண்ண அனுமதித்தான்? மறுபடியும் சந்தோஷத்தினால்தான்...

''நான் சாக விரும்பவில்லை...'' பயந்த குரல் மறுபடியும் கேட்டது. மனிதர்கள் மெதுவாக எண்ணிக்கொண்டிருந் தார்கள்.

''இருபத்தாறு...''

''இருபத்தேழு...''

''இருபத்தெட்டு...''

''இருபத்தொன்பது...''

இருபத்தொன்பது சிரித்தான்.

அவன் வாழ்நாள் முழுவதும் கடவுள் நம்பிக்கை உடைய வனாக இருந்தான். அவன் எப்போதும் தனது ஜபங்களைச் சொன்னான். ஞாயிறுதோறும் பிள்ளைகளைத் தேவாலயத்துக்கு அழைத்துச் சென்றான். அவர்கள் ஜபங்களை மனனம் பண்ணும்படி செய்தான். குழந்தைகளைத் திருப்திப்படுத்த அவன் அவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வாங்கித் தருவது வழக்கம். அவனும் அவன் மனைவியும் முதல் முறை ஆலயத்தில்தான் சந்தித்தார்கள்; கிறிஸ்துவின் படத்துக்குக் கீழேதான் ஒருவரை ஒருவர் கண்டு புன்முறுவல் பூத்தார்கள். பிறகு ஒருநாள் அவர்கள் கைகளைப் பற்றிக்கொண்டார்கள்; முத்தமிட்டார்கள். கிறிஸ்துநாதர் பார்த்ததாகவும் புன்னகை புரிந்ததாகவும் அவர்களுக்குத் தோன்றியது. அதனால்தான் அவன் பங்கிற்கு இருபத்தொன்பது வந்திருக்கிறது. ஆரம்பம் முதலே அவன் நிச்சயமாக அறிந்திருந் தான். அதை அவன் மனப்பூர்வமாக நம்பினான். அதனால் ஆனந்தத்தோடு கூச்சலிட விரும்பினான்.

''சகோதரர்களே, அவரை நம்புங்கள், அவர் உங்களைக் காப்பாற்றுவார்!''

ஆனால், கடவுளால் செய்யப்படுகிற நன்மை அதிகம் தோன்றவில்லை. ஏனெனில், இப்போது மிகச் சிலரே கடவுளிடம் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஆகையால் அதிகமாகக் கேட்க அவனுக்கு உரிமை உண்டு... நான் யுத்தத்திலிருந்து சுகமாகவும் ஆரோக்கியமாகவும் வீடு திரும்ப வேண்டும்... திரும்பிப் போனதும் நல்ல வேலை ஒன்றை நான் தேடிக்கொள் வேன்... பணக்காரன் ஆவேன்... வயது முதிர்ந்த பின் சாவேன்... மிகப் பல வெள்ளைத் தாள்கள் அடைவேன்.... அவை அனைத் துக்கும் பிரதியாக நான் உன்னை நம்புவேன்... உன்னைப் பிரார்த் திப்பேன்... இதோ எனக்கு நானே சிலுவைக்குறி இடுகிறேன்... தந்தை, திருக்குமாரன், பரிசுத்த ஆவி பெயரால்... நினைவு வை, நினைவு வை. இப்போது மிகச் சொற்பமானவர்களே உன்னை நம்புகிறார்கள்... ஆமென்...

''முப்பத்தாறு...''

''முப்பத்தேழு...''

''முப்பத்தெட்டு...''

''முப்பத்தொன்பது...''

தான் நாற்பதைவிட ஒன்று குறைவாக இருந்ததால் முப்பத்தொன்பது அமைதி இழந்து தவித்தான். நாற்பதாவது அவனுடைய நெருங்கிய நண்பன். அவர்கள் சேர்ந்தே பள்ளிக்கூடம் போனார்கள்! சேர்ந்து போரிட்டார்கள், சேர்ந்து கஷ்டப்பட்டார்கள். இப்போதுகூட அவர்கள் அணிவகுப்பில் சேர்ந்து அருகருகே நின்றார்கள். அவர்கள் நண்பர்களாக இல்லாதிருந்தால் வரிசையில் சேர்ந்து நின்றிருக்கமாட்டார்கள்; ஒருவேளை அவன் நண்பன் நாற்பதாவது நபராக வராதிருந்திருக்கலாம். அவன் அவர்கள் நட்பை எண்ணிக் குழப்பம் அடைந்தான். அவன் செய்த உதவிகள் எல்லாம் உள்நோக்கம் கொண்டு செய்ததாகவே இப்போது அவனுக்குத் தோன்றியது. அவன் தன் நண்பன்மீது பொழிந்த கருணைச் செயல்கள், முன்யோசனை அனைத்துக்காகவும் வெட்கப்பட்டான்.

திடீரென்று அவன் சந்தோஷத்தால் சிரித்தான். அதனால் அமைதியாக மூச்சுவிட்டான். அவன் தனது நியாயத்தைக் கண்டுகொண்டான். ஒருவரும் அவனைக் குறைகூற முடியாது. ஒருமுறை தான் மோசமாக நடந்ததை அவன் நினைத்தான்... அவன் தன் நண்பனுக்கு உண்மையானவனாகவே இருந்தான். ஒருமுறை, வேலை இல்லாதிருந்தபோது, ஒரு இடத்தில் வேலை காலி என்று அவன் கேள்வியுற்றான். அதை நண்பனிடம் சொல்லவில்லை. அவன் மட்டும் போனான். ஆனால் பிற்பாடு அவன் அதற்காக வருந்தினான்; தனது செயலுக்காக வெட்கப்பட்டான். அதை நினைத்ததும் ஒருகணம் அவன் கலவரம் அடைந்தான். அவன் திரும்பவும் நல்ல நண்பன் ஆகிவிட்டான். அவன் சும்மா தன் வாழ்வில் ஒரே ஒரு தவறு செய்த மனிதன். மிகுந்த பிரயாசையோடு அவன் அந்த எண்ணத்தை மறுத்து ஒதுக்கினான். அதெல்லாம் முக்கியமற்றவை எனக் கருதினான். முக்கியம் என்னவென்றால், அவன் அதைச் செய்திருந்தான். இங்கே கூடி நிற்கும் மனிதர்கள் அதை அறிய நேர்ந்தால், அவன் ஒரு அயோக்கியன் என்றே சொல்லுவார்கள். அவன் மீண்டும் அமைதி அடைந்தான். அவன் ஒரு கெட்ட நண்பனாக, மோசமான மனிதனாக இருந்திருக்கிறான்.

பயங்கரமான குழப்பத்திடையே அதுதான் மாபெரும் நியாயமாயிற்று.

''நாற்பத்தாறு...''

''நாற்பத்தேழு ..''

''நாற்பத்தெட்டு...''

''நாற்பத்தொன்பது...''

மரணத்திலிருந்து காப்பாற்றப்பட்டதில், நாற்பத்தொன்பது வியப்படைந்ததாகத் தோன்றவில்லை. ஆரம்பத்திலிருந்தே அவன் அதுபற்றி நிச்சயம்கொண்டிருந்தான். அவன் ஒரு நாணயமான மனிதனாக இருந்ததால் அவன் சாக வேண்டாம்.

திடீரென்று அதிகாரியின் குரல் கேட்டது.

''நிறுத்து...! ஒரு தவறு நேர்ந்திருக்கிறது... திரும்பவும் நாற்பதிலிருந்து எண்ணு...!''

தவறாகப் புரிந்துகொண்டதன் பயனாக. ஐம்பதாவது நபர் இடம் மாறி நாற்பத்தொன்பது ஆகியிருந்தான்! ஐம்பத்தொன்று ஐம்பது ஆகியிருந்தான்.

அதோ அப்படித்தான் அவை அமையவேண்டும்! அவன் சாகத்தான் வேண்டும். ஆரம்பம் முதலே அதை அவன் அறிவான். அவன் ஒரு யோக்கியமான மனிதனாக இருந்ததால், அவன் சாக வேண்டியதுதான்...

முந்திய ஐம்பது—இப்போது ஐம்பத்து ஒன்று—மற்றவனை அறிந்தே இராதவன், வெட்கத்தால் முகம் சிவந்தான். அனைத்துக்கும் தன்னையே குற்றம் சாட்டவேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. அவன் முணுமுணுத்தான்.

''நான்... நான் குற்றவாளி இல்லை...''

ஆனால் அது மிகச் சிறியது. அதுகூடப் பொய்தான். அந்த நேரத்தில், மிகச் சாதாரணமான உண்மைகூட ஒரு குற்றமாய், அவனது அண்டையில் நின்றவனைப் பொறுத்தமட்டில் ஒரு ஏளனமாகவே தோன்றியது.

அவன் இன்னும் ஏதோ முனகினான். இது மிகவும் உண்மையானதாக ஒலித்தது.

''ஒருவேளை... ஒரு வேளை நான்கூடச் சாகத்தான் வேண்டும்... யுத்தத்திலிருந்து சொற்பப் பேர்களே திரும்புகிறார்கள்...''

அதுதான் ஒரே ஒரு மகாப் பெரிய நியாயம் ஆயிற்று.

''ஐம்பத்தாறு ..''

''ஐம்பத்தேழு...''

"ஐம்பத்தெட்டு..."

"ஐம்பத்தொன்பது..."

"நான் சாக விரும்பவில்லை... நான் கட்டாயப்படுத்தப் பட்டேன்..." அறுபதாவது நபரின் பழக்கமான, நரம்புத் தளர்ச்சி உற்ற குரல் கேட்டது. அவனிடம் யாரும் இரக்கம் கொள்ள வில்லை.

அவர்கள் எழுபதாவது நபரிடம் இரக்கம் காட்டினார்கள். அதுவும் ஒரு விஷயத்துக்காகத்தான்; பத்தாவது, இருபதாவது, முப்பதாவது, அவர்கள் எல்லோருமே, தாங்கள் எண்ணப்படுகிற வரையில், நாம் சாகமாட்டோம் என்றே நம்பியிருந்தார்கள்; ஒவ்வொரு பத்தில் ஒருவராக அவர்கள் இருக்கமாட்டார்கள் என்று நம்பினார்கள். ஆனால், எழுபதாவது, அந்தக் கடைசிப் போர்வீரன் நெடுநேரமாக அதை நன்கு அறிந்திருந்தான்.

# ஆசிரியர்கள்பற்றிய குறிப்புகள்

## ஹோவன்னஸ் டூமேனியன்
*(1869—1923)*

டூமேனியன் ஆர்மேனியாவில், திசெஹ் என்ற கிராமத்தில், கிராம மதகுரு குடும்பம் ஒன்றில் பிறந்தார். திபிலிஸியில் ஒரு கல்விக்கூடத்தில் அவர் படித்தார். ஆனால் பிழைப்புக்காக உழைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டதால் அவர் படிப்பை நிறுத்த நேரிட்டது.

1890-ல் டூமேனியனின் முதலாவது கவிதைத் தொகுதி மாஸ்கோவில் பிரசுரமாயிற்று. டூமேனியனின் படைப்பாற்றல் ஆர்மேனிய மக்களுக்குப் பெருமை தருவதாகக் கருதப்படுகிறது. அவருடைய கவிதைகள் ''அனுஷ்'', ''அஹ்தமார்'', ''பர்வானு'', ''தும்காபெர்தாவைப் பிடித்தது'', ''மாரோ'', ''டேவிட் ஸாசன்கி'' ஆகியவை மிகப் பிரபலமானவை. அவை ஆர்மேனிய மக்களால் மட்டுமன்றி, அனைத்து சோவியத் மக்களாலும் விரும்பப்படுகின்றன.

ஹோவன்னஸ் டூமேனியன் குழந்தைகளுக்காகவும் எழுதினார். இவை மிக எளிமையாகவும் தெளிவாகவும் அமைந்திருக்கின்றன.

## அவெதிக் இஸாகியன்
*(1875—1957)*

இஸாகியன் லெனினகான் அருகில் உள்ள காஸராபாத் என்ற கிராமத்தில் பிறந்தார். அலெக்ஸாண்ட்ராபோலில் இருக்கிற ஆர்மேனியன் மதஇயல் பள்ளியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். எக்மியாத்ஸினில் உள்ள கல்விச்சாலையில் தனது பயிற்சியை முடித்துக்கொண்டு, இஸாகியன் மேல் படிப்புக்காக வெளிநாடு சென்றார். லீப்ஸிக் யுனிவர்சிட்டியில் சேர்ந்து, தத்துவம், மானிட இயல், மனித இன வரலாறு ஆகியவை சம்பந்தமான சொற்பொழிவுகளைக் கேட்டுத் தேர்ந்தார். உலக இலக்கியங்களையும் பயின்றார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் இஸாகியன் கிரீஸிலும் இத்தாலியிலும் அதிகம் சுற்றுப்பயணம் செய்தார். 1895-ல் தாய்நாடு திரும்பினார். 1911-ல் அவர் மறுபடியும் அயல்நாடு சென்றார். 1926 வரை அவர் திரும்பி வரவேயில்லை. 1926-ல் அவர் சோவியத் ஆர்மேனியாவுக்கு வந்தார்.

அவருடைய முதல் கவிதைத் தொகுதியான ''பாடல்களும் காயங்களும்'' 1895-ல் பிரசுரமாயிற்று. அவரது செய்யுள்கள், சிறு பாடல்கள், கவிதைகள், சிறு கதைகள், தேவதைக் கதைகள், விஷேசமாக அவருடைய புகழ்பெற்ற கவிதையான ''அபுல்-ஆலா-மாரி'' ஆகியவை அவருக்கு உலகப் புகழ் பெற்றுத் தந்தன.

## தெரெனிக் தெமிர்ச்யன்

*(1877—1956)*

தெமிர்ச்யன் (ஜியார்ஜியன் சோவியத் குடியரசில் இருக்கும்) அஹால்காலாகி நகரில் பிறந்தார். ஜெனிவா யுனிவர்சிட்டியில் இயற்கை விஞ்ஞானப் பிரிவில் கற்றுத் தேர்ந்தார். அதே சமயம் இலக்கியம், ஆசிரிய இயல் சம்பந்தமான சொற்பொழிவு களிலும் கலந்து கொண்டார். ''கான்ஸர்வேடாய்ர்''-ல் பயின்றார். தெமிர்ச்யனின் படைப்பிலக்கியம் சோவியத் ஆர்மேனிய உரைநடை, நாடகம் ஆகியவற்றின் வளர்ச்சியில் மிகுந்த தாக்கம் ஏற்படுத்தியிருக்கிறது.

முக்கியப் படைப்புகள் :

''வாஸாக்'', ''விசாரணை'' (''பணக்கார ஓவ்நாம்''), ''தீரன் நாஸார்'', ''என் சொந்த நாடு'' (நாடகங்கள்).

''வார்தாஞன்க்'' (நாவல்).

சில சிறுகதைத் தொகுப்புகள்.

## ஸ்டீபன் ஸோரியன்

*(1890—1967)*

ஸோரியன் கிரோவோகன் கிராமத்தில் பிறந்தார். ஸோரியனின் படைப்புகள் ஆழ்ந்த தேசியப் பிடிப்பும், மனித நேயமும் கொண்டவை. ஆர்மேனிய இலக்கிய வரலாற்றில் அவை முக்கியமான ஒரு இடம் வகிக்கின்றன.

முக்கியப் படைப்புகள் :

''நூலகத்திலிருந்து வந்த பெண்'' (கதை).

''ஒரு வாழ்க்கையின் கதை'', ''பாப் அரசன்'', ''அமிர்யன் குடும்பம்'' (நாவல்கள்).

''வாராஸ்தத்'' (மூன்று பாகங்கள் கொண்ட வரலாறு).

## வாகன் டோடோவென்ட்ஸ்
*(1893—1938)*

டோடோவென்ட்ஸ் மேற்கு ஆர்மேனியாவில், மெஸ்ரே நகரில் பிறந்தார். பின்னர் அவர் அமெரிக்கா சென்றார். அமெரிக்காவில் விஸ்கான்ஸின் யுனிவர்சிட்டியில் வரலாற்றுப் பகுதியில் கற்றுத்தேர்ந்தார்.

1922-ல் அவர் சோவியத் ஆர்மேனியாவுக்குத் திரும்பி வந்தார்.

முக்கியப் படைப்புகள் :

''டோனே'' (கதை); ''அமெரிக்கா'' முதலிய பல சிறு கதைகள். ''அஸாதுரும் கிளியோபாட்ராவும் (கதை); ''பாகு'' (நாவல்); ''புராதன ரோமாபுரிப் பாதையின் வாழ்வு'' (கதை); ''புருக்கள்'', ''நீல மலர்கள்'' (கதைகள்).

## அக்செல் பாகுன்ட்ஸ்
*(1899—1937)*

பாகுன்ட்ஸ் கோரிஸ் நகரில் பிறந்தார். திபிலிஸி யுனிவர்சிட்டியிலும், கார்கோவ் விவசாயக் கழகத்திலும் கல்வி பயின்றார்.

சிறந்த மனிதாபிமானக் கலைஞராகவும், சர்வதேச சகோதரத்துவம் என்ற கருத்தின் தீவிர ஆதரவாளர் என்றும் ஆர்மேனிய இலக்கிய வரலாற்றில் அக்செல் இடம் பெற்றிருக்கிறார்.

முக்கியப் படைப்புகள் :

''ஹோானர் என்ற பெண்'' எனும் சிறுகதைத் தொகுதி.

''சிறுகதைகளும் கட்டுக்கதைகளும்.''

''ஓவான்டன் படையெடுப்பு'' மற்றும் ''கார்ம்கார்''—நாவல்.

## வாக்தாங் அஞன்யன்

(1905— )

போகோஸ்-கிலிஸா என்ற கிராமத்தில், விவசாயக் குடும்பம் ஒன்றில் அஞன்யன் பிறந்தார். கிராமப் பள்ளியில் கற்றுத் தேர்ந்தபின், 1915-ல் திலித்ஸான்ஸ் வட்டாரப்பள்ளியில் சேர்ந்தார். அவர் எழுதிய ஒரு கட்டுரை ராஜத்துரோகமானது என்று பரிசோதகர்கள் குற்றம் சாட்டியதால் அவர் 'ஜிம்னேஸியத்'தில் சேர்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. இந்தக் கட்டுரை பின்னர் ''நொண்டிடாக்கோ'' என்ற தலைப்பில் பிரசுரம் பெற்றது.

அவரது முக்கியப் படைப்புகள் :

''வயலட் சிகரங்கள்மீது'', ''குகை மனிதர்கள்'' ''வேட்டையின்போது'' (சிறுகதைத் தொகுப்புகள்).

''நரக வாசலின் மர்மம்'' (வீரசாகசக் கதை).

இதர நூல்கள் :

''போருக்குப் பின்'', ''வேட்டைக்காரன் கதைகள்'', ''பண்ணையின் மக்கள்'', ''ஸெவான் ஏரிக்கரையில்'', ''சிறுத்தை கார்ஜின் கைதிகள்'', ''ஆர்மேனியாவின் மிருக உலகம்'' (5 பாகங்கள்).

## ஸெரோ கான்ஸாடியன்

(1915— )

கான்ஸாடியன் கோரிஸ் நகரில் பிறந்தார். கோரிஸ் நகரின் செகண்டரி ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் கற்று, 1934-ல் தேர்ச்சி பெற்றார். பின்னர் பாகு நகரில் உள்ள ஆசிரியர் கழகத்தில் வரலாற்றுப் பிரிவில் பயின்றார்.

அவரது முக்கியப் படைப்புகள் :

''நமது படையின் மக்கள்'', ''நிலம்'', ''காட்ஸாரன்'', ''மிடார் ஸ்பாராபெட்'', ''பழங்காலம்பற்றிய புத்தகம்'' (நாவல்கள்).

''சிகப்பு லில்லிப் பூக்கள்'' (சிறுகதை, குறுநாவல் தொகுதி).

## காஷாக் ஜியுல்நஸாரியன்
(1918— )

ஜியுல்நஸாரியன் ஏரெவானில் பிறந்தார். ஏரெவான் யுனிவர்சிட்டி மொழி இயல் பகுதியில் தேர்ச்சி பெற்றதும் அவர் மாபெரும் தேசிய யுத்தத்தில் கலந்து போராடினர். யுத்தத்துக்குப் பிறகு அவர் இலக்கியக் கழகத்தில் பணிபுரிய வந்தார்.

அங்கு ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தபோதே அவர் இலக்கிய முயற்சிகளிலும் ஈடுபட்டார்.

முக்கியப் படைப்புகள் :

''வயல்வெளிகளின் விருந்தாளிகளும் வீட்டுக்காரர்களும்'', ''என்ன என்று யார் அறிவார்'', ''காலை வணக்கம், அம்மா'' (சிறுகதைத் தொகுப்புகள்).

''நகரத்தின் காலை நேரம்'', ''நண்பகல்'', ''தங்கம் தோண்டுகிறவர்கள்'' (கதைகள்).

''என்ராணு'' (நாவல்).

## அபிக் அவாகியன்
(1919— )

அவாகியன் டெஹ்ரானில் பிறந்தார். 1946-ல் சோவியத் ஆர்மேனியாவில் வசிக்க வந்து, எரெவான் யுனிவர்சிட்டியின் மொழி இயல் பிரிவில் சேர்ந்தார்.

முக்கியப் படைப்புகள் :

''சுட்டெரிக்கும் நிலம்'', ''நாஸெலி டாரியன்'' (நாவல்கள்).

''நாளை'' (கதை).

''ஷாஹ்ரே ஷாத், ஒரு உல்லாச நகரம்'' (சிறுகதைத் தொகுதி).

## ராபேல் ஆராம்யன்
*(1921—1978)*

ஆராம்யன் எக்மியாத்ஸினில் பிறந்தார். ஏரெவான் அரசு யுனிவர்சிட்டியில் மொழி இயல் பகுதியில் படித்தார்.

முக்கியப் படைப்புகள் :

''ரூபின்யன் சகோதரர்கள்'' (நாவல்).

''சேணம் இல்லாத குதிரைகள்'', ''ஒரு இறந்த நகரத்தின் சுவர்களின் கீழே'' (சிறுகதைத் தொகுப்புகள்).

## எம்கிர்திச் சார்கிஸ்யன்
*(1924— )*

சார்கிஸ்யன் (ஜியார்ஜியன் சோவியத் சோஷலிசக் குடியரசைச் சேர்ந்த) அஹால்காலாகியில், ஒரு குமாஸ்தா குடும்பத்தில் பிறந்தார். ஏரெவான் ஆசிரிய இயல் கழகத்தில் மொழி இயல் பிரிவில் கற்றுத் தேர்ந்தார்.

அவர் மாணவனாக இருந்தபோதே எழுத ஆரம்பித்தார். அவரது முதலாவது புத்தகம் ''பாடல்கள்'' 1957-ல் பிரசுரமாயிற்று.

முக்கியப் படைப்புகள் :

''நெருப்பின்கீழ் வாழ்க்கை'' (சிறுகதைத் தொகுப்பு).

''விதியால் தண்டிக்கப்பட்டவர்கள்'', ''நீங்கள் பெரிதும் மாறிவிட்டீர்கள், பெண்களே'' (2 கதைகள்).

''புனித அன்னை திருஉருவத்தின் முன்னே'' (நாவல்களின் தொகுப்பு).

''போர்வீரர்களும் காதலர்களும்'', ''சார்ஜன்ட் காரோ'' (போர்பற்றிய நூல்கள்).

## அகாசி ஐவாசியன்
(1925— )

ஐவாசியன் (ஜியார்ஜியன் சோவியத் குடியரசைச் சேர்ந்த) அபாஸ்துமன் நகரில் பிறந்தார். திபிலிஸி கலைக்கழகத்திலும், திபிலிஸி யுனிவர்சிட்டியின் மொழி இயல் பகுதியிலும் கல்வி கற்ருர்.

முக்கியப் படைப்புகள் :

''மழை'', ''குடும்பத்தின் தந்தை'', ''பிரதான நிகழ்ச்சி'', ''ஸெய்னியர் மார்டிரோசின் வீரச் செயல்கள்'' (சிறுகதைத் தொகுப்புகள்).

''ஆர்மென் பிலிம்'' ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்ட ''முக்கோணம்'', ''ஹாடபல்லா'', ''தந்தை'', ''பாக்தஸார் கல்யாணம் செய்துகொள்ளப்போகிருன்'' ஆகிய திரைப்படங்களுக்கான கதை வசனமும் அவர் எழுதியிருக்கிருர்.

## வார்த்ஜெஸ் பெத்ரோசியன்
(1932— )

பெத்ரோசியன் ஆஷ்தாரக் நகரில் பிறந்தார். 1954-ல் ஏரெவான் அரசு யுனிவர்சிட்டியின் மொழி இயல் பகுதியில் பத்திரிகையாளர் பிரிவில் கற்றுத் தேர்ந்தார்.

முக்கியப் படைப்புகள் :

''ஒரு மனிதனைப்பற்றிய சிறு பாட்டு'' (பாடல் தொகுப்பு). ''கடைசி இரவு'', ''முடிவு பெருத சித்திரங்கள்'', ''நகரின் பாதி திறந்த சன்னல்கள்'', ''ஆர்மேனியன் சித்திரங்கள்'', ''வாழ்ந்த வருஷங்களும் வாழாத வருஷங்களும்'', ''குழந்தைப் பருவத்தின் பாதையோர நிலையங்களிலிருந்து எழுதிய கடிதங்கள்'', ''எவருக்கும் சொந்தமான மருந்துச்சாலை'', ''அளவில்லாத அளவுகளின் சமநிலை'' (கதைகள், சிறுகதைகள் கொண்ட தொகுப்புகள்).

அவருடைய ''வெளியே புறப்படுதல்'' என்ற கதையைத் தழுவி ''கல் கிலோமீட்டர்கள்'' எனும் திரைப்படம் ''மாஸ்கோ பிலிம்'' ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்டது, ''ஹிப்போகிரட்டின் இந்தக் கனமான தொப்பி'' என்ற அவரது நாடகம் ஏரெவான் அகாடமிக் தியேட்டரால் அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

## முஷேக் கால்ஷோயன்

*(1933— )*

கால்ஷோயன் காட்ரானூர் எனும் ஆர்மேனிய கிராமத்தில் பிறந்தார். ஏரெவான் விவசாயக் கழகத்திலும், பிறகு மாஸ் கோவில் உயர்தர இலக்கிய வகுப்புகளிலும் கற்றுத் தேர்ந்தார்.

முக்கியப் படைப்புகள் :

''த்ஸோரி மீரோ'' (கதை); ''கற்கள் புஷ்பிக்கின்றன'' (கட்டுரைகள்) மற்றும் சிறுகதைகளின் தொகுப்பு; ''தி க்ருஸி பிள்'' (உலோகங்களை உருக்குவதற்கான மண் பாத்திரம்) நாவல்.

## ஹ்ரான்ட் மாடவோசியன்

*(1933— )*

மாடவோசியன் ஆர்மேனியாவில் அஹ்னித்ஸார் கிராமத்தில் பிறந்தார்.

அவர் 1962-ல், எச். அபய்யன் பெயரால் நிறுவப்பட்டுள்ள ஏரெவான் ஆசிரிய இயல் கழகத்தில் வரலாறும் மொழி இயலும் கற்றுத் தேர்ந்தார்.

1967-ல் மாஸ்கோவில் திரைக்கதை வசனம் எழுதும் உயர்தரப் பயிற்சியை முடித்தார்.

முக்கியப் படைப்புகள் :

''நாமும் நமது மலைகளும்'' என்ற கதை.

''ஆகஸ்ட்'', ''மரங்கள்'', ''ஓட்டம்'' ஆகிய மூன்று சிறு கதைத் தொகுப்புகள்.

''ஆர்மென் பிலிம்'' ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்ட ''நாமும் நமது மலைகளும்'', ''இலையுதிர்காலக் கதிரவன்'' என்ற திரைப்படங்களுக்கு ஹ்ரான்ட் மாடவோசியன் கதை வசனம் எழுதியிருக்கிறார்.

## காரென் சிமோனியன்
(1936—        )

சிமோனியன் ஏரெவானில் பிறந்தார். 1958-ல் பாலி டெக்னிக் இன்ஸ்டிடியூட்டில் இயந்திர நிர்மாணப் பகுதியில் கற்றுத் தேர்ந்தார். ஆனால் பின்னர் அவர் இலக்கியத்தில் ஈடுபட்டார்.

அவரது முக்கியப் படைப்புகள் :

''மனவிருப்பம்'', ''போய் வா, நத்தானியேல்'', ''மருந்து விற்பன்னர் நெர்சன் பாட்சன்''.

''உங்கள் கனவு நனவாகட்டும்'' என்ற அவரது நாடகம் ஏரெவான் தியேட்டரில் இளைஞர்களுக்காக அரங்கேற்றப் பட்டது.

''ஆர்மென் பிலிம்'' ஸ்டுடியோவில் தயாரான சில திரைப் படங்களுக்கும் அவர் கதை வசனம் எழுதியிருக்கிறார்.

## பெர்ச் செய்துன்சியன்
(1938—        )

செய்துன்சியன் எகிப்தில், அலெக்ஸாண்டிரியா நகரில் பிறந்தார். 1948-ல் அவர் குடும்பம் சோவியத் ஆர்மேனியா வுக்குக் குடியேறியது.

1963-ல் பெர்ச் செய்துன்சியன் பியாதி-கோர்ஸ்க் நகரில் அயல்மொழிக் கழகத்தில் கற்றுத்தேர்ந்தார். பிறகு மாஸ்கோவில் திரைக்கதை வசனம் எழுதும் உயர் பயிற்சி பெற்றார்.

முக்கியப் படைப்புகள் :

''அவன் நண்பன்'', ''எங்கள் அண்டைவீட்டாரின் குரல் கள்'', ''பாரிசுக்காக'' (சிறுகதைத் தொகுப்புகள்). ''எங்களுக்கு பிறகு'' (ஒரு கதை). ''க்ளாட் ராபர்ட் ஐசர்லி'' (நாவல்).

செய்துன்சியன் எழுதிய ''அழிக்கப்பட்ட நகரத்தின் கதை'', ''மிகவும் துக்ககரமான மனிதன்'' என்ற நாடகங்கள் ஏரெவான் நாடக அரங்குகளில் நடிக்கப்படுகின்றன.

''ஆர்மென் பிலிம்'' ஸ்டுடியோவில் தயாரான சில திரைப் படங்களுக்கு அவர் கதை வசனம் எழுதியிருக்கிறார்.

இந்திய மக்களுக்கும் ஆர்மேனிய மக்களுக்குமிடையே உள்ள நட்பு, பல நூற்றாண்டு வரலாற்றைக் கொண்டது. சமீபத்திய ஆர்மேனிய உரை நடை இலக்கியமானது, மனிதம் முழுவதையும் தழுவுகிற வளமான சித்திரமாக விளங்குகிறது. இந்திய வாசகர்களுக்கான இக் கதைத் தொகுப்பு, மேற்கூறப்பட்ட சித்திரத்தின் ஆதாரசக்திகள், போக்குகள், சார்புகள் பற்றிய ஒரு நல்ல அறிமுகமாக விளங்குகிறது. இந்த முதல் தொடர்பு, இனி ஏற்படக் கூடிய நெருக்கமான உறவுகளுக்கும், பரஸ்பர அறிந்து கொள்ளுதல்களுக்கும் ஒரு பாலமாக அமையக்கூடும்.

ரூ. 20-00

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா